இசை உலகில்

மகா வைத்தியநாத சிவன்

முதற்பாகம்

"வைணிக, காயக" "மகாவித்துவான்"
"கலாசிகாமணி"

V. S. கோமதிசங்கர ஐயர்

(வீணைவிரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

1970

இசை உலகில்

மகா வைத்தியநாத சிவன்

முதற்பாகம்

"வைணிக, காயக" "மகாவித்துவான்"
"கலாசிகாமணி"

V. S. கோமதிசங்கர ஐயர்

(வீணைவிரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

1970

கோமதி வெளியிடு–2
முதற்பதிப்பு டிசம்பர் 1970

நூலாசிரியரின் பிறநூல்கள்:
1. இசைக்கலை வல்லுநர்கள்: 4–25

கிடைக்கும் இடங்கள்:

1. G. கோமதியம்மாள்
28, லெக்சரர் குவார்ட்டர்ஸ்,
அண்ணமலைநகர்.

2. இந்தியன் மியூஸிக் பப்ளிஷிங் ஹவுஸ்
No 4, பந்தர் தெரு, (மேல்மாடி) சென்னை–1

விலை ரூ. 4–75

சிவகாமி அச்சகம், அண்ணமலைநகர்.

FOREWORD

Maha Vaidyanatha Iyer is one of the shining stars in the firmament of South Indian Music. His meteoric rise to fame, his crystal clear and expressive voice with a magnificient range of three octaves, his commanding personality radiating spiritual rays, his keen intellect, the richness of his musical creation, and the fecundity of his imagination have all found for him an honoured place amongst the hierarchy of musical luminaries. Some of the little known aspects of his life like his diet, the daily routine of his life, the care that he took to preserve the metallic ring and responsive character of the voice, the mutual esteem and regard with which Maha Vaidyanatha Iyer and Patnan Subramania Iyer held each other, all provide interesting reding. The details furnished in the book have an air of authority over them, since they are based on the notes written by Pallavi Subbiah Bhagavathar, who served under Maha Vidyanatha Iyer for some years. What Boswell was to Dr, Johnson in English literature, Subbiah Bhagavathar was to Maha Vaidyanatha Iyer in thc Musical literature of South India.

Some of the Pallavil and Thillanas that he sang in intricate Talas are given in notation How his famous Thillons in Simhanandana Tala originally composed in Kalyani Raga was later reset in Kanada Raga, is also mentioned in the book. The concerts that he gave in the courts of H.H Ayilyam Tirunal Maharaja and H.A. Visakham Tirunal Maharaja and the concerts that he gave in Ramnad and other places are all described in a graphic manner. But for this book, we will never know all these interesting details.

I have great pleasure in commending this book to musicians, music lovers, music students and teachers of music.

P. Sambamurthy

ஸ்ரீ

ஆனந்த நடராஜர் துணை

நல்வாழ்த்து

ஸ்ரீ மஹா வைத்தியநாத ஐயர் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை Dr. உ. வே. சாமிநாதஐயர் அவர்களாலும், Sangitha Sastra Ratnakara, Prof. P. Sambamoorthy, B. A., B. L. (Head of the Dept. of Indian Music and President, Faculty of Fine Arts, University of Madras) அவர்களாலும் எழுதப்பட்டு வெளிவந்துள்ளது.

எனக்கு நான்கு வயது நடக்கும்பொழுது என்னுடைய அருமைத் தகப்பனர் ஸ்ரீ விசுவநாத ஐயரவர்கள் காலமாகிவிட்டார். எனவே எனது பாட்டனர் ஸ்ரீ மஹா வைத்தியநாத ஐயர், அவர்களுடைய தினசரி வாழ்க்கை வரலாறுகளை அவருடன் கூட பழகிவந்தவர் களுக்குத்தான் நன்கு தெரிதற்கியலும்.

ஸ்ரீ V. S. கோமதி சங்கர ஐயர் அவர்கள் "இசை யுலகில் ஸ்ரீ மஹா வைத்தியநாதசிவன்" என்ற தலைப் பில் எனது பாட்டனரின் வாழ்க்கை வரலாறுகளை ஒரு சிறிய புத்தக வடிவில் எழுதியிருக்கிருர். இதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள், ஸ்ரீ V. S. கோமதி சங்கர ஐயர் தகப்பனர் வாசுதேவநல்லூர் பல்லவி சுப் பையா பாகவதர் அவர்களால் குறித்துவைக்கப்பட் டுள்ளவையேயாகும். இப்புத்தகம் முதற்பாகமாகும்.

இசை ஒன்றில்தான் எல்லாம் வல்ல இறைவனை மகிழவைக்க முடியும் என்ற மாபெரும் உண்மைக்கு

எடுத்துக்காட்டாக விளங்கியவர்களில் எனது அருமைப் பாட்டனுரும் ஒருவர் என்பதை கூற நான் பெருமைப் படுகிறேன்.

ஆக, ஸ்ரீ மஹாவைத்தியநாத ஐயருடைய வரலாற்றை ஓரளவு தெரிந்துகொள்வதற்கு இச்சிறியநூல் துணையாக இருக்குமென்று நான் நம்புகிறேன்.

இறைவன் அருள் புரிவாராக
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

இப்படிக்கு
ஸ்ரீ மஹாவைத்தியநாத சிவனின் பேரரும்,
ஸ்ரீ விச்வநாத ஐயரின் குமாரரும் ஆகிய

திருமயிலை }
19-2-70 }

V. சுந்தரராஜன்.



'வைணிக, காயக' 'மகாவித்துவான்' 'கலாசிகாமணி'

V. S. கோமதி சங்கர ஐயர்

முன்னுரை

திருநெல்வேலி மாவட்டம் சங்கரநயினுர்கோயிலைச் சேர்ந்த வாசுதேவநல்லூர் கிராமத்தில் வசித்துவந்த என் தகப்பனுரும் குருவுமாகிய **பல்லவி சுப்பையா பாகவதரவர்கள்,** தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வையைச்சேரி கிராமத்தில் வாழ்ந்துவந்த **மகா வைத்தியநாத சிவனிடம்** முதல் மாணவராக அமர்ந்து, 1876–ஆம் ஆண்டுமுதல் 1882–ஆம் ஆண்டுவரை ஏழாண்டுகள் குருகுலவாசம் செய்து இசை பயின்ருர்கள். இசையில் நற்றிறம்பெற்று, இராகம், தானம், பல்லவி, நிரவல், சுரம் ஆகியவைகளில் பெரும் புகழடைந்தார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலே பல இசைப் புலவர்களைத் தோற்றுவித்த பேராசான் ஆவர்கள்; இசை, தமிழ், சோதிடம், வேதாந்தம் ஆகிய நான்குகலைகளிலும் நிரம்பிய அறிவுத்திறம் பெற்றவர்கள்.

இசைமாணவராக அவர்கள் இருந்தகாலத்து மகா வைத்தியநாத சிவனின் வாழ்க்கை, ஒழுக்கம், தயை, சிவபக்தி, பணிவு, நற்ருேற்றம், எளிமை, கலைத்திறம், குரல்நயம், இனிமையான பேச்சு, சிவ கதை செய்யும் ஆற்றல், நூலாராய்ச்சி ஆகிய இவைகளை நேரிற்கண்டு உணர்ந்தார்கள். ஆதலால் மகா வைத்தியநாத சிவனின் உயர்ந்த தன்மைகளைத் தம்மிடம் பயிலவரும் மாணவர்களின் முன்னேற்றம் கருதி

எடுத்துக் கூறுவதுண்டு. அவ்வாற்றான் எனக்கும் பல உணர்த்தியுள்ளார்கள். சில செய்திகளைக் குறிப்புக் களாக எழுதியும் வந்தார்கள்; அந்தக் குறிப்புக்கள் கிலமாயும், வரிகள் பிறழ்ந்தும், துண்டுதுண்டுகளா கவும் இருந்தன.

1951-ஆம் ஆண்டில் மகாவைத்தியநாதசிவனின் தமையனாரான இராமசாமி சிவனின் மூன்றாவது குமார ரும் பூர்வாசிரமத்தில் இராமலிங்கம் என்ற பெயருடை யவரும் சந்நியாஸ ஆசிரமத்தில் **ஸ்ரீ பரிபூர்ணனந்த இராமலிங்க பிரஹ்மேந்திர சரஸ்வதி** என்ற திரு நாமம் உடையவராகிய அவர் அண்ணமலைநகர் வந்து, என் வீட்டில் மூன்று மாதங்களுக்கும் மேல் தங்கினார். அப்பொழுது தம் சிறிய தகப்பனாராகிய மகா வைத்தியநாத சிவனைப் பற்றியும் தம் தகப்பனாராகிய இராமசாமி சிவனைப் பற்றியும் பல செய்திகளைக் கூறி னார். அவற்றை நான் ஆர்வமுடன் குறித்துக்கொண் டேன். இன்னும் பல செய்திகளை இசைப் பேரறிஞர் உயர்திரு P. சாம்பமூர்த்தி அவர்கள்போன்ற அனுபவ முள்ளவர்களிடமிருந்து அறிந்துகொண்டேன். எனவே எல்லாவற்றையும் தொகுத்து "இசையுலகில் மகா வைத்தியநாத சிவன்" என்ற நூலாக வெளியிடு கிறேன்.

இந்நூல் நானூறு பக்கங்களுக்கும் மேலாக விரியு மாதலின் இதை இரண்டு பாகங்களாகப் பிரித்து வெளி யிட எண்ணினேன். முதற்பாகமாக இப்பொழுது இது வருகிறது. இந்நூலிலே மகாவைத்தியநாதசிவன்

பாடிய தில்லானு இரண்டும், பல்லவி இரண்டும், குன்னக்குடி கிருஷ்ணையர் பாடிய பல்லவி ஒன்றும், இராமசாமிசிவன் இயற்றிய கீர்த்தனை மூன்றும் வருகின்றன. சிறப்பாக சிம்மநந்தன தாளத்தில் அமைந்த தில்லானுவும் பல்லவியும் குறிப்பிடத்தக்கவை. அடுத்த பாகத்தில் மகா வைத்தியநாதசிவன் உள்ளிட்ட இசை மேதைகள் பலர் பாடிய அபூர்வ பல்லவிகள் பலவும் வெளிவரும். இவைகள் எல்லாம் இசையுலகத்திற்குக் கிடைக்கும் அரிய கருவூலங்கள்.

இந்நூலில் எத்துணையோ அரிய விஷயங்கள் வெளியாகின்றன. சங்கீத வித்துவான் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் இசைத்திறத்திற்கும் தமிழ் அறிவிற்கும் இது சிறந்த இன்ப பெருவிருந்தாக விளங்கும்; படித்துப்பார்த்து யாவரும் இசையனுபவப் பயன் கொள்ள வாய்ப்பாகும்.

இந்நூலிலே மகா வைத்தியநாத சிவன், இராமசாமி சிவன், சுப்பராம தீட்சிதர், பழமானேரி சாமிநாதஐயர், பல்லவி சுப்பையா பாகவதர், பட்டினம் சுப்பிரமணியஐயர், கோபாலகிருஷ்ண பாரதியார், பிடில் கிருஷ்ணையர், வெங்கோபராவ், மிருதங்கம் நாராயணசாமியப்பா, சாமாரா, துக்காரம், பிடில் சுப்பராயர், சாம்பசிவஐயர், பெரிய வைத்தியநாத ஐயர், சின்ன வைத்தியநாதஐயர், பரமேச்வர பாகவதர், வீணை கல்யாணகிருஷ்ண பாகவதர், தேவாரம் விசுவநாதஐயர் முதலியவர்களும்; கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர், அம்பலவானதேசிகர், இராமநாத

புரம், அரசர் திருவனந்தபுரம் அரசர், மைசூர் அரசர், எட்டயபுரம் அரசர், வெங்கடகிரி அரசர் ஆகிய இன்னும் பலருடைய செய்திகள் இடம் பெறுகின்றன.

இந்தப்படி முழுவதையும் படித்துப் பார்த்த பேராசிரியர், இசைப்பேரறிஞர் உயர்திரு P. சாம்பமூர்த்தி அவர்கள் இதில் பல அரிய செய்திகள் நிரம்பி இருக்கிற படியால் இசையுலகம் பயன் அடைவதை முன்னிட்டு இது அவசியம் வெளிவருதல் வேண்டுமென்று ஊக்கினார்கள்; இதற்கொரு மதிப்புரையும் ஆர்வமுடன் தந்து உதவியுள்ளார்கள். அவர்கள் தந்த ஊக்கமே இப் புத்தகம் வெளிவருவதற்குப் பெரிதும் காரணமெனலாம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலுள்ள இசைப் புலவர்களும் எனக்கு ஊக்கமளித்து இப்புத்தகம் வெளிவரத் தூண்டித் துணைபுரிந்தார்கள்.

1931 ஆம் ஆண்டு முதல் என்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வீணை ஆசிரியர் பதவி வகிக்கும்படிச் செட்டிநாட்டரசர் பெருங்கொடை வள்ளல் டாக்டர். இராஜா. சர். மு. அண்ணாமலைச் செட்டியாரவர்கள் ஏற்பாடு செய்தார்கள். அப்பதவியிலிருந்த நான் மேலும் பணிபுரியத் தமிழிசைக் காவலர் செட்டிநாட்டரசர் உயர்திரு. டாக்டர். இராஜா சர். எம். ஏ. முத்தையா செட்டியாரவர்கள் அன்புள்ளங் கொண்டுள்ளார்கள். அதன் பயனாக நான் பல தமிழிசை நூல்கள் வெளியிட்டுள்ளேன். இன்னும் பல தமிழிசை நூல்களை உருவாக்குதற்குரிய அரும்பெரும் குறிப்புக்களைத்

திரட்டியுள்ளேன், அறிவைப்போற்றி அன்புக்கு வாழ் வளித்த வள்ளல் டாக்டர். இராஜா சர். மு. அண்ணு மலைச் செட்டியாரவர்களுக்கும், உயர்திரு. டாக்டர். இராஜ சர். எம். ஏ. முத்தையா செட்டியாரவர்களுக் கும் என் மனமுவந்த வணக்கத்தைச் செலுத்திக் கொள்கிறேன்.

என்வாழ்வும் கலைவளமும் சிறப்புறுதல் வேண்டு மென்ற கவலைகொண்டு அல்லும் பகலும் என் அறிவு வளருவதற்காக அரும்பாடுபட்டு என்னைப் பெற்று வளர்த்த தாயார் முத்துலட்சுமி அம்மாளுக்கு இந் நூலைக் காணிக்கையாக்கி நினைவு கூறுகின்றேன்.

இந்நூலின் குறிப்புகள்யாவும் சிதைந்து துண்டு துண்டாயிருந்தன; சில வரிகள் பிறழ்ந்தும் காணப் பட்டன; கோவைப்படாமலுமிருந்தன. இதனை முத லில் சரிசெய்து கொடுத்த அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. இலட்சு மணசாமி (எம். ஏ., பி. ஓ. எல்.) அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

இப்படியை முதலில் ஒருவகையாகச் செப்பனிட் டாலும் மற்றுமொருமுறை பார்த்து வெளியிட்டால் நலமென்று எண்ணினேன். என் எண்ணம் ஈடேறும் படி அண்ணுமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்துறை ரீடர். வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனரவர்கள் அதனைப்பார்த்துச் சீர்செய்து தந்து உதவினார்கள்; அவருக்கு என் நன்றி உரியதாகும்.

இந்நூலை அச்சகத்திற்குக் கொடுக்கும் முன்பும், கொடுத்த பின்பும் ஒவ்வொரு வரியையும் கூர்ந்து அவ் வாசகங்கள் இலக்கண வழுவின்றி விளங்கல் வேண்டு மென்றும் படிப்போருக்கு எளிதாக மனதில் பதிவாதல் வெண்டுமென்ற கருத்துக்கொண்டும் எனது நண்பரும் இசையில் ஆர்வமுள்ளவரும் பழமையான நூல்களி லுள்ள இசை நுட்பங்களைக் கோவைப் படுத்தியுள்ள வரும், அழகுக் கலைத்திறனுய்வைச் சிறப்பாயடைந்த வரும் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறை விரிவுரையாளருமாகிய செ. வைத்திலிங்கன் (எம்.ஏ., எம். லிட்.) என்பவர் அவருடைய பல முக்கியமான அலுவல்களின் இடையே இதில் மனம் செலுத்திச் சீர் செய்து தந்த உதவியை என்றும் மறக்க இயலாது.

மகாவைத்தியநாதசிவனின் பேரரும், ஷியாரின் இளையகுமாரர் விசுவநாதஐயரின் குமாரருமான திரு. V. சுந்தரராஜன் (51 நாட்டு சுப்பராய முதலித்தெரு, சென்னை-4) என்பவர் மகாவைத்தியநாதசிவனின் நிழற்படம்; கோடக நல்லூர் சுந்தரசுவாமிகளின் நிழற் படம், மகாவைத்தியநாதசிவன் பூஜித்த நடராஜர் படம், அவர் பூஜித்துவந்த சிவலிங்க முதலிய நிழற்படம் ஆகிய இவைகளைப் போட்டோ பிடித்துக் கொள்ள அவர் வீட்டிலுள்ள படங்களை உதவியதற்கும் இந் நூலுக்கு ஓர் நல்வாழ்த்து தந்து உதவிய உதவிக்கும் என் மனமார்ந்த வணக்கமும் நன்றியும் உரித்தாகும்.

இந்நூலை அழகான பதிப்பாகவும் விரைவாகவும் அச்சிட்டுத் தந்த சிவகாமி அச்சகத்தாருக்கு (அண்ணுமலைநகர்) என் நன்றி உரியதாகும்.

முத்தமிழ் வித்தகர்களும், கலைஞர்களும், சுவைஞர்களும் என் முயற்சியை வரவேற்று ஊக்குவார்களாக; இசை நுட்பங்கண்டு பயன் கொள்வார்களாக.

குறிப்பு:- இங்கு வெளியிடப் பெறும் செய்திகள் என் தகப்பனாரால் அவ்வப்போது எழுதிய குறிப்புக் களினின்றும் எடுத்தவை; ஆகையால் சில இடங்களிற் கூறியது கூறல் போலவும் தோன்றும். இவைகள் இன்னும் பழுதுபட்டு விடலாகாது என்ற எண்ணத் தாலும், ஒரு விஷயத்தை விளக்க அதற்குப் பீடிகை யாக அதுவே திரும்ப வரவேண்டியது இருக்கிறதாகை யாலும், அவசரமாக அச்சிட நேர்ந்த படியாலும் அவ் வாறு வருகின்றது. அடுத்த பதிப்பில் அவைகள் சிறந்த முறையில் செம்மையுறும்.

அன்பன்,

V. S. கோமதிசங்கர ஐயர்

வீணை விரிவுரையாளர்

அண்ணமலைப்பல்கலைக்கழகம்

உள்ளடக்கம்

——*——

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
34	4	இருபது	பதிநான்கு
34	5	பதினெட்டு	பன்னிரண்டு
56	27	சிவாபிநவநரசிம்ம பாரதி	ஏழாவதுநரசிம்ம பாரதி
125	19	1985	1895
187	26	பர்வதநாச்சியாரின்	பர்வதவர்த்தனி நாச்சியாரின்
188	5	1973	1873



இசைமேதை

மகா வைத்தியநாத சிவன்

உ

இசையுலகில் மகா வைத்தியநாத சிவன்

● சோழ நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் வையைச்சேரி என்ெருரு கிராமம் உண்டு. அந்த ஊர் தஞ்சைக்குக் கிழக்கேயுள்ள திட்டை என்னும் ஊருக்கு வடபால் இருக்கின்றது. அவ்வூரில் புராதனமான சிவத்தலம் உள்ளது. அக்கோயிலில் எழுந்தருளியுள்ள சுவாமியின் பெயர் **அகஸ்தீசுரர்**. அம்பிகையின் பெயர் **மங்களநாயகி**. அகஸ்தீசுரசுவாமி கிழக்கு நோக்கிய சந்நிதானம் கொண்டது. அங்கு இரண்டு சாரியாக அக்கிரகாரம் உண்டு. அவற்றில் சுமார் நாற்பது வீடு களுக்குக் குறையாமல் உள்ளன. அவற்றில் அந்தணர் குடும்பங்கள்வசித்து வந்தன.

● வையைச்சேரி என்ற கிராமத்திலே அந்தணர் குலத்திலே பஞ்சநத ஐயர் என்ற பெயருடைய ஓர் இசைவித்துவான் இருந்தார். அவரைத் துரைசாமி

ஐயரென்றே யாவரும் அழைப்பார்கள். அவரது தகப்பனரும், பாட்டனரும் இசைப்புலவர்களே யாவர். எனவே பஞ்சநத ஐயரென்ற துரைசாமி ஐயர் இசை மரபிலே தோன்றியவராவர்.

● அந்தணர்களில் பலவகுப்புக்கள் உண்டு. அவற்றுள் இவ்வம்சத் தோன்றல்கள் மழநாட்டுப் பிரகத்சரணம் என்ற வகுப்பினராவர். இவர்களது பரம்பரையினர் கௌண்டின்ய கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். பெரும்பாலும் வேதவித்துக்கள்.

● வையச்சேரி கிராமத்திலே தமிழிலும், இசையிலும், வடமொழியிலும் நற்றிறம் வாய்ந்தோரும்; இராமாயணம், பாகவதம், பாரதம் முதலியவைகளைப் பிரசங்கம் செய்து பொருள் கூறுவோரும்; இவற்றை இசைக்கதையாக நிகழ்த்துவோரும், தேவாரம், திருவாசகம் முதலியவைகளைப் பொருளறிந்து இசைப்போரும், பரமனைப் பாடிப்போற்றுந் திருக்கூட்டத்தோரும், சிவபக்தியில் ஈடுபாடுடைய சிவபக்திச் செல்வம் நிறைந்த அன்பர்களும் ஆகிய இவர்கள் நிறைந்திருந்தனர். அவர்கள் வரிசையில் பஞ்சநத ஐயர் என்ற துரைசாமிஐயரும் ஒருவராவர்.

● தஞ்சாவூர் அரண்மனையிலே ஆஸ்தான வித்துவான்களாக இசையறிஞர்கள் பலர் இருந்தார்கள். அக்கோஷ்டியில் தலைசிறந்த இசைப் பெரும்புலவர்களாகத் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய இம்மூன்று மொழிகளிலும் நற்றிறம் பெற்று விளங்கியவர்

களும், அவற்றில் அரும்பெரும் கீர்த்தனங்கள் பல செய்து அவற்றின் நயம் அறிந்து பல கலைஞர்களாலும், பெருமக்களாலும் போற்றப்பட்டவர்களாய்த் திகழ்ந்தவர்களும், பல்லவி நிரவல் செய்வதில் மிகவும் வல்லவர்களாகப் போற்றப்பட்டவர்களும், வையைச்சேரி என்ற கிராமத்திலேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்துவந்தவர்களும் ஆகிய **ஆனை ஐயா** (ஆனை-மூத்தவர், ஐயா - இளையவர்) என்ற இசைப்புலவர்களிடமும், தமது தகப்பனாரிடமும் பஞ்சநதஐயர் என்ற துரைசாமிஐயர் இசையைக் கற்றுப் பயனடைந்தார்.

● ஆனை ஐயா என்ற இசைப்புலவர்கள் வம்சத்திலே உதித்த ஓர் உத்தமப் பெண்மணியையே பஞ்சநத ஐயரென்ற துரைசாமி ஐயர் மணந்து கொண்டார். அவ்வுத்தமியின் பெயர் அருந்ததி; அவரைத் தாயு என்றே யாவரும் அழைப்பார்கள். துரைசாமி ஐயரும் அருந்ததி என்ற தாயு அம்மாளும் உத்தமமான இல்லறவாழ்க்கை நடத்திவந்தார்கள். அவ்விருவரும் நற்குண நற்செய்கை யுள்ளவர்களாகவும், தர்மசிந்தை, ஈவு, இரக்கம் மிகுந்தவர்களாகவும், பசித்தவர்களுக்கு இல்லையெனாது அன்னமளித்துப் பசிப்பிணி தீர்ப்பவர்களாகவும், தூய்மை, வாய்மை, ஒழுக்கம், ஆசாரம், சிவபக்தி ஆகிய இவைகளில் சிறந்தவர்களாகவும் யாவரும் போற்றும்படி விளங்கினர்.

● பஞ்சநத ஐயரென்ற துரைசாமி ஐயர் நல்ல இசைஞானம் மிக்கவராக இருந்தும், இசையைச்

சீவன உபாயத்திற்கான தொழிலாகக் கைக் கொள்ள வில்லை. கடவுள் சந்நிதியில் நின்று மனமுருகிப் பக்தி மேலீட்டால் கீர்த்தனங்கள் பலபாடித் துதிப்பார். பஜனை கோஷ்டிகளுடன் சென்று அவர்களுடன் தாமும் சேர்ந்து பாடி இன்புறுவார். தமதுமனம் எக் காலமும் மகிழ்ச்சியுடையதாக இருத்தல் வேண்டு மென்பதை முன்னிட்டுக் கல்யாணப்பாட்டு, கும்மி, நலங்கு, ஊஞ்சல், சிந்து, கோலாட்டப்பாட்டு முதலிய வைகளைப் பாடி அதன் இசை நயத்தையும், மொழி யின் பொருளமைந்த எளிமையான அமைதிகளையும் அறிந்து மகிழ்வார்கள். அவருக்குப் பழங்காலத்து இசைப்புலவர்களால் இயற்றப்பெற்ற பல அமைப் புள்ள தமிழ், வடமொழி, தெலுங்கு, மராத்தி ஆகிய மொழிகளிலுள்ள பல கீர்த்தனங்கள் பாடமுண்டு. பலரும் அறிந்திராத இசைப்பாடல்களில் அவருக்கு நிரம்பப் பயிற்சி உண்டு.

● பஞ்சநத ஐயரென்ற துரைசாமி ஐயர் சிறந்த சிவபக்தர். அவரது குழந்தைப் பருவம் முதல் திருவையாற்றிலே கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் பிரணதார்த்திகரர், தர்மசம்வர்த்தனி ஆகிய மூர்த்தங்களிடத்து நிரம்பிய பக்தியுண்டு. எனவே அவர் அடிக்கடி திருவையாறு சென்று ஸ்ரீ பிரணதார்த் திகரர் சந்நிதியிலும், ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்பாள் சந்நிதியிலும் நின்று உள்ளம் உருகப் பக்திப் பரவசரா கித் தம்மை மறந்து மெய்சிலிர்க்க மயிர்க்கூச்செறியப் பல கீர்த்தனங்களைப் பாடித் துதிப்பதனைத் தமது வழக்கமாகக் கொண்டிருந்தார்.

● திருவையாற்றில் சித்திரை மாதத்திலே சப்தத் தான திருவிழா நடக்கும். அத் திருவிழாவில் ஸ்ரீ ஐயாறப்பர் அறம்வளர்த்த நாயகியுடன் திருப் பழனம் முதலிய தலங்களுக்கு எழுந்தருளும் போது துரைசாமி ஐயர் பஜனை கோஷ்டியுடன் சேர்ந்து சுவாமியின் பின்னுகப் பாடிக்கொண்டே உடன் செல் வார். அவ்வாறு ஈசுரகைங்கர்யமாகிய பஜனை கோஷ்டியுடன் கூடித் தாமும் பாடிச் செல்வதில் அவருக்கு ஈடு இணையிலாத மகிழ்ச்சியுண்டு.

● அக்காலத்தில் அவர்களுக்கு ஆறு 'மா' அதா வது சுமார் இரண்டு ஏக்கருக்கும் சிறிது குறைந்த விளைநிலமும் ஒரு வீடும் வையைச்சேரியில் உண்டு. நிலத்திலிருந்து ஆண்டுக்கு இருபத்துநான்கு மூட்டை அதாவது நாற்பத்தெட்டுக் கலம் நெல்வரும். அவர் களது குடும்பத்திற்கு அவ்வருமானம் போதாததாகும். அவ்விளைநிலத்திலிருந்து உளுந்து, பயறு ஆகிய தானி யம் அவர்களது குடும்பச் செலவிற்குப் போகச் சிறிது மிஞ்சும். அதற்குத் துவரை, புளி, மிளகாய்வற்றல் முதலியவகைகளை ஓர் ஆண்டிற்கும் வருவது போல வாங்கிக்கொள்ளுவர். வீட்டுக் கொல்லையில் ஏழு தென்னைமரமும், வயல் வரப்பில் இருபத்திரண்டு தென்னைமரமும் உண்டு. வீட்டுத் தென்னையிலிருந்து வரும் தேங்காய் வீட்டுச் செலவுக்குப்போகச் சிறிது மிஞ்சும். அதுவும் வயல் தென்னையிலிருந்து வரும் தேங்காயும் எண்ணெய்க்குக் கண்டுவிடும். எவ்வாறு யினும் அவர்கள் சிறு வருவாய் உடையவர்களே யாவர்.

● பஞ்சநத ஐயரென்ற துரைசாமிஐயரும், அருந்ததி என்ற தாயு அம்மாளும் ஆகிய அத்தம்பதிகள் மிக ஒற்றுமையாக இருந்து தமக்கு வரும் சிறு வருவாயை வைத்துக்கொண்டு தமது குடும்பத்தை ஆடம்பரமின்றி நடத்தி வந்தார்கள். அக்காலத்திலே வழி நடந்து வரும் யாத்திரிகர்கள் அவர்கள் வீட்டிலேயே தங்கி உணவு அருந்திக் களைப்புத் தீர்த்துக் கொள்ளுவார்கள்.

● வையச்சேரி கிராமத்தில் சிறந்த பொருட் செல்வர்கள் இருந்தாலும், துரைசாமி ஐயரும் அவர் மனைவியும் அங்கு வரக்கூடிய யாத்திரீகர்களை விசாரித்து அவர்களுடைய க்ஷேம லாபங்களை அன்பு உள்ளங்கொண்டு கேட்டு, அவர்களைத் தம் இல்லத்திற்கு அழைத்துவந்து அவர்களைச் சிரமபரிகாரம் செய்யும்படி செய்வர்; அவர்களின் அலுப்புத்தீர அவர்களை விசாரித்து உபசாரம் செய்யும் முறையானது அக்கிராமத்திலுள்ளோர் அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் அமைந்திருக்கும். வறுமையிற்செம்மை என்பது அவர்கள்பால் அறிந்து கொள்ள வேண்டியதாகும். அக்காலம் சிவனடியார்களைப்பேணுவதில் அறுபத்துமூன்று நாயன்மார்களும் எத்துணைச் சிறப்புற்றனரோ அத்துணைச்சிறப்பை அடையத்தக்க பேறு அத் தம்பதிகள் இருவர்களிடமும் இருந்தது.

● பஞ்சநத ஐயரென்ற துரைசாமி ஐயருக்கு அக்காலத்து இசை வித்துவான்களாகிய சிவகங்கை பெரிய வைத்தியநாதஐயர், சின்னவைத்தியநாதஐயர், இரட்

டைப் பல்லவி சிவராமஐயர் பிக்ஷாண்டார் கோயில் சுப்பராயர், பல்லவி சுப்பராமஐயர் ஆகியோர் நெருங்கிய நண்பர்கள். அவர்களைப்போன்று இன்னும் பலப் பல இசை நண்பர்களும் உண்டு. துரைசாமி ஐயரவர்களிடம் இசைப்புலவர்களும், இயற்றமிழ்ப் புலவர்களும் வடமொழிப் புலவர்களும், ஏனைய அன்பர்களும் மிகவும் அன்பாகவும் ஆதரவாகவும் பழகுவார்கள்.

● பஞ்சநத ஐயரென்ற துரைசாமி ஐயருக்குக் குமாரர்கள் நால்வர் உண்டு. முதல் குமாரர் சாம்பமூர்த்திஐயர்; இரண்டாவது குமாரர் இராசாமிஐயர்; மூன்றுவது குமாரர் வைத்தியநாதஐயர்; நான்காவது குமாரர் சிவராமசர்மா என்ற அப்பாசாமிஐயர்.

● இந் நால்வரின் மனைவி மக்கள் வருமாறு:—

பெயர்	மனைவி	மக்கள்
சாம்பமூர்த்தி ஐயர்	மங்களம்	பஞ்சநதன் செல்லம்
இராமசாமி ஐயர்	பர்வதவர்த்தனி	சுப்பிரமணியன் கலியாணசுந்தரம் இராமலிங்கம்
வைத்தியநாத ஐயர்	காமாட்சி	வேதாரணியம் விசுவநாதன்
சிவராமசர்மா என்ற அப்பாசாமி ஐயர்	மீனாட்சி	நடராஜன் சுந்தரேசன் சதாசிவன் விசாலாட்சி சிவகாமி லட்சுமி

● பஞ்சநத ஐயரென்ற துரைசாமிஐயர் தம் குமாரர்கள் நால்வருக்கும் சங்கீத அப்பியாசம் செய்வித்தல் வேண்டுமென்று கருதி உரிய காலத்தில் தாமே முன்னின்று இசையைப் பயிற்றுவித்து வந்தார். அவ்வூரில் தென்மொழி வடமொழி ஆகிய இவற்றில் தக்க புலவர்கள் இருந்தமையால் இசையுடன் சிறிது தமிழும் சம்ஸ்கிருதமும் கற்றுக்கொள்ளும்படி ஏற்பாடு செய்திருந்தார்.

● துரைசாமிஐயரின் குமாரர் நால்வர்களுள்ளே இராமசாமிஐயர் வைத்தியநாதஐயர் ஆகிய அவ்விருவரும் இசையில் மிக்க ஆர்வமுள்ளவர்களாகி, அதிற் சிறந்த அறிவு உடையவராயினர். தம் தந்தையார் மிகவும் மகிழும் வண்ணம் ஞானபலத்தை அடைந்தார்கள். அவ்விருவர்களின் இசைத்திறமைகளைக் கண்ட துரைசாமிஐயர் மிகவும் களிப்பெய்தினர் தமக்குத் தெரிந்த இசை நுட்பங்கள் முழுவதையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். அவ்விருவர்களில் இராமசாமிஐயரைவிட வைத்தியநாத ஐயரின் குரல் நயமும் இசைத்திறனும் மேலோங்கி வளர்ந்தன. இராமசாமிஐயருக்குச் சிறிது சாரீரம் போதாது என்பது தவிர இசை ஞானபலத்தில் மிகச் சிறந்து விளங்கினர். அவ்வாருன மேலாம் சிறப்பைக்கண்டு யாவரும் களித்தனர்.

● இராமசாமிஐயர் இசைத் துறையில் நல்ல ஞானமுடையராக விளங்கியதுடன் அதனினும் தமிழ்மொழியில் அதிகப்பற்றுதல் உடையவராகி யாவரும் புகழும்படி அறிவு பெற்ருர். அவ்விருவருக்கும் இசையிலுள்ள

இலக்கிய இலக்கண வகைகள் செம்மையுறுதலை முன்னிட்டு அவர்களை அழைத்துக்கொண்டு மெலட்டூர், தஞ்சை, மானம்பூச்சாவடி (மகாநோன்புச் சாவடி என்பர்), திருவையாறு முதலிய இடங்களுக்குச்சென்று அங்குள்ள இசை வித்துவான்களிடமிருந்து அவர்கள் இசை விஷயங்களை அறியும்படி அவரது தகப்பனர் துரைசாமிஐயர் செய்து வந்தார்.

● மேலே கூறப்பெற்ற ஊர்களிலே அக்காலத்தில் பல இசைப் புலவர்கள் இருந்தார்கள். துரைசாமிஐயரவர்கள் இராமசாமி ஐயரையும் வைத்தியநாத ஐயரையும் அழைத்துக்கொண்டு மானம்பூச்சாவடிக்கு அடிக்கடிசெல்லுவார்கள். அங்கு தியாகராஜசுவாமிகளுடைய நேர்சிஷ்யராகிய வேங்கடசுப்பிரமணிய ஐயரென்ற (வேங்கட சுப்பையயர்) பெரும் இசைப்புலவர் இருந்தார்; ஒவ்வொரு முறையும் அங்கு ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் தங்குவார்கள். அவ்வாறு தங்கும் சமயம் வேங்கட சுப்பையரவர்கள் இசையிலுள்ள திட்ப நுட்பப்பகுதிகளை அவர்களுக்குக் கூறுவார்கள். அதன் பயனாக அவ்விருவரும் இசையின் திட்ப நுட்பப் பகுதிகள் முழுவதையும் தெளிதற்குரிய வாய்ப்பைப்பெற்றனர்.

● அவர்களிருவரும் இளமை தொடங்கியே கோயிலுக்குச் சென்றாலும், குளிக்கச் சென்றாலும், வயற்காட்டிற்குச் சென்றாலும், உணவு உட்கொள்ள உட்கார்ந்தாலும், சந்தி ஜெபம் முதலிய செய்யும்போதும், இசைகற்கவும், தமிழ்கற்கவும், வடமொழி பயிலவும்

தொடங்கும்போதும், அயலூர் செல்லும்போதும் இருவரும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாமல் சேர்ந்தே பழகிவந்தனர். எனவே அவர்களை **இரட்டையர்** என்று கூறுதலுமுண்டு. வையச்சேரி கிராமத்திலே அக்கிரகாரமக்களும் பிற குடிமக்களும் அவர்கள் வீட்டில் ஏதேனும் கொடுக்கவோ வாங்கவோ வேண்டுமென்றால் இரட்டையர் வீட்டிற்குப் போய்வா என்றே கூறுவது வழக்கமாயிற்று.

● தமது சாரீர சம்பத்தைவிடத் தம் தமையனார் இராமசாமி ஐயரது சாரீர சம்பத்து மேலாக இல்லாத போதிலும், இசைஞான அறிவுத்திறனும் தமிழ் அறிவுத்திறனும் மிகுதியாகவுடைய தம் தமையனார்பால் வைத்தியநாத ஐயர் மிக்க மரியாதையும் பயபக்தி விசுவாசமும் கொண்டு ஒழுகிவந்தார்.

● வையை வைத்தியநாத ஐயர் தமது ஏழாம் வயது முடிவதற்குள் இசையின் ஞானச் சிகரமாகிய பல்லவி நிரவல் சுரம் பாடுதற்குரிய ஆற்றல்களைப் பெற்றுவிட்டார். இத்திறன் கடவுளின் அருட்துணை கொண்டே பெற்றார் என்று கூறல் வேண்டும். வையைச்சேரியில் அக்காலத்தில் இசையை இலக்கணமுறை பிறழாமல் கற்றறிந்த புலவர் பெருமக்களும், இலட்சிய வாயிலாக வெகு அழகாகப் பாடும் ஆற்றலுள்ள இசையன்பர்களும் நிரம்பி இருந்ததால் அவர்களது இளம் பிராயத்திலேயே இசையின் இத்திறம் மேலோங்கி வளம்பெற்று வளர ஒரு வாய்ப்பிருந்தது என்பதும் பொருந்தும். ஆயினும் பல ஆண்டு

கள் பயின்றும் அடைதற்கு இயலாத முதிர்ந்த இசை அனுபவத்தை – அதன் திட்பநுட்பப்பகுதிகளை – அவர்கள் இச் சிறுவயதிலேயே அடைந்து விட்டார்கள் என்பது அவர்கள் முற்பிறவியிற் செய்த புண்ணியமேயல்லாது வேறில்லை. இந்த அற்புதம் அவர்களிடமின்றி வேறு எவரிடமும் அமையவில்லை.

● வையை வைத்தியநாதஐயர் தமது ஏழாம் வயதிலேயே இராகம், தானம், பல்லவி, நிரவல், சுரம் இவைகளை இசை இலக்கணம் வழுவாது நல்ல முறையிலே யாவரும் வியக்கும்படிப்பாடி இசை நிகழ்ச்சிகள் செய்யும் ஆற்றலும் நற்றிறமும் பெற்றுவிட்டார். ஞானசம்பந்தப் பிள்ளையார் மூன்று வயதிலேயே தேவாரம் இயற்றிப் பண்ணில் பாட ஆரம்பித்தார் என்பது வரலாற்றுமூலம் அறியப் படுவதொன்று; நாம் நேரிற் கண்டிலம். வைத்தியநாதஐயர் இசையில் பெற்ற இத்திறம் இத்தலைமுறையினர் நேரிற்கண்ட அனுபவம். அவர்கள் எங்கெங்குச் சென்று கானம் செய்தாலும், அந்த இடங்களை யெல்லாம் கந்தர்வ லோகம் போலச் செய்து விடுவார்கள்; அத்தகைய அவர்களது ஆற்றல் பிற்காலத்தில் எவருக்கும் அமையவில்லை. முற்காலத்திலும் இருந்ததாகத் தெரியவில்லை.

● மகாவைத்தியநாத ஐயர் தங்கத்தைப் புடம் போட்டது போன்ற பொன்னிற வடிவம், நெற்றி உடல் கைகள் முழுதும் நிரம்பிய திருநீற்றுப்பூச்சு, கழுத்தில் உருத்திராக்கக் கண்டிகை, சைவப்பழம் போன்ற திருக்

கோலம், கனிவு தோன்றும் உள்ளம், குளிர்ந்த பார்வை, தேனினும் இனியபேச்சு, தேஜஸ் ஜொலிக்கும் முக மண்டலம், அவரது அடக்கமான தோற்றம், சிவபக்தி ஆகியவற்றேடு கூடிய எளிமை தோன்றும் அவரதுகாட்சி கண்டாரைக் கவரும். மேலும், குளித்து விட்டுத்தலையை நுனிமுடிந்து அக்குடுமியைத் தலையின் மேல் முன் பகுதியில் மடித்துப் போட்டிருக்கும் கேசத்தைப் பார்த்தால் ஒரு சர்ப்பமானது சிவலிங்கத்தின் மேலே குடைபிடித்து இருப்பது போன்ற தோற்றமளிக்கும்; இத்துணையும் சேர்ந்து ஒருங்கே தோன்றி நமக்கு முன் நிழற்படம்போல நின்று வையை வைத்தியநாத ஐயரை ஞாபகத்திற்குக் கொணரும்.

● இராமசாமிஐயருக்கு ஒன்பது வயதும், வைத்தியநாத ஐயருக்கு ஏழு வயதும் நடந்து வரும்போது அவர்களுக்குப் பூணூல் கல்யாணம் நடத்துதற்குரிய ஏற்பாடுகளைப் பஞ்சநத ஐயரென்ற துரைசாமிஐயர் செய்தார்கள். அதை முன்னிட்டுத் துரைசாமி ஐயரின் நண்பர்களான சிவகங்கை பெரியவைத்தியநாத ஐயர், சின்னவைத்தியநாத ஐயர், இரட்டைப் பல்லவி சிவராம ஐயர் முதலிய பல இசை நண்பர்களும் இவ் விழாவில் கலந்து கொண்டார்கள். அப்பொழுது துரைசாமி ஐயர், தம் நெருங்கிய நண்பர்களான பெரிய வைத்தியநாத ஐயர், இரட்டைப்பல்லவி சிவராம ஐயர் ஆகியவர்களை நோக்கித் தம் குமாரர்களான இராமசாமியும் வைத்தியநாதனும் சிறிது பாடுகிறுர்கள், தாங்கள் அதைக்கேட்டு அவர்களுக்கு ஆசிபுரிதல் வேண்டாமா? என்றுர். உடனே பெரியவைத்தியநாத ஐயரும் சிவராம ஐயரும் வியந்து, ''அதற்குள் உனது

பையன்களை இசையில் தேர்ச்சியடையச் செய்து விட்டாயா? மிக்க மகிழ்ச்சி. கட்டாயம் கேட்கவேண்டும்,'' என்று கூறினார்கள். பெரியவைத்தியநாதஐயர் சின்ன வைத்தியநாத ஐயர் இரட்டைப்பல்லவி சிவராம ஐயர் ஆகிய அவர்களுக்கு உள்ளூர ஒரு சந்தேகம் தோன்றியது. அஃதாவது, ஒன்பது வயதும் ஏழு வயதும் நிரம்பாத இச்சிறு குழந்தைகளுக்கு இசையில் என்ன பயிற்சி கொடுத்திருப்பான். அக்குழந்தைகளும் என்னதான் பாடுவார்கள் என்று எண்ணி இருந்தனர்.

● பூணூல் கல்யாணத்தன்று இரவு துரைசாமிஐயர் தம் குமாரர்களாகிய இராமசாமியையும் வைத்தியநாதனையும், பெரியவைத்தியநாதஐயர், சின்ன வைத்தியநாதஐயர், சிவராமய்யர், பல்லவி சுப்பராயர் ஆகிய அவர்கள் முன் பாடச்செய்தார். அவ்விருவரும். சிறிது நேரம் பாடினார்கள். அனைவரும் மெய்மறந்து கேட்டார்கள்; வியந்தார்கள்; இக் குழந்தைகள் என்ன பாட இயலும் என்று எண்ணிய அவர்கள் எண்ணத்தை மாற்றிக்கொண்டார்கள். பெரியவைத்தியநாதஐயரும் மற்றுமுள்ள இசைப்புலவர்களும் மிதந்த மகிழ்ச்சி கொண்டனர். பெரியவைத்தியநாத ஐயர் தமது நண்பர் துரைசாமி ஐயரை நோக்கி, ''பேஷ்! நல்ல அறிவைத் தேடிக் கொடுத்து விட்டாய்! வெகு நன்றாகப் பாடுகிறார்கள்; நல்ல தேட்டையான இசை ஞானம்; நயமான குரல் வளம்; இசையானது நல்லவளமை பெற்று எவ்விடத்தும் அழகமைதி கொண்டு விளங்குகிறது; நன்றாக முன்னுக்கு வந்து பேரும் புகழும் அடைவார்கள்; அதற்குரிய அறிகுறிகள் இவ்விருவர்களிடம்

செம்மையாக இருக்கின்றன. இவ்விருவரும் இசை உலகத்தில் நல்ல புகழ் பெற்று உனது குடும்பத்துப் பெயரைக் காப்பாற்றுவார்கள்,'' என்று உள்ளன் புடன் அப்பொழுதே அவ்விருவரும் தமது நல்லாசிகளை வழங்கினார்கள்.

● இராமசாமி ஐயருக்கும் வைத்தியநாத ஐயருக்கும் பூணூல் கல்யாணம் நடந்த சில மாதங்கள் சென்றதும் குடியாலம் வாசுதேவ ஐயங்கார் அவர்கள் தாம் புதிதாகக் கட்டிய வீட்டிற்கு நுழைவு விழா (கிரகப்பிரவேசம்) செய்தார்கள். அவ்விழாவில் சிவகங்கை பெரியவைத்தியநாதஐயர், சின்னவைத்தியநாதஐயர் போன்ற புகழ்பெற்ற பலருடைய இசை நிகழ்ச்சிகளும், மற்றும் வீணை, புல்லாங்குழல், நாதசுரம், கதாகாலட்சேபம் முதலிய இசை நிகழ்ச்சிகளும் நடத்தற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பெரியவைத்தியநாதஐயர் வாசுதேவஐயங்கார் அவர்களிடம், ''வையைச்சேரி பஞ்சநத ஐயரென்ற துரைசாமி ஐயரின் குமாரர்களான இராமசாமியும் வைத்தியநாதனும் வெகு நன்றாகப் பாடுகிறார்கள். சிறு வயதினராயினும் பெரிய வித்துவான்களுக்குரிய திறம் நன்கு அமைந்திருக்கிறது. அவர்களிருவரும் நன்றாக முன்னணிக்கு வரவேண்டியவர்கள். தங்களது கைராசியால் அவர்கள் பெரும் புகழுக்கு ஆளாகுதல் வேண்டும். சிறு பிள்ளைகளென்று எண்ணல் வேண்டாம். இங்கு நடக்கவிருக்கும் இந்தப் பெரிய அவையிலே அப்பிள்ளைகளையும் பாட ஏற்பாடு செய்தால் கச்சேரி மிகவும் சிறப்பாக அமையும்,'' என்று கூறினார்கள்.

● இவ்வளவு பேரும் புகழும் பெற்ற பெரிய வித்துவாஞகிய பெரியவைத்தியநாத ஐயரின் வார்த்தைகளைக் கேட்ட வாசுதேவ ஐயங்கார் அச்சொற்களை ஏற்றுக்கொண்டார். எனவே வையைச்சேரி துரைசாமிஐயருக்குத் தம் நண்பர் ஒருவர் மூலம் கடிதம் அனுப்பினர். அக்கடிதத்தில் தம் வீட்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுதற்கு இராமசாமியையும் வைத்தியநாதனையும் அழைத்து வரல் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார். அதன்படி பஞ்சநத ஐயரென்ற துரைசாமி ஐயர் தம் குமாரர்களை அழைத்துக் கொண்டு குடியாலம் வந்துசேர்ந்தார். அங்கு எல்லோருடைய இசை நிகழ்ச்சிகளும் நடந்தது போல அவ்விருவருடைய இசை நிகழ்ச்சியும் நடந்தது. அப்பொழுது இராமசாமி ஐயருக்குப் பத்து வயதும் வைத்தியநாத ஐயருக்கு எட்டு வயதும் நடந்துகொண்டிருந்தது. அன்று அவர்களிருவரும் பெரியபெரிய இசைப் புலவர்களெல்லாம் வியக்கும்படி பாடினர்கள். எல்லாரும் மெய்மறந்து தேனருந்திய ஈப்போல அவ்விசையில் ஆழ்ந்து, இசையின் சிறப்பை வியந்துநின்ருர்கள்; அவ்வாறு கேட்டவர்கள் கொண்டாடும்படி அதி அற்புதமாகப் பாடிவிட்டார்கள். அவ்விருவரும் சேர்ந்து கச்சேரியாக இசைப்பது அதுவே முதற்றடவையாகும். அவ்விருவருக்கும் தனிப்பட்ட முறையில் சன்மானங்கள் செய்யப்பட்டன. அது முதல் அவர்களது புகழ் ஓங்கி வளர்ந்தது.

● குடியாலம் வாசுதேவஐயங்கார் இத்துணை சிறப்புற்ற தெய்வீகக்களை குடிகொண்டிருக்கும் இச்சிறுவர்

களது அபாரயோக்கியதாம்சங்களைத் தமக்கு எடுத்துக் கூறி அவ்விசையை ஆனந்திக்கச் செய்த பெரிய வைத்தியநாத ஐயரிடம் மிகவும் பேரன்பு கொண்டார்கள். அவர்களது இசைச்சிறப்பைப் பற்றித் தம்மிடம் வந்து போவார் யாவரிடமும் வாசுதேவ ஐயங்கார் புகழ்ந்து எடுத்துக் கூறிவந்தார்.

● குடியாலம் வாசுதேவ ஐயங்கார் புதுவீட்டு நுழைவு விழாவிற்குப் பல பெரிய கனவான்களும், தனவான்களும் வந்திருந்தார்கள். அங்கு நடந்த வையை சகோதரர்கள் கச்சேரியைக்கேட்டவர்கள் தங்கள் தங்கள் கிராமங்கள் சென்று அவர்களது புகழைக்கூற, அக்கம் பக்கத்துக் கிராம மக்கள் அனைவரும் அவர்களது இசையில் ஈடுபட்டுத் தங்கள் இல்லங்களில் நடக்கும் திருமணங்களிலும், கோயிலில் நடக்கும் திருவிழாக்களிலும், பஜனை மடங்களிலும் கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்தனர்; இவ்வாறு அவர்களது இசையில் மகிழ்ச்சியுற்றனர். தொடர்ந்து இசை நிகழ்ச்சிகள் செய்துவந்த அவர்களுக்கு வெகு சீக்கிரத்திலேயே நல்ல புகழ் ஏற்படலாயிற்று. அக்காலம் எங்குப் பார்த்தாலும் அவர்களது இசைநிகழ்ச்சிகளே சிறப்பாக நடந்து வந்தன.

● வையை வைத்தியநாத ஐயர் தமது பத்தாவது வயதிற்குள்ளாகத் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பல ஊர்களிலும் இசை நிகழ்ச்சிகளைச் செய்து பல மடாதிபதிகள், பல சமீன்தார்கள், பலபிரபுக்கள், பல மிராசுதார்கள், பல இசைப்புலவர்கள், பல தமிழ்ப்

புலவர்கள், பல வடமொழிப் புலவர்கள், பல ஹரிகதா காலட்சேபம் நடத்தும் பெரியவர்கள் ஆகிய முக்கியம் வாய்ந்த அனைவரின் சிநேகத்தையும் பெற்றார்கள். அவர்களது இசைக் கச்சேரிக்குத் திரளான மக்கள் பலாக்கனியில் ஈ மொய்ப்பது போல வந்து சேருவர்; அவ்வாறு யாவரும் வியக்கும்படி அற்புத கானம் செய்வார்கள்.

● அவ்விருவரும் பல ஊர்கள் சென்று பல இசைப் புலவர்கள், தமிழ்ப்புலவர்கள், வடமொழிப் புலவர்கள் ஆகிய பலரையும் நண்பர்களாகப் பெற்றனர்; தாங்கள் பேசிவரும்போது வடமொழி நூலில் உள்ள இசை பற்றிய செய்திகளைக் கேட்டதின் பயனாக அந்நூல்களில் உள்ள ஒவ்வொன்றையும் அறிந்து ஆராயவும் அதனைச் செயலில் ஈடுபடுத்தவும் முயன்றனர். அவர்கள் பல சமஸ்கிருத இசை இலக்கண நூல்களைப் பார்த்துத் தெளிந்து, தெரியாதனவற்றைப் பல வடமொழிப் புலவரின் துணையால் கேட்டறிந்து அனுபவம்கொண்டனர். ஒரு விஷயத்தை ஒருமுறை கேட்டால் அவ்விஷயம் அவ்விள வயதினரான அவர்களுக்குப் பசுமரத்தாணிபோல மனப்பதிவாகி விடும். நூல்களைப் பார்க்கும் அறிவு வையை வைத்தியநாத ஐயருக்கு ஒன்பது வயதிற்குள்ளே ஏற்பட்டதானது கடவுளின் துணையே யாகும்.

● வையை வைத்தியநாத ஐயருக்கு எவருக்கும் அமையாத சாரீர வளம் இருந்தது. அவருக்குக் **'கௌள சாரீரம்'** என்பர். கௌள சாரீரம் என்பது:—

தென்னை மரத்தில் கௌளித்தெங்கு என்றொரு வகை யுண்டு. அதன் தேங்காய்மட்டையானது சிறிது மஞ்சள் கலந்த வெண்மை நிறத்துடன் விளங்கும். அந்த இளநீரைச் சிவபெருமானின் அபிடேகத்திற்கு உபயோகிப்பார்கள். அதனை மக்கள் தமக்காக உப யோகிப்பதில்லை. எல்லா இளநீரையும் விட இவ்விள நீர் அபிடேகத்திற்குச் சிறந்தது என்பர். எனவே வைத் தியநாத ஐயர் சாரீரம் சிவப் பிரியமானது என்பதை இச்சொல் குறிக்கும். மற்றும் அத்தேங்காய் அதிகம் பருக்காது; அதிகம் சிறுத்தும் இராது; நடுத்தரமாக இருக்கும்; சிறிது நீண்ட வடிவமுள்ளது. அத்தேங்கா யின் குடுக்கையிலுள்ள பெரிய கண்ணின் விளிம்பிலே உதட்டை வைத்து ஊதினால் அத்தேங்காயின் குடுக் கையின் உள்ளிருந்து கம்பீரமும் குளுமையும் உள்ள ஒலி யுண்டாகும்; அதுபோல ஒரே காத்திரமாக அவரது இசையொலி விளங்கும். அதனால் அவரது குரலைக் கௌள சாரீரம் என்பார்கள். இன்னும் குளம் என்றால் வெல்லம். அதன் மரூஉ கௌள மென்பது. எனவே அவரது சாரீரமானது இசையின் எப்பகுதியி லும் நிறைந்து வெல்லம் போன்ற இனிப்புடையதா யிற்று; அதனை உணர்த்துவது போலவும் கௌள சாரீ ரம் என்றழைத்தனர். அவரது தொண்டையிலிருந்து வரும் அந்த ஒலியானது சங்கநாதம் போல ஹூம் காரத்துடனும், கனத்துடனும், கணிப்புடனும் காதிற்கு மிகுந்த குளிர்ச்சியுடனும் புலனாகும்.

● அவர்களின் சாரீரத்தின் சிறப்பும் குணநலனும் யாதெனில், அவர்களது அண்மையில் அமர்ந்து இசை

யைக் கேட்டுச் சுவைப்பவர்களுக்கும், ஐம்பதடி, நூறடி அல்லது இருநூறடி தூரத்தில் இருந்து கேட்டு இசையைச் சுவைப்பவர்களுக்கும் அவரது குரலொலி ஒன்று போலவே செவிகட்குப் புலனாகி வரும். அருகே இருப்பவர்களுக்குத் தெளிவாகவும் கனமாகவும், தூரத்தில் இருப்பவர்களுக்கு இசையொலி சிறுத்தும் தெளிவற்றதுமாக விளங்காது. இசையின் திட்ப நுட்பப் பகுதிகள் அருகே இருப்போருக்கும் தூரத்தே இருப்போருக்கும் தெளிவாக உணர்ந்து கொள்ளத் தக்கனவாக இருக்கும். எனவே எட்டி இருந்தாலும் அருகே இருந்தாலும் அவரது இசைநயம் தெளிவாக அனுபவிக்க இயலும்.

● ஒரு நல்ல பாம்பைப் பிடித்தற்குப் பாம்புப் பிடாரன் தனது மகுடியை எடுத்து ஊதும் போதே அதன் ஒத்து ஒலியும் வாசிக்கும் ஒலியும் ஒன்றுசேர்ந்துவிடும், அதன் இனிமையை எடுத்த எடுப்பிலேயே யாவரும் உணர்ந்துவிடுவர்; அதுபோல அவர்கள் பாட ஆரம்பம் செய்யும்போதே மகுடியின் ஒலிபோல அவரது சாரீரம் தம்புராச் சுருதியுடன் ஒன்றிச் சுருதிசேர்ந்து நல்ல நாதக்கட்டுடன் கம்பீரமாக ஒலித்துக் கேட்போர் அனைவரையும் அந்நாதத்திலே ஈடுபடச் செய்துவிடும். ஆஹா! அச்சாரீரத்திற்குத்தான் என்ன சக்தி!

● அக்காலத்தில் அவர்கள் பாடும்போது மேடையாகிய உயரமான இடத்திலிருந்து பாடியதில்லை. கல்யாணக்கச்சேரி, அரசர்பால் நிகழும் கச்சேரி, மடாதிபதிகளிடம் நடக்கும் கச்சேரி, கோயில்களில் நடக்கும்

இசை நிகழ்ச்சி, பஜனைமடங்களில் நடக்கும் இசை விருந்து ஆகிய இவைகள் கீழே ஒரு சமுக்காளம் விரிக்கப் பெற்று அதிலிருந்தே கச்சேரியைச் செய்வார்கள். சில சமயங்களில் பொதுமக்களால் இரத வீதியிலே கொட்டகை வேய்ந்து அங்கு இசை நிகழ்ச்சிகள் நடப்பதுமுண்டு. அப்பொழுது அதில் மட்டும் பாடுவோருக்கு உயரமாக மேடை அமைப்பதுண்டு.

● அவர்களது இசையைக் கேட்போர் யாவரும் கண்களை மூடிக்கொண்டு அவ்விசையின் நுட்பங்களாகிய நல்லமைதிகளின் அழகு சிறிதும் வீணாகிவிடாமல் அதன் முழு அமைதிகளையும் கேட்டுச் சுவைப்பார்கள். அவர்கள் கச்சேரி செய்தற்கு உட்கார்ந்து விட்டால் அங்குக் கூடியுள்ள மக்களனைவரும் திடீரென்று மிகுந்த அமைதியுடையவர்களாவார்கள். அவர்கள் இசைக்க ஆரம்பிக்கும் வரை அவரது திவ்விய தேஜஸாகிய சைவத் திருக்கோலத்தை வைத்த கண் வாங்காமல் கண்குளிரக் கண்டு ஆனந்தப்பரவசராகி விளங்கி இருப்பார்கள்.

● வைத்தியநாத ஐயரவர்கள் இசைபாடும்போதெல்லாம் அவரது தமையனார் இராமசாமி ஐயரவர்களும் உடனிருந்து பாடுவார்கள். தம் தமையனார் இராமசாமி ஐயரவர்களின் சாரீரவளம், இசை ஞானத்திறன், இசையைச் செயல் படுத்தும் சிறப்பு ஆகிய அனைத்திலும் தாம் அவரைவிட மேலோங்கி இருந்தாலும் அதனைக் கண்டுகொள்ளாமல் வைத்திய நாத ஐயர் தம் தமையனார் இராமசாமிஐயருக்கு அடங்

கிப் பணிவும் மரியாதையும்கொண்டு அன்பு மிக்கவரா கவே இருந்து வந்தார். கச்சேரிகளிலும் ஏனைய சமயங்களிலும் எப்படியெப்படி இருக்கவேண்டும், நடக்க வேண்டும், பாடல்வேண்டும் என்று தம் தமையனார் கட்டளையிடுகிறார்களோ அதை மீறித் தாமாக ஒன்றும் செய்யமாட்டார். அத்துணை அடக்கம் அவர்கள் பால் இருந்தது.

● வைத்தியநாத ஐயர் பற்பல இடங்களிலும் கச்சேரிக்குச் சென்று வர வாய்ப்பு ஏற்பட்டதால் சென்ற இடங்களிலுள்ள தக்க வித்துவான்களின் சிநேகம் ஏற்பட்டது; அவரவர் பால் ஏற்பட்டிருந்த இசைத்திறனாகிய ஆற்றல்களையெல்லாம் அவர் உணர்ந்து, அத்துறைகளிற் பயின்று இசையின் எல்லாப் பரப்பையும் நன்றாக அறிந்து செயல் படுத்தினார்கள். இவ்வாறான இசை உண்மைகளை அவர்கள் அறிய அறிய இலக்கண நூலினுள் கூறப்பெற்ற பலசெய்திகள் அவர்களுக்குத் தாமே தெளிவாகி அவற்றின் உண்மைகளையும் அவர்கள் அறிய ஓர் ஏது உண்டாயிற்று. இவ்வாறான இசை இலக்கிய இலக்கணப் பகுதி முழுதும் வைத்தியநாத ஐயரின் பன்னிரண்டாவது பிராயத்திலேயே கைகூடிற்று. இசை சம்பந்தமாக எந்த விஷயத்தைக் கேட்டாலும் சிறிதும் ஐயத்திற்கு இடமின்றி இலக்கண முறையுடன் இலக்கியப் பகுதியும் சேர்த்துச் செய்து காட்டும் திறன் அவர்களிடம் பூரணமாய் அமைந்து விட்டது.

● வைத்தியநாத ஐயரைவிட இராமசாமி ஐயர் தமிழ்மொழியில் நல்ல பற்றுதலுடையவராதலால் ஆங்

காங்குச் செல்லும்போது பல தமிழ்ப் புலவர்களின் நட்பு மிகுதியால், தமக்கு ஓய்வு உள்ள நேரங்களி லெல்லாம் பல தமிழ் நூலேக்கற்று அவற்றின் திட்ப நுட்பப் பகுதிகளைப் பல புலவர்களுடன் பேசிக்கலந்து திறம் முழுவதும் செவ்வனே அறிந்து கொண்டார். தம் பதினைரும் வயதிற்குள் எந்தச் செய்யுட்களின் உட் பொருள்களையும் சந்தேகத்திற்கிடமின்றி அறியும் ஆற்றலையும், புதிதாகக் கவிகளியற்றும் அறிவையும், இசைக்குரிய கீர்த்தனைகள் செய்யும் திறத்தையும், தமிழ் மொழியின் ஆராய்ச்சித் துறையில் ஆராயும் தன்மை யையும் பெற்றுவிட்டார். அவர் நினைத்தவுடன் எதனை யும் செய்யுள் வடிவிலே வெகு சீக்கிரமாகச் செய்யும் திறத்தினைச் செவ்வனே அடைந்து யாவராலும் புகழப் பெற்ருர்.

● வையை வைத்தியநாதஐயர் இளமையில் தம் தமையனராகிய இராமசாமி ஐயரவர்களிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களை ஓரளவு கற்றுக்கொண்டது டன் சமஸ்கிருத மொழியில் நல்ல பண்டிதர்களாகிய பழமானேரி சுந்தர சாஸ்திரிகளிடம் அம்மொழியில் நல்லறிவையும், கோடகநல்லூர் சுந்தர சுவாமிகளிடம் சதுர்வேத தாத்பரிய சங்கிரகம், சிவதத்துவ விவேகம், சூதசம்ஹிதை முதலிய வடமொழி நூல்களையும் பாடங் கேட்டுத் தெளிந்தனர். எனவே அவர்கள் இசை மட்டு மன்றித் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் நிரம்பிய அறிவும் ஆற்றலும் பெற்றவர்களாக இருந்தார்கள்.

● வையை இராமசாமி ஐயரும் வைத்தியநாதஐயரும் இசை, தென்மொழி, வடமொழி இம்மூன்றிலும் நல்ல அறிவுத்திறமை பெற்றிருந்தபடியால் இசைப்புலவர்களும், தென்மொழிப் புலவர்களும், வடமொழிப் புலவர்களும் தங்களுக்கு எழும் ஐயங்களை இவர்கள்பால் வந்துகேட்டுத் தெளிந்து செல்வார்கள். இதற்கு முன் அச்செய்திகள் தங்களுக்குத் தெரியாதிருப்பினும் கலையின் அறிவாற்றல் மிகுதியால் அவ்விருவருக்கும் அப்புதுச் செய்தியின் உட் கிடக்கை மனத்திற்குப் புலனாகிவிடும்.

● வைத்தியநாதஐயர் சமஸ்கிருத சுலோகங்களைப் பதப்பிரிவுகளுடன் இராகத்தில் இயக்கிக் கூறும்போது சமஸ்கிருதத்தை நன்கு கற்ற பண்டிதர்கள் தம் மூக்கின்மேல் விரல் வைத்து வியந்து மகிழ்வார்கள். அவர்கள் கனவிலும் நினைத்திராவண்ணம் புதுக்கருத்து அச்சுலோகத்தில் விளங்குவது போலப் பதசாரம் பிரித்துப் பாடுவார்கள். சிவகதை செய்யும்போது யாருக்கும் தோன்றுத புதுக்கருத்துக்களைப் பதசாரம் பிரித்துப் பிரசங்கிப்பார்கள். இதுபோலத் தமிழிலுள்ள விருத்தப் பாக்கள், தேவாரம், திருவாசகம், திருவிளையாடற்புராணம், அருட்பா, அறுபத்துமூவர் சரிதம் ஆகியவைகளைப் பதம் பிரித்து, அச்செய்யுட்களைப் பொருள்கெடா வண்ணம் இசைத்துப் பாடுதலைக் கேட்பவர்கள் கல்லாதவராயினும் அவர்களுடைய மனதில் சொற்பொருள் விளக்கத்துடன் பதிவையுண்டாக்கும். இத்திறம் வேறு எவருக்கும் வாய்த்ததில்லை.

● மகாவைத்தியநாத ஐயர் கூறும் பதசாரங்கள் கற்பனைத் திறமும் நுண்மையும் உடையனவாக இருக்கும். பெரியபுராணம், தேவாரம், சூதசங்கிதை முதலிய தமிழ் நூல்களிலிருந்தும் வடமொழி நூல்களிலிருந்தும் மேற்கோள்களைக் காட்டிப் பொருள் சொல்லுகையில் அவருடைய ஆராய்ச்சியின் ஆழம் புலப்படும். தேவாரக்கருத்துக்களுக்கும் உபநிடதக் கருத்துக்களுக்கும் உள்ள ஒப்புமையை அவர் எடுத்துக் கூறுவார். மங்களமாக **சகானு** இராகத்திலுள்ள, "நந்திகேசாய மங்களம்" என்னும் கீர்த்தனத்தைப் பாடி அவர் பூர்த்திசெய்வார்.

● மகாவைத்தியநாத சிவனவர்கள் கூறிய பதசாரங்களுள் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் எழுதிய "மகாவைத்தியநாத ஐயர்" என்ற நூலிலிருந்து இரண்டினை இங்கு நோக்குவோம். (1) அப்பூதிநாயனர் சரித்திரப் பிரசங்கத்தைச் செய்தபொழுது பெரியபுராண கீர்த்தனத்திலுள்ள "அப்பூதியார் திருமனையில் வந்தார்" என்ற கீர்த்தனத்தைப் பாடிப் பொருள் கூறினர். அதன் மூன்ரும் சரணத்தில் "திங்களூர் மாடத்திங்களூர்" என்ற தொடர் உள்ளது. அதற்குப் பதசாரம் சொல்லுகையில் கற்பனை நயம் விளங்க, "சந்திரன் மேல் ஊர்ந்து செல்லும் மாடங்களையுடைய திங்களூர் என்பது அர்த்தம்; சந்திரன் குருத்துரோகமாகிய மாபாதகத்தை அறிந்து செய்தவனுதலின், குருபக்தியிற் சிறந்த அப்பூதியடிகள் வசிக்கும் ஊரிலுள்ள மாடங்களின் ஸ்பரிசத்தாலாவது தன் தோஷம் தீரும் என்று எண்ணி வந்தது போல இருந்தது" என்று சொன்னர்.

● சோமாசிமாறநாயனர் சரித்திரப் பிரசங்கம் மகா வைத்தியநாத ஐயரால் திருவாவடுதுறை மடத்திற் செய்யப்பட்டது. சுந்தரமூர்த்தி நாயனருடைய உதவி யால் ஸ்ரீதியாகேசப் பெருமானைத் தாம் செய்யும் யாகத் துக்கு எழுந்தருளச் செய்ய வேண்டுமென்று சோமாசி மாறர் எண்ணினர்; அதன் பொருட்டுச் சுந்தரமூர்த்தி நாயனரது விருப்பத்தைப்பெற நினைந்து அவருக்கு உவப்பான தூதுவளைக் கீரையை நாள்தோறும் மாறர் கொடுத்து வந்தார் என்ற செய்தியொன்று, பக்தவிலா ஸத்தைத் தழுவிப் பெரியபுராணக் கீர்த்தனத்தில் அமைக்கப் பெற்றிருந்தது. அதைக் கூறும் கீர்த்தனம், "தூதுவளைக் கீரையைக் காதலாய்க் கொடுத்துவந் தார்" என்று தொடங்குவது. இதைப் பாடிப் பிரசங் கம் செய்கையில் வைத்தியநாதஐயர், "அந்தக் கீரை யின் பெயராகிய தூதுவளையென்பது சுந்தரமூர்த்தி நாயனருக்கு, 'உங்களுக்குத் தூதாகச் சென்ற சிவ பெருமானை இணங்கச் செய்யவேண்டும்' என்ற சோமாசிமாறர் கருத்தைக் குறிப்பித்தலைப் போல இருந்தது," என்ருர். தூதுவளைப்பாயாக வென்று அத் தொடரைப் பிரித்துப் பொருளும் கூறினர்.

● மகாவைத்தியநாத ஐயரும் அவருடைய தமை யனர் இராமசாமி ஐயரும் சிலேடையாகப் பேசுவதில் வல்லவர்கள். அவற்றுள் சில வருமாறு:- மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் தென்னட்டு யாத்திரை சென் றிருந்தபோது சிலவேளைகளில் மகாவைத்தியநாத ஐயரும் அவர் தமையனர் இராமசாமி ஐயரும் உடன் செல்வதுண்டு. சந்நிதானத்துடன் அவர்கள் சென்

றிருந்த ஒரு சமயம் கம்பனேரி புதுக்குடி என்ற இடத்தில் அவர்கள் அணிந்திருந்த ஏறுமுக உருத்திராக்கக் கண்டியிலிருந்த தங்கமுலாங் கொடுத்திருந்த வெள்ளி வில்லைகளை நீக்கித் தங்க வில்லைகளையே போடும்படி சந்நிதானம் செய்வித்தனர். அப்பொழுது இராமசாமி ஐயர் "வெள்ளிவில்லை தங்கவில்லை" என்று சாதுரியமாகக் கூறி மகிழ்ந்தார்.

● ஒருசமயம் மகாவைத்தியநாதஐயர் தம் தமையனுர் முதலியோருடன் திருக்குற்ருலம் செல்லும்போது அவருடைய தமையனுர் "எவ்வளவு கல் தாண்டியிருப்போம்!" என்ருர்; மகாவைத்தியநாத ஐயர் "எல்லாங் கல்லுத்தானே!" என்றனர். (இவ்விரண்டினையும் உ. வே. சாமிநாத ஐயர் எழுதிய மகாவைத்தியநாத ஐயர் என்ற நூலினுள் காணலாம்.)

● மகாவைத்தியநாத சிவனவர்கள் ஒருசமயம் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கொழுமம் என்ற ஊரில் மிகப் பிரக்கியாதிபெற்ற செல்வர் ஒருவருடைய வீட்டிற்கு இசைக்கச்சேரி செய்தற்குச் சென்றிருந்தார்கள். அச்செல்வர் அவர்களை முதல்தரமான வரவேற்புச் செய்து உபசரித்தனர். கச்சேரி முடிந்ததும் அச்செல்வருடன் மகாவைத்தியநாத சிவன், இராமசாமி சிவன், இன்னும் பல பெரிய மனிதர்கள், தமிழ்ப் புலவர்கள், வடமொழிப் புலவர்கள் ஆகிய பலருங்கூடி வெளிவாசற் கொட்டகையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது முக்கியமான ஒருவர் வந்து மகாவைத்தியநாதசிவன், இராமசாமி சிவன் ஆகிய

அவ்விருவரிடமும், "திண்ணையில் தங்களிருவருக்கும் படுக்கை போட்டிருக்கிறேன். தங்களுக்கு எப்பொழுது நித்திரை வருகிறதோ அப்பொழுது சயனித்துக் கொள்ளலாம்" என்றார். உடனே கொழும்ஜயரவர்கள் மகாவைத்தியநாத சிவனவர்களை நோக்கி "அதிகமாகக் காற்றடிக்குமே!" என்றுகூறினர். அதாவது, காற்று அதிகம் வீசும் ஆதலால் உள்ளறையில் படுக்கைபோட ஏற்பாடு செய்யலாமா! என்பதை அவர்கள் வாயிலாக அறிந்துகொள்ளவே அவ்வாறு சொன்னார். உடனே மகாவைத்தியநாத சிவனவர்கள் "இங்கு மலேரியா கொசுப்போலப் பெரிய கொசுக்களின் உபத்திரவம் உண்டோ!" என்றார். செல்வர், "கொசு என்பது அறவே கிடையாது" என்றார். மகாவைத்தியநாத சிவன், "இங்குப் பலவகைப்பட்ட பூச்சிபொட்டுக்கள் நடமாடுமோ! அவைகள் கடித்தற்கு இடமுண்டோ!" என்றார். அதற்குச் செல்வர் "அவ்விதமான பயத்திற்கு இங்கு இடமில்லை" என்றார். மகாவைத்தியநாத சிவனவர்கள் "அப்படியாயின் எவ்விதமான கடி உபத்திரவங்களுமின்றி அதிகமாகக் காற்றடித்தற்குக் காரணமென்ன!" என்றார். அவர் அவ்வாறு கூறிய தன் பின்புதான் அங்குள்ளோருக்குக் காற்றடிக்கும்—கால்தடிக்கும் என்ற வேடிக்கையான சிலேடைப்பேச்சின் நயம் தெரிந்தது. அதன்பின் கொழுமம் ஐயரவர்கள் ஆமாம்; அதிகமாகக் காற்று வீசுமே என்று கேட்டிருத்தல் வேண்டுமென்று தம்மைத் திருத்திக் கொண்டார். மகாவைத்தியநாத ஐயரின் வேடிக்கையும் சாதுரியமும்நிறைந்த பேச்சைக்கேட்ட அனைவரும் வயிறு குலுங்கச் சிரித்து மகிழ்ந்தனர்.

● மகா வைத்தியநாத ஐயரும் இராமசாமி ஐயரும் எங்கெங்கு இசைநிகழ்ச்சிகள் செய்தற்குப் போனலும், அவ்வூரில் இசையிலும் தென்மொழியிலும் வடமொழியிலும் நற்றிறமமைந்த புலவர்கள் எவரெவரிருக்கிருர்கள் என விசாரிப்பார்கள். அப்படி நல்ல புலவர்கள் இருந்தால் அவர்களிடம் அளவளாவிப் பழகி அக்கலையிலுள்ள அரிய பெரிய செய்திகளை எல்லாம் அறிந்து கொள்ளுவார்கள். அத்துடன் அவர்கள் வாயிலாக என்ன புதுச்செய்தி வரப்பெறுகின்றது என்பதைக் கூர்ந்து கவனிப்பார்கள். இசை நிகழ்ச்சிகள் நடந்து விட்டபோதிலும் ஏனைய கலைகளின் நுட்பங்களை அறிதலின் பொருட்டுப் பலநாட்கள் அவ்விடங்களில் தாமதித்துத் தங்கவும் செய்வார்கள்.

● வையை வைத்தியநாத ஐயரின் பத்தாவது வயது முடியுந் தருணம், புதுக்கோட்டை சமஸ்தானம் சென்று, அங்கு அக்காலம் அரசராக விளங்கிய இராமச்சந்திரத் தொண்டைமான் அவர்களின் அரசவையில் பாடினர்கள். அரசரவர்கள் அவர்களது இசையைக் கேட்டு மெய்சிலிர்த்து உள்ளங் குளிர்ந்தார்கள். அச்சமயம் அந்த அரசவையிலே வீணை சுப்புக்குட்டி ஐயர், வீணை சுப்பையர் போன்ற பல இசை மேதைகள் அமர்ந்திருந்தார்கள். மிகவும் இளைஞரான அவர்களதுஇசையை அப்பெரும் புலவர்களெல்லோரும் கேட்டு, அச்சுவையை நுகர்ந்து இன்புற்றனர். அவர்களனைவரும் ஒரே வாக்காக, "இவர் ஒரு தெய்வப்பிறவியேயாவர்; முற்பிறப்பில் பரமசிவனுக்குத் தேனும் பாலும் பெய்துவரப்பெற்ற புண்ணியத்தால் இப்பிறப்

பில் தேனும்பாலும்போன்ற அதிமதுரமான இன்னிசை இவர்களிடம் ஆருகப் பெருகி ஓடுகிறது.'' மேலும், ''இவ்வளவு இளமையிலேயே இத்தகைய நுண்ணறிவும், சாரீர நயமும், இசையைச் செயற்படுத்தும் திறனும் உள்ளவர்களை இதுகாறும் நாங்கள் கண்டிலம் கேட்டிலம்'' என்று கூறிக் கொண்டாடினர்கள். சில ஆண்டுகள் புதுக்கோட்டை அரசவையில் நடக்கும் நவராத்திரி விழாவிற்குச் சென்று இசை நிகழ்ச்சிகள் பல செய்து வந்திருக்கிருர்கள். அரசரவர்களின் அழைப்பிற்கிணங்கப் பன்முறையும் சென்று இசையமுதைப்பொழிந்து அவையோர்களை மகிழ்வித்து நிரம்பிய சன்மானங்களை அரசரவர்களிடமிருந்து பெற்றுள்ளார்கள்.

● வையை வைத்தியநாத ஐயர் மிகவும் இளம் வயதினராக இருந்தாலும், அவரது இசைஞான வளமும் இசைத்திறனும்போல் இசைப்பவர் அக்காலத்தில் இல்லைஎன்று துணிந்து கூறலாம். ஆயினும் அவர்களுக்குச்சமமாக ஞானபலமுடையவர்களென்று கூறப்படுவோர் சிலரேயாகும். அவரது சாரீர வளம்போல் யாருக்கும் அமையவில்லை. இசைஞானபலத்தில் மிக்க அறிவுடையவர்களைக்கூறுமிடத்து ''சிவகங்கை பெரிய வைத்தியநாத ஐயர், சின்ன வைத்தியநாத ஐயர், பட்டினம் சுப்பிரமணியஐயர், கோயம்புத்தூர் இராகவ ஐயர், குன்னக்குடி கிருஷ்ணையர், பரமேசுர பாகவதர், சென்னை வேணுகோபாலதாஸு நாயுடு, பல்லவி சேஷய்யர், உருத்திர ஐயா, பிடில் போட்டோகிராப் மாசிலாமணி முதலியார், பிடில் சுப்பராயர், பிடில்

சாம்பசிவஐயர், திருக்கோடிக்காவல் பிடில் கிருஷ்ணையர், பிடில் வெங்கோபராவ், பிடில் இராமையாப்பிள்ளை, சென்னை பொன்னுசாமி நட்டுவர், பிடில் கிருஷ்ணசாமி முதலியார், மாயூரம் வீணை வைத்தியநாதஐயர், திருவனந்தபுரம் வீணை கல்யாணகிருட்டின பாகவதர், வீணை இராமச்சந்திர பாகவதர், மைசூர் வீணை சுப்பண்ணு, சேஷண்ணு, சாமண்ணு, புல்லாங்குழல் சரப சாஸ்திரிகள், தஞ்சை மிருதங்கம் நாராயணசாமியப்பா, சாமாரா, துக்காராம், சேதுராமராவ் ஆகியவர்கள் சிறந்த இசைத்திறமுடையவர்கள் ஆவார்கள்.

● மேலே கூறிய வித்துவான்கள் அனைவரும் பெருங்கியாதி பெற்றவர்கள். அவர்கள் இசைத்திறனில் மேலோங்கியவர்களேயாயினும், தஞ்சையில் அமர்ந்து விளங்கிவந்த தாளப்பிரத்தாரம் சாமா சாஸ்திரிகள், பல்லவி கோபாலையர், வீணை பெருமாளையர், சௌகம் சீனுவய்யங்கார், ஆனைஐயா, ஸல்லகாலி கிருஷ்ணையர் ஆகிய பெரும் இசைப் புலவர்களுக்குப் பிறகு அவர்களினும் சிறந்த பேரும் புகழும் பெற்று விளங்கியவர் மகா வைத்தியநாத ஐயரவர்களேயாவர்.

● புதுக்கோட்டை சமஸ்தானத்திற்குப் பன்முறையும் சென்றவிடத்து, பச்சைமிரியன் ஆதிப்பையருடைய பரம்பரையில் வந்த வீணை சுப்புக்குட்டி ஐயரின் சிநேகத்தால் இசையிலுள்ள பலதிட்பநுட்பங்களையும் அவர்களிடமிருந்து வையை வைத்தியநாத ஐயர் அறிந்து கொள்ள ஏது உண்டாயிற்று.

● வையை வைத்தியநாத ஐயரின் பெரும்புகழை மதுரை மாநகரிலுள்ள பலபெரிய மனிதர்கள் கேள்வி

யுற்றூர்கள். அக்காலத்திலே மாம்பழக்கவிச்சிங்க நாவலர் பெருமான் போன்ற பல புலவர் பெருமக்களேயும், இசைபுலவர் பெருமக்களேயும் அதிகம் விரும்பி ஆதரித்து வந்தவர் சிரஸ்தேதார் வேங்கிடசாமி நாயுடுகாரு. அவரைப் போலப்பல அன்பர்களும் மேலூர் தாசில்தாராக இருந்த சீதாராமஐயர் போன்ரேரும் கூடிப் பதினெரு வயது நிரம்பிய அவ்விளம்வித்துவானே வரவழைத்து முதன்முதலாக மதுரை மீனுட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் பாடச் செய்தார்கள். பின்பு பல பிரபுக்கள் வீட்டிலும், பல பொது இடங்களிலும் இசை நிகழ்ச்சிகளே ஏற்படுத்தி, மதுரைமாநகர் மக்கள் அனேவரும் கேட்டுக்களிக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். அவ்வப்போது அக்கால முறைப்படித் தக்க சன்மானங்கள் அளிக்கப்பட்டன. அவர்களது இசையில் அதிகமோகங் கொண்ட மக்களின் அன்பு மிகுதியால் அவர்கள் பல மாதங்கள் அங்குத் தங்கியிருந்தனர். எந்நேரமும் அவர்களேப் பார்ப்பதற்கென்றும், இசை நிகழ்ச்சிகளுக்கு அவர்களது சம்மதத்தை அறிதற்கென்றும், பலபிரபுக்களும், மக்களும் பெருங்கூட்டமாகக் கூடி ஒவ்வொரு நாளும் அவர்களேச் சூழ்ந்த வண்ணமிருந்து வந்தனர். பின்பு அந்த மதுரை மாநகரிலே கல்யாணத் திருவிழா நடக்கும் வீடுகளில் அவர்களது அழைப்பின்படிப் பன்முறைகள் சென்று இசைநிகழ்ச்சிகளே அவர்கள் புகழும்படிச்செய்துள்ளார்கள்.

● மகாவைத்தியநாத சிவனுடைய பேரையும் புகழையும் சேதுபதி மன்னராகிய முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். அக்

காலத்திலே சேதுபதி அரசரவர்கள் தமிழ், இசை ஆகிய இவைகளில் மிகுந்த அறிவு படைத்தவராகவும் அன்புடையராகவும் இருந்தார்; எனவே, பல தமிழ்ப் புலவர்களையும், வடமொழிப் புலவர்களையும் இசைப்புல வர்களையும் மதித்து ஆதரித்துவந்த பெரும்வள்ளலாகத் திகழ்ந்தார்கள். அவர்களைக் கண்டு தமது திறங்காட் டிச்சன்மானம் பெருத சிறந்தபுலவர்களே இல்லை. அவர் கள் தென்மொழியில் சிறப்பாகவும், வடமொழியில் ஓர் அளவிலும் கற்றுத் தேர்ந்தவர்கள். எனவே, அவர்கள் தம் அலுவலர்களிலே தக்கஒருவரை அனுப்பி வையை வைத்தியநாத ஐயரைத் தம்பால் வரவழைத்தார்கள். சேதுபதி அரசரவர்கள் அவர்களுடைய இசையில் அதிக விருப்பமுள்ளவர்களாகித் தம்முடன் மூன்று மாதத் துக்கும் மேலாகத் தங்கச் செய்தார்கள்; அவர்களது இசையை வேண்டியபோதெல்லாம் சுவைத்து மகிழ்ந் தார்கள். அப்பொழுது அவ்வரச அவையில் அக்காலம் மிகவும் புகழ்பெற்ற பல இசைப்புலவர்கள் சமஸ் தானத்து வித்துவான்களாக இருந்தனர். அவ்விசைப் புலவர்களுடன் மகாவைத்தியநாத சிவனவர்கள் பல இசைச்செய்திகளைக் கலந்து பேசியதுண்டு. அந்த நுட்பங்களை யெல்லாம் தாம் செய்யும் இசை நிகழ்ச்சி யிலே செய்து பரிமளிக்கச் செய்து விடுவார்கள். அர சரவர்கள் இசை ஞானத்திலே மிகச் சிறந்தவராதலால் வையை வைத்தியநாத ஐயரையும், தமிழ்மொழியில் நல்லபாண்டித்தியம் உள்ளவராதலால் வையைஇராம சாமிஐயரையும் பெரிதும் விரும்பினர்கள். அவ்விருவரும் அங்குத்தங்கி வந்த ஒவ்வொரு நாளும் அவ்வரண்மனை யானது இசைவிழவும் தமிழ் விழாவும் கொண்டு

காட்சியளித்தது. அங்கிருந்த பல இசைப் புலவர்களின் நட்பின் பயனுகவும், இசை சம்பந்தமான பேச்சுக்களாலும், அதன் நுட்பங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்ட வகையாலும் வைத்தியநாத ஐயரின் இசையானது ஒவ்வொருநாளும் புதுப்புது முறையிலே தோன்றிச் சிறந்தது; அரசர் அவர்களையும் அங்குக் குழுமியுள்ள ஏனைய புலவர்களையும் வியப்பிற்குள்ளாக்கிற்று. தமிழிலே நற்றிறம் பெற்றிருந்த அரசர் அவர்கள் அவ்விருவரில் இராமசாமிஐயரிடம் நிரம்ப இருந்த தமிழ்ப்பயிற்சியையும், இசைப்பாடல்கள் இயற்றும் ஆற்றலையும், துரிதமாகக் கவிகள் செய்யும் திறத்தினையும் ஆகிய இவற்றின் மிகுதியையுங் கண்டு, மகிழ்வுற்று அவருக்கு ''மோனைச்சிங்கம், சாகித்தியப் புலி'' என்ற சிறப்புப்பட்டங்களைக்கொடுத்துச் சிறப்புச் செய்தார்கள். அங்கு அரசர் அவையிலே ஒவ்வொரு ஆண்டிலும் நடத்தப்பெறும் தமிழ் வடமொழி இசை ஆகிய இம்மூன்றின் காரணமாகக்கூடும் வித்துவத் சபைக்கு, வையை இராமசாமிஐயரையும் வைத்தியநாத ஐயரையும் தலைவராக்கிப் பரீட்சையை நடத்தும் அதிகாரிகளாக நியமித்தார்கள். அதனுல் அவ்விருவரும் ஒவ்வொரு ஆண்டிலும் இராமனுதபுரம் சென்று அரசரைக்கண்டு இசைக்கச்சேரி, வித்துவத் பரீட்சையின் மேற்பார்வை ஆகிய எல்லாவற்றிலும் கலந்து வந்தார்கள். தமிழ்ப் புலமையிற் சிறந்த அரசரவர்கள் கந்தபுராணச் சுருக்கம் என்ற ஒருசுவடியை வையை வைத்தியநாத ஐயர்பால் தந்து ''இதை ஒவ்வொரு நாளும் பாராயணம் செய்து வந்தால் தங்களுக்கும் தங்கள் தமையனர் போலத் தமிழறிவு சிறந்து ஓங்

கும். அப்பொழுது தமிழறிவும் இசையறிவும் சேர்ந்து சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல இசை இன்னும் சிறப்புற்றுஓங்கும்.'' என்றூர்கள். அப் பொழுது இராமசாமிஐயருக்குப் இருபதுவயது. வைத் தியநாத ஐயருக்குப் பதினெட்டுவயது. சேதுபதி முத்துராமலிங்கத் தேவரவர்களின் அறிவுரையை வைத்தியநாதஐயர் மிக்க உவகையுடன் ஏற்றுக் கொண்டு அன்றுமுதல் தம் தமையனுரிடம் பல தமிழ் நூல்களைக் கற்றுக்கொண்டு தமிழறிவில் அவரி னும் சிறந்து விளங்கினுர். இவ்விபரம் இராமசாமி ஐயரியற்றிய மகாவைத்தியநாத ஐயரின் **விஜயசங்கிர கம்** என்ற இரங்கற்பா நூலினுள் ''மகாராஜா அவர் கள்......கந்தபுராணச்சுருக்கப் புத்தகத்தையும் முதல் இலக்கியமாகச் சன்மானித்தார்கள். கற்பகம் போன்ற கைக்கமலங்களாற் கொடுத்த நாள்முதல் என்னிடத் தில் இனிய தமிழ் பயின்று திரியிலேற்றிய தீவட்டிபோல் என்னினுஞ் சிறந்த கல்வியுடையவராய் விளங்கினர்'' என்று எடுத்துக்கூறிப் புலப்படுத்தியுள்ளார்.

● வையை வைத்தியநாத ஐயரையும் இராமசாமி ஐயரையும் அக்கிராம மக்கள் **இரட்டையர்** என்று அழைப்பது வழக்கம். அவ்வீட்டைக் குறிக்கும்போது இரட்டையர் வீடு என்றே குறிப்பார்கள். வையைச் சேரியிலுள்ள இரட்டையர்களாகிய இவர்களது வீட் டிலே, அக் கிராமத்திலுள்ள பத்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் அனைவரும் காலையிலும், நடுப்பகலிலும், இரவிலும் வந்து சாப்பிடுவார்கள். அவ்வாறு சாப்பிட வரும் குழந்தைகளை அவ்வீட்டிலுள்ள எவரும் எதுவும்

சொல்லமாட்டார்கள். அக்குழந்தைகளை ஏதும் சொல்லக்கூடாதென்பது வைத்தியநாத ஐயரின் ஒரு கட்டளை. அக்குழந்தைகள் எல்லோரும் சாப்பிடுவதை வைத்தியநாதஐயர் அன்புகனிந்த உள்ளத்தோடு கண்டுகளித்து மகிழ்வார். அக்குழந்தைகளைப் பார்த்துப்பார்த்து அவர்கள் கடைசிக்காலம்வரை குழந்தை உள்ளம் போல்கள்ளங் கபடம் அற்றே விளங்கினர்.

● தங்களது இல்லத்திலே மிக்க களிப்புடன் காலைப் பழைய அமுது உண்ண வருங் குழந்தைகளுக்கு வைத்தியநாத ஐயரின் தாயாராகிய அருந்ததி என்ற தாயு அம்மாள் முகங்கோணுது, குழந்தைகளை உபசரிப்பர்; அதாவது, பெரிய கற்சட்டியில் நிறையத் தயிர் ஊற்றி உப்பு இட்டு, நீராகார அமுதை நன்ருகப் பிசைந்து கீரைசேர்த்து அடுப்பிலே சூடேற்றிய பழங்குழம்புடன் ஒவ்வொரு குழந்தையின் கையிலும் இட்டு வயிறு நிரம்பச் சாப்பிடச் செய்வார்கள். அவ்வம்மாளுக்கு இது ஒரு பெரிய மகிழ்ச்சியாகும்.

● ஒரு நாள் கிராமத்துக் குழந்தை ஒன்று நடுப்பகலில் உண்ணுதற்காகப் பரிமாறப்பட்ட இலையிலே உட்கார்ந்து விட்டது. வைத்தியநாத ஐயரின் மூத்த தமையனுரான சாம்பமூர்த்தி அவர்கள் அக்குழந்தையைப் பார்த்து "அடேய்! இங்கே ஏன் உட்காருகிருய்! உன் வீட்டிற்குப் போ" என்று கடிந்து கூறினர். அவ்வாறு கூறியதை வைத்தியநாத ஐயர் கேட்டுவிட்டார்; உடனே மனம் வருந்தினர். வைத்தியநாத ஐயர் தம் தமையனுரை நோக்கி "அண்ண! இனி ஒருவரையும் நீங்கள் அவ்வாறு கடிந்துரைத்தல்கூடாது; நான் இன்று

நல்லபெயருடனும், புகழுடனும், நல்ல பணவருவாய் உள்ளவனுகவும் இருக்கிறேன். அவ்வாறு இருப்பது எனது அதிட்டம் என்று நினைக்காதீர்கள். இங்கு வந்து உணவு உட்கொள்ளும் எந்தக் குழந்தையினுடைய அதிட்டமோ, நான் புகழ், பெயர், பெருமை, வருவாய் ஆகிய இவைகளை அடையும் பேறு பெற்றுள்ளேன். எனவே இக்குழந்தைகள் எனக்குத் தேடித்தரும்புனித மான புகழ், பெருமை, செல்வம், தர்மச்செயல் ஆகிய இவை என்னைவிட்டு நீங்கிவிடாமல் இருக்க உதவி செய்யுங்கள். இங்கு வந்து உணவு உட்கொள்ளுபவர் களின் மனம் புண்படும்படி ஏதும் பேசாமலிருந்து என் னைக் காப்பாற்றுங்கள்'' என்று கேட்டுக்கொண்டார்.

● வையை வைத்தியநாதஐயர் வீட்டில் குழந்தை கள் பெரியவர்கள் ஆகிய இவர்கள் ஒருவேளைக்கு நாற் பது அல்லது ஐம்பது பேருக்குக் குறைவில்லாமல் உணவு உட்கொள்ளுவார்கள். ஒவ்வொருநாளும் அவர் களது வீடு கல்யாணவீடு போலவே காட்சிதரும். எல் லோரும் வயிருர உணவருந்துவார்கள். அத்துணைப் பேர் உணவு உட்கொள்ளுதலைக்கண்டு வைத்திய நாதஐயர் அளவிலா மகிழ்ச்சியடைவார். அத்துணைப் பேர்களுக்கும் பகலும் இரவும் சமையல் செய்வதைக் கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளின் தர்ம பத்தினி சீதையம்மாள் அவர்கள் தாமே மனமுவந்து ஏற்று, எல் லோருக்கும் அன்னமிடும் அப்புண்ணியத்தைச் செய்து வந்தார்கள்.

● வையை வைத்தியநாத ஐயரவர்களை எட்டய புரம் அரசரவர்கள் விரும்பித் தமது சமஸ்தானத்திற்கு

அழைத்தார்கள். அவ்வழைப்பிற்கு இணங்கி எட்டயபுரம் சென்று அரசரைக்கண்டு அவ்வரண்மனையிலே இன்னிசை விருந்து நிகழ்த்தினார்கள். அப்போது சங்கீத **சம்பிரதாயப்பிரதர்சனி** என்ற இசைநூலை வெளியிட்ட சுப்பராமதீக்ஷிதர் என்ற இசைப் புலவர் அரண்மனையிலே வித்துவானாக விளங்கி வந்தார். அரசரும் அவ்விசைப் புலவரும் ஏனையோரும் மகாவைத்திய நாத சிவனவர்களது இசையைக் கேட்டுத் தாங்கள் ஒவ்வொருவரும் ஒரு புது உலகத்திலே இருப்பவர்கள் போன்றே எண்ணினார்கள். அவரது இசையைச் சுப்பராம தீக்ஷிதர் தமது வாயால் வர்ணிக்கும் போது "தங்களுடைய கனநயம், கணிப்பு, குளிர்ச்சி இனிமை மிக்க குரல் வளத்தை இது காறும் நானும் என் போன்ற எவரும் கேட்டதில்லை. தாங்கள் பாட ஆரம்பித்த அக்கணமுதல் கச்சேரியை முடிக்கும் வரை எங்களுடைய புற நினைவெல்லாம் நீங்கிச் செயலற்று, அந்தரத்திலே மிதப்பது போன்ற ஆனந்தப் பரவசமே நிறைந்த உள் உணர்ச்சியுடனேயே இருந்தோம். அது இறைவன் அருளேயன்றி வேறல்ல. சிவபெருமான் நாதவடிவினன். அந்நாத வடிவே தங்கள் ரூபத்தில் வந்ததாக நாங்களறிகிறோம்" என்று கூறி மனமுருகினார். வையை வைத்தியநாதஐயரின் இசையைக் கேட்ட அரசர் முதலாகிய அனைத்து மக்களும் இவ்வுலகச் சிந்தனைகள் அற்றவர்களானார்கள். அரசரவர்கள் வெகுவாகப் புகழ்ந்து நல்ல முறையில் சன்மானங்கள் செய்து கௌரவித்தார்கள். அங்குப் பல நாட்கள் தங்கினார்கள். எட்டயபுரத்து அரண்மனையிலே பல

தமிழ்ப் புலவர்களுண்டு. அவர்களுடன் அளவளாவிப் பல செய்திகளை அப்புலவர்கள் வாயிலாகக் கேட்டு அறிந்து கொண்டார்கள். சுப்பராமதீக்ஷிதர் அவர்களிடம் இசை சம்பந்தமான பல செய்திகளைப்பற்றி அளவளாவி மகிழ்ந்தனர்.

● மகாவைத்தியநாதஐயர் எட்டயபுரத்துச் சமீனில் இருக்கும்போது திருநெல்வேலியிலுள்ள இசையன்பர்கள் பலர் அவர்களிடம் வந்தார்கள் தங்களது ஊருக்கும் வருகைதந்து இசைமழை பொழிந்து அங்குள்ள மக்களை எல்லாம் இன்புறுத்தல் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் அன்பிற்கும் வேண்டுகோளுக்கும் கட்டுப்பட்ட வைத்தியநாதஐயர் அவர்கள் திருநெல்வேலி சென்று திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள நெல்லையப்பரையும் காந்திமதியம்மையையும் வலம் வந்து வணங்கினுர்கள். அச்சந்நிதானத்திலே அமர்ந்து இசையமுதினைச் சிவார்ப்பணம் செய்தார்கள். அந்நகரிலுள்ள பிரபுக்களும் ஏனையோரும் கேட்டு மகிழும்படி இசைத்தார்கள். அங்குள்ள பல பெரிய மனிதர்கள் அவர்களது இசையிலே ஈடுபட்டு அதிக அன்புடையவர்களானுர்கள். பலர் நிறையச் சன்மானங்களைச்செய்து கௌரவித்தார்கள். அங்குள்ள பல கனவான்களின் ஆதரவினுல் பல மாதங்கள் தங்கினுர்கள்.

● வைத்தியநாதஐயரவர்கள் எவ்வூரிலுள்ள திருக்கோயில்களிற் சென்று பாடினுலும், அங்குள்ள சுவாமியைப்பற்றிக் கீர்த்தனவடிவிலே பாடல் இயற்றி இசைப்

பது வழக்கம். அதுபோல ஸ்ரீ நெல்லையப்பர் சந்நிதியிலே பாடும் போது ஸ்ரீ நெல்லையப்பரையும் ஸ்ரீ காந்திமதியம்மையையும் துதித்துத் தோத்திரம் செய்யும் வகையில் ஒரு இசைச் சாகித்தியம் இயற்றினார்கள்; அதைக் கடவுள் சந்நிதியில் பாடுங்காலத்து ஒரு தில்லானாவின் சரணமாக்கி இசைத்தார்கள்.

அது வருமாறு:-

"குகதாசனுக் கருள் சங்கரி,
சகம்புகழ்ந்திடும் திருநெல்வேலி,
நகரில்தான் நாதரொடு,
மகிழ்ந்துறும் காந்திமதியம்மா."

இந்தத் தில்லானாவின் முழு அமைப்பும் வருமாறு:—

பல்லவி

ததரதானி தொம்திரிதிரின த்ருத்ருதில்லில்லான
நாத்ருத்ரு தில்லான த்ருதோம்.

அனுபல்லவி

தீம்தரதனி உதரதானி தித்தில்லான த்ருத்ருதானி
(தொம்த்ருதானி நாத்ருத்ருதில்
லானத்ருதோம் தொம்த்ருதானி)
தத்திமிதித்திமி தத்ததிங்கிணதொம்
திமிதத்ததிங்கிணதொம்
ததிங்கிணதொம்.

சரணம்

குகதாசனுக் கருள் சங்கரி
சகம்புகழ்ந்திடும் திருநெல்வேலி
நகரில்தான் நாதரொடு
மகிழ்ந்துறுங் காந்திமதியம்மா

(சொற்கட்டு)

ததனி உதனி தானிதித்தில்
லானாத்ருனா தொம்த்ருதானி த்ருத்ருதானி
தில்லில்லானா த்ருத்ரு
தத்திக்கிட தக ததிங்கிணதொம்
திக்கிடதகததிங்கிணதொம்
கிடதகததிங்கிணதொம்.

என்பது அவர்களால் பாடப்பெற்ற முழு உருவமமைந்த தில்லானாவாகும். இத்தில்லாவின் சுரக்குறிப்பு:-

இராகம் - வசந்தா. தாளம் - ரூபகம். மேளம்—17
ஆரோ — சமகமதாநிச்ா. அவரோ — ச்நிதநிதமகரீசா.

பல்லவி

ச்ா ச்ா = நீ த நி தா மா / கா ; = மா கா ரீ ரீ /
த த ர தா . . னி தொ ம் தி ரி திரி

சா ; = ; ; ; ச ச / ச ம க ம =
னா . . . . த்ரு த்ரு தில் லில் லா னா

த த த த த த ம த //
நா த்ரு த்ரு தில் லா னு த்ரு தோம்

அனுபல்லவி

தா மா = தா நீ ச்ா ச்ா / ச்ா ச்ா = ரீ ச்ா ; ச்ா /
தீ ம் த ர தா னி உ த ர தா . னி

ச் ச் ச் நி = ச் ரி ச் ரி ச் ச் ச் நி /
தித் தில் லா னு த்ரு த்ரு தா னி தொம் த்ரு தா னி

த நி ச் ச் ச் ரி ச் நி த நி த ம /
நா த்ரு த்ரு தில் = லா னு த்ரு தொம் தொம் த்ரு தா னி

தா மா = தா நீ ச்ா ச்ா / ச்ா ச் க = ரீ ச்ா ; ச்ா /
தீ ம் த ர தா னி உ த . ர தா . னி

மத்தியமகாலம்

ச்ா ச்ா ச்ா நீ = ச்ா ரீ ச்ா ரீ ச்ா ச் ரி ச்ா ச் ரி
தித் தில் லா னு த்ரு த்ரு தா னி தத் தி மி தித் தி மி

ச்ா ச் ச் ச் ச் நீ
தத் த திங் கி ண தொம் =

த நி தா த த த த மா க ம க ரி சா
தி மி தத் த திங் கி ண தொம் த திங் கி ண தொம் //

சரணம்

ச ச மா = ம ம த நி ச்ா ச் ச் /
கு க தா ச னுக் க ருள் சங் க ரி

ச் நி ச் ரி = ச் நி த த நி தா ம /
ஜ கம் பு கழ்ந் தி டும் தி ரு நெல் வே லி

த த நி ச் = ; தா த த மா / க ம க ம =
ந க ரில் தா ன்நா த ரொ டு ம கிழ்ந் து றும்

க ரி ரி ரி ரி சா ச // ச ச ச ம =
கா ந் தி ம தி யம் மா த த னி உ

ம ம தா நி ச்ா ச் / ச் ச் ச் நி =
த னி தா னி தித் தில் லா ஞ த்ரு ஞ

ச் ரி ச் நி த நி த ம / தா நீ ச்ா ச்ா =
தொம் த்ரு தா னி த்ரு த்ரு தா னி தில் லில் லா ஞ

மத்தியமகாலம்

சா நீ ச்ா ரீ ச் ச் ச் ச் ச் ச் ச் ச் / நீ தா த
த்ரு த்ரு தத் திக் கி ட த க த திங் கிண தொம் திக் கி

த த த=த த த த மா ம ம க ரி க ம க ரி சா //
ட த க த திங் கி ண தொம் கி ட த க த திங் கி ண தொம்

என்பது, அவர்களால் பாடப்பெற்ற முழு உருவமைந்த தில்லாஞவாகும்.

பின்பு இத்தில்லாஞவின் சரணத்தின் அமைதியைக் கொண்டு முழு உருவத்திலே ஒரு கீர்த்தனமாக இராம சாமி சிவனவர்கள் இயற்றி இச்சரணத்தை அக்கீர்த் தனேயின் இரண்டாவது சரணமாக அமைத்துள்ளார்கள். அது வருமாறு:—

பல்லவி

தருணமிது கருணே செய்வாயே-பரிவொடு
சங்கரி தாழும் சங்கரி சம்புவ சங்கரி நீயே.

அனுபல்லவி

சரண கமலம் சரணதில்லை
சன்மமென் வலையில் விழாமல்
தப்பிட இப்படியிற் குருவுருவாய்
சமயத்தெதிர்வருவாய் கதிதருவாய்

சரணம்

(1) சித்தத்தின் பால் திகழும் உனது மகிமைதனைப்
புகழ்ந்து புகழ்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகும்
சித்தர்க்கினிதருள் பரவெளியே
பக்தர்கள் துதிசெய்யும் ஒளியே
சிவனிடம் வளர்கிளியே.

(2) குகதாசனுக் கருள்சங்கரி
சகம்புகழ்ந்திடும் திருநெல்வேலி
நகரில்தான் நாதரொடு
மகிழ்ந்துறுங் காந்திமதியம்மா

(சொற்கட்டு)

ததனிஉதனி தானிதித்தில் லானத்ருன தொம்
த்ருதானித்ருத்ருதானி தில்லில்லானத்ருத்ரு தத்
திக்கிடதக ததிங்கிணதொம் திக்கிடதக ததிங்
கிணதொம் கிடதகததிங்கிணதொம்.

● திருநெல்வேலி மாவட்டத்திலே அவர்கள் தங்கிய நாட்களிலே பல இசை அன்பர்கள் பற்பல இடங்களிலிருந்து வந்து, அவர்களது இசைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுசெய்வார்கள்; சரமாரியாகப்பொழியும் அவர்களது

இசையமுதைக் காதுகுளிர மனங்குளிரக்கேட்டு இன்புற்று அவர்களைத் தங்கள் சொந்தமாக்கிக் கொள்வார்கள். அவர்களுக்குப் பலப்பல மரியாதைகளைச்செய்து ஆசார உபசாரங்களைச் செய்வார்கள். அந்நகரிலுள்ள தமிழ், வடமொழி, இசை, வேதாந்தக் கலைஞர்கள் வைத்தியநாத ஐயரின் அறிவாற்றல்களைக் கண்டு அவர்களுடன் அளவளாவி மகிழ்ந்தனர்.

● இராமசாமிஐயருக்கும் வைத்தியநாதஐயருக்கும் தாம் கற்றுள்ள தென்மொழி வடமொழி இசைப்பயிற்சி சிவபக்தி ஆகியவற்றின் அமைதியால், வேதாந்த அறிவும் அவ்விளவயதிலேயே அவர்களிடம் குடி கொண்டு விட்டது. அதனால் திருநெல்வேலியில் வேதாந்தப் பயிற்சியில் மிக்கவராகிய ஐயாசாமிபிள்ளை சிதம்பரம் பிள்ளை ஆகியவர்களின் நட்பிலே அவர்கள் மிக்க களிப்பெய்தினார்கள். அவர்கள் வாயிலாக வேதாந்த இரகசியங்களைக் கேட்டறிந்தார்கள். அக்கலையின் நுண்ணறிவை அறிதற்காக அங்குப் பல மாதங்கள் தங்கினார்கள். திருநெல்வேலியில் தங்கிய நாட்கள் முழுதும் தமது சிறந்த வேதாந்த நண்பரும் சிவபக்திசிரோன்மணியும், நிறைந்த செல்வமுடையவரும், நல்லறப் பணிகள் செய்தவரும் ஆகிய சிதம்பரம் பிள்ளை அவர்களது பஜனைமடத்திலேயே தங்கி இருந்தார்கள்.

● அங்குத் தங்கியிருந்த காலத்தில் வேதாந்தபரமாகச் செய்த கீர்த்தனைகளும் உண்டு; மேலும் பஞ்சத்தினல் மக்கள் வாடுதலைக்கண்டு மழைபெய்தற்

காகப் பாடிய கீர்த்தனைகளும் உண்டு. அவற்றில் சில என்னிடம் இருக்கின்றன. இன்னும் பல அச்சில் இல்லாத தனிக் கீர்த்தனங்களும் என்னிடம் உள்ளன.

● அக்காலத்திலே திருநெல்வேலி மாவட்டத்தில் ஆழ்வார் குறிச்சி என்ற ஊரிலே தளவாய் குமாரசாமி முதலியார் என்றொரு சீமான் இருந்தார். அவரது செல்வம் அளவிட இயலாதது; பெரிய பிரபு. அவர்களுக்குப் பெரிய பெரிய சமீன்தார்களும், பெரிய மடாதிபதிகளும், தமக்குச் சமதையான கனதனவான்களும் ஆகிய நண்பர்கள் பலருண்டு அவர்கள் வையை வைத்தியநாத ஐயரின் புகழைக் கேட்டுத் தமது அரண்மனைக்கு அவர்களை அழைத்து வந்தார்கள். அவர்களது இசையைக்கேட்டு மனம் உருகினார்கள். அவர்களைத் தக்கபடி உபசரித்து வந்தார்கள். தளவாய் குமாரசாமி முதலியார் என்ற பிரபுவுடன் வையை வைத்தியநாத ஐயரும் இராமசாமிஐயரும் தொடர்ந்து எட்டு அல்லது ஒன்பது மாதங்களுக்கும் மேல் தங்கினார்கள். முதலியார் அவர்களால் பெருஞ்சிறப்புக்களை அவர்களடைந்தார்கள். முதலியார் அவர்கள் மூலம் திருநெல்வேலியிலும் இன்னும் அம்மாவட்டத்திலுள்ள பற்பல இடங்களிலும் அவர்கள் கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்து கௌரவித்தார்கள்; அவர்களுக்கு முதலியார் அவர்கள் கௌரவித்தது போல எங்கும் யாரும் அத்தகுச் சிறப்புக்களை அவர்களுக்குச் செய்ததில்லை.

● ஆழ்வார் குறிச்சி தளவாய் குமாரசாமி முதலியாரவர்கள் பெரும் செல்வரென்பதோடு பெரும் மதிப்புடையவராதலால் அவர்களுக்குச் சொக்கம்பட்டி சமீன்தார்

நெருங்கிய நண்பராக இருந்தார். அச்சமீன்தாரிடம் வையை இராமசாமிஐயர் வைத்தியநாதஐயர் ஆகிய அவ்விருவருடைய இசை மேன்மைபற்றியும் வடமொழி தென்மொழி அறிவுபற்றியும் தெரிவித்ததோடு அவர்களை சமீன்தாருக்கு அறிமுகம் செய்துவைத்து அவரிடம் அனுப்பிவைத்தார்கள். திருநெல்வேலிமாவட்டத்திலே சொக்கம்பட்டிச்சமீன் என்பது ஒரு பெரிய சமீனாகும். மலைவளம் அதிகமுள்ளது அச்சமீன். திருக்குற்றாலமும் அதைச்சார்ந்தமலைகளும் அதன்வளங்களும் சொக்கம்பட்டிசமீனைச் சேர்ந்தவையாக இருந்தன. சொக்கம்பட்டிசமீன்தாரவர்கள் தமிழிலும் வடமொழியிலும் நல்லபுலமையும் அறிவும்பெற்றவர்கள். வையைவைத்தியநாதஐயர் இராமசாமிஐயர் ஆகிய அவ்விருவருடைய இசைச்சிறப்பினையும் தென்மொழி வடமொழிப் புலமையினையும் தளவாய் குமாரசாமி முதலியார் அவர்கள்மூலம் கேள்விப்பட்டார், சொக்கம்பட்டிச்சமீன்தார்; அவ்விருவரையும் தம்பால் அனுப்பும்படி அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவ்விருவரையும் தளவாய் குமாரசாமிமுதலியார் அனுப்பிவைத்தார். அவ்விருவரும் சொக்கம்பட்டிச் சமீனுக்கு வந்ததும் சமீன்தாரவர்களைக்கண்டு அளவளாவி மகிழ்ந்தனர். அவர்களது இளவயதினையும் உருவத்தோற்றத்தையும் கண்ட அக்கணமே, சிவபிரான் இச்சிறுவர்களின் தோற்றத்தில் தம்மீது கருணைசெய்யும்பொருட்டு வந்துவிட்டதாகவே சமீன்தாரவர்கள் எண்ணிவிட்டார். அவ்விருவர்மீதும் மிகுந்த அன்பும் ஆதரவும்காட்டி அவர்களுக்கு வேண்டிய எல்லாவசதிகளையும் செய்து உதவினர்கள். பல இசைநிகழ்ச்சிகள் நடந்தன. தமிழ் வடமொழி சம்பந்த

மாகவும் அளவளாவிக் களித்தனர். அவ்விருவரும் பலநாட்கள் சொக்கம்பட்டியில் தங்கினர்கள். சமீன் தாரவர்கள் தமக்குச் சொந்தமாகிய குற்ருலம் முதலிய இடங்களுக்கு அவ்விருவரையும் தம்முடைய மேனுப் பல்லக்கிலேயே ஏற்றி அழைத்துச்சென்று அவர்களுக்கு வேண்டிய வெகுமதிகளையும் தந்துஉதவினர்கள். "ஓர் இசை அறிஞர் இசையில் தான் சிறப்புற இயலும். ஆனல் இராமசாமி ஐயரும் வைத்தியநாத ஐயரும் இசைமட்டுமின்றித் தமிழிலும் வடமொழியிலும் சிறந்த திறம் வாய்ந்தவர்களாக விளங்கினர்கள். அருமை! அருமை!" என்று முதலியாரவர்களுக்கு ஒரு கடிதம் மூலம் தமது அளவிறந்த மகிழ்ச்சியைத் தெரிவித்து அவ்விருவரையும் தமது மேனுப் பல்லக்கிலேற்றி ஆழ்வார்குறிச்சிக்குத் தமது பரிவாரங்களுடனும் பல பரிசில்களுடனும் அனுப்பிவைத்தார்கள்.

● வையை இராமசாமிஐயர் வைத்தியநாதஐயர் ஆகிய அவ்விருவருக்கும் திருநெல்வேலி மாவட்டத்தி லுள்ள ஆழ்வார்குறிச்சி தளவாய் குமாரசாமி முதலி யார், சொக்கம்பட்டிசமீன்தார், எட்டயபுரம் அரசர், சிங்கம்பட்டிச்சமீன்தார், ஊற்காடுசமீன்தார், கல்லி டைக்குறிச்சியில் சின்னப்பட்டம் வகித்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகர், திருநெல்வேலி ஐயாசாமி பிள்ளை, சிதம்பரம்பிள்ளை, வீரபத்திரபிள்ளை போன்ற பெரிய பிரபுக்களும், மிட்டாதார்களும், சமீன்தார்களும், மடாதிபதிகளும், பலகலைவல்லுநர்களும் முக்கிய நண் பர்களாக இருந்து ஆதரவளித்தார்கள். ஆதலால் தஞ்சாவூர் மாவட்டத்தில் அவர்கள் நடத்திய இசை

நிகழ்ச்சிகளையும் அவற்றிற்காகப்பெற்ற மரியாதைப் பொருள்களையும்விட மிகுந்த இசை நிகழ்ச்சிகளையும் சிறந்த மரியாதைப் பொருள்களையும் திருநெல்வேலி மாவட்டத்திலே அவர்கள் பெற்று மாபெரும் புகழும் உயர்வும் அடைந்தார்கள். அவ்விருவரையும் திருநெல்வேலி மாவட்டத்தினர் போற்றிப் புகழ்ந்து பெருமைதந்து சிறப்பித்து மகிழ்ந்ததுபோல வேறு எந்த இசைப் புலவரையும், தென்மொழி வடமொழிப் புலவரையும் சிறப்பித்து மகிழ்ந்ததில்லை.

● ஆழ்வார் குறிச்சி தளவாய் குமாரசாமி முதலியாரவர்கள் ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய திருச்செந்தூர் முருகன் சந்நிதானத்திற்கு அவ்விருவரையும் தக்க ஏற்பாடுகளுடன் அனுப்பி வைத்தார்கள். அவ்விருவரும் திருச்செந்தூர் சென்று அக்கோயிலில் எழுந்தருளிய முருகப்பெருமான் சந்நிதியிலே மெய்மறக்க இசைத்து மகிழ்ந்தார்கள். அப்பொழுது பலநாட்கள் அங்குத் தங்க நேர்ந்தது. திருச்செந்தூரிலுள்ள முக்காணியப் பிராமணர்கள், கோயில் தொண்டு செய்பவர் மட்டுமின்றி இசைப்புலமையிலும், தென்மொழிப் புலமையிலும், வடமொழிப் பயிற்சியிலும் வல்லவர்களாகத் திகழ்ந்தார்கள். தமிழ்க் காவிய நாடக அலங்கார நூல்கள், புராண இதிகாசப் பயிற்சிகள், தேவார திருவாசகங்கள், திருப்புகழ் சிந்து வண்ணங்கள் ஆகியவைகளிலும் இன்னும் இவை போன்ற பல்வகை பாடல்களிலும் ஈடுபாடு உடையவர்கள். இச்சான்றோர்களிடையே அவ்விருவரும் தங்கிவந்த காலங்களில் இராமசாமிஐயரவர்கள் திருச்செந்திற்

சந்த விருத்தம், திருச்செந்தில்யமக அந்தாதி எனும் இரண்டு பிரபந்தங்களை இயற்றி அவற்றைக் கலைவளங் களை நிரம்பப் பெற்றிருந்த திரிசுதந்தர முனிவர்களா கிய முக்காணியப் பிராமணர்கள் சூழவிருந்த சந்நி தான அவையிலே அரங்கேற்றினார்கள். அப்பிரபந்தப் பாடலை வைத்தியநாதஐயரவர்கள் யாவரின் மனமும் உருகும்படி கானம் செய்தார்கள். அவர்களது கவி இயற்றும் ஆற்றலையும், அதை மனமுருகும்படி இசைக் கும் திறத்தினையும் கண்ட திரிசுதந்தரர்கள் அனை வரும் அவ்விருவர்பால் ஈடுபட்டு அன்புடையவர்கள் ஆனார்கள்.

● வையை வைத்தியநாதஐயரவர்கள் தேவாரத் திருவாசகங்களை ஓதுவதிலும், ஓதக்கேட்பதிலும் அதிக வேட்கையுடையவர்கள். வையைச்சேரி கிரா மத்தில் அக்காலத்தில் இசைக்கலையைக் கசடறக் கற்ற புலவர்களும், கேள்வி ஞானத்தால் இசையை இனிமைபெறப் பாடும் ஆற்றலுள்ளவர்களுமாகப் பலர் இருந்தனர். வையைச்சேரியை இசைக்கலைஞர்கள் வாழும் ஊர் என்று கூறின் அது மிகையன்று. அத் துணைச்சிறந்த புலவர்கள் அங்கு நிறைந்து இருந்தனர். அவ்வூரில் தேவாரம் விசுவநாதஐயர் என்பவர், அவ் வூரின் கர்ணீகராய் (கணக்குப்பிள்ளை) இருந்தார். அவர் சிவபக்தி நிரம்பியவர். வைதீக உணர்வு மிக்க வர்; ஒழுக்கசீலர். இனிமையான குரல்வளத்தை அவர் பெற்றிருந்தார். தேவாரத்தை மிகுந்த பக்தி சிரத்தையோடு பொருளறிந்து மிக இனிமையாக இசைத்து மனம் உருகப்பாடுவார். அவரது தலைமை

யில் சனிக்கிழமை தோறும் வையைச்சேரி அக்கிர காரத்தில் பஜனை நடக்கும். அவர் மார்கழி மாதம் முப்பது நாட்களும் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து, காலைக்கடன் முடித்து, குளிர்ந்தநீரில் குளித்துவிட்டு, மடியுடுத்தி, விபூதி உருத்திராக்கம் அணிந்து, கையில் ஜாலரா எடுத்து, அவ்வூர்கோயில் வாசலிலிருந்து புறப் பட்டு அக்கிரகாரம் வழியே சென்று, பின்பு கோயிலைப் பிரதட்சிணமாக (வலம்) வந்து, அகத்தீச்வரசுவாமி யின்சந்நிதானம் வரை பஜனை செய்து வருவார். அப் பஜனையில் பெரும்பாலும் தேவாரத் திருவாசகப் பாடல் களே இடம் பெற்றிருக்கும். அவர் அதிகாலையில் அத் தேவாரத் திருவாசகங்களைத் தமது இனிமையான குரலின் மூலம் பொருளறிந்து பாடுவதைக் கேட்பவர் கள் உள்ளமுருகிப் பக்திமேலீட்டால் மெய் மறந்து விடுவார்கள். ஒவ்வொரு நாளும் அவர் வீதியில் பஜனை செய்து வரும் போது வைத்தியநாதஐயர் மெல்லிதான ஒரு கம்பளிப்போர்வையைத் தலை முழுவதும் முட் டாக்காகப் போட்டுப்போர்த்திக்கொண்டு, சற்று விலகி நின்று விசுவநாதஐயர் பக்திப்பரவசத்தோடு இசைத்து வரும் அத் தேவாரத் திருவாசக இசையை ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கொண்டு பரவசப்பட்டுக் கேட்டுக் கொண்டிருப்பார். ஒரு நாள் நல்ல கடும்பனி பெய்து கொண்டிருந்தது. சரீரம் முழுவதும் கிடுகிடென்று ஆடி நடுங்கிக் கொண்டிருக்கத்தக்க கடும்பனி நேரத்திலே வைத்தியநாதஐயரவர்கள் சற்று எட்ட நின்று அவரது தேவார இசையைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். கருகரு என்ற இருட்டு நேரம். வைத்தியநாதஐயர் எட்ட நின்று கொண்டிருப்பதை எவ்வாறோ தேவாரம்

விசுவநாதஐயர் கண்டு விட்டார். உடனே வெகுவேக மாகச் சரசரவென்று சென்று வைத்தியநாதஐயரவர்களை நோக்கி "நல்ல கடும் பனியாக இருக்கிறதே! உடலெல்லாம் நடுநடுங்கி ஆடுகிறதே! தாங்கள் இந்தப் பனியில் இங்கு நிற்கிறீர்களே! தங்களுடையை உடலுக்கு ஒத்துக் கொள்ளாதே! சாரீரம் வளங்குன்றுமே! இப்படி வந்து நிற்கலாமா!" என்று அன்புடன் கேட்டார். உடனே வைத்தியநாதஐயர் நாஞக வந்து இங்கு நிற்கவில்லையே! தங்களது குரலினிமையும் தேவாரத்தின் பொருள் நயமும் என் உள்ளத்தை உருக்குகின்றன; அதனல் இங்கு வந்து நிற்கிறேன். பனி குளிர் எதுவும் எனக்குத்தெரியவில்லையே! கடவுள்தான் இவ்வுயர்வான இசையையும் அருளமைந்த தேவாரத் திருவாசகங்களையும் கேட்கும்படி என்னைச் செய்துள்ளார். தாங்கள் இச் சிவத்தொண்டினை நடத்துங்கள். நான் சிறிது கேட்டு விட்டுச் செல்லுகிறேன் என்ருர்கள். பொதுவாக வைத்தியநாதஐயரின் சாரீர நலனில் அவர்களது வீட்டிலுள்ளோர் மட்டுமின்றி ஏனையோரும் கண்ணுங்கருத்துமாக இருந்தார்கள்.

● வையை வைத்தியநாதஐயரின் இசையின் சிறப்பையும் தமிழறிவின் சிறப்பையும் கல்லிடைக்குறிச்சி மடத்தில் சின்னப்பட்டம் வகித்து வந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள், பலர் வாயிலானும் கேள்விப்பட்டிருந்தார்கள். கல்லிடைக்குறிச்சி மடம் என்பது திருவாவடுதுறை மடத்திற்குச் சொந்தமானதும் அதற்கு அடுத்த தானத்திலுள்ளதுமாம். ஒரு சமயம் இராமசாமிஐயரும் வைத்தியநாதஐயரும் திருநெல்வே

லியில் தங்கி இருந்தபொழுது கல்லிடைக்குறிச்சிச் சின்னப்பட்டத்திற்கு வேண்டியவரான ஒருவர் வைத்திய நாதஐயரிடம் "தாங்களிருவரும் கல்லிடைக்குறிச்சி மடத்திலே சின்னப்பட்டம் வகிக்கும் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்களைக் கண்டு தங்களது இசைப் புலமையை வெளியிட்டால் தங்களுடைய இசையறிவையும் தமிழறிவையும் கண்டு சந்நிதானம் பெருமிதம் கொள்வார்கள். தாங்களும் அவர்களது அன்பையும் ஆதரவையும் பெறலாம்" என்றுகூறினர். அவ்வாறுகூறியவர் வைத்தியநாதஐயருக்கு நண்பராதலால் அவர் கூறியதும் அதை ஏற்றுக்கொண்டு அவ்விருவரும் கார்த்திகை மாதத்தில் கல்லிடைக்குறிச்சிக்குச்சென்று சின்னப் பட்டம் வகிக்கும் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்களைக் கண்டார்கள். தேசிகரவர்கள் அவ்விருவரையும் மனங்களிப்ப வரவேற்று, பின்பு அவர்களுடைய இசை நயத்தையும் தமிழறிவையுங் கண்டு மன மகிழ்ந்தார்கள். அவர்கள்மீது பெருமதிப்பும் அளவிலாத அன்பும் ஏற்பட்டு அவர்களைத் தம் மடத்தைச் சேர்ந்த வித்துவான்களில் ஒருவராக ஆக்கிக்கொள்ளுதல் வேண்டுமென்ற எண்ணம் உள்ளவரானர்கள். அவர்களுடைய பல இசை நிகழ்ச்சிகளைக் கேட்டு இன்புற்ருர்கள். அவர்களுடைய இசைத்திறம் மேலோங்கி இருந்ததைமேலும் மேலும் உணர்ந்தார்கள். அவ்விசையில் புதுப்புது மெருகுகள் இருப்பதையும் உணர்ந்தார்கள். அவ்வாறு ஒன்றிரு மாதங்கள் அவ்விருவருடைய சல்லாபத்திலே சந்நிதானம் மகிழ்ந்திருந்தனர். அவர்கள் மிகவும் இளமையினர் ஆயினும் கல்வியறிவில் மிகப் பெரியவர்களாகத் திகழ்ந்தனராலகயால் அவர்களிடத்து மிகப் பற்றுதல்

அடைந்து பெரியோர்களுக்குக் கொடுக்கும் கௌரவத்தைச் சந்நிதானம் கொடுத்து வந்தார்கள். திருவாவடுதுறை மடத்திலே அதனை நிறுவிய நமச்சிவாய மூர்த்தியின் குருபூசை சிறப்பாக நடப்பது போலக் கல்லிடைக் குறிச்சி மடத்திலும் நடப்பது வழக்கம். அதன் படி தைமாதத்து அசுவினி நட்சத்திரத்தில் அக் குரு பூசை விழா வந்தது. அதுகாறும் வையை இராமசாமி ஐயரும் வைத்தியநாத ஐயரும் சந்நிதானத்தின் ஆதரவில் அங்கேயே இரண்டுமாத காலமாகத் தாமதித்திருந்தனர். அக்குருபூசையில் மேலகரம் சுப்பிரமணியதேசிகரவர்களால் பெரிதும் மதிக்கப்பெற்ற சிவகங்கை பெரியவைத்தியநாதஐயர் சின்னவைத்திய நாதஐயர் ஆகிய அவ்விருவருடைய இசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடாகி இருந்தது. அக்காலத்திலே அவர்கள் போலப் பாடுவாரில்லை. சிம்ம கர்ச்சனை, மத்தகஜங்கள் நடந்து வருவது போன்ற கம்பீரமான சாரீரம் பொருந்தி இருக்கும் அவர்களது இசை; சில சமயங்களில் புலிப் பாய்ச்சல் போல இருக்கும். அவர்களது இசை பல அற்புதங்களைக்கொண்டது. அத்தகைய இசை நிகழ்ச்சி ஒன்று ஆயில்யம் திருநாள் அரசர் முன்பு நடந்தது. அது "**இசைக்கலை வல்லுநர்கள்**" என்ற புத்தகத்தில் தனிக்கட்டுரையாக வெளி வந்துள்ளது. முறைப்படி அவர்களது கச்சேரி நடந்து வரும்போது வையை வைத்தியநாதஐயரையும் சேர்ந்து பாடச் செய்தல் வேண்டுமென்று சந்நிதானம் எண்ணினார்கள். அவ்வெண்ணத்தைப் பெரியவைத்தியநாதஐயரிடம் வெளியிட்டார்கள். வையை வைத்தியநாத ஐயருடைய இசையை ஏழு வயதளவிலே அவருக்கு நடந்த பூணூல்


கல்யாணத்திலும், எட்டாவது வயதிலே குடியாலம் வாசுதேவ ஐயங்கார் வீட்டில் நடந்த புதுவீடுபுகுதல் விழாவிலும் கேட்டபொழுதே மெய்மறக்கும்படியிருந்தது; ஆதலால், ஏழு ஆண்டுகளுக்குப்பின் இப்போது இன்னும் நல்ல தேர்ச்சியுடனிருக்கும் என்றெண்ணி வையை வைத்தியநாதஐயரைத் தம் பக்கத்தில் உட்காரச்செய்து தாமும் இசைத்து அவரையும் உற்சாகப் படுத்தி இசைக்கும்படி செய்தார். பெரியவைத்திய நாதஐயர் சின்னவைத்தியநாதஐயர் ஆகிய அவ்விரு வருடன் வையைவைத்தியநாதஐயராகிய இளைஞர் அபாரத் திறமையுடன் அழகுற இசைத்து அனைவரையும் மகிழ்ச்சி கொள்ளும்படி செய்தார். சந்நிதானம், வையை வைத்தியநாதஐயர் செய்த அருமையான இசைச் செயலைக்கண்டு அவருடைய புகழும் பேரும் ஓங்குதல் வேண்டுமென்ற எண்ணங்கொண்டு அவருக்குத் தமது அவையிலே ஒரு பட்டம் கொடுக்கக் கருதி, தமது கருத்தைப் பெரியவைத்தியநாதஐயரிடம் அறிவிக்க, அவர்கள் எவ்வித அழுக்காறும் உடையவரல்லர் ஆதலால், மிகுந்த மனக்களிப்புக்கொண்டார்; "என்னைப்பார்க்கிலும் இராகம், தானம், பல்லவி, நிரவல் ஆகிய இவைகளில் அதிமேதையாக விளங்குகிறான்; எம் தம்பியாரைவிடப் பல்லவி, சுரம், சுரபல்லவி ஆகிய இவைகள் பாடுவதில் சிறந்த திறமையுடன் விளங்குகிறான். எனவே எங்களிருவரினும் மேலாகச் சிறப்பம்சம் பெற்று இசைக்கும் இவ்விளைஞரை மகா வைத்தியநாத ஐயரென்று அழைத்தல் தகுமென்று எண்ணுகிறேன். சந்நிதானத்தின் எண்ணம் எதுவோ!" என்றார். உடனே சந்நிதானம் மிகமகிழ்ந்து

அந்த "மகா" என்ற சொல்லைக் கடவுளின் அருட் சொல்லெனக்கருதி அப்பொழுதே வையை வைத்திய நாதஐயருக்கு அவரது பதினான்காம் வயது பூர்த்தியின் போது **"மகாவைத்தியநாதஐயர்"** என்ற சிறப்புப் பட்டத்தை அப்பெரிய அவையிலே அனைவரும் களிக்க அளித்து, வைரக்கல் பதித்த தோடாவை இருகைகளி லும் அணிவித்துச் சிறப்புச் செய்தார்கள். அது முதல் வையை வைத்தியநாதஐயரை 'மகாவைத்தியநாத ஐயர்' என்றே யாவரும் அழைத்து வந்தனர். அவ்வாறு நடந்த உண்மை நிகழ்ச்சியை வேறு காரணங்களால் மாற்றிக்கூறுதல் சரியல்ல. வையை வைத்தியநாதஐய ருக்கு மகாவைத்தியநாதஐயர் என்றபட்டங்கொடுத்த சிறப்பினைப்பற்றி **"இசைக்கலைவல்லுநர்கள்"** என்ற புத்தகத்தில் தனிக்கட்டுரை வெளியாகி உள்ளது. அங்கு விரிவான விபரங்களைக் கண்டுகொள்ளுக.

● மகாவைத்தியநாத ஐயருக்குப் பூணூல் கல்யா ணம் நடந்ததிலிருந்து அவரது தகப்பனார் பஞ்சநத ஐயரென்ற துரைசாமிஐயரால் அவருக்குப் பஞ்சாட்சர உபதேசம் செய்யப்பெற்றது. அப்பஞ்சாட்சரத்தைத் தவறாமல் ஒவ்வொருநாளும் செபம் செய்து வந்தார். அவரது பதினாறுவது வயதில் கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் உபதேச குருவாக அமர்ந்து சிவபூசையும் இன்னும் பல மந்திர உபதேசங்களும் செய்வித்தார் கள். அத்துடன் சதுர்வேததாத்பரிய சங்கிரஹம், சிவ தத்துவ விவேகம், சூதசம்ஹிதை முதலிய வடமொழி நூல்களிலுள்ள சிவபரமான பல செய்திகளையும் பாடம் செய்வித்தனர். அந்நூல்களிலுள்ள பலப்பல திட்பநுட்

பங்களை ஆராய்ந்தறிந்து தெளிவுற்றார்கள். தினமும் சிவபூஜையும், சூதசம்ஹிதைப் பாராயணமும், பஞ்சாட்சர செபமும் தவறாமல் செய்வார்கள். கோடக நல்லூர் சுந்தரசுவாமிகளிடமிருந்து மந்திரோபதேசம், சிவபூஜை, சூதசம்ஹிதைப்பாராயணம் ஆகியவற்றை முறைப்படி ஏற்றுக்கொண்டபிறகு அவர்களை மகா வைத்தியநாதசிவன் என்றும் அழைக்கலானார்கள்.

● **கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள்** சிறுவயதிலிருந்தே கல்யாணம் செய்துகொள்வதில் விருப்பமற்றிருந்தார். அவரது பெற்றோர்கள் கட்டாயப்படுத்தி அச் சிறுவயதிலேயே தமக்கு உற்றாரும் உறவினருமாகிய ஒருவரின் குமாரியான (ஜானகி) **சீதை** என்ற பெண்ணைக் கல்யாணம்செய்து வைத்துவிட்டார்கள். கல்யாணம் ஆன சில மாதங்களுக்குள் அவரது மனம் துறவறத்தை நாடிற்று. அவர் குடும்பத்திலேயே சில ஆண்டுகள் இருந்தபோதிலும் ஒரு துறவியின் ஒழுக்க நெறியிலேயே இருந்துவந்தார். அவரது மனைவி சீதையம்மாள் சிறுபெண்ணாக இருந்தாலும் ஏனையோர்களைப் போல் இல்லறசுகத்தை அனுபவிக்கவாய்ப்பில்லாவிடினும், அக்கால முறைப்படி பதிக்குரிய தொண்டுகளை மனம் உவந்து செய்துவந்தார். சில ஆண்டுகளுக்குள் அவர் திடீரென்று சந்நியாசத்தில் ஒருவகையான அதிவர்ணாச்சிரமத்தை ஏற்றுக்கொண்டு விட்டார். அவர் முதலில் அவதூதராக இருந்து மக்கள் கண்களிற்படாமல் நாணற்காட்டிற்குள்ளே பலநாட்களும் அன்ன ஆகாரமின்றி இருந்து தவம் செய்தார் என்பர். ஸ்ரீ சிருங்கேரி சகத்குரு சிவாபிநவ நரசிம்மபாரதி சுவா



மகா வைத்தியநாத சிவனின்
மந்திரோபதேச குருவாகிய
கோடகநல்லூர் **சுந்தரசுவாமிகள்**

மிகள் திருநெல்வேலி யாத்திரை வந்திருந்தபொழுது கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளுடன் மூன்று நாட்கள் விவாதித்தார்கள் பிறகு உலக குருவாகிய ஆசாரிய சுவாமிகளின் வாக்குக்கு மதிப்புக்கொடுத்தல் வேண்டிக் கௌபீனம் (கோவணம்) மட்டும் கட்டிக் கொண்டார் என்பர். அதன் பிறகே அவர் அதிவர்ணு சிரமமாகிய சந்நியாசத்தை வகித்தார் என்று கூறு வர். அவர் கோடகநல்லூர் தாமிரபரணி நதிக்கரை யில் நாணலும் கோரைப்புல்லுமாக அடர்ந்துவளர்ந்து பரவிய காட்டின் நடு இடம்வரை சென்று வெகு நாட்கள் வெளிவராமல் தவம், நிட்டை, யோகம், சமாதி ஆகிய நிலைகளில் இருப்பார்கள். அக்காலமெல் லாம் அவரது மனைவியாகிய சீதையம்மாள் உணவு தயாரித்துக் காலைமுதல் இரவுவரை காத்திருந்து அவர்கள் நாணற் காட்டுக்குள்ளிருந்து வெளிவருதலை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு நிற்பாராம். அவர் இரவு ஏழுமணிவரை வெளியே வரவில்லையா யின் தம்வீடு திரும்புவார். மறுதினம் காலையில் எழுந்து தம் கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு ஆற்றங் கரை நாணற் காட்டிற்கு உணவுடன் செல்வார். அவ் வாறு செய்வதில் அலுப்பு சலிப்பு இன்றித் தாமும் உரிய வேளைகளில் ஆகாரம் உட்கொள்ளாமல் மிக்க பொறுமையுடன் இருந்தார். அவ்வுத்தமி எக்காலத்தும் வணங்குதற்குரியவர் ஆவர். சிலநாட்களில் ஆகாரம் வேண்டுமென்று விரும்பினால் வெளியே வந்து மனைவி யிடமிருந்து வாங்கி உண்பார். வேண்டாமெனின் திரும்பியும் பாரார். அவர் பல ஆண்டுகள் தபசு சித்தி பெற்ற பின்பு வெளியே வந்து பல தலங்களுக்கும்

சென்று சுற்றுப்பிரயாணத்தைத் துவக்கினர். அப்பொழுது அவர் சூதசம்ஹிதை முதலிய சிவபுராணங்களைப் பிரசங்கம் செய்து யாவருக்கும் சிவபக்தியை வளரச் செய்தார். ஏக உருத்திராக்கத்தைப் பட்டுக் கயிற்றில் கோத்துக் கழுத்தில் கட்டிக்கொள்ளும் வழக்கத்தைப் பலரும் மேற்கொள்ளச் செய்தார். மனோன் மணீயம் என்னும் நூலை இயற்றிய திருவனந்தபுரம் சுந்தரம் பிள்ளை முதலிய பலர் சுந்தரசுவாமிகளைக் குருவாக ஏற்றுக் கொண்டனர். பலருக்கும் வேதாந்த ஞானத்தை உண்டு பண்ணியுள்ளார். அவர்கள் சுவானுபூதிரஸாயனம், சுவானுபவ ரஸமஞ்சரி, நிஜானந்த விலாஸம் ஆகிய அருமையான வேதாந்த நூல்களை எழுதியுள்ளார். இந்நூல்கள் யாவராலும் கொண்டாடப் பெறுகின்றன. அவ்வுத்தமமான குரு மகாவைத்தியநாதசிவனவர்களுக்குக்கிடைத்தது பூர்வசன்மப் புண்ணியமாகும். அவருடைய மனைவி சீதையம்மாள் மகாவைத்தியநாத சிவனவர்களின் வீட்டில் சாப்பிடும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு உணவு தயாரித்து அன்னமளித்து வந்த அச்சிறந்த தொண்டின் பெருமை சொல்லுதற்கரிது.

● சீதையம்மாள் மகாவைத்தியநாதசிவனவர்கள் வீட்டில் சமையல் வேலையில் ஈடுபட்டதற்கு ஒருகாரணமுண்டு. கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள் ஆண்டுக் கணக்கில் மகாவைத்தியநாத சிவனவர்கள் வீட்டில் தங்கி அவர்களுக்கும் இன்னும் பலருக்கும் பாடங்கள் சொல்லுதலுண்டு. செட்டி நாடுகளுக்குச் சென்று பல நாட்கள் தங்கி மறுபடி மகாவைத்தியநாத சிவன் இல்

லத்திற்கே வரும்படியான ஒருவாய்ப்பு இருந்தது. அந்நியர் வீட்டில் வேலையில்லாமல் சாப்பிட்டுக்கொண்டிருக்கச் சீதையம்மாளுக்கு மனமில்லை. மகாவைத்திய நாதசிவன் தர்ம சிந்தையுடைவர்; பசித்தவரைப் பார்க்க அவரது மனம் சகிக்காது; பலரும் அவருடைய இல்லத்தில் உணவுகொள்வர். பலருக்கும் சமையல் செய்ய வீட்டிலுள்ளவர்கள் ஒருநாள் போலப் பல நாளும் ஈடுபடும்போது சிறிது சிரமம் தானுகவே உண்டாகும். எனவே தம்முடைய பதியின் தொண்டினை முன்னிட்டும், தாமும் ஒரு வேலை செய்தலை முன்னிட்டும், வீட்டுக்குள்ளே இருந்து சாதாரணமாகச் செய்து வரும் சமையல் வேலையைத் தாமே மனமுவந்து சீதையம்மாள் ஏற்றுக் கொண்டார்கள்.

● மகாவைத்தியநாத சிவனவர்கள் கல்லிடைக் குறிச்சிமடத்திலுள்ள சின்னப்பட்டம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் பாலும், திருநெல்வேலியிலுள்ள பல அன்பர்கள்பாலும், பெரிய சமீன்தார்கள்பாலும், அடிக்கடி சென்று இசை நிகழ்ச்சிகள் பலசெய்வார்கள். அவர்களை மகிழ்வித்துப் பலப்பல சன்மானங்களையும் அடைவார்கள். தம் இருபத்திரண்டாவது வயதிற்குள், சென்னை இராசதானியைச் சேர்ந்த பதினுன்கு மாவட்டத்திலும் எண்ணிலடங்காத இசை நிகழ்ச்சிகளைச் செய்து புகழ் பெற்றுள்ளார்கள்.

● மகாவைத்தியநாதசிவனவர்களின் பெயரையும் புகழையும் திருவனந்தபுரத்தை ஆண்டு வந்த ஆயில்யம் திருநாள் அரசரவர்கள் கேள்விப் பட்டார்கள்.

அரசரவர்களின் அழைப்பிற்கிணங்க இராமசாமிசிவனும் மகா வைத்தியநாதசிவனும் முதன் முறையாக திருவனந்தபுரம் சென்று அரசர் அவர்களைக் கண்டு அளவளாவினர். அக்காலம் அரச சமூகத்திற்கு வித்துவான்கள் தாங்களாகச் செல்வதே வழக்கம். மகா வைத்தியநாதசிவன் ஒருவர் மட்டிலும் அரசர் அழைப்புடன் சமஸ்தானம் சென்ருர்கள். இவ்விதப்பெருமையும் மதிப்பும் அவரொருவருக்கே கிடைத்தன. அங்குச் சென்று இரண்டு மாதங்கள் அரசருடன் தங்கினர்கள். அச்சமயம் அவர்களது இருபத்தைந்து இசைநிகழ்ச்சிகள் நடந்தன. ஏராளமான பரிசில்கள் பெற்றனர். முதன் முறையாக அரசரவர்களின் விருப்பத்திற்கிணங்கத் திருவனந்தபுரம் சமஸ்தானம் செல்லும்போது மகாவைத்தியநாத சிவனவர்களுக்கு இருபத்திரண்டு வயதும் இராமசாமிசிவனவர்களுக்கு இருபத்துநான்கு வயதும் நடந்து கொண்டிருந்தன,

● மகாவைத்தியநாத சிவனவர்கள் திருவனந்தபுரத்தில் பல இசை நிகழ்ச்சிகள் நடத்தி வந்த காலத்துத் திருவனந்தபுரம் ஆஸ்தான வித்துவானுகிய கோயம்புத்தூர் இராகவ ஐயரவர்கள் அரசரின் விருப்பத்திற்கிணங்க மகாவைத்தியநாத சிவனவர்களுடன் சேர்ந்து ஆறு இசை நிகழ்ச்சிகள் செய்துள்ளார். மகாவைத்தியநாத சிவனவர்கள் இராகவஐயரின் சாதகபலத்தோடு கூடிய அபாரமான இசைச் செயல்களைப் புகழ்ந்து வியந்து பாராட்டியுள்ளார்கள். இந்நிகழ்ச்சி **'இசைக்கலை வல்லுநர்கள்'** என்ற புத்தகத்தில்

தனிக்கட்டுரையாக வெளிவந்துள்ளது. விவரங்கள் அங்குக் காண்க.

● திருவனந்தபுரம் ஆஸ்தான வித்துவானாக இருந்த வீணை கல்யாணகிருட்டின பாகவதரவர்கள் அரசரின் விருப்பத்திற்கிணங்க மகாவைத்தியநாத சிவனவர்கள் பாடும்போது வீணைவாசித்து அரசராலும் மகாவைத்தியநாத சிவனவர்களாலும் பாராட்டப்பெற்றார். இந் நிகழ்ச்சி **'இசைக்கலைவல்லுநர்கள்'** என்ற புத்தகத்தில் தனிக்கட்டுரையாக வெளிவந்துள்ளது. அதன் விவரங்களை அங்குக்காண்க.

● திருவனந்தபுரம் சமஸ்தானத்தில் ஆஸ்தான வித்துவானாக விளங்கிய வீணை கல்யாண கிருட்டின பாகவதரவர்களுடைய வீணை வாசிப்பிலே நல்ல எண்ணங் கொண்ட மகாவைத்தியநாத சிவனவர்கள் தமக்குப் பக்கவாத்தியமாக அவரது வீணையைக் கொண்டு பல இசைநிகழ்ச்சிகளைச் செய்துள்ளார். மகாவைத்தியநாத சிவனவர்கள் திருவனந்தபுரத்தில் தங்கிய நாள் முழுவதும் வீணை கல்யாணகிருட்டின பாகவதரவர்கள் அவருடனேயே இருந்து வந்தார்களாம்.

● மகாவைத்தியநாத சிவனவர்களும் இராமசாமி சிவனவர்களும் திருவனந்தபுரத்திலே இருக்கும் வேளையில் அச்சமஸ்தானத்துத்தலைமை வித்துவானாக இருந்த வேதஸ்ரீ பரமேசுவர பாகவதரவர்களிடம் மிகுந்த பேரன்பு உள்ளவர்களாக இருந்தனர்.

பரமேசுவரபாகவதரவர்களுடைய இல்லம் சிவபெருமான் குடிகொண்டுள்ள தேவாலயம் மாதிரியே இருக்குமாம். பரமேசுவரபாகவதர் இசையில் மகாமேதையாக விளங்கினார். அவர் பலதானவர்ணங்கள், சதிசுரங்கள், சுரசதிகள், கீர்த்தனங்கள் ஆகிய பலசெய்து இசையுலகிற்கு நல்கியுள்ளார். அவர் வேதத்தை நன்கு கற்றுணர்ந்த வேதாத்யயனபரரும், ஆசார அனுட்டான சீலரும், இசைமேதையும் ஆவார். எனவே அவரின் குணத்திலும், ஒழுக்கத்திலும், நியமநிட்டையிலும், அனுட்டானத்திலும், சிவபூசை முதலியவைகளிலும், அவரது அபாரமான இசையிலும் ஈடுபாடு மிகுந்தவராய்ச் சிவன் சகோதரர்கள் இருவரும் பரமேசுவர பாகவதரிடம் அளவுகடந்தபக்தி, பணிவு, நம்பிக்கை கொண்டு பழகி வந்தார்கள்.

● மகாவைத்தியநாத சிவனவர்கள் **ஆயில்யம் திருநாள்** அரசரவர்களுடன் தங்கி இருந்தார்; ஆயில்யம் திருநாள் அரசரவர்கள் பாட அவ்வின்னிசையைத் தாம் கேட்கவேண்டுமென்று விரும்பினார். சிவனவர்களின் விருப்பத்தை அறிந்த ஆயில்யம் திருநாள் அரசரவர்கள் உசேனி இராகத்தை முக்கால் மணிநேரம் இசைத்து அனைவரையும் வியப்புக்குள்ளாக்கினார்கள். அரசரது அருமையான குரல் இனிமையும் நயமும் வளமும் அமைந்த இசையைக் கேட்ட மகாவைத்தியநாத சிவனவர்கள் ஆனந்தக் கண்ணீருகுத்துப் பெருமகிழ்ச்சியடைந்தார்கள். இந் நிகழ்ச்சி **'இசைக்கலைவல்லுநர்கள்'** என்ற **புத்தகத்**

தில் தனிக் கட்டுரையாக வெளிவந்துள்ளது. விவரங்களை அங்குக் காண்க.

● ஆயில்யம் திருநாள் அரசரின் இசைஞானத் திறத்தின் சிறப்பையும், குரல்நயத்தையும் கேட்ட மகாவைத்தியநாத சிவனவர்கள் அரசரவர்களைப் புகழ்ந்து கூறியதுடன் "நான் இனி ஒரு பிறவி எடுக்க நேருமாயின் தங்களுடைய சகோதரராகவே பிறவியெடுப்பேனென்று என் உள்மனம் கூறுகின்றது" என்று ஆனந்தமேலீட்டால் கூறினார்கள். இது விவரம் '**இசைக்கலைவல்லுநர்கள்**' என்ற புத்தகத்தில் தனிக் கட்டுரையாக வெளிவந்துள்ளது. அங்குக் காண்க.

● மகாவைத்தியநாத சிவனவர்கள் திருவனந்தபுரத்தில் முதன் முறையாக அரசரவர்களோடு இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார்; அக்காலத்து அரச அவையிற் செய்த இருபத்தைந்து இசை நிகழ்ச்சிகளில் அரசரவர்களும், ஏனைய புலவர் பெருமக்களும் புகழ்ந்துரைக்கும்படித் தாம் மட்டும் தனித்த முறையில் பதினெட்டு இசைக்கச்சேரிகள் செய்துள்ளார்கள். ஆஸ்தானவித்துவான்களாக இருந்த ஏனைய இசைப் புலவர்களுடன் சேர்ந்து ஏழு இசைக் கச்சேரிகள் செய்துள்ளார்கள். இந்நிகழ்ச்சிகளை நேரிற் கண்ட ஆஸ்தானத்துத் தலைமைப் பதவிபெற்ற இசைப்புலவராகிய வேதஸ்ரீபரமேசுவரபாகவதரவர்கள் மகாவைத்தியநாத சிவனவர்களைப்புகழ்ந்து ஆசிகூறி மகிழ்ந்தார்கள். மேலும், அவர்களுடைய இசையை ஒவ்வொரு முறையும் கேட்டுக் கேட்டு மகிழ்ந்து மனம் உருகுவார்களாம். மகாவைத்

தியநாத சிவனவர்களின் இசையில் ஆயில்யம் திரு நாள் அரசரவர்களுக்கும், அரசகுடும்பத்தாருக்கும், தனிப்பட்ட ஈடுபாடு உண்டு.

● மகாவைத்தியநாத சிவனவர்கள் முதன்முறை யாகத் திருவனந்தபுரம் சென்று அரச அவையில் இரு பத்தைந்து இசைநிகழ்ச்சிகளைச் செய்து அரசர் அவர் களை மகிழ்வித்துத் தமது ஊர்வந்து சேர்ந்தார்கள். சில ஆண்டுகள் சென்றதும் அரசரவர்களுக்கு அவர்களு டைய இசையை மறுமுறையும் கேட்டல் வேண்டு மென்றவேட்கை ஏற்பட்டது. அரசரவர்கள் இரண்டாம் முறையாக அவர்களுக்கு அழைப்புவிடுத்துத் தமது அரசஅவைக்கு வரவழைத்தார்கள். மகாவைத்திய நாத சிவனவர்கள் இரண்டாம்முறையாகத் திரு வனந்தைசென்று நாற்பது நாட்கள் அரசரவர்களு டன் தங்கினுர்கள். அவ்வமயம் அரச அவையிலே பன்னிரண்டு இசை நிகழ்ச்சிகள் நடந்தன. அப் பொழுது மகாவைத்தியநாத சிவனவர்களுக்கு இரு பத்துநான்கு அல்லது இருபத்தைந்து வயதும், இராம சாமி சிவனவர்களுக்கு இருபத்தாறு அல்லது இருபத் தேழு வயதும் நடந்துகொண்டிருந்தன. அவர்களது இசைகளைச் சுவையோடு துய்த்த அரசரவர்களும் ஏனையோர்களும் மட்டில்லாத மகிழ்ச்சியடைந்தனர். அரசரும் பல இசையன்பர்களும் அவர்களைப்புகழ்ந்து கூறுதற்குச் சொற்கள் கிடைக்காமல் மயங்கினர். பிறகு எப்படியோ சிலசொற்களைக்கொண்டு வியந்து புகழ்ந்து கொண்டாடினுர்கள். அரசரவகளால் ஏராளமான அரச மரியாதைகள் அவர்களுக்குச் செய்யப்பட்டன.

எவரும் அடைந்திராத பரிசில்களை அவர்கள் பெற்ருர்கள். அங்கிருந்த எவரும் அவர்களை விட்டுப் பிரிய மனமில்லாதவர்களானுர்கள்.

● ஒரு நாள் ஆயில்யம் திருநாள் அரசர், மகாவைத்தியநாதசிவன், கோயம்புத்தூர் இராகவ ஐயர் ஆகிய இம்மூவரும் ஒருங்கு சேர்ந்து ஆனந்தபயிரவி இராகத்தை வெகு வித்தாரமாக இசைத்துப் பாடினுர்கள்; பின்பு, அதில் தானத்தை (மத்யமகாலம்) பல்வகைத் திறங்களுடன் செய்தார்கள்; அதன் பின்பு அரசரின் விருப்பத்திற்கிணங்க சாமாசாஸ்திரிகளியற்றிய 'பாஹிஸ்ரீகிரி ராஜஸுதே' என்ற கீர்த்தனையை மகாவைத்தியநாதசிவன் பாடி அதற்குச் சுரம்பாடினுர். கோயம்புத்தூர் இராகவ ஐயருக்கு அக்கீர்த்தனம் பாடம் இல்லையாதலால் அதற்குச் சுரம்மட்டும் பாடினுர். மகாவைத்தியநாத சிவனும் இராகவ ஐயரும் சுரம்பாடும்போது ஒருவருக்கொருவர் போட்டிப்போட்டுக்கொண்டு நல்ல கற்பனைத்திறனமையப் பாடினுர்கள். அவ்விருவரும் மாறிமாறி சுரக்கற்பனை செய்து பாடிய அழகு எங்கும் யாராலும் செய்யக்கூடியதல்ல. அத்துணைத் திறத்துடன் பாட்டு மிளிர்ந்தது. அவ்வாறு சிறக்கப்பாடிய அவ்விருவர்தம் கற்பனைத் திறத்தினை வியந்த அரசர் அவ்விருவரையும் பாராட்டித் தழுவிக் கொண்டார். அவ்விருவருக்கும் மதிப்பற்ற வெகுமதிகள் அரசரால் அளிக்கப்பெற்றன. இந்நிகழ்ச்சி **'இசைக்கலைவல்லுநர்கள்'** என்ற புத்தகத்தில் தனிக் கட்டுரையாக வெளிவந்துள்ளது. விபரங்களை அங்குக் காண்க.

பொதுவாக அரசர் பிரபு ஆகிய அவர்களிடத்தில் இசைஞானம் சிறிது அமைந்திருந்தாலும், இசைக்கலைஞர்கள் அவர்களை அளவிற்கும் மீறி போற்றிப்பேசுதலே இயல்பு. ஆனால், ஆயில்யம் திருநாள் அரசரை அவ்வாறு கூற இயலாது. உண்மையிலே இசை வித்துவான்களெல்லாம் பிரமித்து வியக்கும்படி அவருடைய இசை விளங்கும். அரசரவர்கள் ஆனந்த பயிரவிஇராகம் பாடிய அன்று அரசரின் குரல்நயம், இசையின் போக்கு, இலட்சியத்தில் யாருங்கண்டிராத அழகு ஆகியவைகளைக் கண்ட மகா வைத்தியநாதசிவன் போன்ற இசைக்கலைஞர்கள் அரசரவர்களை மேவிப் பரவசப்படுத்திப் பாடுதற்குத் தயங்கினர்கள் என்று கூறுவர். இதனின்று அவர்களது ஞானவளச் சிறப்பை ஊகித்தறிக.

மகா வைத்தியநாதசிவன் **விசாகம் திருநாள்** அரசரவர்கள் காலத்தில் அவர்களது அழைப்பிற்கிணங்கி மூன்ருவது முறையாகத் திருவனந்தபுரம் சென்று பத்துநாட்கள் தங்கினர்கள். மூன்று இசை நிகழ்ச்சிகள் செய்து, அரசரவர்களையும் மற்றுமுள்ளோரையும் மகிழச் செய்தார். இசை இனிமையிலே ஈடுபட்ட அரசரவர்கள் அவருக்கு நல்ல சிறப்பு மரியாதைகளைச் செய்தனர். அத்துடன் அவரது சிவபக்தியைக் கண்ட அரசரவர்கள் சிவபூசைக்குரிய அனைத்துச் சாமான்களையும் வெள்ளியினலாக்கினர்; அவற்றை வேதமுணர்ந்த வேதியரொருவரைக் கொண்டு வேதமோதி ஆசிகள் செய்து அவர் கையினல் அளிக்கும்படிச் செய்தார்கள். மிக உயர்ந்த பல சன்மானங்களை

எல்லாம் முன்பு பெற்றிருந்த மகாவைத்தியநாத சிவன் அச்சன்மானங்களை யெல்லாம் ஒரு தூசிக்குச் சமானமென்றெண்ணினர்; சிவகாரியங்களுக்கான இச்சன்மானங்களே உத்தமமான சன்மானமாக மதித்துப் போற்றினர். இந்நிகழ்ச்சி மகா வைத்தியநாத சிவன் நாற்பதாவதுவயதிலே நடந்ததாகும். இந்நிகழ்ச்சி "**இசைக்கலை வல்லுநர்கள்**" என்ற புத்தகத்தில் தனிக்கட்டுரையாக வெளிவந்துள்ளது. அங்குக் கண்டுகொள்க.

● மகா வைத்தியநாதசிவன் தமிழ் வடமொழி இசை ஆகிய மூன்றிலும் நற்றிறமமைந்த புலவராதலால் அக்கலைகளின் உதவியால் சிவகதைகள் செய்வதிலும் சிறந்து விளங்கினர். அவர் உண்மையான சிவ பக்தி நிரம்பிய உள்ளம் உடையவர். பொருள்களை இனிமையாக எடுத்து உரைக்கும் ஆற்றலுள்ளவர். அனைவரையும் இன்பத்திலாழ்த்தும் இசையாற்றலும் திறனும் நல்லறிவும் எல்லாம் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர். அவருடைய சிவகதைகளைக் கேட்போர் தமது மனதைப்பறிகொடுத்து ஆழ்ந்திருப்பர். அவரைப்போல் இசையில் தேர்ந்தும் சிவகதைகள் செய்து அனைவர் மனத்யையும் மயக்கி பக்திப்பரவசப் படுத்துதலில் சிறந்தோர் அக்காலத்தில் வேறுயாருமிலர்.

● அறுபத்துமூன்று நாயன்மாரின் சரித்திரங்களை அவர்கதாகாலட்சேபம் செய்யும்போது, தம்தமையனர் அவர்கள் இயற்றிய பெரியபுராணத்துக் கீர்த்தனைகள், கண்ணிகள், விருத்தங்கள் ஆகியவற்றை இனிமைகூர எடுத்து விளக்குவார்; இசைத்துப்பாடியும் வருவார்.

அதனைக் கேட்போர் யாவரும் தேனைச் சுவைத்த ஈக்கள்போல ஆழ்ந்து கிடப்பர்.

● அவர் இசை நிகழ்ச்சிகள் நடத்தும் போதும் சிவகதைகளைச் செய்யும் போதும் சில விதிமுறைகளைக் கையாளுவார். அம்முறைகள் அதுவரை யாரும் கையாளாத முறையில் புதுமையோடு விளங்கும். அவ்விதிமுறைகளை இக்காலத்து இளம் இசைவித்துவான்களும், அரிகதை செய்யும் கதாகாலட்சேப வித்துவான்களும் ஆராய்ந்து அறிந்து அதிலுள்ள நற்பகுதிகள் என்ன என்பதை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

● மகா வைத்தியநாத சிவன் கச்சேரிசெய்ய அமரும்போது அவரது நெற்றி, தோள்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள், மார்பு, நெஞ்சு, வயிறு ஆகிய இடங்களிலே திரிபுண்டரதாரணம் (மூன்று இரேகைகளும் தெளிவாகத் தெரியும்படி இடப்பட்ட விபூதி) அணிந்து கொண்டும், கழுத்திலே உருத்திராக்கக் கண்டிகைமாலை அணிந்துகொண்டும், அங்கவத்திரத்தை யோகவேட்டியாகப் போட்டுக்கொண்டும் சைவ வடிவமாகவே காட்சியளிப்பார்.

● அவர் கச்சேரி செய்யுங்காலத்தும் சிவகதைப் பிரசங்கம் செய்யுங்காலத்தும் கீழே உட்கார்ந்து கொண்டு தம் இரு கால்களையும் நன்றாக இறுக மடக்கிக் கொள்வார்; இன்னும் சில கச்சேரிகளில் அமரும் போது இரு கால்களையும் ஒன்றன்மேல் ஒன்றாகப் பதுமாசனம் போட்டுக் கொண்டு நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து கொள்வார். இருகைகளின் கட்டைவிரல் நுனி

களையும், சுட்டுவிரல் நுனிகளையும் சேர்த்துக்கொண்டு (சின்முத்திரை வடிவாக) இருகைகளையும் நன்ருக நீட்டிக்கொண்டு அக்கைகளின் மணிக்கட்டுக்கள் இரண்டையும் இரு முழங்கால்களிலும் வைத்துக்கொள்வார். காண்போருக்கு அவர் நிஷ்டை செய்பவரின் திருக்கோலத்துடன் விளங்குவார்.

● மகாவைத்தியநாத சிவன் இரவு ஒன்பதுமணியிலிருந்து காலை நான்குமணி வரை ஆறு அல்லது ஏழு மணிநேரம் உறங்குவதற்காகப் படுப்பார். குளிக்கும் போது நிற்பார். சிவதரிசனத்தை முன்னிட்டுக்கோயிலுக்குச் செல்லும்போது நடப்பார். இவ்வாருக இருக்கும் நேரந்தவிர ஒருநாளிலே பதினன்கு அல்லது பதினைந்து மணிநேரமும் சபங்கள், சிவபூஜைகள், நூலாராய்ச்சி, சிவகதை செய்தல் ஆகிய இவைகள் செய்யும்போது உட்கார்ந்து கொண்டுதான் இருப்பார். அவ்வாறு உட்கார்ந்து கொண்டிருக்கும் தருணத்தில் அவரது ஆயுட்காலம்வரை ஒரு நாளாவது ஒருநிமிட நேரத்திலாவது அவர் கூனிக் குறுகி உட்கார்ந்தது இல்லை. கால் வலியெடுக்குமென்று காலை மடக்கியும், நீட்டியும், காலை மாறிமாறிப்போட்டு உட்கார்வது போன்ற எதுவும் அவரின் செயலில் காணப்பட்டதில்லை. இரு கால்களை மடக்கி உட்காருவதில் இடக்கால் உள்ளேயும் வலக்கால் வெளியேயும் இருக்கும்படி மடக்கி உட்காருவார். அவர் உட்கார்ந்து இருப்பதைப் பார்த்தால் பெரியோர்கள் அவையில் மிக அடக்கமாக இருப்பது போலத் தோன்றும். பதுமாசனமாக உட்காருவதில் வலக்காலைஉள்ளே

மடக்கியும் அதன்மேலே இடக்காலை மடக்கிப்போட்டும் உட்காருவார். அவர் எக்காலத்தும், நிமிர்ந்த உடலுடன் விளங்குவாரேயன்றிக் கூனிய உடலுடன் ஒருநிமிட நேரங்கூட இருந்து பார்த்ததில்லை.

● கச்சேரியிலே பாடுதற்கு உட்காரும்போது மகா வைத்தியநாதசிவன் நடுவிலும், அவருக்கு வலப்புறத்திலே அவருடைய தமையனார் இராமசாமி சிவனும் அமர்ந்திருப்பார்கள். இராமசாமி சிவனுக்குவலப்புறம் மிருதங்கம் வாசிப்பவரும், மகாவைத்தியநாத சிவனுக்கு இடப்புறம் பிடில் வாசிப்பவரும் அமர்ந்திருப்பார்கள்.

● மகாவைத்தியநாத சிவன் பிடில் இல்லாமல் மிருதங்கம் மட்டும் வைத்துக்கொண்டு பல இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார். பக்கவாத்தியமாகிய பிடில் அவரது கச்சேரிக்கு இல்லாததால் இசை நிகழ்ச்சியானது தரக்குறைவாக இருந்ததில்லை. பாட்டும் மிருதங்கமும் சேர்ந்து அவையோர்களை ஆகாயத்திற்குத் தூக்கிச் செல்லுவது போல இருக்கும். அக்காலத்தில் நாராயணசாமியப்பா அவர்கள்தான் இனிமையான குரலுடன் பாடிக்கொண்டும், மிருதங்கத்தை வாசித்துக்கொண்டும் பஜனைசெய்து மக்களை இன்பக்கடலில் ஆழ்த்துவார். அது போல மகாவைத்தியநாத சிவனும் மிருதங்கம் மட்டும் வைத்துச்கொண்டு பாடி அவையோர் யாவரும் களிக்கும்படிச் செய்துள்ளார். வேறு எவரும் மிருதங்கத்தோடு மட்டும் பாடி அவையோர்கள் மகிழும்படிச் செய்ததில்லை.

● மகாவைத்தியநாதசிவன் இன்னும் பல சமயங்களிலே பிடிலும் மிருதங்கமும் இல்லாமல் வீணையோடு மட்டும் பாடிக் கச்சேரிகள் செய்ததுண்டு. அவ்வாறுக மாயூரம் வீணை வைத்தியநாத ஐயரும், திருவனந்தை வீணை கல்யாணகிருஷ்ண பாகவதரும், மைசூர் வீணை சுப்பண்ணுவும் அவரது பாட்டுடன் வீணை வாசித்தவர்களில் முக்கியமானவர்கள். அவர்கள் வீணை வாசிப்பிலே மகாவைத்தியநாத சிவனுக்கு நல்ல மதிப்புண்டு. பாட்டுடன் வீணை மட்டும்சேர்ந்த இசை நிகழ்ச்சிகளைக் கேட்ட அரசர்கள், மடாதிபதிகள், பெரிய செல்வர்கள் ஆகிய அனைவரும் மெய் சிலிர்த்துள்ளனர்.

● மகாவைத்தியநாத சிவனுடைய பாட்டிற்குப் பக்க வாத்தியக்காரராக அமர்ந்து வாசிப்பவர்கள் மகா வைத்தியநாதசிவன் இராமசாமிசிவன் ஆகிய அவ்விருவருக்கும் சமமாகவோ அல்லது சற்றுப்பின் தள்ளியோ அமருவது தான் அக்கால வழக்கம். இக்காலம் போலப் பிடில் வாசிப்பவரும் மிருதங்கம் வாசிப்பவரும் பாடுகின்றவருக்கு முன்னுல் உட்காருவது போல அக்காலத்திலே உட்கார மாட்டார்கள். பாடகருக்கு முன்னுல் அவர்கள் அமர்ந்து இருப்பதனுல் பாட்டுடன் அவர்கள் சேர்ந்து வாசிக்கும்போது முன்னுல் அமர்ந்துள்ள அவர்களுடைய வாத்திய இசை ஒலி முந்திக்கொண்டு செவிப்புலனுகியும், பின்னுல் அமர்ந்துள்ள பாடகரின் சொற்களும் அவ்விசையொலிகளும் பிந்திக்கொண்டு சரிவர அறிதற்கு இயலாமலும் போய்விடுகின்றதோ என்றும் ஆராய்தல் வேண்டும்.

● மகாவைத்தியநாத சிவன் ஐந்து கட்டை சுருதிக்கு அவ்வளவு எளிதாகப் பாடும் ஆற்றலுள்ளவர். அவர் 'சங்கரா' என்று தொடங்க ஆரம்பித்து எந்த இராகத்தைப் பாடினாலும் அது தாரஸ்தாயி சட்ஜ சுரத்திலே நின்று சுருதியுடன் ஒன்றி ஒலித்துவிடும். அவ்வாறு அவர் ஷட்ஜ சுரத்திலே ஈடுபட்டு நிற்கும் முறைகளடங்கிய அவ்வொலிதனைக் கேட்போர், அக்கணமே அவர் இன்ன இராகந்தான் பாடப்போகிறார் என்ற குறிப்பை அவ்விசையொலி தெளிவாக உணர்த்திவிடும். பிறகு முறையே ஆலாபனைகள் வித்தாரமாக நடைபெறும். அவர் மந்தர(மெலிவு) சட்ஜசுரமுதல் அதிதார (அதி உச்சம்) சட்ஜ சுரம் வரை மூன்று தாயிகளையும் ஆரோகண அவரோகணக் கிரமத்திலே அதிக வேகமாகப் பாடிவரும் வகையைக் கேட்பவர் யாவராயினும் மயங்கிப் போவார்கள். இது எவராலும் செய்ய இயலாத ஒருவகை இசைச் செயல் திறமாகும்.

● மகாவைத்தியநாதசிவன் இசைவினிகை செய்யுங்காலத்து அவருடைய தமையனாராகிய இராமசாமிசிவனே தம்புராவை மீட்டி வருதல் வழக்கம். தம்புராவை இக்காலம்போல் நிறுத்திவைத்து மீட்டிப் போடுவது வழக்கமில்லை. தம்புராவின் குடமானது இராமசாமி சிவனின் வலத் தொடைப்பக்கம் இருக்கும். அதன் தண்டியானது இராமசாமி சிவனின் வலக் கால் முட்டின் மேலாகவும், மகாவைத்தியநாத சிவனின் வலக்கால் முட்டிற்கு நேரே சற்றுச் சாய்வாக நின்றிருக்கும். சில சமயம்

அந்தத் தம்புராத் தண்டி மகாவைத்தியநாத சிவன் வலக்கால் முட்டின் மேலும் பட்டுக்கொண்டிருக்கும். தம்புராவைக் கீழே படுக்கவைத்து மீட்டிவருதலே அவர்களது இயற்கையாகும். இங்கு கவனிக்கத் தக்கது: தம்புராவை நாம் சுருதி சேர்க்கும்போது முகத்திற்கு முன்னால் வைத்துக்கொண்டு சுருதி சேர்க்கிறோம். நமது காது பின்புறம் மறைவு பட்டும், முன்புறம் தொன்னைபோல வளைந்தும் இருக்கிறது. எனவே எதிரிலிருந்து வரும் ஒலிகளைத் தெளிவாகக் கேட்டறியும் அமைதியை நம்காது இரண்டும் பெற்றிருக்கின்றன. எனவே, தம்புராவின் ஒலி நமக்கு முன்னால் ஒலிக்கப் பெற்று கேட்கும் முறைக்கும், தம்புராவின் ஒலி நமக்குப் பின்னால் ஒலிக்கப்பெற்று அதனைக் கேட்கும் முறைக்கும் அளவு கடந்த பேதம் உள்ளதென்று அறிதல் வேண்டும். நமது சாரீரம் சுருதியில் சேர்ந்து ஒன்றி ஒலித்தற்குத் தம்புராவின் ஒலி முன்னாலிருந்து வருதல் நலமோ என்று எண்ண இடந்தருகின்றது. இன்னும் அவ்வொலியானது கீழே இருந்து கிளம்பி மேல் நோக்கிவரும் அமைதிக்கும், அவ்வொலியானது மேலே இருந்து கிளம்பி கீழ்நோக்கி வரும் அமைதிக்கும் மிகுந்த பேதமுண்டென அறிதல் நலம். ஒலியினை உண்டாக்கும் நம் வாயானது கீழும், ஒலியினைக் கேட்கும் நம் செவியானது சற்று மேலாகவும் கடவுள் சிருட்டியில் இயற்கையாக அமைந்திருத்தலை யாவரும் கவனித்தல் வேண்டும். எனவே கீழிருந்து எழும்பிவரும் ஒலிகள் செவ்விதாக மிகத் தெளிவாக இருக்குமென்று எண்ண இடந்தருதலால் தம்புராவைக் கீழே படுக்கவைத்து மீட்டுதல் நலமென்

றெண்ணி அவ்வாறு மீட்டி வந்தனரோ என்று எண்ண வேண்டியதாகவும் இருக்கிறது. வட நாட்டிலே தம்புராவை நிறுத்தி மீட்டுதலும், தென்னாட்டிலே தம்புராவைப் படுக்கவைத்து மீட்டுதலும் அக்காலத்திய வழக்கம். அதனை இக்காலத்தார் நன்கு ஆராய்தல் நலம்.

● மகாவைத்தியநாதசிவன் பாடும்போது நிட்டையிலிருப்பது போல, இரு கண்களையும் மூடிக்கொண்டு தம்புராச் சுருதியுடன் தமது குரலை ஒன்றும்படிச்செய்து, அத்துடன் லயமடைந்து தம்மை மறந்து பாடுவார்கள். இக்காலம் கண்ணைமூடிக்கொண்டு இசைப்பது ஒரு குற்றம் போல் கருதப்படுகின்றது - உணர்த்தப்படுகின்றது. செபம், தபம், நிட்டை, யோகம், தியானம், ஆகிய இவைகளை அனுட்டிப்போர் கண்ணைமூடிக்கொண்டு மனத்தை ஒரு நிலைப் படுத்திச்சித்திபெறுதலே வழக்கம். நாம் மறந்து போன ஒன்றை ஞாபகத்திற்குக் கொண்டு வருதற்குக் கண்ணை மூடிக்கொண்டு யோசித்தலே இயற்கை. நல்ல காரியங்கள் சித்தியாதற்குக் கண்ணைமூடிக்கொண்டு மனத்தை ஒன்றிலேயே நிலைநிறுத்துதல் வேண்டும். கண்ணைத்திறந்து கொண்டு மனத்தை நிலைநிறுத்துதல் சற்றுச் சிரமமானது. எதிரே உள்ளவைகள் கண்ணிற்குப் படும்போது அவை மனம் ஒருமைப்படாமல் சலித்தற்குக் காரணமாகின்றன. எனவே சுருதியுடன் தன் குரலைச் சேர்த்து அவ்விரண்டும் ஒன்றி ஒலித்தற்குக் கண்ணை மூடி மனத்தை அச்சுருதியாகிய நாதத்திலே ஒடுக்கினலன்றிச் சுருதிச்சேர்க்கை (சுருதிலீனம்) கிடைப்பது

மிகக்கடினம். இக்காரணத்தினுல் சங்கீதயோகத்தின் பயனுகச் சிவபரத்திலேயே ஈடுபட்ட அவர் கண்களை மூடிக்கொண்டு இசைத்தியானபரராகிப் பாடி வந்தார் என்பது ஆராய்தற்குரியது. அவர் பூசை, செபம், யோகம், சிவத்தியானம் ஆகிய கலைகளின் தத்துவங்களையெல்லாம் கற்றறிந்தவராதலின் முன்னேர்களின் கருத்தை மனத்திற் கொண்டு அதற்கிணங்கக் கண்களை மூடிக்கொண்டு சங்கீத நிட்டைக்குரிய செயலைச் செய்தார் என்று கொள்ளல் வேண்டும்.

● மகா வைத்தியநாதசிவன் கண்களிரண்டையும் மூடிக்கொண்டு சங்கீத நிட்டையிலிருந்து இசைத்து வரும்போது அவரின் தமையனுரான இராமசாமி சிவனவர்கள் அவையிலுள்ளோரின் மனப்பாங்கு, இசையை உணர்ந்துவரும் தன்மை ஆகிய இவைகளைக் கவனித்து வருவார்; அந்த அவையிலே இசை எவ்வாறு நடைபெறுதல் வேண்டும், எவ்வாருயின் இசை சிறப்புறும், அவையோர் மகிழ்வர் என்பதை அங்குள்ள சூழ் நிலைகளால் அறிந்து வருவார்; அவையில் என்னென்ன கீர்த்தனைகள் பாடல்வேண்டும், என்ன இராகம் பாடல் வேண்டும், என்ன பல்லவி பாடுதல் வேண்டும், எவ்வளவு நேரம் இசைநிகழ்ச்சி நடைபெறுதல் வேண்டும் என்ற குறிப்புக்கள் முழுவதையும் தம் இடக் கைவிரல்களினுல் மகா வைத்திய நாத சிவனவர்களின் வலத்தொடையின் மூலம் உணர்த்தி விடுவார். அக்குறிப்பை உணர்ந்த அவர் அதற்கேற்றவாறே இசை நிகழ்ச்சிகளைச் செயல் படுத்தி வருவார்.

● மகா வைத்தியநாத சிவன் பாடும்போது 'ய-ர-ல-வ-ழ' என்ற விகாரமான சப்தம் எதுவும் அவரிடமிருந்து வாராது. பாட ஆரம்பிக்கும் போதே 'சங்கரா' என்று தொடங்கி விடுவார். பின்பு இசைக்குரிய அநுநாசிகமும், மெல்லினமுமான 'ந'- என்ற எழுத்தை உபயோகிப்பார். சுருலீனத்திற்கு ஹுங்காரத் தொனியாகிய 'ம்'- என்ற மெல்லின மெய் எழுத்தை உபயோகிப்பார். அவ்வொலி சங்கநாதம் போல் ஒலிக்கும். உலகெலாம் உய்தற்குரிய உயிராகிய 'அ'- என்ற முதலெழுத்தையும், 'த'- என்ற வல்லின எழுத்தையும் உபயோகிப்பார். எனவே 'அ-ந-ம்-த' என்ற நான்கெழுத்தையும் பெரும் பான்மையாக உச்சரித்து அதன் துணைக்கொண்டே இராகம் இயக்கிப் பாடுதல் அவருடைய இயல்பாகும்.

● மகா வைத்தியநாத சிவனின் சாரீரம் துரித நடையுடையது. அச்சாரீரம் இசை இயக்கமாகிய நுண்ணமைதிகளைச் செயல்படுத்தும்போது அது மின் வெட்டுவதுபோல் பளிச்சென்று துலங்கும். அவருடைய துரிதநடையை ரயில் (புகைவண்டி) சாரீரம் என்பார்கள். அத்துணை வேகமாகப் பேசும் இயல்புடைத்து. இக்காலத்தோர் சவுக்கம், மத்தியமகாலம், துரித காலம் என்ற மூன்று காலங்கள் பாடுவதிலுள்ள மூன்ருவது காலநடையே- அதாவது துரிதகால நடையே மகா வைத்தியநாத சிவனுக்குச் சவுக்ககாலமாகிற முதற்கால நடையாகும். அதனின்று அவர் ஆறுகாலங்கள் பாடும் ஆற்றல் பெற்றவர். அவர் அதிவேகமாகப் பாடுவதுபோலத் தோன்றினும் இசையினுடைய

நுட்பச் செயல் ஒவ்வொன்றும் மிகத் தெளிவானதாகவே இருக்கும். ஒவ்வொரு சங்கதியிலும் உள்ள சுரக் கூட்டங்கள் பொறுக்கி எடுத்த மணிகளை அடுக்கி வைத்தாற்போலத் தெள்ளத் தெளிவாக ஒலிக்கும். நமது நடுவீட்டிலே ஏற்றி வைக்கும் ஒரு பித்தளை அல்லது வெண்கலக் குத்துவிளக்கை நன்ருகத் தேய்த்துத் தூய்மையாக வைத்தால் அது எப்படிப் பளிச்சென்று துலங்குமோ அவ்வாறே பிரகாசத்துடன் அவர் இசைக்கும் இசைப்பகுதிகள் துலங்கும். அவர் இசைக்கும் பகுதிகள் மிகத்தெளிவாகவும் அதிக வேகமாகவும் நடைபெறும்போது, அந்த இசையொலியானது கேட்பவர்களின் தலையைக் கிறுகிறுக்கவைத்து மயக்கிவிடும். அவர் சாதாரணமாக இசைத்தாலும் அது அபூர்வ ஆற்றலுடையதாகவே விளங்கும்.

● அவர் இசை நிகழ்ச்சிகளை எங்கு நடத்துவதாயினும் ஒன்றரை மணி நேரம் (மூன்றேமுக்கால் நாழிகை) பாடுவார். அதற்குமேல் நேரம் எடுத்துக்கொண்டு பாடமாட்டார். சிவகதையைச் செய்வதாகில் இரண்டு மணிநேரம் எடுத்துக்கொள்ளுவார். அவர் திருவனந்தபுரம் சென்றிருந்தபோது, **ஆயில்யம் திருநாள் அரச அவையிலே** கோயம்புத்தூர் இராகவஐயருடன் பாடிய ஆறு இசை நிகழ்ச்சிகளிலும், வீணை கல்யாணகிருட்டின பாகவதருடைய வீணையோடு சேர்ந்து பாடிய ஒரு கச்சேரியிலும், ஆக இந்த ஏழு இசை நிகழ்ச்சிகளிலே மட்டும் அவர் மூன்று மணிநேரம் எடுத்துக்கொண்டு இசை பாடியுள்ளார்.

● அவர்சில இசை நிகழ்ச்சிகளை மாலை நேரத்திலே செய்யும்படி நேர்ந்துவிடும். சந்தியாவந்தன சப தபங்களைத் தவருது செய்யும் அவர், மாலை ஆறு மணியாகிவிட்டால் தாம் பாடிக்கொண்டிருக்கும் கச்சேரிமத்தியிலே அவையோர்களிடம், ''சந்தியாகாலம் வந்துவிட்டது. அவரவர்கள் அனுட்டானத்தைக் காலந்தவருது செய்ய வேண்டுமாகையால் அதனைச் செய்து முடித்துப் பின்பு கச்சேரியைத்தொடங்கலாம்'' என்று கூறி சந்தியாவந்தன சபதபங்களைச் செய்தற்குப் புறப்பட்டு விடுவார். அவர் அனுட்டானத்தை முடித்துக் கொண்டு திரும்பி வர முக்கால் அல்லது ஒரு மணி நேரம் ஆகிவிடும். அது வரையில் இசையரங்கில் தம்புராமட்டும் ஒலித்துக்கொண்டிருக்கும். அதை அவருடைய மாணுக்கரில் யாரேனும் ஒருவர் மீட்டிக்கொண்டிருப்பார். மறுபடி அவர் வந்து இசையைத் தொடர்ந்து இசைப்பார். அப்பொழுது இசையானது நடுவிலே நிறுத்தப் பெற்றுப் பின்பு எடுத்துப் பாடுவது போலத் தோன்ருது. தொடர்ந்து இசை நிகழ்ச்சி நடந்து வருவது போலவே தோன்றும்.

● அவர் தமது ஆயுட் காலம்வரைப் பாடி வந்த இசை நிகழ்ச்சிகளிலே ஒன்றுகூடத் தரக்குறைவாக அமைந்தது கிடையாது. அங்குச் சூழ் நிலை சரியில்லை கச்சேரி வாய்க்கவில்லை; இன்ன இடத்தில் என்னையும் அறியாமல் நன்ருகப்பாடினேன்; இன்ன இடத்தில் அதிக வெற்றி கிடைத்தது; இன்ன இடத்தில் பக்க வாத்தியங்கள் சரியில்லாததால் கச்சேரி அமையவில்லை, என்றெல்லாம் இக்காலத்திற் கூறப் படுவது

போல அவரின் கச்சேரி நிகழ்ச்சிகளைக் கூற இயலாது. ஒவ்வொரு கச்சேரியும் ஒன்றைவிட ஒன்று புகழத் தக்க விதத்திலேயே, உயர்ந்திருக்கும். ஒவ்வொரு கச்சேரியும் ஒவ்வொரு வகையில் புதிது புதிதான மெருகேறி அற்புதம் தோன்ற மிளிரும். ஒவ்வொரு இசை நிகழ்ச்சியும் விலை மதிக்க இயலாத இரத்தினம் போன்றதாகும்.

● அது போலவே சிவகதைகளைச் செய்யும் ஓர் இடத்திலேனும் கதை இன்று சிறப்புக் குன்றிச் சாதாரணமாகவே விளங்கிற்றென்று எவரும் நினைத்ததுமில்லை, கூறியதுமில்லை. இக்காலத்தில் கதாகாலட்சேபம் செய்பவர்கள், கதைக்கேற்ப, ஒரே விதமான பாடல்கள், ஒரே விதமான வசனங்கள் மாறுதலின்றி ஒப்பிப்பார்கள்; அவ்வாறின்றி மகா வைத்தியநாத சிவன் அன்றன்று புதிது புதிதான அமைதியிலேயே சிவகதை புரிவார். சிவகதை செய்யும்போது மகாராட்டிரத்தில் அமைந்த சாகி, தண்டி போன்ற பாடலைப் பாடிவிட்டு நேராகவே எடுத்துக்கொண்ட கதையைத் தொடங்கி விடுவார்.

● அவருடைய சிவகதையை மகாபண்டிதர்களெல்லாம் மிகவும் கருத்தூன்றிக் கவனித்துச் சுவைப்பர். இன்னும் மடாதிபதிகள், ஆசாரிய சுவாமிகள், நல்ல வைதீக சிரத்தையுள்ள மேலோர், சிவாபிமானம் நிறைந்தோர் ஆகிய இவ்வுத்தம மேலோர்கள் யாவரும் அவருடைய கதையில் ஈடுபாடுடையவர்களாகி அதனை அதிகம் விரும்புவர். அவருடைய சிவகதையைக் கேட்டவர்கள் வேறொருவர் கதையை ஈடுபாட்டுடன் கேட்க வேண்டுமென்ற அவாவினைக் கொள்ள மாட்டார்கள்.

● அவருடைய பதினாறும் வயதிலிருந்து எங்கெங்குச்சென்றாலும் அங்கங்கு சங்கீதக்கச்சேரியும் சிவகதையும் மாறி மாறிப் பல நாட்கள் நடக்கும். அவர் கதை செய்யுங்கால் அவருடைய சொல்லின் கருத்துச் செறிவோடு புது முறையிற் றோன்றும் நயமும், அக்கதைக்கேற்ப இசைக்கும் இசையின் இனிமையும் சேர்ந்து கேட்போர் மனத்தை உருக்கித் தாரைதாரையாகக் கண்ணீர் பெருகச்செய்யும். கேட்பவர்கள் அக்கதையிலேயே தம் மனத்தைப் பறிகொடுத்து விடுவார்கள். என்னே! அற்புதம். கேட்போரின் ஐயம்புலன்களும் அடங்கிவிடும்.

● அவருடைய இசைக்கச்சேரியிலே "வாதாபி கணபதிம்பஜேஹம்" என்ற முத்துசாமி தீக்ஷிதரின் கீர்த்தனை முதலிடம்பெறும். பிறகு தம் தமையனாராகிய இராமசாமி சிவனவர்கள் இயற்றிய "எக்காலத்தினு மறவனே" என்பது போன்ற பெரியபுராணக்கீர்த்தனை இரண்டாவது இடம் பெறும். பின்பு மகாவைத்திய நாத சிவனின் பரம குருவாகிய ஆனை ஐயா அவர்களியற்றிய கீர்த்தனம் மூன்றாவது இடம் பெறும். அதன் பிறகு தியாகராஜ சுவாமிகள், சாமா சாஸ்திரிகள், சுவாதித் திருநாள் அரசர், கோபாலகிருஷ்ணபாரதி ஆகிய இன்னும் பலருடைய கீர்த்தனங்கள் நான்காவது இடம் வகிக்கும். ஒரு கச்சேரியிலே பெரும்பாலும் மூன்று அல்லது நான்கு கீர்த்தனைகளுக்கு மேல் பாடமாட்டார். இராகம், தானம், பல்லவி, நிரவல், சுரம் ஆகிய இவைகளே பெரும்பான்மையாக இடம்பெற்றுக் கச்சேரி நிறைவு பெறும்.

● அவர் கச்சேரி செய்யும்போது ஒவ்வொரு கீர்த்தனைக்கும் இராகம் சுரம் பாடுவதில்லை. ''வாதாபி கணபதிம்'' என்ற அம்சத்தொனி இராகக் கீர்த்தனை பாடும்போது தொடக்கத்தில் சிறிது இராகத்தை அதன் உருத்தெரிவதுபோலப் பாடி விட்டு உடனே கீர்த்தனம் தொடங்கி விடுவார். சில கச்சேரிகளிலே ஏதேனும் ஒரு கீர்த்தனைக்குச் சுரம் பாடல் வேண்டுமென்று நண்பர்கள் விரும்பினால் பாடுவார். இல்லையாயின் நான்கு கீர்த்தனைகளையும் பத்து அல்லது பதினைந்து நிமிடத்திற்குள் பாடி முடித்து விட்டுப் பல்லவிக்குரிய இராகத்தை அதிவித்தாரம் செய்து தானத்தைச் சிறக்கப்பாடி, பல்லவி நிரவல் செய்து, சுரம்பாடி விடுவார்கள். அவை ஒரு மணி நேரத்திற்கும் மேலாகப் பாடப்படும். அதன் பிறகு தாமே செய்த தில்லானாவும் இராகமாலிகையாக ஒரு சுலோகம் அல்லது அப்பர் சுவாமிகள் இயற்றிய திருத்தாண்டகம் பாடப்பெறும். அதன் பின்பு மன உருக்கத்தைத் தருவதான தேவார திருவாசகங்கள் இடம் பெற்று எல்லோரையும் மன நிறைவு பெற்று மகிழச்செய்யும். பின்பு மங்களத்தோடு கச்சேரி முடிவுபெறும்.

● மகா வைத்தியநாத சிவனுடைய பாட்டிற்கு இரட்டைப்பல்லவி சிவராமய்யர் குமாரர் சுப்பராயரும், பதினைந்து மண்டபம் துரைசாமி ஐயர் பேரர் சாம்பசிவ ஐயரும், வெங்கோபராவ் அவர்களும், திருக்கோடிக்காவல் கிருட்டின ஐயரவர்களும் பலமுறை பிடில் வாசித்திருக்கிறார்கள். இன்னும் தஞ்சை சாமாரா அவர்களும், நாராயணசாமியப்பா அவர்களும், துக்காராம்

அவர்களும் பலமுறை மிருதங்கம் வாசித்திருக்கிறார்கள்.

● மகா வைத்தியநாத சிவன் தாம் இசைக்கச்சேரியைச் செய்யுங்காலத்துப் பக்கவாத்தியங்களுக்கென்று தனியாக வாசிக்கச் செய்து நேரம் போக்கமாட்டார். பக்கவாத்தியங்கள் பாட்டுடன் கலந்தே நிகழும். ஒன்றரை மணி நேரமும் பாட்டே தலையாய் நின்று ஒலிக்கும். அவருடைய பாட்டிற்குப் பக்க வாத்தியம் வாசிக்க யாரும் விரும்புவர். சாதாரண பக்கவாத்தியமாக இருந்தபோதிலும் அவருடைய பாட்டு அதனைச் சிறக்கச் செய்துவிடும்.

● அவர்கள் கச்சேரிக்குச் செல்லுங்கால் தமக்கு இவ்வளவு தொகை வேண்டுமென்று பேசிக்கொள்ளும் வழக்கம் இல்லை. ஆங்காங்குக் கிடைக்கும் தொகையை மிகப்பெரிதாக மதித்துப் பெற்றுக்கொள்ளுதலே அவருடைய வழக்கம். ஆனால் அக்காலம் அவருடையை இசைநிகழ்ச்சிகளுக்கு ஐம்பது ரூபாய்க்கும் குறைவாக யாரும் கொடுத்ததில்லை.

● அவர் தமது தஞ்சை மாவட்டத்தை விட்டு வேறு மாவட்டங்களுக்கு இசை நிகழ்ச்சிகள் செய்தற்கு ஒத்துக்கொண்டால் அங்குப் பல நாட்களோ பல மாதங்களோ தங்கிப் பன்முறையும் இசைக்கச்சேரிகளும் சிவ கதைகளும் செய்து, அங்குள்ளவர்களெல்லோரையும் மகிழ்விப்பார். அவர்கள் அன்புடனளிக்கும் சன்மானங்களாகிய பரிசில்களைப் பெற்றுத் தமது ஊர் திரும்புவார். அக்காலம் பிரயாண வசதிக் குறைவுகள் இருந்த கார

ணத்தால் செல்லும் இடங்களில் பல மாதங்கள் தங்கி விடும் நிலைமை ஏற்பட்டது.

● அக்காலம் மகாவைத்தியநாத சிவன் பொதுவான இடங்களிலே கச்சேரி செய்யநேர்ந்தால் அங்கு அவை நடுவே ஒரு பெரிய தாம்பாளம் வைப்பார்கள். அல்லது ஒரு ஜமுக்காளத்தை விரிப்பார்கள். கச்சேரி நடக்கும்போது அதைக் கேட்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற சில நாணயங்களை அதில் இடுவார்கள். அவற்றை எண்ணினால் நூற்றுக்கும் மேற்பட்ட ரூபாய்கள் இருத்தல் உண்டு. தாங்கள் அவர்களுக்குக் கொடுக்கும் தொகையுடன் அவைநடுவே வைக்கப்பெற்ற தாம்பாளத்தில் உள்ள நாணயத்தையும் சேர்த்தே அளிப்பார்கள்.

● மகா வைத்தியநாத சிவனும், இராமசாமி சிவனும் தாங்கள் தங்கியுள்ள இடத்திலிருந்து கச்சேரி செய்யவேண்டிய இடத்திற்குச் சேர்ந்து செல்வார்கள். அப்போது நடுவழியிலே மகா வைத்தியநாத சிவன் தம் தமையனாரை உரத்து 'இராமசாமி, இராமசாமி' என்று இரண்டு அல்லது மூன்று முறை கூப்பிடுவார். அவ்வாறு உரக்கக் கூப்பிடுதலானது தம் சாரீரம் தெளிவாக நல்ல காத்திரத்துடன் ஒலிக்கப் பெறுகின்றதா என்பதை அறிவதற்காகவேயாம். அதனை அறியாதோர் தங்களைக் கூப்பிடுகிறார்களே, தாங்கள் ஏனென்று கேட்கவில்லையே என்று இராமசாமி சிவனவர்களிடம் சற்று பரபரப்படைந்து கூறுவார்கள். அதற்கு அவர்கள் சாவதானமாக, "என்னைக் கூப்பிடவில்லை, சாரீ

ரம் சரியாக இருக்கின்றதா என்று பார்த்துக் கொள்ளுகிருன்" என்பார்கள். அப்பொழுதுதான் அவர்கள் அவ்விபரத்தைப் புரிந்துகொண்டு வியப்படைவார்கள். இன்னும் சில சமயங்களிலே திடீரென்று 'மகாப்ரபோ, சம்போ' என்று உரக்கச் சொல்லிப்பார்ப்பார். விபரம் தெரியாதவர்கள் இதைக் கேட்டதும் இங்குக் கோயிலேயோ, கோபுரத்தையோ காணவில்லையே, ஏன் திடீரென்று உரக்கக் குரலெழுப்புகிருர் என்ற ஐயம் கொள்வார்கள். அவர்கள் உடனே தமது பார்வையைத் தூரத்தும், சுற்றும் புறத்தும், ஆகாயத்திலும் செலுத்துவார்கள். எனவே அவர் இம்முறைகளினுல் தமது சாரீரம் எவ்விதக் கோளாறுகளுமின்றிக் கணிப்பாக ஒலிக்கின்றதா, என்று சோதித்துப் பார்த்துக்கொள்வார்.

● மகா வைத்தியநாத சிவனின் கச்சேரிகளில் கழுத்திற்கு மாலைகள் போடுவதில்லை. அவர் சிவப்பிரசாதமாக வில்வதளத்தையே தலையிலும் காதிலும் கொள்வர். அவர்களுக்குப் புட்பங்களிலிருந்து உண்டாகும் தீவிரமான வாசனை ஒத்துக்கொள்ளாது. கோயில்களில் புட்ப மாலையின் ஒரு சிறுபகுதியை விபூதி தேங்காய் மூடியுடன் சேர்த்து ஈசுரப் பிரசாதமாகக் கொடுத்தால்மட்டும் ஏற்றுக்கொள்வார். கச்சேரி முடிந்ததும் சந்தனதாம்பூலத்துடன் பணமும் அதிலே புட்பமாலையும் வைத்துக் கொடுத்தலே வழக்கம்.

● மகா வைத்தியநாத சிவனுக்கு அத்தர், புனுகு, அரகஜா, சுவாகு, சவ்வாது, தாழம்பூ, இருவாட்சி, சம்பங்கி, குண்டுமல்லி, ஊதுபத்திகள் போன்ற அதிக

மான வாசனையுள்ள பொருள்கள் ஆகா. புகை முதலி யன அவரது சாரீரத்திற்கு ஒத்துக்கொள்வதில்லை. அதிக வாசனையாக இருந்தாலும் ஜாதிமுல்லை, ரோஜாப்பூ, தாமரைப்பூ, மகிழம்பூ, நல்லசாம்பிராணி, கற்பூரம், சந்தனம் ஆகிய நறுமணப்பொருள்கள் சிறிது பிடிக்கும். ஆனால் மனம் விரும்பி இவ்வாசனைப்பொருள் களை ஏற்பதில்லை. சிவபூசையை முன்னிட்டு இவ் வாசனைப் பொருள்களைப் பயன்படுத்துவார்.

● அவர் பிறருடைய திறம் மிக்க கலையில் அழுக் காறு கொள்ளமாட்டார். பிறருடைய திறமைகளை அறிந்து உள்ளன்புடன் மகிழ்ந்து மதித்துப் பாராட்டும் சிறப்புடையவர். அவ்வாறு அவரால் பாராட்டப்பெற் றவர்களில் கோயம்புத்தூர் இராகவஐயர், வீணை கல் யாண கிருட்டின பாகவதர், ஆகியோர் முதன்மை யிடம் பெற்றவர்கள். பட்டினம் சுப்பிரமணிய ஐயர், குன்றக்குடி கிருஷ்ணையர், மாயூரம் வீணை வைத்திய நாத ஐயர், மைசூர் வீணை சுப்பண்ணு, சேஷண்ணு ஆகியோரிடத்துப் பெருமதிப்பும் அவர்களுடைய இசைத்திறனில் சிறந்த எண்ணமும் உண்டு. இவ்வா ருன உயர்தர வித்துவான்களையும், ஏனைய வித்துவான் களையும் அவர் புகழ்ந்து கூறுவாரேயன்றித் தரக்குறை வாகப்பேசவும் எண்ணவும் மாட்டார். தம்மினும் மூத்த வர்களாகிய இசைவித்துவான்கள், தென்மொழிப் புல வர்கள், அறிவிற்சிறந்த ஏனையோர்களிடத்தும் மிகுந்த மரியாதைகாட்டி நடக்கும் குண நலங்களைப் பெற்றவர். தமிழ், வடமொழி, இசை ஆகிய இக்கலைகளில் தேர்ந்த பண்டிதர்களின் கூட்டுறவைப் பெரிதும் விரும்புவார்.

● சிவகங்கை பெரிய வைத்தியநாத ஐயரவர்களின் சாரீரதர்மத்தில் மகா வைத்தியநாத சிவனுக்கு நல்ல மதிப்பு உண்டு. அவர்களின் சாரீர செழுமை போல் அக்காலத்தில் எவருக்கும் அமையவில்லை. அவர்களின் சாரீரத்திலிருந்து வரும் கம்பீரமான ஒலியின் சுவை யாரும் கேட்டு மகிழத்தக்கதாக இருக்கும். இசைத்திறத்திலே பெரிய வைத்தியநாத ஐயரும் சின்ன வைத்தியநாத ஐயரும் நல்ல மேதைகள்; ஆதலால் அவ்விருவருடைய இசையில் மகா வைத்தியநாத சிவன் பெரிதும் விருப்பமுற்றார். தமக்கு வயதில் மூத்தோராகிய அவ்விருவரிடத்தும் அவர் மிகுந்த பயபக்தியும், விசுவாசமும் அதிகமாக உடையராக இருந்தார். தம் பூணூல் கல்யாணத்தன்று தம்மைப் பாடச்செய்து தமக்கு ஆசி நல்கி மகிழ்ந்ததையும், குடியாலம் வாசுதேவஐயங்காரவர்கள் வீட்டில் நடந்த புதுமனை புகுவிழாவில் தம்மைப் பாடுதற்கு ஏற்பாடு செய்த நன்றியையும் அவர் மறக்கவில்லை. பெரிய வைத்தியநாத ஐயர் சின்ன வைத்தியநாத ஐயர் ஆகியோர்களுடைய இசையைக் கேட்கும் அக்காலத்து இசைப் புலவர்களெல்லாம் சிறிது அச்சத்துடனேயே இருப்பர். அவ்விருவரின் இசையைக் கேட்டவர்கள் வேறொருவரின் இசையை விரும்பமாட்டார்கள்; அவர்கள் இராகம் பாடும்போது வரப்பெறும் இசைச்செய்கையைக் கேட்போர் அடுத்த செய்கையில் என்ன வரப் போகிறது என்று ஊன்றிக் கவனித்துவருவார்கள். ஒவ்வொரு இசைச்சங்கதியும் ஒன்றிற்கொன்று சங்கிலித் தொடர்போல அமைந்து நல்ல தெளிவும் விவரமும் கொண்டு கோடையிடிபோன்ற ஒலியுடையதாகிச்

சிறக்கும். சிலருடைய சப்தங்கள் கனமாக இருந்தால் காதிற்கு விகாரமாகவும், கர்ணகடூரமாகவும் இருக்கும். ஆனால் பெரிய வைத்தியநாத ஐயரின் சாரீர கனமானது எத்துணை அதிகமிருப்பினும் அது செவிகளிலே இன்பத்துடன்பாயும். அத்துணைக் கனமான அத்தொனி சுருதியோடு சேர்ந்து மக்களைப் பரவசப்படுத்தும். அவர்களுடைய சாரீரத்தை ஒத்துப் பரவசப்படுத்தும் ஆற்றல் மகா வைத்தியநாத சிவன் ஒருவருக்கே இருந்தது மகாவைத்தியநாத சிவனின் சாரீரம் கனம், நயம், இனிமை, கேட்டதும் மனத்தை ஈர்க்கும் சக்தி ஆகியவை கொண்டது. எனவே அவரின் சாரீர நலத்தில் பெரிய வைத்தியநாத ஐயரும் சின்ன வைத்தியநாத ஐயரும் மகிழ்ச்சி கொண்டனர். பெரிய வைத்தியநாத ஐயர் எந்தச் சுருதியையும் தாம் ஆதாரச் சுருதியாக நிறுத்திக்கொண்டு அழகுறப்பாடும் திறமை பெற்றிருந்தார். அவர்களுக்கு அனுமந்தரப் பஞ்சமசுரத்திற்குக் கீழும், அதிதாரத்தாயி பஞ்சம சுரத்திற்கு மேலும் ஆக ஐந்தரை ($5\frac{1}{2}$) அல்லது ஆறு (6) ஸ்தாயீவரை அவரது சாரீரம் கனமாகவும், கம்பீரமாகவும், தெளிவாகவும், களிப்புக்கொள்ளும்வகையில் வளம்பெற்று ஒலிக்கும்.

● மகா வைத்தியநாத சிவன் கச்சேரி செய்யும் போது கையை ஆட்டுதல், கையை உயரத்தூக்குதல், வாயைக் கோணவைத்தல், முகத்தை விகாரமாக்குதல், தலையை ஆட்டுதல், உடலை ஆட்டுரல் குழவி போலச் சுற்றுதல் ஆகிய எந்தவிதமான உடற் குற்றங்களும் இன்றி பாடுவார். அவர் பாடும்போது சித்திரப்

பாவைபோல இருந்து நிட்டை செய்கிருரோ என்று எண்ணுவதுபோல அமர்ந்திருப்பார். அவருடைய பாட்டைக் கேட்டுப் புளகிதமடைந்து தம்மை மறந்து தலையசைப்பவர்களே பாடுவதுபோலத் தோன்றுவார்கள்; ஆனுல் அவரோ ஆடாமல் அசையாமல் அவ்விசைதனை நுகர்வதுபோலவே தோற்றமளிப்பார். அவர் பாடும்போது வாய் உதடுகள்கூட அசைவது தெரியாது. வாயை மிகவும் திறக்கமாட்டார். அவர் வாயினின்று எப்படித்தான் அவ்வளவு கம்பீரமான நாதம் எழுந்து வருமோ, அது அறிந்து சொல்லுந்தரமன்று.

● அவர் ஏதேனும் ஒரு இசைப்பாடலை முன்கூட்டியே அதன் இசையமைப்புக்களைத் தயாரித்து அதைப் பலநாட்களும் மனனம் செய்து பாடுதல் வேண்டுமென்பதில்லை. அப்பாடலின் எழுத்தையும், அதன் இராகம் தாளம் ஆகியவைகளையும் ஒருமுறை பார்த்துவிட்டு, அப்பாடலின் சொற்களை இராகதாளத்தோடு அவர் இசைத்து வரும்போது அது ஓர் அழகான இசையமைப்பு ஆகிவிடும். அவ்விசையமைப்பு மிகுந்த அழகுபெற்று இலக்கண முறை வழுவாமல் கீர்த்தன அமைப்புமுறை பேதப்படாமல் இருக்கும். அம்மாதிரியான இசையமைப்பு யாராலும் அமைக்க இயலாது என்று எண்ணும்படி, கேட்பதற்கு மிகுந்த சுவைதருவதாக அமைந்து அழகு பெற்றுவிடும். இத்திறமானது அவரிடமின்றி வேறு எவரிடமும் அமைந்ததில்லை.

● அவருடைய தமையனர் இராமசாமி சிவனவர்களால் இயற்றப்பெற்ற பெரியபுராணம், கந்தபுராணச்

சுருக்கம், மாணிக்கவாசக சுவாமிகளின் சரித்திரம் முதலிய நூல்களிலே உள்ள கீர்த்தனைகளின் தலைப்பிலே அது இன்ன இராகம், இன்ன தாளம் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். அக்கீர்த்தனைகளைக் கச்சேரிகளிலோ, அல்லது சிவகதைகளிலோ பாடும் வாய்ப்பு ஏற்படும்போது மகாவைத்தியநாத சிவன் அதே இராகதாளத்திலும், சில சந்தர்ப்பங்களிலே வேறு இராக தாளங்களிலும் பாடிவிடுவார். அப்படிப் பாடும் போது அக்கீர்த்தனம் அந்த இராகதாளத்திற்குத்தான் பொருந்துவனவாகும் என்று எண்ணும்படி இருக்கும். இன்னும் சில கீர்த்தனங்கள் கச்சேரிக்குப் பாடும்முறை வேருகவும் சிவகதைக்குப் பாடும்முறை வேருகவும் அமைந்து சுவையும் அழகும் கூடிவருவதை நான் பன்முறையும் கேட்டிருக்கிறேன். சில குறித்தும் இருக்கிறேன். இந்த அசாத்தியமான மனோதர்ம செயலை யாரிடமும் எதிர்பார்க்க இயலாது.

● ஓர் அவையிலே அவர் பாடுங்காலத்து இசைப் பகுதிகளிலே எந்த விதமான புதுவகைப் பாடல்கள் வேண்டுமோ, எந்தவகையான புது இசையமைப்புப் பாடல்கள் வேண்டுமோ (ஜாவளி, பதம், தில்லானு, தரனு, சிந்து, பள்ளு, கும்மி, கியால், தூம்ரி போன்ற இன்னும் பலப்பலவகைகள்.) அவைகளைத் தாம்கச்சேரி செய்யும்போதே ஓர் இசைப்பாடலை இயற்றி, அப்பாடலை இசையமைப்புடன் பாடி மக்களை மகிழ்வித்துவிடுவார். இப்புதுவகையான இசைப்பாடலையும் அதன் இசையமைப்பையும் கேட்போர் இது ஒரு பழைமையான உருப்படியோ என்று எண்ணும்படி இருக்கும்.

● இப்போது வழக்கத்தில் நம்மால் கையாண்டு வரப்படுவதான தீக்ஷிதர் கீர்த்தனங்களாகிய ''வாதாபி கணபதிம்பஜேஹம், சிந்தயமாகந்தமூலகந்தம், ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே, மீனாக்ஷி முதம்தேஹி, கஞ்சதளாயதாக்ஷி, நீலகண்டம்பஜேஹம்'' ஆகிய கீர்த்தனங்களுக்கு மகாவைத்தியநாத சிவன் இசையமைப்பைப் புதுப்பித்துள்ளார். இப்பொழுது பாடிவரும் இவ்வுருப்படிகள் அவருடைய இசை அமைப்பைத் தழுவியே அமைந்துள்ளன. தீக்ஷிதர் புத்தகத்தில் சுரப்படுத்தி அச்சிடப்பெற்ற இவ்வுருப்படிகளின் அமைப்புக்கும் இப்பொழுது பாடிவரும் இசையமைப்புக்கும் எத்துணையோ பேதம் உள்ளதென்பதை நூலின்மூலம் அறிந்துகொள்ளலாம்.

● மகா வைத்தியநாத சிவன் எட்டயபுரம் சென்றிருந்த காலத்து அச்சமஸ்தானத்திலே ஆஸ்தான வித்துவானாக இருந்த சுப்பராமதீக்ஷிதர் என்பவரின் சிநேகம் கிடைத்தது. அவர் தீக்ஷிதரவர்களுடன் பலநாட்கள் இசைபற்றி அளவளாவி வந்தார். அப்போது சுப்பராம தீக்ஷிதர் தம் மூதாதைகளாகிய முத்துசாமி தீக்ஷிதரவர்களின் பல கீர்த்தனைகளையும் மகா வைத்தியநாத சிவனுக்குப் பாடிக் காணபித்தார். அப்பொழுது தீக்ஷிதரவர்களின் உருப்படிகள் அச்சிடப்படவில்லை; குறிப்பேட்டியிலேயே இருந்தன. சுப்பராம தீக்ஷிதர் பாடிக் காண்பித்த அவ்வுருப்படிகளின் போக்கை மனத்திற்கொண்ட மகாவைத்தியநாத சிவன் எட்டயபுரம் அரசர் முன்பு, பல வித்துவான்களும் அமர்ந்திருந்த அந்த அவையிலே அக்கீர்த்தனங்

களைப் புதுப்பித்துப் பாடி அரசரையும், சுப்பராம தீக்ஷி தரையும், மற்றும் பலரையும் வியப்புக்குள்ளாக்கினர். வடமொழியில் நல்ல பற்றுள்ள அவர் அக்கீர்த்தனங் களைப் புதுமெருகு கொடுத்துப் பாடிவரும்போது அவ் விசைமுறை அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த் திற்று என்பதில் ஐயமில்லை.

● மகா வைத்தியநாத சிவன் தீக்ஷிதர் கீர்த்தனை களைப் பாடினாலும் முத்துசாமி தீக்ஷிதரவர்களின் இசைப்போக்கு சிறிதும் மாற்றம் அடையாமலும், பதப் பிரயோகங்கள் முன் அமைந்த இசையமைப்பினும் சிறப்புறும்படியும் பாடினார். சுப்பராம தீக்ஷிதர், மகா வைத்தியநாதசிவன் அவ்வாறு புதுமாதிரியாகப் பாடு வதில் முதலில் சிறிது அதிருப்தியுடையவராக இருந் தார்; எனினும் அவர் பாடப்பாட அவ்விசை நுட்பத்தி னையும் சாகித்தியங்களின் பொருளை உணர்த்தும் பதப் பிரயோகத்தையும் கேட்டு மகிழ்ச்சி கொண்டார்; அவ் வித ஆற்றல்கள் மகா வைத்தியநாத சிவனிடம் இயற் கையாகவே அமைந்திருந்தன.

● மகா வைத்தியநாத சிவன் எட்டயபுரம் அரச ரின் அழைப்பிற்கிணங்கிப் பலமுறைகளும் சென்று இசைநிகழ்ச்சிகள் செய்து அரசரவர்களை மகிழ்வித்துள் ளார். ஒரு சமயம் அவர் ராஜ ஜகத் வீர ராம குமார எட்டப்பர் அரசர் காலத்திலே எட்டயபுரம் சமஸ்தா னம் சென்றார். அப்பொழுது அடுத்த பட்டத்திற்கு வரக்கூடிய அரசரின் குமாரரான ராஜ ஜகத் வீர ராம வெங்கடேச்வர எட்டப்ப அரசரும்கூட இருந்தார்.

அச்சமயம் பாலுசாமி தீக்ஷிதரின் குமாரர் சுப்பராம தீக்ஷிதர் அச்சமஸ்தானத்தில் ஆஸ்தான வித்துவா ஞக இருந்தார்; அவருடன் மகாவைத்தியநாத சிவன் இசை சம்பந்தமாக அளவளாவிவந்தார். அப்பொழுது முத்துசாமி தீக்ஷிதரால் இயற்றப் பெற்ற பலகீர்த்தனங் களின் இசையமைப்புக்களை மகா வைத்தியநாத சிவ னுக்குச் சுப்பராம தீக்ஷிதர் பாடிக் காண்பித்தார். அவ்வாறு பாடிக் காட்டப்பெற்ற கீர்த்தனைகளில் கேதார இராகத்தில் அமைந்த "ஆனந்த நடன ப்ர காசம் சித்சபேசம், ஆச்ரயாமி சிவகாம வல்லீசம்" என்பதொன்று. இக்கீர்த்தனம் மிச்ரசாதி சாய்ப்புத் தாளத்தில் அமைந்ததாகும்' எட்டயபுரம் சமஸ் தானத்தில் பல இசைப்புலவர்களும், இசையறிவோடு தமிழறிவும் சேர்ந்த புலவர்களும் பெருகியிருந்தனர். அந்த அவையிலே அரசர் வீற்றிருக்க ஒருநாள் மகா வைத்தியநாதசிவன் கர்ணானந்தமாகக் கானம்செய்து கொண்டிருந்தார். அங்குள்ளோர் யாவரும் இசை நாதத்திலே கட்டுண்டு கந்தருவ உலகத்திற்குச் சென்று பேரின்பம் அநுபவிப்பதுபோல மெய்மறந் திருந்தனர். மகா வைத்தியநாத சிவன் மேலே குறிப் பிட்ட 'ஆனந்த நடனப்ரகாசம்' என்ற கீர்த்தனை யைப் புதுப்பித்துப்பாடி அரசர் முதலிய யாவரையும் களிப்பிக்க எண்ணினர். எனவே கேதார இராகத்தை நன்ருக ஆலாபனம் செய்தார். அப்பொழுது தம்பு ராவை மீட்டிக் கொண்டிருந்த இராமசாமிசிவன் அச் சபையிலுள்ள அனைவரையும் வியப்புக்குள்ளாக்குதல் வேண்டுமென்றெண்ணினர்; உடனே, "தம் தம்பி யாரிடம் தாங்கள் இரகசியமாகப் பேசிக்கொள்ளும்

குறிப்புமொழிகளால்'' சில கூறினர். அதாவது 'ஆனந்த நடனப்ரகாசம் ஆச்ரயாமி சிவகாம வல்லீசம்' என்ற சாகித்தியத்தையே பல்லவியாகப்பாடி நிரவல் செய்யுமாறு கூறினர். மேலும், அப்பல்லவியை திச்ர சாய்ப்பு, கண்ட சாய்ப்பு, மிச்ர சாய்ப்பு ஆகிய மூன்று தாளங்களுக்குரிய அட்சரங்களைச் சீர்செய்து கொள்ளும்படி கூறினர்; இன்னும் அத்தாளத்தின் அட்சரங்களுக்கு ஏற்றவாறு சாகித்தியத்தை அமைத்துக் கொள்ளுமாறு விளம்பினர். அவர் கூறியபடி மகா வைத்தியநாத சிவன் கேதார இராகத்தை வித்தாரஞ்செய்து அதில் தானத்தைச் செம்மையுறப் பாடினர். பிறகு தமையனர் கூறியபடி அத்தாளத்திலே பல்லவியை அமைத்து நிரவல் செய்யலானர். அவர் போட்டுவந்த தாளத்தைத் தனித்தனியே போடுதல் எளிமையாகும். திச்ர சாய்ப்பு, கண்ட சாய்ப்பு, மிச்ர சாய்ப்பு ஆகிய மூன்றையும் வரிசைசெய்து போடுவது சற்று சிரமமாகும். தாளத்தில் நற்றிறம் வாய்ந்தோருக்கும் சிறிது குழப்பம் ஏற்பட்டுவிடும். எனவே மகாவைத்தியநாதசிவன் அத்தாளங்களை முறைபிறழாமல் அவ்வளவு எளிமையாகக்கையாண்டு அப்பல்லவியைச்சுவை தரும்படி பாடினர். முறையே பல்லவி நிரவல் சுரம் ஆகியவற்றை நன்ருகப் பாடினர். அதனைக்கேட்ட சுப்பராம தீக்ஷிதர் முதல் அங்குள்ள அனைவரும் வியந்தனர்; பாராட்டினர். பல இசைப்புலவர்களும் அத்தாளத்தை முறை செய்து கையிலிட்டுப் பார்த்தும் அதனுடைய அளவுகள் சரியாக நிற்கவில்லை. ஏனைய வித்துவான்கள் மகாவைத்தியநாத சிவனிடம் இது

என்ன தாளம் என்று வினவினர். அவர் இது 'தத்தாத்ரேயம்' என்ற பெயருடைய தாளமென்ருர். அதாவது மூன்று முகங்களையுடையது என்பது அதன் பொருள். அந்த அவையிலே பாடிய பல்லவியின் சுரக்குறிப்பு வருமாறு:-

கேதாரம்: தத்தாத்ரேயம்: திச்ர சாய்ப்பு, கண்ட சாய்ப்பு, மிச்ர சாய்ப்பு (6 + 5 + 7 = 18) பதினெட்டு அட்சரங்கள். 36 – மாத்திராக் காலங்கள்.

க ம ப ம = க ம க ரி சா சா / சா சா = ரீ சா சா /
ஆ . . . ன ந் த . ந ட ன ப்ர கா . சம்

சா ; சா = மா கா மா பா //
சி த் ச பே . ச ம்

பா ; = ச் நி பா ; ப ம / கா மா = ப ம க ரி சா /
ஆ . ச் ர யா . மி . சி வ கா . . . ம

சா ; ; = ரீ கா சா ; //
வ ல் . வீ . ச ம்

மேலே கூறியபடி இப்பல்லவியைக் கற்பனை நயம் தோன்ற இசைத்து யாவரையும் மகிழச்செய்தார். இத்தாளத்தைச் சீராக அமைத்துக்கொண்ட முறைகளையும் அவருடைய இசைத்திறத்தையும் வெகுவாகப் புகழ்ந்து கொண்டாடி அவரை மனமார ஆசிசெய்தார் சுப்பராம தீக்ஷிதர். அரசரின் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையில்லை. அன்று அரசரால் நல்ல சன்மானங்களைப் பெற்ருர். அன்று நடந்த இசையைக்

கேட்ட ஏனைய புலவர்களெல்லாம் அவருக்கு ஏராளமாகச் சன்மானம் செய்யத் தம்மிடம் பொருள்கள் இல்லையே என்று ஏங்கினர். புலவர்களெல்லோரும் மெச்சிப் புகழும்பாட்டு ஒன்றுண்டென்றால் அது மகாவைத்தியநாத சிவனின் பாட்டேயாகும்.

● தஞ்சையில் வாழ்ந்துவந்த மிருதங்கம் நாராயணசாமியப்பா என்பவர் மிருதங்க வாசிப்பில் தலைசிறந்தவர். மிகவும் கௌரவம் வாய்ந்தவர். அவர் நல்ல சுகவாசி. அவர் மிருதங்க வித்துவானாக இருந்தபோதிலும் ஒரு சிறந்த பிரபுத்தன்மை அவரிடம் குடிகொண்டிருந்தது. அவருக்கு அக்காலத்திலுள்ள இசைப் புலவர்களிலே மாவைத்தியநாதசிவன் பாட்டு ஒன்று தவிர வேறு எந்த இசைப்புலவர்களுடைய பாட்டிலும் ஈடுபாடில்லை. ஏனெனில் அவர் அவ்வளவு அழகுறப்பாடி இசைக்கும் வல்லமை பெற்றிருந்தார். அவர் தமது வீட்டிலே சனிக்கிழமை தோறும் பசனை நடத்தி வந்தார். அத்துடன் ஒவ்வொரு ஏகாதசி நாளிலும் தவறாது பஜனை நடத்துவார். அப்பஜனையிலே தாமேபாடிக்கொண்டு மிருதங்கத்தை வாசிப்பார். அவரது பாட்டும் மிருதங்கமும் நூலிழை போன்று வெகு நேர்த்தியாக ஒலித்து இன்பந்தரும். அந்த இன்னிசையைச் கேட்பதற்கு மக்கள் நூற்றுக் கணக்கினராக அவரது வீட்டின் பெரிய அறையிலே கூடிவிடுவார்கள். அவரது பாட்டையும் அப்பாட்டுடன் சேர்ந்து ஒலிக்கும் மிருதங்கத்தின் நல்லிசையையும் மக்களனைவரும் மெய் மறந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள். அப்பஜனையிலே இசைப்புலவர் மணிகளே

பெரும்பான்மையாக இருப்பார்கள். சிலவேளைகளிலே மகா வைத்திய நாத சிவன் தஞ்சை சென்றிருக்குங் கால், மிருதங்கம் நாராயண சாமியப்பா அவர்களுடைய வீட்டிற்குச் செல்வதுண்டு. நாராயணசாமியப்பா அவர்கள் மெய்மறந்து பக்திப் பெருக்கோடு பஜனை செய்து பாடும் மகாராஷ்டிரப் பாடல்களையும், அப்பாட்டுடன் மிருதங்கத்தைச் சேர்த்து வாசிப்பதையும் பன்முறை கேட்டு இன்புற்றிருக்கிறார். அப்பஜனையில் நாராயணசாமியப்பா அவர்கள் தவிர வேறு எந்த இசைவித்துவான்களுக்கும் அங்குப் பாடுதற்கு உரிமை கிடையாது. மகா வைத்தியநாத சிவன் அப்பஜனைக்கு வந்திருந்தால் அவர்களை மட்டும் பாடச்செய்து தாம் மிருதங்கம் வாசிப்பார். நாராயணசாமியப்பா அவர்களுக்கு மகா வைத்திய நாத சிவன் பாட்டிலே மட்டும் தனிப்பட்ட ஈடுபாடும் அளவிலாத மதிப்பும் உண்டு. நாராயணசாமியப்பா அவர்கள் கௌரவமும் கண்ணியமும் நிறைந்த இடங்களிலே மகா வைத்திய நாத சிவனுடைய இசைக்கச்சேரியிலே அவருடன் சேர்ந்து மிருதங்கம் வாசித்திருக்கிறார். நாராயணசாமியப்பா அவர்கள் தாமே பாடிக்கொண்டு மிருதங்கம் வாசித்து மகிழ்வார் அல்லது மகா வைத்திய நாத சிவன் பாட்டிற்குப் பக்க வாத்தியமாக மிருதங்கம் வாசித்து மகிழ்வார். வேறு எந்த இசைப்புலவர்களுக்கும் அவர் பக்க வாத்தியமாக மிருதங்கம் வாசித்ததில்லை.

● மகா வைத்திய நாத சிவனின் உணவு மிக எளிய அளவினதாகும். பொதுவாக, யோகி சத்து உணவை உட்கொள்ளார்; அதிகம் உண்ணார். அவ

ருடைய உணவு சரீரத்திலுள்ள ஜீவன் தங்குதற்கே யன்றி நாவின் சுவைக்கல்ல, எனவே அவருடைய உணவு மிகச் சுருக்கமாகவும், பசிப்பிணியைச் சற்று ஆற்றுதற்காகவுமே இருக்கும். அதுபோல மகா வைத்தியநாத சிவன் சங்கீத யோகம் செய்து வந்தா ராதலின் அவரது உணவும் மிக்க செறிவுடையதல் லாத எளிய உணவாகவே இருந்ததுபோலும்! அவர் வற்றற் குழம்பு, சீரகரசம், மிளகு சேர்த்த பொரித்த கூட்டு, பொரித்தகுழம்பு, வெந்தயக் குழம்பு, கீரைமசி யல், கருணைக்கிழங்கு மசியல் அல்லது குழம்பு, சேனைக் கிழங்கு (காராக்கருணை) வறுவல் அல்லது கறி, நீரை நிரம்பப் பெருக்கியமோர், ஒரு கரண்டிநெய் ஆகிய இவைகளையே ஏற்றுக் கொள்வார்.

● அவர் பால், ஆடைத்தயிர், கடைந்த கட்டியான மோர், வெண்ணெய், அதிகமானநெய், இளநீர் ஆகிய இவைகளைச் சிறிதும் உண்டு சுவை பார்த்ததில்லை. காய்களாலாக்கிய கூட்டு, கறி, அவியல், புளிப்புப்பச் சடி, இனிப்புப் பச்சடி போன்றவைகளை உண்டதே யில்லை. சேப்பங்கிழங்கு, உருளைக்கிழங்கு, வள்ளிக் கிழங்கு, சிறுகிழங்கு, கூர்க்கங்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளிலாக்கிய எதனையும் உண்பதில்லை. முள்ளங்கி, தக்காளி, பூசணி, பரங்கி, முருங்கைக்காய், வெங் காயம் போன்றவை அவர் பக்கத்தில்கூட வந்ததில்லை. மாம்பழம், பலாப்பழம், பச்சைத் திராட்சைப்பழம், ஆரஞ்சுப்பழம், சாத்துக்குடி, கொய்யாப்பழம், பேரீச் சம்பழம், சப்போட்டாப்பழம், வாழைப்பழம் போன்ற எதனையும் அவர் சாப்பிட்டவரல்லர். மோர்க்குழம்பு,

பருப்புச் சாம்பார், பருப்பு ரசம், எலுமிச்சம்பழ ரசம், பன்னீர் ரசம், இளநீர் ரசம், உறைப்புச் சம்பந்தப் பட்ட ஊறுகாய்கள் முதலிய எவற்றையும் அவர் சேர்த் துக் கொண்டதில்லை. அவ்வாருன உணவுகளிலே அவருக்கு விருப்பமுமில்லை.

● மகா வைத்தியநாதசிவன் சர்க்கரைப் பொங் கல், பால்பாயாசம், போன்ற ஏனைய பாயாச வகைகள், திரட்டுப்பால், தேங்காய்த்திரட்டுப்பால், தேன் சேர்த்தபதார்த்தங்கள், வெல்லம் சேர்த்தப்பட்சண வகைகளையும் ஏனைய தித்திப்புப் பட்சணங்களையும் ஒரு சிறிதும் சுவை பார்த்தவரல்லர் அவற்றில் அவ ருக்கு விருப்பமில்லை.

● ஊறுகாய்களில் இரண்டு நாட்கள் உப்பிலே ஊறிய மணித்தக்காளி ஊறுகாயில் சிறிது விருப்ப முண்டு. இதைச் சுநாத ஊறுகாய் என்பார். அடுத்த படியாகக் காப்பிக்கொட்டை அளவிற்கும் மேல் பருக் காத சிறு மாம்பிஞ்சு, நாரத்தம்பிஞ்சு, எலுமிச்சம் பிஞ்சு, இஞ்சித்துண்டு இந்நான்கையும் பாதியாகவோ, நான்கு துண்டுகளாகவோ, நறுக்கி உப்பில் ஒரு நாள் ஊறியபின்பு இரண்டாவது நாள் அதை அன்னத்திற்கு ஊறுகாயாக உபயோகிப்பார். இதைப் போசன கஸ்தூரி என்பார். அடுத்ததாக மலைச்சுண்டைக் காயை உப்பில் ஊறவைத்து எண்ணெய் இட்டு வதக்கி அதை உணவுடன் சேர்த்துக் கொள்ளுவதில் சிறிது விருப்பம் உடையவர். சில சமயம் பலகாரம் செய்ய நேர்ந்தால், குறிப்பாகத் தோசை வார்க்கும் போது

உப்பிலூறிய மலைச்சுண்டைக்காயை அதில் போட்டு வதங்கிய தோசையாக இரண்டு எடுத்துக்கொள்ளு வார். தொட்டுக்கொள்ள வேறொன்றும் விரும்பார். அவர் சாப்பிட்ட பிறகு உலர்ந்த திராட்சைப் பழத்தை எண்ணி ஆறு உட்கொள்ளுவார். சிறிய துண்டாக ஒரு கற்கண்டை வாயிற் போட்டுக்கொள்ளுவார். ஏதாவது விரதமிருந்து அன்றிரவு பழம்தான் உட்கொள்ளல் வேண்டுமென்றிருந்தாலும், வெளியூருக்குச் செல்லும் போது அங்குப்பழம் சாப்பிட வேண்டி நேர்ந்தால் ரஸ்தாளி வாழைப்பழமாக ஒன்றும், பேயன்வாழைப் பழம் இரண்டும் உட்கொள்ளுவார். மற்றைய எந்த வாழைப்பழத்தையும் தொடார். அவர் உணவுசம்பந்த மாக அது வேண்டும் இது வேண்டும் என்ற ஆசை யற்றவர்.

● அவருக்காகும் சமையலில் சிறிது மிளகு வாசனை யும் சீரகவாசனையும் வேண்டும். தாளிதம் தேங்காய் எண்ணெயில் இருத்தல் வேண்டும். வெற்றிலை பாக்கு உபயோகிப்பதில்லை. புகையிலை போடுதல், மூக்குப்பொடி போடுதல் போன்ற கெட்ட பழக்கம் அறவே அவர்களிடம் கிடையாது. சாப்பாடு முடிந் ததும் ஒரு சிறிய குவளை நிறைய இளஞ்சூடாக வெந் நீர் சாப்பிடுவார். இரவு உணவிற்குப்:பின்பும் ஒரு குவளை வெந்நீர் குடிப்பார். அவருக்குக் காய்ச்சும் வெந்நீரிலே சிறிது வறுத்த பச்சைப்பயறும், சிறிது மிளகும், சிறிது சீரகமும் போட்டிருத்தல் வேண்டும். சாதாரண நாட்களிலே இளஞ்சூடான வெந்நீரிலே குளிப்பார். எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் நாளில்

மட்டும் வெந்நீர் சிறிது அதிகச் சூடாக இருத்தல் வேண்டும்.

● அவர் வெளியூர்களுக்குச் செல்லுங் காலத்து அவல், பொரிமா, சீரகம் சேர்த்த சீடை, பொருள் விளங்காயுருண்டை ஆகிய இவைகளை எடுத்துச் செல்லுவார். அவசியமாகில் பிற்பகலிலே சிறிது உட்கொள்வார். வெளியூர் செல்லும்போது தமது சமையலுக்காகக் கயிலாசமய்யர் என்பவரைப் பல ஆண்டுகளாகத் தம்முடன் கூடவே வைத்துக் கொண்டிருந்தார். அவர் தமிழிலும் இசையிலும் மிகுந்த விருப்பமுடையவர்; ஆசாரசீலருங்கூட. சமையல் வெகு சுத்தமாகவும் ஆசாரத்தோடும் இருக்கும். மகாவைத்தியநாத சிவன் சிவபூஜை செய்யும் போது, கயிலாசமய்யர் உருத்திரம் சமகம் புருடசூக்தம் முதலிய மந்திரங்களைத் தமது சமையல் வேலையைப் பார்த்துக்கொண்டே உரக்கவும் தெளிவாகவும் உச்சரித்துச் சொல்லுவார். அவரிடம் மகா வைத்தியநாத சிவன் பெருத்த அளவில் அன்பு உடையவராக இருந்தார்.

● அவருடைய வீட்டிலே பற்பல வகையான பஞ்சபட்ச பரமான்னத்துடன் சமையல் நடக்கும். அவர் வீட்டில் உணவு உட்கொள்ளுவோரெல்லோரும் உணவின் உருசியைப் பெரிதும் புகழ்ந்துரைப்பார்கள். அவ்வாறு நளபாகத்துடன் நானாவிதமான சமையல்கள் செய்யப்பட்டிருந்தாலும் மகா வைத்தியநாத சிவனுக்கு மட்டும் வற்றற்குழம்பு சாப்பாடுதான் நடக்கும்.

● அவருடைய வீட்டிற்குப் பத்து வீடுகளுக்கும் அப்புறத்திலே வண்ணூர் வெளுப்பை எடுத்துக் கொண்டு தெருவிலே வரும்போது தமது வீட்டிற் குள்ளே இருக்கும் மகா வைத்தியநாத சிவன் இரண்டு மூன்று முறை இருமுவார்கள். அவ்வளவு தூரத்தில் வரும்போதே அந்த உவர்மண்ணின் காரம் அவருக்கு நெடி அடித்துவிடும். அவ்வளவு சூட்சுமமான சாரீரம்.

● அவர் எலுமிச்சம் பழம் அறவே சேர்க்காதவர். விலேக்கு விற்பவர்கள் தெருவிலே எலுமிச்சம் பழம் என்று கூவினுலும் அல்லது எலுமிச்சம் பழத்தின் வாசனே சிறிது அவர்களுக்கு அடித்துவிட்டாலும் உடனே அவர்களுக்குத் தொண்டை கட்டிக் கொள் ளும்; எனவே சாரீரத்தைக் காப்பாற்றுவதிலே அவரும் அவரது உற்ருர் உறவினர் யாவரும் வெகு சாக்கிரதை யாக இருப்பர்.

● அவர் உரத்துப் பேசமாட்டார். மோனமாகவே இருப்பார். பேசவேண்டுமாயின் மெல்லவே பேசுவார். அவருடைய சாரீரவளத்தையும், பேச்சு வளத்தையும் இசை நிகழ்ச்சியிலும், சிவ கதை செய்யும் போதும் தெளிவாகக் கேட்கலாம். அவருக்குச் சிறிதும் கோபம் வராமல் அவருடைய தாயார், தமையனுர், அண்ணி மார், மனேவி முதலிய யாவரும் வெகு கண்காணிப் பாக இருந்து நடந்து கொள்ளுவார்கள்; உறவின ரோடு ஊர்மக்களும் அவருடைய சாரீர நலனில் பங்கு கொள்ளுவார்கள்.

● மகாவைத்தியநாதசிவன் தம் தாயார் அருந்ததி என்ற தாயு அம்மாள் அவர்களின் சொல்லை ஒருபொழுதும் தட்டி நடந்ததே இல்லை. தம் தாயாரிடம் வாருங்கள், போங்கள், இருங்கள் என்று பகுவசனமாகவும், மிக்க அன்புடனும், ஆதரவுடனும், பணிவுடனும் இருப்பார். அவரைப்போலத் தாயாரை மிகுந்த பக்தி விசுவாசத்துடன் மதித்துப் பாராட்டியவர்களையும் கொண்டாடியவர்களையும் காண்பது அரிது.

● மகா வைத்தியநாத சிவன் தமது தர்ம பத்தினியாகிய மனைவி காமாட்சி அம்மாளுடன் அடிக்கடி நெருங்கிப் பழகிப் பேசிக்கொண்டும், அவளுடன் கூடவே இருந்து அடிக்கடி சல்லாபித்துக்கொண்டும் இருந்தவரல்லர். அவர் தம் மனைவியுடன் இருத்தல் வேண்டுமாயின் அவருடைய தாயார் அருந்ததி என்ற தாயு அம்மாளவர்கள் "அப்பா, வைத்தி! இன்று உள் அறையில் சயனித்துக்கொள்!" என்று கூறுவார்கள். அவ்வாறே தம் மனைவியிடம் அவர் தங்குவார். அன்று அவருடைய தாயார் அவருடைய மனைவி காமாட்சியம்மாளுக்குத் தலையைச் சீவி வாரிவிட்டுச் சடை பின்னி ஜாதி முல்லை அல்லது ரோசாப் பூவைச் சூட்டி, நல்ல வத்திரம் (சீலை) உடுத்தி ஆடையாபரணங்கள் பூட்டி அலங்காரங்கள் செய்து விடுவார்கள். அவ்வாறு செய்திருக்கும் முறையிலிருந்து இன்று மகா வைத்தியநாத சிவன் உள் அறையில் படுத்தற்குரியவர் என்று அவர்கள் வீட்டிலுள்ள ஏனைய யாவரும் அறிந்து கொள்ளுவார்கள். அவர் அவ்வாறு இருப்பது மனைவியிடம் உள்ள வெறுப்பாக இருக்கலாமென்று எண்ணல்

வேண்டாம். இல்லற தர்மத்தை முன்னோரின் அனுமதிப்படியே நடத்திவந்தார் என்பதே கருத்து.

● மகா வைத்தியநாத சிவன் பஞ்சு வைத்துத் தைத்த மெத்தையிலே படுத்தவரல்லர். கட்டிலிலும் படுத்தவரல்லர். கீழே விரித்துக்கொள்ள ஒரு கித்தான் சாக்கும், அதன்மேல் விரித்துக்கொள்ள ஒரு சமுக்காளமும், அதன்மேல் விரித்துக்கொள்ள நல்லதொரு பத்தமடைப்பாயும், அகல நீள மதிகமில்லாத ஒரு தலையணையும், போர்த்திக்கொள்ள மெல்லிதான ஒரு போர்வையும்தான் அவருடைய படுக்கைப் பொருள்கள்.

● அவர் திருநெல்வேலி மாவட்டத்திலே பத்தமடை என்ற ஊரிலே பலமுறை இசை நிகழ்ச்சி செய்துள்ளார். அக்கச்சேரிகளுக்குச் செய்யும் சன்மானத் தொகையுடன் மதிப்புள்ள பத்தமடைப் பாயும் சேர்த்துக் கொடுத்து கௌரவிப்பார்கள். அக்காலம் அவருக்கு ஏராளமான பத்தமடைப் பாய்கள் சன்மானமாகக் கிடைத்துள்ளன. [அவை அக்காலம் பதினைந்து ரூபாய் முதல் இருநூறு ரூபாய்கள்வரை பெறுமானமுள்ளவை. இக்காலம் அவைகள் எழுபத்தைந்து ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய்கள்வரை பெறுமானமுள்ளவையாகும். எழுபத்தைந்து ரூபாய் பாய்க்குச் சாணுக்கு நெடுமிழை எழுபத்தைந்தும், ஆயிரம் ரூபாய்பாய்க்குச் சாணுக்கு நெடுமிழை எழுநூற்றைம்பதும் இட்டுப் பாய் முடைந்து நல்ல நல்ல நேர்த்தியான வேலைப்பாடுகள் உள்ளதாக இருக்கும்.-V. S. G.] இப்

பாய்களிடத்து மகாவைத்தியநாத சிவனவர்களுக்கு மிகுந்த விருப்பம்.

● மகாவைத்தியநாத சிவன் ஏழு வயது முதல் பதினறு வயதுவரை இசைநிகழ்ச்சிகள் செய்யச் செல்லும் போது அக்காலத்திலே மிகவும் உயர்வாகவும், கௌரவமாகவும் மதிக்கப்பெற்ற அய்யம்பேட்டைச் சாய வேட்டியைக் கட்டிக் கொள்வது வழக்கம். அவர் பதினருவது வயதிலே கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளால் மந்திர உபதேசம், சூதசம்ஹிதைப் பாராயணம், சிவபூசை முதலியவற்றை உபதேசம் செய்து கொண்டார். எனவே அவர் பதினறு வயதிலிருந்து சிவபூசை செய்யும்போது தும்பைப்பூப் போன்ற வெண்ணிறமுடைய சரிகைவேட்டி அல்லது கரைகள் போட்ட வேட்டியைப் பஞ்சக்கச்சமாக உடுத்திக் கொண்டும், இசை நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போது மூலக்கச்சமாக உடுத்திக்கொண்டும் வரலானர். அவர் வண்ணர் வெளுப்பை அப்படியே உபயோகிக்க மாட்டார். வேட்டிகள் வெளுத்து வந்ததும் அதைத் தண்ணீரில் நன்ருக அலசிப் பிழிந்து உலர்த்திவிடுவார்.

● மகா வைத்தியநாத சிவனின் தமையனராகிய இராமசாமி சிவன் ஏவல், சூனியம், மாந்திரிகம் ஆகிய இவற்றைச் செய்பவர் என்றும், தமது தம்பியார் ஒருவர் தவிர வேறு எவரும் புகழடைதல் கூடாதென்ற கெட்ட எண்ணங் கொண்டவர் என்றும், அதனல் நற்றிறமுடைய இசைக்கலைஞர்கள் பால் மிகப் பொருமையுற்று ஏவல் சூனியம் இவைகளால் அவர்களை

முன்னுக்கு வரவொட்டாமல் செய்து விடுகிறார் என்றும் பொறாமையால் ஒருசிலர் பேசிக்கொள்வர். அவர்களுடைய குடும்பத்துடன் நெருங்கி ஏழாண்டுக் காலம் முதல் மாணவனாக இருந்து பழகிய எனக்கு (திருநெல்வேலி மாவட்டம், சங்கரநயினார் கோயிலைச் சார்ந்த வாசுதேவநல்லூர் பல்லவி சுப்பையாபாகவதர்) அவருடைய குண நலன்கள் முழுவதும் உள்ளது உள்ளபடியே தெரியும். இக்கெட்ட தொழில்கள் அவருடைய பாததூளியை மிதித்தவருக்கும் ஏற்படமாட்டாது. எவ்வாறோ இக்கெட்டபெயர் அவருக்கு வந்துவிட்டது. இராமசாமி சிவன் நல்ல இசை ஞானத்திறனுடையவர்; தமிழ் இலக்கிய இலக்கணத்துறையில் அவரை வெல்லுதல் எவராலும் இயலாது; சிறந்த இயற்புலவர்; வடமொழியிலும் நல்லபண்டிதர். வடமொழிப் புலவர்களெல்லாம் அவர் கூறும் கருத்தை எண்ணி எண்ணி வியப்பர். தெய்வீக அருளால் அரும் பெருங் கவிகளியற்றுதலில் தேர்ந்த ஒரு பெரும் புலவர் ஏவல், சூனியம், மாந்திரிகம் இவைகளைச் செய்து பிறரைக் கெடுத்து விடுகிறார் என்று கூறுதல் தகுமா? இத்தகு கலைஞருக்கு ஏவல் சூனியமாகிய அவ்வகைகளில் புத்தி நாடுமா? பெரியபுராணம், கந்தபுராணம், மாணிக்கவாசகர்சரித்திரம், வள்ளி திருக்கல்யாணம், பார்வதீ கல்யாணம், தெய்வயானைத் திருக்கல்யாணம், சிவதாசர் சரித்திரம், மார்க்கண்டேயர் சரித்திரம், சீதா கல்யாணம், ருக்மாங்கதச் சரித்திரம், விநாயகர் இந்திரனுக்கு அருளிய சரித்திரம், திருவையாற்றந்தாதி, திருவையாற்று நிரோட்டக யமக வந்தாதி, திருவையாற்று இரட்டை மணிமாலை, மாயூரகிரி இரட்டை

மணிமாலை, திருத்தொண்டர் போற்றிக் கலிவெண்பா, சுந்தரசுவாமிகள் அட்டபந்தனக் கவிதைகள், திருச்செந்தில் சந்தவிருத்தம், திருச்செந்தில் யமக அந்தாதி, இசைக்கலைஞர்கள் கச்சேரி செய்தற்குரிய அநேக விடுதிக்கீர்த்தனைகள், மழை பெய்தற்கு அருள் வாக்குப்பெற்ற பாடல்கள் ஆகிய சிவ பரமான செய் யுட்களும், கீர்த்தனங்களும் செய்வதிலேயே மனத்தை ஈடுபடுத்திய அப்புண்ணியனை-அப்பெரும் புலவனை-உயர் பெருங்குடியிற் றோன்றியவனை ஏவலும் சூனி யமும் மாந்திரிகமும் செய்து பிறரை முன்னேற விடாமல் இடையூறு செய்கிறார் என்று கூறுதல் ஒப்பத்தக்கதாமோ! அனைவரும் சிந்தித்தல் வேண் டும். கெட்டவழியில் கீழ் நிலைச்செயலில் அவரது புத்தி நாடி இருக்குமேல் சிவபெருமானிடம் எப்பொழு தும் எண்ணமுடையவராயும், சிவப்பக்திச் செல்வராயு மிருந்து அவர் சிவபரமான புராணங்களைச் செய்வது இயலுமா! நல்ல எண்ணங்களும், நற்செய்கைகளும், சிவத்தொண்டுகளும் அவரிடம் நிலைத்திருக்குமா! எனவே அவர் பரமசாது, பரோபகாரி, சூதுவாது ஒன்றுந் தெரியாதவர். ஆனால் சிறிது தற்பெருமை மட்டும் உண்டு. தம் சொற்படி யாவரும் நடத்தல் வேண்டும் என்ற எண்ணம் சிறிது உடையவர். தம் குடும்பத்தையும், தம்பியார் இசை ஞானத்திறனை யும் சற்று ஆடம்பரமாகப் புகழ்ந்து மகிழ்பவர். அவரது தம்பியாருடைய புகழும் வருவாயும் தம்முடைய முயற் சியினாலேயே ஆக்கப் பெற்றது என்ற பெருமையைப் பாராட்டிக் கொள்பவர். ஆகிய இவைகள் தவிர அவர்

ஓர் உத்தமர். அவருக்கு மேலே கூறிய இழிதொழில் ஒன்றுந் தெரியாது. இது உண்மை! உண்மை!! உண்மை!!!

● இராமசாமி சிவன் தமிழ், இசை, வடமொழி ஆகிய மூன்று கலைகளிலும் வல்லுநராக விளங்கினர். அரசர்கள், மடாதிபதிகள், சமீன்தார்கள், பிரபுக்கள், புலவர் மணிகள் ஆகிய யாவரும் அவரை மதித்துப் புகழ்ந்து பாராட்டிக் கௌரவிப்பார்கள். அப்பேர்ப் பட்ட இராமசாமி சிவனை அவரினும் முதியவர்களான அவருடைய உறவினரும், நெருங்கிய நண்பர்களும் அவரை **'மசகன்'** (மசகம்–கொசு) என்றே அழைப் பார்கள். அவரை அழைக்கும் போது அந்த மசகனைக் கூப்பிடு, அந்த மசகன் வீட்டிற்குப் போய்வா! வீட்டிலே மசகன் இருக்கிருனு! பார், என்றே கூறுவார்கள். அவ் வாறு கூறுதற்கு என்ன காரணமோ! யாருக்குந்தெரி யாது. அதற்குரிய காரணம் இராமசாமி சிவனுக்கும் தெரியாது. அவரை அவ்வாறு சொல்லிக் கூப்பிடுவோ ருக்கும் தெரியாது. எவ்வாருே அவ்வாருன நிலை அவ ருக்கு ஏற்பட்டுள்ளது. பொதுவாக அவருடைய கலைத் தேர்ச்சியை உலக மக்கள் எல்லோரும் அறிந்து போற் றிப் புகழுவார்கள். அத்தகு திறம் மிகுந்த யோக்கிய தைகள் அவரிடம் பெருமதிப்பில் சிறப்புற இருந்தும் அவருடைய நெருங்கிய நண்பர்களுக்கும் உறவினருக் கும் அவருடைய அபாரமான யோக்கியதைகள் புலனு வதில்லை. அதற்குக்காரணம் குழந்தைப் பருவமுதல் அவருடன் நெருங்கிப் பழகிய பழக்கமேயாகும். அதனுல் இராமசாமி சிவனை அவர்கள் மசகப்பிராய

மானவராக எண்ணி; விட்டனர் என்பதே இச் சொல்லுக்குப் பொருள் செய்தல் வேண்டும். இதனை இராமசாமி சிவன் ஒரு கீர்த்தனை மூலம் இயற்றித் தெரிவித்துள்ளார்.

அது வருமாறு:—

பல்லவி

நின்னையே நம்பினேன் - நின்னருள் புரிந்திடச்
சிந்தையில் நினைந்து //

அனுபல்லவி

நின்னிடம் வந்துமே சங்கடந்தீர
பங்கமில்லாமல் பாதாம்புயம்பாட //

சரணம்

பாரினில் யாவரும் **பாவியென்றேச**
பஜித்திடும் நெஞ்சமும் பஞ்சுபோல் வீச
மாரியிருளிலென் மனமுமேகூச
மசகனென்றெனை யனைவரும் ஏச //

துஷ்டனானாலும் இஷ்டமோடென்றன்
கஷ்டத்தைத்தீர்த்துமே பட்சம்வைத்தருள்வாய் //
சிக்ஷை செய்யாது கடாட்சத்துடனே நீ
இக்கணமேவந்து மோட்சத்தைத்தந்திடுவாய் //

இதன் மூன்றுவது சரணம் கிடைக்கவில்லை.

இக்கீர்த்தனையின் மூலம் தம்மையே பாவியென நொந்து கொள்ளும் இயல்புடையவரென்பது புலனு கிறது; மசகப் பிராயனென்று பிறர் ஏசுதலுக்கும் தம்மை நொந்து கொள்ளுகின்றவரென்பதும் தெரிகிறது. எனவே அதிகநாள் நீடித்து இந்த மாயாஉலகில் வாழ் வளித்திடாமல் சீக்கிரமாக இறைவனது பாதார விந் தத்தில் தம்மைச் சேர்த்துக்கொள்ள வேண்டுகிருர்; உலக பந்தத்திலிருந்து சீக்கிரம் விடுவித்து மோட்சத் தைத் தரல் வேண்டுமென்றும் இறைவனிடம் கூறுகின் ருர். ஆக நான் விவரம்தெரிந்த நாள்முதல் எவ்வித மான துர்ச்செய்கையும் துட்டத்தனமும் செய்ததில்லை.

● இராமசாமிசிவன் தம் தம்பியாரான மகாவைத் தியநாதசிவனையும், தம்மையும் சிறிது மிகைபடத்தூக்கி வைத்துப் பேசுவார். தங்கள் வரைக்கும் கௌரவமாக இருத்தல் வேண்டுமென்ற எண்ணமுள்ளவர். தங் களைச் சிறிது பெருமை தோன்ற அதிகமாகப் போற்றிக் கொள்ளுதல் அவரது இயல்பு. தங்களுடைய காலத் திற்குப் பிறகுங்கூடத் தமக்கும் தம் தம்பியார்க்கும் இருக்கும் சிறந்ததான இப்புகழ் அழிதல் கூடாதென்ற எண்ணமுள்ளவர். அதன் காரணத்தாலே மகா வைத்தியநாதசிவன் இறந்துபட்டதும் ‘விஜய சங்கிர ஹம்’ என்ற இரங்கற்பா நூலிலே அக்காலத்து மிகப் புகழ் பெற்றிருந்த பெரிய வைத்தியநாத ஐயர், சின்ன வைத்தியநாத ஐயர், இராகவய்யர், பட்டினம் சுப்பிர மணிய ஐயர், குன்றக்குடி கிருட்டின ஐயர் ஆகிய இவர்களைவிடத் தம் தம்பியார் மிகவும் சிறப்பாகப் பாடினுர் என்று பெருமைபட எழுதியுள்ளார்.

● இராமசாமிசிவன் ஏகசந்தக் கிராஹி (ஒருமுறை கேட்ட அளவில் அதனை மனத்துட்கொள்பவர்) புதிதான ஒரு செய்யுட்பாவையோ அல்லது கீர்த்தனத்தையோ அல்லது ஒரு சுலோகத்தையோ ஒருவர் அவையிலே பாடினால் அதை ஒருமுறை செவிமடுத்தவுடனேயே இராமசாமி சிவன் அப்பாடலின் முழு அமைப்பையும் கூறிவிடுவார். அவர் அவ்வாறு கூறுவதைக் கேட்பவர்கள் இது ஒரு பழைமையான பாடலென்றே எண்ணிவிடுவர். மகாவைத்தியநாத சிவன் துவிசந்தக் கிராஹி. (இருமுறை கேட்ட அளவில் அதனை மனத்துட் கொள்பவர்) ஒரு செய்தியை இருமுறை செவிமடுத்தவுடனேயே அவர் அதனை இராகத்திலே செம்மையாக அமைத்துப் பாடிவிடுவார். அவர் பாடும் முறைகளைக் கேட்பவர்கள் இதொரு பழைமையான பாடலேயாகும் என்று சந்தேகத்திற்கிடமின்றி நம்பிவிடுவார்கள். அவ்விருவரின் புத்தி கூர்மையும் நுண்ணியதாகும். அவ்வாறான நிகழ்ச்சிகள் எத்துணையோ நடந்து அனைவரும் வியந்துள்ளனர்.

● ஒருசமயம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்களைக் கண்டு வணங்கித் தம் புலமையைக் காட்டிப் பரிசில் பெறவேண்டும் என்று ஒருபுலவர் எண்ணினார்; அவர் பெரும் புலவர்; தமிழில் முதிர்ந்த அறிவு பெற்றவர்; மிக்க செம்மையுடையவர். தமக்கு எத்துணை வறுமை இருப்பினும் பிறரிடம் கெஞ்சிப் பணம் பெறுபவரல்லர். அப்புலவரின் பெருமையை ஏற்கனவே சந்நிதானம் அறிந்திருந்தது. புலவர் ஒருசமயம் மிகவும் வறுமையுற்று மனம்நொந்து சோர்ந்து

போய் இருந்தார். அவர் எவரிடமும் சென்று யாசிப்பதற்கு மனங்கூசி இருக்கும் காலத்துத் திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அவர்களின் ஞாபகம் வந்தது. உடனே அப்புலவர் சிகாமணி, தேசிகர் அவர்கள் பேரில் ஒரு கவிதை செய்து அவர்களைத் துதித்துப் போற்ற எண்ணினார். அவர் தெய்வங்களின் மீது பாடுவரேயொழிய மனிதர்களைக் குறித்துத் துதிசெய்பவரல்லர். ஸ்ரீசுவாமிகள் ஆசாரிய பீடமாகையால் அச்செய்யுள் குரு துதியாக அமைக்கப் பெற்றிருந்தது. அதன்படி அவர் திருவாவடுதுறைக்கு வந்து தேசிகரவர்களைக் கண்டு வணங்கினார். அப்புலவருடன் தேசிகரவர்கள் அளவளாவி, குடும்ப நலன்களை விசாரித்தார்கள்; பிறகு அவர் இயற்றிய செய்யுளைக் கூறும்படி கட்டளையிட்டார்கள். அதன்படி தேசிகரவர்களைத் துதித்துப் பாடிய அச்செய்யுளை அப்புலவர் கூறலானார். அச்செய்யுளின் முதலடி முழுவதும் அப்புலவர் கூறி முடிக்கவில்லை. அதன் பாதியடியைக் கூறும்போதே தேசிகரவர்கள், "இச்செய்யுள் தாங்களியற்றியதா? அல்லது இதற்கு முன் வேறொருவரால் பாடப்பெற்ற பழையசெய்யுளா?" என்று அப்புலவரை நோக்கிக் கேட்டார்கள் அப்பொழுது ஆதீனகர்த்தரோடு இராமசாமி சிவனும் மகாவைத்தியநாத சிவனும் கூட இருந்தார்கள். அப்புலவர்க்கு உண்மையில் இராமசாமி சிவன் மகாவைத்தியநாதசிவன் ஆகிய அவ்விருவர்களின் தமிழ்ப் புலமை தெரியாது. ஆதீன கர்த்தர் புலவரை நோக்கி அவ்வாறு கேட்டதும் அப்புலவர் பெருமான், " இச்செய்யுள் நான் இயற்றிய பாடலேயாகும்" என்று

கூறினர். உடனே கூடவிருந்த இராமசாமிசிவன் இச் செய்யுள் இதற்குமுன் ஒருபுலவர் பாடியதுபோலத் தோன்றுகிறது என்றார். சுப்பிரமணிய தேசிகரவர்களும் வியப்படைந்தார்கள். ஈற்றடியைக் கொடுத்து அச் செய்யுளைப் பூர்த்தி செய்யும்படி கூறுதல்முறை; அவ் வாறிருக்க முதலடியில் பாதி கூறும்போதே இது பழைமையானது என்று கூறுகிறார்களேயென்று வியப் படைந்தார்கள்; புலவரின் மனப்பாங்குப் பிரகாரம் அவர் இதனை எப்படிப் பூர்த்திசெய்வார் என்பதை எண்ணினர்கள். "எனவே அச்செய்யுளை ஞாபகம் உள்ளவரை கூறலாமோ?" என்று கேட்டார்கள். அவ்வாறு தேசிகரவர்கள் கேட்டதும் இராமசாமிசிவன் அம்முதலடியின் பாதியைக்கொண்டு முழுச் செய்யுளை யும் கூறிவிட்டார். உண்மையில் கவி இயற்றிய புல வர்பெருமான் ஒன்றுந்தோன்றாதவராகித் திகைத்து மேலெல்லாம் வியர்வை வழிய நடுநடுங்கிவிட்டார். தாம்புதிதாகக் கற்பனை செய்ததை ஓர் எழுத்துக்கூட மாற்றாமல் அவர் எவ்வாறு உணர்ந்தார்! அச்செய்யுளை இயற்றினர்! இது ஏதோ யட்சிணிஉபாசனை போலல் லவா தோன்றுகிறது. அல்லது தவவலிமைபெற்ற முக் காலமுமறியும் ஞானியாக இருக்குமோ என்றெண்ணித் தம்மையும் அறியாமல் எழுந்து நெடுஞ்சாண்கிடை யாகவிழுந்து சந்நிதானத்தையும் இராமசாமிசிவனவர் களையும் வணங்கி நடுநடுங்கி நின்றார். இராமசாமி சிவன் அப்புலவரை நோக்கி "நீர் பயப்படுதல் வேண் டாம். இச்செய்யுளைச் சந்நிதானத்திடம் கூறுங்கள் இச் செய்யுள் நீர் செய்ததுதான். இது பழமையானதன்று. நீர் தெய்வத்தைத் தவிர வேறு பாடமாட்டீர். சந்நி

தானம் குருபீடம் என்றெண்ணியே நீர் இச்செய்யுளை இயற்றியுள்ளீர். நீர் எவரிடமும் நின்று யாசிப்பவரில்லை. எனவே இவ்வாருன குணமுடையவரும், மானம் பெரிதென்று எண்ணுபவருமாகிய நீர் இவ்வாறுதான் செய்யுளை இயற்றுவீர், இயற்ற இயலும் என்று நான் ஒருவாறு ஊகித்துத்தான் இதைக்கூறினேன்.'' என்று எடுத்துக்கூறினுர். அப்புலவர் பெருமானுக்கு எந்த விதச் சமாதானமும் ஏற்கவில்லை; குன்றிப்போனுர். தட்டுத்தடுமாறி மிகுந்த ஏக்கத்திற்கு உட்பட்டார். சந்நிதானம் அவர்கள் அப்புலவரின் நிலைமையை உணர்ந்து அப்புலவர் பெருமான் நன்கு மகிழும்படி ஏராளமான பொன்னும் பொருளும் அளித்தார்கள். பிறகு அப்புலவர் பெருமானிடம், ''தங்களது புலமையில் எனக்கு யாதொரு ஐயமுமில்லை, ஆயினும் இராமசாமி சிவனின் தமிழ்ப்புலமைத்திறம் எத்தன்மையது என்பதைத் தாம் அறிதல் வேண்டுமென்றெண்ணியே இச்செயலைக்காண்பித்தோம்'' என்ருர்கள். பின்பு ஈற்றடியைக் கூறி அதனைக்கொண்டு செய்யுள் அமைப்பதே முறை, அவ்வாறிருக்கத்தாம் கற்பனையாகச் செய்த செய்யுளை அதன் முதலடியின் பாதியைக் கொண்டு, சொல்லும் பொருளும் மாருமல் செய்வது என்பது ஆகாததொன்று. இவ்வருமையை இன்று தான் கண்டோமென்று கூறி, இராமசாமி சிவனவர்களுக்கும் தக்க மரியாதைகள் செய்தார்கள். இராமசாமி சிவனவர்களின் செயல் திறத்தில் இது முக்கியமான அம்சமுடையது. இத்திறம் அவர்கள் பூசித்து வரும் உச்சிஷ்ட கணபதி உபசனையினுல் கிடைத்த அருட்பயனேயாகும். பின்பு சந்நிதானம் அவர்கள்

அப்புலவர் பெருமானிடம் தாங்கள் அடிக்கடி இங்கு வந்து செல்லுங்கள். இங்கு வருவதற்குத் தாங்கள் சிறிதும் ஐயமுறல் வேண்டாம் என்று ஆசி கூறி அனுப்பினார்கள்.

திருவாவடுதுறையில் மகாசந்நிதானமாக மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் வீற்றிருந்த காலத்து ஒரு தமிழ்ப் புலவர் அவர்களைக்கண்டு அளவளாவி வந்தார். அப்பொழுது இராமசாமி சிவனும் மகாவைத்தியநாத சிவனும் கூட இருந்தார்கள். அப்புலவர் தாம் புதிதாக ஒரு பிரபந்தமியற்றி இருப்பதாகவும் அதனைச் சந்நிதானம் கேட்டருள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அவரது வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட சந்நிதானம் அவர்கள் அப்பிரபந்தத்தைக் கூறும்படி செய்தார்கள். அது முப்பத்தொரு பதிகத்தாலானவை; ஒவ்வொரு பதிகமும் பத்துப் பாட்டுக்களாலானது. எனவே அப்பதிகம் முழுவதையும் சந்நிதானத்திடம் பாடிக்காட்டியதுடன் அதிலுள்ள நயமான பகுதிகளை எடுத்துக்கூறி விளக்கினர். அப்பிரபந்தமானது சொல் நயம், பொருள்நயம், கருத்துநயம் ஆகிய முப்பகுதிகளும் நிரம்பப்பெற்று சுவை மிகுந்திருந்தபடியால் அதனை யாவரும்கேட்டுமகிழ்ந்தனர். அப்பிரபந்தம்முழுதும் பாடிமுடிந்ததும் தேசிகர் அவர்கள், "மிகநன்றாக இருக்கிறது. இம்மாதிரிப் பாடுவது மிகவும் அருமை. பழங்காலத்துச் சங்கப் புலவர்கள் பாடுவது போன்ற ஓட்டமிருக்கிறது. மிக்க சந்தோஷம் என்றுகூறி, இப்பிரபந்தம் தாங்களியற்றியதா? அல்லது முன்னோர்களால்இயற்றப் பெற்றதா?" என்று கேட்டார்கள்.

உடனே அப்புலவர் “இப்பிரபந்தம் என்னுல் இயற்ற பெற்றதேயாகும்” என்ருர். உடனிருந்த இராமசாமி சிவன் “இது பழைய பாடலாகும். எனக்கும் பாட முண்டு,” என்று கூறினுர். அப்புலவர் இச்சொல்லைக் கேட்டுச் சிறிது ஏளனப் புன்னகை புரிந்தார்; பிர பந்தத்தைத் தாமே இயற்றி அன்று வரை வெளியிடா திருந்தும் அதனை எவ்வாறு இராமசாமி சிவன் தமக்குத் தெரியுமெனக் கூறுகிருர் என நினைத்ததே அதன் காரணம். சந்நிதானம் அவர்கள் இராமசாமிசிவனிடம் அவ்வாருயின் அப்பிரபந்தத்தைத் தாங்களே கூறுங் கள்” என்ருர். அப்புலவர்பெருமான் அப்பிரபந்தத்தை ஒரு முறை கூறக் கேட்டிருந்தபடியால் ஏகச்சந்த கிராஹியாகிய இராமசாமி சிவனும் அப்பிரபந்தத்தி லுள்ள செய்யுட்கள் எல்லாவற்றையும் தட்டுத்தடங்க லின்றி எற்கனவே உருப்போட்டிருப்பது போல ஒப்பித்து விட்டார். அத்துடன் இப்பிரபந்தம் முழுதும் என் தம்பியாருக்கும் பாடமுண்டு என்று கூறினுர். சந்நிதானம், “அப்படியா!” என்று கேட்டுவிட்டு அவர்களையும் கூறும்படிச் சொன்னுர்கள். மகாவைத் தியநாத சிவன் துவிசந்தக்கிராஹி ஆன படியால் முதலாவது புலவர்பெருமான் பாடக் கேட்டும் இரண் டாவது தம் தமையனுர் இராமசாமி சிவன் பாடக் கேட்டும் ஆக இருமுறைகள் அப்பிரபந்தம் முழுவதும் கேட்டுவிட்ட படியால் அப்பிரபந்தச் செய்யுள் முழுவ தும் அவருக்கும் பாடமாகிவிட்டது. உடனே அச் செய்யுட்களை இராகத்தோடு இழைந்து குழைந்து பாடிக் களிப்பித்தார்.

அப்பிரபந்தத்தை அப்புலவரே இயற்றி இருந்தாலும் இராமசாமி சிவனும் மகாவைத்தியநாத சிவனும் பாடிய முறைகளினுல் அதில் மனம் ஊன்றியிருந்த அப்புலவர் பெருமான் அப்பிரபந்தம் தாமியற்றியதில்லையோ என்ற எண்ணம்கூட அவருக்கு உண்டாகிவிட்டது. எனவே பிரபந்தத்தை உண்மையில் செய்துவந்த அப்புலவர் ஒன்றுந்தோன்ருது ஐம்புலன்களும் அடங்கி ஒடுங்கித் திகைத்துப் பயந்து உட்கார்ந்திருந்தார். சந்நிதானம் அவர்கள் அவ்விருவரும் அப்பிரபந்தத்தைக் கூறும்பொழுது தற்செயலாகப் புலவர் மணியைப் பார்க்கும் போதெல்லாம் அப்புலவர் குன்றிப்போய் எழுந்து ஓடிவிடலாமா என்று கூட எண்ணமிட்டார். பின்பு சந்நிதானம் அவர்கள் இராமசாமி சிவன் மகாவைத்தியநாத சிவன் ஆகிய அவர்களின் சிறப்பான ஆற்றல்களை அப்புலவர் பெருமானிடம் எடுத்துக்கூறி மகிழ்ந்தார். அதன் பிறகே அப்புலவரும் மனச்சாந்தி அடைந்தார். அப்பிரபந்தம் எல்லாவகையாலும் சிறந்திருந்ததைக்கண்டு சந்நிதானம் அவர்கள் அப்புலவர் மணிக்கு வித்துவச் சிறப்புக்களை யாவரும் கண்டு மகிழுமாறு புரிந்து பெருமைப் படுத்தினுர்கள். பின்பு அப்புலவர்மணியுடன் வெகுநேரம்வரை இராமசாமி சிவனும் மகாவைத்தியநாத சிவனும் அளவளாவிக் கொண்டிருந்தார்கள். அதன்பிறகு சந்தர்ப்பம் நேரும் போதெல்லாம் அப்புலவர் பெருமான் இராமசாமிசிவனையும் மகா வைத்தியநாத சிவனையும் அடிக்கடி சந்தித்துத் தமிழ்மொழிச் செய்திகள் பலவற்றைப் பேசி மகிழ்ந்திருக்கிருர்.

● மகா வைத்தியநாதசிவன் விதிமுறை தவருமற் சிவபூசை செய்வதிலும், இராமசாமி சிவன் தாம் பெற்றுக் கொண்ட உபதேசக்கிரமம் தவருமல் உச்சிஷ்ட கணபதி உபாசனை செய்வதிலும் சிறந்தவர்கள். இராமசாமிசிவன் ஒவ்வொரு தினமும் வேளை தவருமல் உச்சிஷ்டகணபதியைப் பூசித்து வணங்கி முறைப்படி வழிபாடுகளைச்செய்து அம்மூர்த்தத்தின் பிரசாதமாகியவிபூதியைத் தம் கையினல் மகாவைத்தியநாதசிவனுடைய நெற்றியிலும், தம் வீட்டிலுள்ள குழந்தைகள் நெற்றியிலும் இடுவார். தம்வீட்டிலுள்ள ஏனைய பெண்களுக்கும் மற்றையோருக்கும் கையிலேகொடுப்பார். அவர் செய்துவந்த இக்கணபதி உபாசனை மகிமையால் அவ்விருவரும் எங்குச் சென்ருலும் எச்செயலில் முன்னின்ருலும் அவர்களுக்கு அனுகூலமாகவே முடியும். உச்சிஷ்ட கணபதியை உபாசனை செய்யும்போது இராமசாமி சிவனைப் பார்ப்பவர்கள் சற்றுப் பயங்கொள்ளுவர். அப்பொழுது அவருடைய முகம் கண் ஆகிய உறுப்புக்கள் சிவந்து அதிகக் கோபம் உள்ளவர் போன்ற குறிகள் தோன்றும். அம்மூர்த்தத்தைப் பூசிக்கும்போதும் தியானம் செய்யும்போதும் அவரது உடல் சற்று நடுங்கும். ஆட்டமிருக்கும். அதாவது பேய் பிடித்துவிட்டதோ என்றுகூடத் தோன்றும். பூசை முடிந்துவிட்டால் சாதாரண நிலையில் அமர்ந்து விடுவார். ஆதலால் அவர் அம்மூர்த்தியை உபாசிக்கும் வேளையில் குழந்தைகள் முதலிய சிறுவர்கள் அவர் பக்கத்திலேபோய் அமரமாட்டார்கள்.

● இராமசாமி சிவன் ஆஜானு பாஹு; நல்ல கட்டுள்ள உடலுடன் வலிமையும் மிக்கவர். அவர்

மாநிறத்தினும் சற்று மேலான நிறமுடையவர். அவர் வீட்டு வேலையாகவும் வயல் வேலையாகவும் அடிக்கடி வெயிலில் அலைந்து திரிபவராதலால் அவருடல் கறுத்து எப்பொழுதும் மங்கலாகவே காணப்படுவார். இராமசாமிசிவனைத் தனிப்பட்டமுறையில் பார்ப்பவர்கள் அவரது உருவத்தில் வெறுப்புமடையார்; விருப்புமடையார். அவ்வளவிற்குச் சாதாரணமாகவே தோற்றுவார். என்றாலும் அவரதுதோற்றம் விகாரமுடையதன்று. அவரது ஒன்பதாவது வயதுமுதல் இருபத்துநான்காவது வயது வரை அவரது முகமண்டலத்தில் வித்தியாக்களை தாண்டவமாடியது. அக்காலத்தில் இராமசாமி சிவனும் மகாவைத்தியநாத சிவனும் சேர்ந்து அமர்ந்திருக்கும்போது பார்த்தால் இராம லட்சுமணர்போல விளங்குவார்கள். ஊர்மக்கள் அவ்விருவரையும் பார்த்துக்கொண்டிருப்பதில் சலிப்படைவதில்லை.

● இராமசாமி சிவன் மகாவைத்தியநாத சிவனை விட்டுப் பிரியாதிருக்கும் தருணங்களில் இராமசாமி சிவனைப் பார்த்தால் அவரது முகத்தில் எப்பொழுதும் புன்னகை தவழ்ந்த வண்ணமிருக்கும். அவருடைய முகத்திலே தைரிய லட்சுமி கூத்தாடுவாள். எப்பேர்பட்டவர்களின் கவலைகளையும் போக்கக்கூடிய சக்தியுள்ளவராக அவருடைய முகபாவம் புலப்படுத்தும். வித்தியாவீரம் அவருடைய முகத்தில் செறிந்து ஒளி வீசும். மகாவைத்தியநாத சிவனின் பக்கலிலே இராமசாமி சிவன் சேர்ந்திருக்கும்போது மகாவைத்தியநாத சிவனுடைய முககாந்தி இராமசாமி சிவனின் முகமண்டலத்தில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். இராமசாமிசிவ

னின் தோற்றத்தைத் தனியாகப் பார்ப்பதினும் மகா வைத்தியநாத சிவனோடு சேர்ந்து பார்த்தால் அவருடைய முகத்திலே அதிகமான மனோவசிய சக்தி மிளிரும்.

● இராமசாமி சிவன் உச்சிஷ்ட கணபதியின் உபாசனையைத் தமது பதினெட்டாம் வயதிலே அடையப் பெற்றார். அம்மூர்த்தியை வெகு தீவிரமாக உபாசித்தபடியால், அத்தீவிரத்தின் காரணமாக அவரது முகமண்டலத்தின் காந்தி நாளாக நாளாகச் சற்று மாறுபட்டு வந்தது. அம் மாறுபாட்டால் அவர் ஒரு கோபக்காரர் போலவும், மிகவும் கடுகடுப்பு உள்ளவர் போலவும், இறுகிய கல்மனமுடையவர் போலவும், தோற்றமளித்தார். அவர் எப்பொழுதும் தமிழ்மொழியில் கவிகள் செய்வதிலும், கீர்த்தனங்கள் (இசைப் பாடல்கள்) செய்வதிலும், படிப்பின் உயர் தன்மையை எக்காலமும் சிந்தித்து ஆராய்வதிலும், தம் குடும்பத்தின் பொறுப்புக்களைக் கௌரவமாகப் பேணிவருவதிலும் மனத்தை ஈடுபடுத்தி வந்தமையால், எப்போதும் ஏதோ யோசனையுள்ளவர் போலக்காணப் பட்டு வந்தார். அவரது அண்மையில் நெருங்க யாவரும் சிறிது அச்சங்கொள்ளுவர். அவர் தம்வீட்டிலே குட்டிபோட்ட பூனை போன்று உள்ளுக்கும் வாசலுக்கும் வளையவளைய வந்து கொண்டிருப்பார்.

● இராமசாமிசிவன் பூசித்து வழிபாடு செய்துவந்த உச்சிஷ்ட கணபதியின் உபாசனையின் இரகசியம் ஏழைய மக்களுக்குத் தெரியாத காரணத்தால் அவர்

ஏதோ செய்யத்தகாத உபாசனையில் ஈடுபட்டிருப்ப தாக எண்ணி அவரைச் சூனியக்காரரென்றும், மந் திரதந்திரஞ் செய்பவரென்றும், ஏவல் முதலிய கெட்ட காரியங்களைச் செய்பவரென்றும் ஏசிவந்தனர். ஊர் மக்கள் அவரை எவ்வாறு குறைத்துரைத்தாலும், எவ் வாருே உச்சிஷ்ட கணபதியின் வழிபாட்டின் பலிதத் தால் இராமசாமி சிவனுக்கு அந்த உபாசனைத் தெய்வ மாகிய கணபதியின் அனுக்கிரகசக்தி பரிபூரணமாக ஏற்பட்டுவிட்டது. அச்சக்தியின் மகிமையால் அவர் தொட்ட காரியமெல்லாம் நல்லவிதமாக அமைந்து மங்களத்தைக் கொடுத்து வந்தன. அவ்விருவருடைய பேரும் புகழும் வித்தையின் சிறப்பும், சிவபூசையின் மகிமையாலும், உச்சிஷ்ட கணபதியின் அருளாலும் ஓங்கி வளர்ந்தன.

● மகாவைத்தியநாத சிவன் இராமசாமி சிவன் ஆகிய அவ்விருவரின் ஞானவலுவிற்குக் கோடகநல் லூர் சுந்தரசுவாமிகள் சத்குருவாக அமைந்துவிட் டார்கள். அவர்களிடம் பாடங்கேட்ட அவ்விருவருக் கும் வேதாந்த ஞானவலு பூரணமாக அமைந்திருந் தது. இராமசாமி சிவனை ஊர்மக்கள் இகழ்ந்துப் பேசி வந்த வார்த்தைகளை அவர் சிறிதும் லட்சியம் செய்ய வில்லை. ஊர்மக்கள் மாயையால் மறைக்கப்பட்டு சம் சார பந்தத்தில் ஈடுபட்டு ஏதோ தமக்குத் தோன்று வதைக் கூறுகிருர்கள் என்றே நினைத்து அவர்களுக் காக இரங்குவார். கடுஞ்சொற்களை எல்லாம் உதறித் தள்ளிச் சிறிதும் கோபம் வரப்பெருமல் வேதாந்த அனுபவத்தை அடைந்திருந்தார் என்பதை அவர்

செய்துள்ள வேதாந்த ஞானபரமாக உள்ள கீர்த்தனை யின் மூலம் அறியலாம்.

இராகம்:- யதுகுலகாம்போதி. தாளம்:- ஆதி.

வேதாந்த ஞான அறிவைக் காட்டும் கீர்த்தனம்.

பல்லவி

எவரிகழ்ந்தாலென்ன எவர் புகழ்ந்தாலென்ன
இதிலென்ன குறை மனமே. (எவ)

அநுபல்லவி

உவரிகளோ ரேழு முடையாகச் சூழ்பாரில்
சிவமென வனைத்தையும்
தெளியாம லிருப்பாரில் (எவ)

சரணம்

மலசல நரம்பென்பு மாமிச பாகந்தன்னை
வலிதாய் நிறைத்துத்
தோலால் மறைத்த தேகந்தன்னை. (எவ)

விருதாவாக வொருவன் விளம்பும் வார்த்தை
யெல்லாம், ஒருதுணை வழிபோங் காற்
றெருலி யென்றிருக்கு மென்னை. (எவ)

திடமிகு சுந்தரதேசிக னருளாலே
முடிவில்லா ஞான வடிவானேன் புவிமேலே (எவ)

இங்குக் கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளால் வேதாந்தஞானத்தை அடைந்த தன்மையையும், உலகோர் எத்துணைதான் ஏசினாலும் அதையெல்லாம் பொருட்படுத்தி மனம்நோகாத உயர்தன்மையையும் இக்கீர்த்தனம் எடுத்துக் காட்டுகிறது.

● இராமசாமி சிவனுக்கு உச்சிஷ்ட கணபதி உபாசனை செய்தற்கு அமைந்த வாய்ப்பு வியப்புக்குரியது. ஒரு விநாயக சதுர்த்தி நாளன்று காலை ஏழுமணியளவில் ஒரு சாது வந்தார். அவர் வையைச்சேரி அக்கிரகாரத்தின் வழியே வரும்போது அக்கிராமத்து மக்கள் வாசலில் வருவதும் போவதுமாய் இருந்தும், அந்தச் சாது வருவது அவர்கள் கண்களில் படவில்லை, நான்கைந்து வீடுகளுக்கும் அப்பால் வந்துகொண்டிருந்த அந்தச்சாது இராமசாமி சிவனுடைய கண்ணிற்கு மட்டும் புலப்பட்டார்; அச்சாதுவைத் தம் வீட்டிற்கு அவர் வணங்கி அழைத்து வந்தார். அப்பெரியவரும் இராமசாமி சிவன் வீடுவரை வந்து அவ்வீட்டு வாசலிலேயே நின்று விட்டார். வீட்டுக்குள்ளே அச்சாது நுழையவில்லை. அப்பெரியவருடன் இராமசாமி சிவனும் நின்று விட்டார். அங்குக் கிராமத்திலுள்ளவர்களின் கண்களுக்கும் தம் வீட்டிலுள்ளவர்களின் கண்களுக்கும் வாசலில் நின்று கொண்டிருந்த அவ்விருவரும் புலனாகவில்லை. ஆனால் அவ்விருவருக்கு மட்டும் அங்கிருந்தோர் செய்யும் செயல் ஒவ்வொன்றும் தென்பட்டு வந்தன.

அவ்வாறு அவ்விருவரும் நின்றுகொண்டிருந்த தெருவாசலிலே ஓர் ஓமகுண்டம் உண்டாகியது. ஓம

குண்டத்திற்கு அப்பால் ஒரு விநாயகர் முளைத்தது. பூசைக்குரிய அனைத்துச் சாமான்களும் அங்குத் தோன்றின. அப்பெரியவர் வடக்கு நோக்கி உட்கார்ந்தார். இராமசாமி சிவன் கிழக்கு நோக்கி உட்கார்ந்தார். மந்திர உச்சாடனம் தொடங்கிற்று. ஓமம் வளர்க்கப்பெற்று ஆகுதிகள் செய்யப்பட்டன. அக்கினி வலம் சுழித்துச் சுழித்து ஓங்கி வளர்ந்தது. விநாயக பூசை முறைப்படி நடந்தது. பின்பு அப்பெரியவர் இராமசாமி சிவனுக்கு உபதேசம் செய்தார். உபதேசம் பெற்றுக்கொண்டபின்பு அப்பெரியவரைச் சாஷ்டாங்கமாக மூன்று முறைகள் நன்றாக வணங்கி எழுந்தார். அவ்வாறான செயல்களெல்லாம் அக்கிராமத்திலிருந்த யாருடைய கண்ணிற்கும் புலப்படவில்லை. இதுஒரு மாயாசாலம்போல நடந்தது. அப்பெரியார், "இவ்வுபாசனையை விடாமற் செய்தால் உனக்கும் உன்குடும்பத்திற்கும் க்ஷேமம் உண்டாகும். நினைத்த காரியம் சித்தியாகும்" என்றார். பின்பு இதனை உலக க்ஷேமத்திற்கும் பயன்படுத்தலாம் என்றார். அவ்வாறு கூறிய அப்பெரியார் இராமசாமிசிவனுக்கும் தெரியாமல் எவ்வாறோ மறைந்துவிட்டார். தெருவாசலிலுள்ள ஓமகுண்டம், விநாயகர், பூசைக்குரிய அனைத்துச் சாமான்கள் ஆகிய யாவும் இருந்த சுவடு தெரியாமல் மறைந்துவிட்டன. இராமசாமி சிவன் இயல்பாகத் தெருவாசலிலிருந்து தம் வீட்டினுள்ளே சென்றார். அன்று விநாயக சதுர்த்தியாகையால் தாமே பூசையில் அமர்ந்து சொப்பனம்போல் நடந்த தமது உபதேசமுறைப்படி வீட்டிலுள்ள விநாயகரைப் பூசித்தார். அவ்வீட்டிலுள்ளோருக்கு அப்

பூசைசெய்யும் விதிமுறைகள் புதியனவாகப்பட்டன. வீட்டார்கள் அவ்வழிபாட்டின் புதுமுறைகளைப் பற்றி அவரிடம் கேட்டார்கள். அவர் தமக்கு உபதேசம் கிடைத்த வகைபற்றித் திகைப்பு உள்ளவராக இருந்தார். ஏதோ சொப்பனம்போல் அவ்வுபதேச முறைகள் அவரிடம் குடிகொண்டிருந்தபடியால், அதன் உண்மையைக்கூறினுல் யாவருடைய ஏளனத்திற்கும் தாம் ஆளாக நேரும் என்றும் எண்ணினுர். அவர், தமக்கு உபதேசம் கிடைத்த வரலாற்றைக் கூருமல் இது உச்சிஷ்ட கணபதியின் பூஜாவிதி என்றுமட்டும் கூறினுர். இவ்விதிமுறைகளை அதுவரை கண்டிராத அவ்வீட்டிலுள்ளவர்கள், திடீரென இப்பூசாவிதியைச் செய்யக் காரணமென்ன என்றும் எப்பொழுது இப்பூசாவிதியின் உபதேசத்தை யடைந்தார் என்றும் இது என்ன புதுவிதம் என்றும் வியந்து ஐயப்பட்டிருந்தார்கள். அன்றுமுதல் அவர் ஆயுள் வரைக்கும் நாள்தவருது இவ்வழிப்பாட்டை விடாமல் தீவிரமாகச் செய்து பயனடைந்தார். தமக்குக் கிடைத்த உபதேசமார்க்கத்தைத் தம் வீட்டாரிடமும், உற்ருர் உறவினரிடமும் கூறவில்லை. இந்த உபதேசமுறையானது இராமசாமிசிவனின் முன் சன்மப் புண்ணியத்தால் ஏற்பட்டதேயாகும். அவர்களுக்கு இயற்கையாக இவ்வுபதேசம் கிடைத்தது. உபதேசம் செய்துகொள்ளல் வேண்டுமென்றெண்ணித் தேடிப்போய் உபதேசம் பெற்றுக்கொண்டவரல்லர். இது அவரதும் அன்னுரின் குடும்பத்தினரினதுமான பாக்கியமாகும். இதுஒரு வியப்புமிக்க சம்பவமாகும்.

● கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள் எல்லாக் கலைகளின் பரிபக்குவத்தையும் பெற்றவர்கள். அவர் பல்வகையான சித்திகள் தெரிந்தவர். எதனையும் எளிதாகச் செயல்படுத்தும் ஆற்றலுள்ளவர். அவர் உச்சிஷ்ட கணபதி உபாசனையில் சிறந்தவராய் இருந்தார் என்பர். அவர் அவ்வுபாசனையைக் காசிக்குச் சென்றிருந்த காலையில் கணபதி முனிவர் என்ற ஒரு மகானால் அடையப்பெற்றார். அவர் பிறவி எடுத்த காலம் முதலே ஞான அறிவை அடைந்தவர். குழந்தைப் பருவம் நீங்கியதும் யோகம் நிஷ்டை சமாதி ஆகியவற்றில் திளைத்தார். சிவபரமான தொண்டுகளைத் தயங்காமல் செய்வர். அவர் சிவன் சகோதரர்களுக்கு ஞான குருவாய் அமைந்துவிட்டபடியால், அவரின் சித்து விளையாட்டின் மகிமையால் யாவர் கண்களுக்கும் புலப்படாமலிருந்து ஒரு நன்னாளிலே மிக்க இரகசியமான உச்சிஷ்ட கணபதி உபாசனையை இராமசாமி சிவனுக்கு உபதேசித்தார் என்றுங் கூறுவதுண்டு.

● இராமசாமிசிவன் தம்முடைய ஐம்பத்தைந்தாவது வயதிலே அதாவது 1985-ஆம் ஆண்டு திருநெல்வேலிக்கு ஒருமுறை வந்திருந்தார். எனது மூத்த குருநாதராகிய அவர்களை அப்பொழுது பார்த்ததுதான் கடைசிமுறை. நான் அவர்களைச் சந்தித்து வணங்கி அவர்கள்கூட ஒரு வாரம் தங்கி இருந்தேன். நான் குருகுலவாசம் செய்து எனது சொந்த ஊராகிய வாசுதேவநல்லூருக்கு வந்துவிட்டபின் அவர்கள் குடும்பச் செய்திகளை அவ்வப்போது கேட்டு வந்தேன். இப்பொழுது நேரில்சந்தித்ததும் 1882- ஆம் ஆண்டிற்குப் பிறகு நடந்த எத்துணையோ செயல்களை அவர்கள் வாயிலாக

அறிந்தேன். முக்கியமான பல செய்திகளைக் குறித்துக் கொண்டேன். ஏனையவற்றை மனத்தில் ஞாபகப் படுத்தி வைத்துக்கொண்டேன். அப்பொழுது நான் வேதாந்தப் பயிற்சியில் ஈடுபட்டு அந்த ஞானத்தை எனது வேதாந்தகுரு அவர்களும் போற்றும் படியான திறத்தை ஒருவாறு எட்டி இருந்தேன். மகாவைத் தியநாத சிவன் 1893-ஆம் ஆண்டு தைமாதம் கால மானதும், நான் வேதாந்தபரமாகச் சாட்சிக்கும்மி என்ற சிறு நூலொன்று செய்து 1893-ஆம் ஆண்டு சித்திரைமாதம் அச்சிட்டு, இராமசாமி சிவனவர் களுக்கு ஒருபடி அனுப்பியிருந்தேன். அந்நூலைக் கண்டு அவர்களடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அதனால் அவர்கள் தம்மிலும் ஒருபடி உயர்ந்தநிலையில் என்னை உள்ளத்தில் வைத்துக் கொண்டாடினார். நானும் இராமசாமிசிவனும் பலசெய்திகள் பற்றிப்பேசிக் கொண்டிருந்தோம். அத்தருணத்தில் அவர்களிடம் "தாங்களோ உச்சிஷ்ட கணபதி உபாசகர்; அவ் வுபாசனை தங்களையும் தங்கள் குடும்பத்தையும் உல கம் கண்டு மகிழும்படி உயர்த்தி உள்ளதல்லவா? அவ் வுபாசனை தங்களுக்குப் பின்னரும் நடைபெற யாருக் காவது உபதேசித்து இருக்கிறீர்களா? அவ்வுத்தம மான உபாசனையைத் தங்கள் குடும்பத்தைச் சார்ந்த முக்கியமான ஒருவருக்கு உபதேசிக்க வேண்டாமா? அது தங்களுடைய தர்மமில்லையா? வெகு ஆண்டுகளாகத் தங்களது இல்லத்தில் நான் தங்கி இருந்தும் அவ்வுபதேசத்தின் இரகசியம் ஒன்றும் தெரி யவில்லையே. அதன் விபரம் கூறலாமெனில் அதைக் கேட்க ஆவலுள்ளவனாக இருக்கிறேன்," என்று கூறி

னேன். நான் அவர்களிடம் இசை மாணவனாக இருக் குங்காலத்து அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு வனாகவே பழகினேன். அவ்வீட்டார் ஏனைய மாண வர்களினும் என்னிடம் தனித்த அன்பு, கருத்து, சலுகை ஆகியவை உள்ளவர்களாக இருந்தார்கள். தவிர நான் அவர்களுடைய முக்கியமான இசைமாண வனாயினும் இப்பொழுது வேதாந்த ஞானத்தையும் அடைந்து அவர்களால் பெரிதும் விரும்பும் நலத்தை அடைந்திருந்தபடியால் அவர்களிடம் உச்சிஷ்ட கண பதியின் உபாசனை இரகசியத்தைப் பற்றிப் பயமின்றிக் கேட்க வாய்ப்பிருந்தது.

அவ்வாறு நான்கேட்டதும் அவர்கள், "நான் 1898-ஆம் ஆண்டுவரையே வாழ்வேன். எனவே இன்னும் மூன்றாண்டுகள் இவ்வுலகில் எனது வாழ்வு இருக்கிறது. நான் செய்து வரும் கணபதி உபாச னையை யாருக்கும் உபதேசிக்கவில்லை. அது எனக்கு இயற்கையாகக்கிடைத்தது. அவ்வுபாசனையை அனுட் டிப்பது மிகவும் கடினம். அவ்வாறு உபதேசிக்கும்படி எனது உபதேச குருநாதரின் உத்தரவு எனக்கு இது வரையில்லை. அவ்வுபாசனையை விடாப்பிடியாகச் சாதித்தற்குரிய பக்தவிகள் கிடைப்பது மிகவும் அரிது. கணபதி உபாசனையின் இரகசியத்தை நான் இது காறும் ஒருவரிடமும் வெளியிடவில்லை. ஆனால் இனி அதைக் கூறுவதில் தடையில்லை", என்று கூறிவிட்டு மேலே கூறியபடி உபதேசம் நடந்தமுறை அனைத்தை யும் விடாமற் சொன்னார். அவர் கூறக்கூற என் வியப் புக்கு அளவில்லை. அதனை அவர் என்னிடம் கூறும்

போது அவருடைய கண்களில் நீர் மல்க என்னை நோக்கி “நீ வேதாந்தி. பிரம்மத்தை அறிந்தவன், அல்லது அறியக்கூடியபக்குவத்தில் உன்னதத்தானத்தில் விளங்குகிருய். முன் ஜன்மப் புண்ணியத்தை நிரம்பப் பெற்றிருக்கிருய் இதுவரை வெகுகாலமாக இவ்வுபாசனை கிடைத்த விபரத்தை வெளியிடாமற் பாதுகாத்து வந்தேன். நீயே இதனைக் கேட்டுவிட்டதால் உன்னிடம் ஒளித்தல் தகாது. அதனுல் கூறுகிறேன்” என்ருர். எனது உள்ளமெல்லாம் பாகாய் உருகிவிட்டது. மனம் நெகிழ்ந்துவிட்டது. நான் செயலிழந்து நின்றேன். அவர்களுடைய அன்புப் பெருக்கையும் கருணை உள்ளத்தையும் நினைந்து மனம் உருகினேன்.

● இராமசாமி சிவன் எப்பொழுதும் தம் தம்பியாரோடு சேர்ந்திருக்கவே விரும்புவார். தம் தம்பியாரின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதில் சலிப்பற்ற மகிழ்ச்சி அடைவார், தம் தம்பியாரின் முகத்தைப் பார்த்துவரும் நேரமெல்லாம் இராமசாமி சிவனுடைய முகவிலாசம் ஓர் உன்னதமான ஒளிப்பிழம்புடன் சொலிக்கும். தம்பியாரைவிட்டு விலகி இருக்கும்போது இராமசாமி சிவனைப் பார்த்தால் அவரது முகமண்டலம் பேய் அறைந்தது போல இருக்கும். அல்லது மேகம் மூட்டம் போட்டதுபோலத் தோன்றும். சற்றுக் களையிழந்து காணப்படுவார். அவ்விருவரின் மன ஒற்றுமை, செயல்முறைகள், வாஞ்சை ஆகிய இவைகள் உலகத்திலே ஒருவருக்கும் அமையாத சிறந்த குண நலன்களாகும்.

● மகாவைத்தியநாத சிவன் கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் நல்ல மதிப்பும் பணிவும் கொண்டவர். அவர்களுடைய கீர்த்தனைகள் நிரம்பப் பாடமுண்டு. அக்கீர்த்தனைகளின் வர்ணமெட்டை (இசையமைப்பு) சொல்லிச் சொல்லி மனமகிழ்வார். கோபாலகிருஷ்ண பாரதியாருக்கு இராமசாமி ஐயரென்ற ஒரு மாணவருண்டு. அவர் மாயூரத்திலே வசித்துவந்தார். அவரது வீட்டிலேயே கோபாலகிருஷ்ண பாரதியார் இருந்து வந்தார். மகாவைத்தியநாத சிவனும் இராமசாமி சிவனும் பெரும்பாலும் இராமசாமி ஐயர் வீட்டிலேயே தங்குவதுண்டு. அப்பொழுதெல்லாம் கோபால கிருஷ்ண பாரதியாரிடம் அளவளாவி வருவதுடன் அவர்களியற்றிய பல புதுக் கீர்த்தனைகளையும் அவர்கள் வாயிலாகப் பாடச்சொல்லிக்கேட்டுப் பாடம் செய்ததுண்டு. சில சமயங்களிலே மகாவைத்தியநாத சிவனும் இராமசாமி சிவனும் தம் மாணவராகிய மாயூரம் வீணை வைத்தியநாத ஐயர் வீட்டிலும் தங்குவார்கள். அவர்கள் மாயூரம் செல்லும் நாட்களிலே முன்சீப் வேதநாயகம் பிள்ளையவர்களுடன் அளவளாவிக் களிப்பதுண்டு. மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அங்கு இருப்பரேல் அவர்களைச் சந்தித்து மகிழ்வதுண்டு. யாரைக் கண்டாலும் காணுவிட்டாலும் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களை மட்டும் காணுமலிருக்க மாட்டார்கள். மகா வைத்தியநாத சிவன் மாயூரம் வருவதில் அங்குள்ள வித்துவான்கள் யாவரும் மனமகிழ்ச்சி உள்ளவர்களாக விளங்குவார்கள். மகாவைத்தியநாதசிவன் இராமசாமிசிவன்

ஆகிய இருவரிடத்தும் கோபாலகிருஷ்ண பாரதியார் அளவிறந்த அன்புள்ளங்கொண்டு விளங்கினர்.

● [அக்காலத்தில் சுமார் 70, 80 ஆண்டுகளுக்கு முன்பு சங்கீதசபா ஒன்றும் கிடையாது. டிக்கெட் வைத்துப் பணம் வசூலித்தல் என்பது அறவே கிடையாது. அக்காலம் இசைவினிகைகள் பெரும்பாலும் கோயில்களிலும், பொதுச்சத்திரங்களிலும், பஜனமடங்களிலும், கல்யாண வீடுகளிலும், அரசவையிலும், பெரிய செல்வர்களின் மாளிகையிலும் நடைபெறும். அந்தந்த ஊர்களிலுள்ள சிறந்த செல்வர் ஒருவர் தாமே முன்வந்து தம் சொந்தப் பொறுப்பிலே தம் பணத்தை இசைவித்துவான்களுக்கு அளித்து இசைவினிகைகளுக்கு ஏற்பாடுகள் செய்து எல்லா மக்களையும் இசை விருந்தினை அனுபவிக்கும்படி செய்வார். அவர்களுடன் தாமும் இசையைக்கேட்டு இன்புறுவார். [V. S. G.]

● ஒருசமயம் சென்னையிலுள்ள முக்கியமான செல்வர் ஒருவர் தாமே முன்வந்து மகாவைத்தியநாத சிவனின் கச்சேரியைத் தாமும், தம் சுற்றமும், ஏனைய நண்பர்களும், பல பொதுமக்களும் கேட்டு இன்புறல் வேண்டுமென்று எண்ணினர். உடனே சென்னையிலிருந்து புறப்பட்டு வந்து மகாவைத்தியநாத சிவனை நேரில் சந்தித்து "தங்கள் இன்னிசையைக் கேட்டு மகிழ்தல் வேண்டுமென்று அன்பர்கள் பலர் ஆவலுடன் இருக்கின்றனர். தயை கூர்ந்து சென்னைவந்து இசைவினிகை நடத்தி அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தல் வேண்டும்" என்று பணிவுடன் கேட்டுக்

கொண்டார். அந்தச் செல்வரின் வேண்டுகோளுக்கு இணங்கி மகாவைத்தியநாத சிவன் சென்னை வருவதாகவும் இசைவினிகை நடத்தித் தருவதாகவும் ஒப்புக்கொண்டார். அவர் கச்சேரி செய்வதற்குப் பணம் பேசுவது கிடையாது. அச்செல்வரும் மகாவைத்தியநாத சிவனுக்கு வேண்டிய மரியாதைகளைச் செய்துவிட்டுக் கச்சேரிக்குரிய நாளையும் குறிப்பிட்டுச் சென்னை வந்து சேர்ந்தார். அக்கச்சேரியைப் பொதுமக்களும் ஏனையோர்களும் கேட்க வேண்டியதாயிருந்ததால் அந்த இசை நிகழ்ச்சியைத் தொண்டமண்டல சபையிலே நடத்தற்கு ஏற்பாடு செய்தார். அந்தக் கூடத்தில் நிரம்ப மக்கள் அமர்ந்திருந்து கேட்க வசதி இருந்தது.

மகாவைத்தியநாத சிவனின் இசைவினிகை நடத்தற்த ஏற்பாடுகள் செய்த அச்செல்வர் அவ்விசைச் செல்வருக்குப் பொதுவாகக் கொடுக்கப்படும் ஐம்பது ரூபாய் சன்மானத்தொகைக்கு அதிகமான தொகையைத் தந்து மரியாதை செய்து அவரை மகிழ்வித்தல் வேண்டுமென்று விரும்பினர். அதற்காக அச்செல்வர் கச்சேரி செய்யவேண்டிய கூடத்தின் நுழைவாசலில் ஒருவரை நிறுத்தினர். இசையை மிக்க ஆவலுடன் கேட்டு இன்புறல் வேண்டுமென்று எண்ணிவரும் இசையன்பர்களிடம் அவரவர் தகுதிக்கேற்ப நான்கணு முதல் ஒரு ரூபாய் வரை கட்டணமாகப் பெற்றுவந்தார். பணம் கொடுத்தவர் மட்டுமே உள்ளே அனுமதிக்கப் பெற்றனர். சிலர் கையில்பணம் கொண்டுவாராத காரணத்தால் கச்சேரியைக் கேட்க

இயலாமல் திரும்பிச் செல்ல நேர்ந்தது. பணம் கொடுத்தவரின் பெயரும் அவர் அளித்த தொகைக்கு ஒரு சீட்டும் எழுதிக் கொடுத்துவந்தார். கச்சேரிக் கூடத்தின் நுழைவாயிலில் மக்கள் கூட்டமாக நின்றனர்.

அவ்வாருன நேரத்திலே மகாவைத்தியநாத சிவன் கச்சேரி செய்வதின் நிமித்தம் தம் சகாக்களு டன் கச்சேரி செய்யுமிடத்திற்கு வந்தார். அவர் வரும் போது கச்சேரி கேட்க இயலாத சில அன்பர்கள் பேசி வந்த சொற்கள் மகாவைத்தியநாத சிவனின் காதில் பட்டது. அவர் ஒருவாறு செய்தியை அறிந்து கொண் டார். கச்சேரி செய்ய வேண்டிய கூடத்தின் நுழை வாயிலில் ஏராளமான மக்கள் கூட்டம் நிறைந்திருப் பதைக் கண்டார். இங்குள்ள மக்கள் கச்சேரி நடக் கும் இடத்தில் போய் உட்காராமல் இங்குகூடி நிற்ப தன் காரணமென்னவென்று கவனித்தார். அப்போது கச்சேரி நடக்கும் கூடத்தின் நுழைவாயிலின் அருகே ஒருவர் நின்றுகொண்டு, மக்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களிடம் அதற்குரிய ஒரு சீட் டினைக் கொடுத்து, உள்ளே அனுப்பி வருதலைக் கண் டார். பணம் பெற்றுக் கொண்டதற்கு அச்சீட்டானது ரசீது போன்றதாகும்.

மகாவைத்தியநாத சிவன் மக்களிடமிருந்து பணம் வசூலிப்பவரைக் கூப்பிட்டு, “இதென்ன செய்தி! ஏன் பணம் வசூல் செய்கிறீர்கள்?” என்று வினவினர்; அத்துடன், “நான் கச்சேரி செய்ய

வேண்டிய இடம் இதுதானு? அல்லது வேறு இடமா? நீங்கள் பணம் வசூல் செய்வதால் இங்கு வேறு ஏதேனும் நிகழ்ச்சிகள் நடக்கவிருக்கின்றனவா?'' என்றும் வினவினுர். அவ்வாறு அவர் கேட்டதும் பணம்வசூல் செய்பவர் மிக்க மரியாதையும் பணிவும் கொண்டு "இந்த இடத்தில்தான் தாங்கள் கச்சேரி செய்தற்கு ஏற்பாடாகி இருக்கிறது; இக்கச்சேரிக்குத் தங்களை எற்பாடு செய்த செல்வர் தங்களுக்குத் தாம் செய்யும் சன்மானத்தோடு மக்கள் அளிக்கும் தொகையையும் சேர்த்துத் தங்களுக்கு மேலும் ஒரு பெருந்தொகையைச் சன்மானம் செய்து கௌரவப்படுத்தல் வேண்டுமென்று விரும்பியுள்ளார்; அதனுல் இவ்வாறு வசூலிக்கும்படி எனக்குக் கட்டளையிட்டுள்ளார்'' என்று கூறினுர். அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் நேரத்திலேயே அச்செல்வரும் அங்குவந்து சேர்ந்தார்.

மகாவைத்தியநாத சிவன் இச்சூழ்நிலையில் மனம் வருந்திவிட்டார்; "நம்முடைய கச்சேரியைக் கேட்க வேண்டுமென்ற அன்பர்கள் உள்ளன்புடன் இருப்பார்களே, அவர்களனைவரும் கேட்பதற்கு இல்லாமல் போய் விடுமே! மக்களைக் கட்டாயப் படுத்திப் பணம் வசூலிக்கின்ருர்களே'' என்று மனம் வெதும்பினர். அக்கணமே அந்தச் செல்வரை நோக்கி, "இன்று என்னுல் கச்சேரி செய்ய இயலாது. அவரவரிடமிருந்து சீட்டைப்பெற்றுக்கொண்டு பணத்தை அவரவரிடம் சேர்த்துவிடுங்கள்'' என்று கூறினுர். உடனே அச்செல்வர், "ஏன்! தங்களுக்கு உடல்நிலை சரியில்லையா! அவ்வாருயின் இன்று வேண்டாம். வேருெரு நாளில் கச்சேரியை

வைத்துக் கொள்வோம். தங்களுக்கு இசைவினிகை செய்ய என்றையதினம் சௌகரியமாயிருக்கும் என்று கூறினுல் அவ்வாறே செய்து விடுவோம்'' என்ருர். மகாவைத்தியநாத சிவன் என்றைய தினம் கச்சேரி செய்யச் சௌகரியப் படும் என்பதை யோசித்துக் கூறுகிறேன். "தாங்கள் என் கச்சேரியை ஏற்பாடு செய்ததற்கு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனல் குறைந்தபட்சம் நான்கணுப் பணமாவது கொடுப்போரையே கச்சேரியைக் கேட்க அனுமதிப்பதாகத் தெரிகிறது. இசையை நல்லபடியாக உணர்ந்து சுவைப்பவர்கள் பலரிருப்பர். ஆனல் அவர்கள் நான்கணுக் கூட கொடுத்தற்கு இயலாதவராய் இருப்பர். அப்பேர்பட்ட நல்ல சுவைஞரைக் கேட்கவொட்டாமல் தடை செய்வதை எண்ணும்போது என்மனம் கலங்குகிறது. அதனுல் இன்று இங்கு என்ஞல்பாட இயலாது,'' என்று கூறிவிட்டார். உடனடியாக மக்களைப்பார்த்து "நாளை இதே பக்கவாத்தியங்களுடன் பார்த்தசாரதிப் பெருமாள் கோயில் சந்நிதியில் பாடப்போகிறேன். எல்லோரும் அங்கு வந்து இசையைக் கேட்டு மகிழ்வதுடன் பார்த்தசாரதிப் பெருமானின் கருணைக்கும் பாத்திரமாகுங்கள்; அங்கு மக்களிடமிருந்து பணம் வசூலிக்கப் படமாட்டாது,'' என்று கூறித் தமது விடுதிக்குச் சென்ருர். மகாவைத்தியநாதசிவன் மறுநாள் பார்த்தசாரதிப் பெருமாள் கோயில் சந்நிதியில் கானம் செய்யப்போகிருர்கள் என்ற செய்தி எங்கும் பரவிவிட்டது.

தொண்டமண்டல சபையில் குறிப்பிட்டபடி அன்று கச்சேரி நடைபெருததால் பணம் அவரவரிடம்

திருப்பித்தரப்பட்டது. மறுநாள் பார்த்தசாரதி சுவாமி கோயிலில் திருக்கோடிக்காவல் கிருஷ்ணையர் பிடிலுடனும், துக்காராம் ராவ் மிருதங்கத்துடனும் மகாவைத்தியநாத சிவன் இசைவினிகையைச் செய்தார். ஏராளமான இரசிகப் பெருமக்களின் கூட்டம் நிரம்பி இருந்தது. கச்சேரியானது பெருமாளின் சந்நிதானத்தில் நடந்தபடியால் கடவுளிடத்தும் இசையினிடத்தும் மனம் ஒன்றி ஈடுபட்டு மக்களனைவரும் மகிழ்ந்தார்கள். அதுபோன்று கச்சேரி இதுவரை கேட்டதில்லை என்று கூறும்படி அக்கச்சேரி நன்கு அமைந்தது. கச்சேரி முடிந்ததும் மகாவைத்தியநாத சிவன் அங்குக் குழுமியுள்ள மக்களிடம் "இன்றுபோல் இன்னும் தொடர்ந்து இரண்டு நாட்கள் இச்சந்நிதானத்தில் கச்சேரி செய்ய எண்ணியுள்ளேன். இன்னும் உங்கள் நண்பர்களிடமும் இசையன்பர்களிடமும் இச்செய்தியினைக் கூறி இச்சந்தர்ப்பத்தை அவர்களும் பயன்படுத்திக்கொள்ளுமாறு கூறுங்கள்," என்று கூறினார். அவ்வாறே தொடர்ந்து இரண்டு நாட்களும் மெய்மறக்க உள்ளம் மகிழக் கச்சேரிகள் செய்தார். மக்களெல்லோரும் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கி ஆரவாரித்தனர்.

இசைவினிகையில் ஆழ்ந்த பல செல்வர்களும் அவரவரே முன்வந்து பல சன்மானங்களை அவர்களுக்குத்தந்து மகிழ்ந்தனர். அவ்வாறு உதவியதில் பொன் சங்கிலிகள், மோதிரங்கள், கடுக்கன்கள், கைக்குரிய தங்கக் காப்புக்கள், பட்டுவத்திரங்கள் முதலியனவாகும். இன்னும் சில செல்வர்கள் பணமாகவே

கொடுத்தனர். வழக்கம்போல் கோயிலார், கச்சேரி நடக்கும் அவை நடுவே பெரிய தாம்பாளம் கொண்டு வந்து வைத்தனர். அதில் அவரவருடைய சக்திக்குத் தக்கவாறு சில நாணயங்களை இட்டனர். மூன்று நாட்களிலும் அவ்வாறு கிடைத்த தொகை ஏழுநூற்றைம்பது ரூபாய் ஆகும். அந்த ரூபாயை இராமசாமி சிவனிடம் அளிக்கப் பெற்றது. அவர் அப்பணத்திலே நானூறு ரூபாயை வைத்துக்கொண்டு ஏனைய முந்நூற்றைம்பது ரூபாயைக் கோயிலாரிடம் கொடுத்தார். அந்த ரூபாய்க்குப் பார்த்தசாரதிப் பெருமானுக்கு அபிடேக அர்ச்சனை நைவேத்தியம் முதலிய ஆராதனைகள் செய்தல் வேண்டுமென்று கூறினர், சிவன் சகோதரர்கள் இவ்வாறு பக்தி சிரத்தையுடன் பெருமாளின் கைங்கர்யத்திற்கு உதவியதில் கோயிலாருக்கும் அங்கு குழுமியிருந்த மக்களுக்கும் பெருத்த சந்தோஷம் உண்டாயிற்று.

● ஏற்கனவே தொண்ட மண்டல சபையில் கச்சேரிக்கு ஏற்பாடுகள் செய்த அச்செல்வரும் பார்த்தசாரதி கோயிலில் நடந்த மூன்று நாள் கச்சேரிக்கும் வந்திருந்தார். இன்னிசையைக் கேட்டுக் களித்தார். கடைசி நாளன்று அச்செல்வர் மகா வைத்திய நாதசிவனிடம் நெருங்கி மிகப்பணிவும் பயமும் கலந்த நிலையில் "நான் தங்களுடைய கச்சேரிக்கு அதிகத்தொகை சன்மானித்தல் வேண்டுமென்றெண்ணி மக்களிடம் இருந்து பணம் வசூலிக்க ஏற்பாடு செய்தேன்; அச்செயல் தங்கள் மனதைத் தாக்கிவிட்டது என்பதை உணர்ந்துவிட்டேன்; நான் அவ்வாறு செய்தது

பெரும் பிழைதான்; என்னுல் ஏற்பாடுசெய்யப்பெற்ற கச்சேரி அங்கு நடைபெறவில்லை என்ருல், என்னிடம் பெரிதும் மதிப்பு வைத்துள்ள மக்கள் என்னைக் கேவலமாக எண்ணி விடுவார்கள்; எனக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டுவிடும்; ஆதலால், என் தவறுகளை மன்னித்து விடல் வேண்டும். இந்தப்பக்க வாத்தியங்களுடன் அங்கும் ஒரு கச்சேரி செய்து என்னுடைய மதிப்பை உயர்த்துதல் வேண்டும்'' என்று நயந்து கேட்டுக் கொண்டார். அவர் அத்துணை பணிவோடு கூறிய சொல்லை யார் கேட்டாலும் மனம் நெகிழ்ந்து விடுவர்.

மகா வைத்திய நாத சிவன் கடினசித்தம் படைத்தவரல்லர். ஆதலால், அச்செல்வர் உள்ளூர வருந்தும் நிலையைக் கண்டார். அவருடைய மனமும் இரங்கிற்று. இனி அம்மாதிரி மக்கள் மனம் வருந்தும்படி டிக்கெட் வைத்து பணம் வசூலிக்க மாட்டார் என்றும் இசையை விரும்பிக் கேட்க வருவோருக்கு நுழைவாயிலில் எவ்விதத் தடங்கலும் இராதென்றும் அறிந்தார். அச்செல்வரிடம் தாம் இன்னும் ஒரு வாரம் அங்குத் தங்க இருப்பதாகவும், வருகிற வெள்ளிக்கிழமையன்று அவருடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்வதாகவும் கூறினர். மேலும் அச்செல்வரிடம் ''எனக்கு அதிக கௌரவமளிக்க வேண்டுமென்று தாம் கருதியது உண்மைதான், ஆனுல் ஏழை மக்களிடமிருந்து வலுக் கட்டாயத்தினுல் பணம் வசூல் செய்வது தம் போன்ற பெருஞ்செல்வருக்கு ஓர் இழுக்கில்லையா! ஏழைமக்களுக்கெல்லாம் ஆதரவாக இருந்து தாம் உதவுதல் வேண்டாமா! அவர்களுக்கும் கலை உணர்ச்சி இருக்குமன்றே!

அவ்வாருன இரசிக இனத்தைச் சேர்ந்தவர்களும் என் கச்சேரியைக்கேட்டு இன்புறல் வேண்டாமா! எனவே தங்களுடைய ஏற்பாட்டால் பலர் ஏமாற்றமடைந்து பல விதமாகப் பேசியது என் செவியில் விழுந்தது. அதன் காரணத்தால் என் மனம் மாறுபட்டுக் கச்சேரி செய்ய மறுத்தேன். தாங்கள் இனிமேல் அவ்வாறு செய்தல் வேண்டாம். தங்களுடைய தர்மத்துக்கு லோபம் வர லாகாது,'' என்று கூறினுர். அச்செல்வரும் அவ்வு ரையை ஏற்றுக்கொண்டு அது தமக்கு ஒரு நல்லுப தேசமாக எண்ணினுர்.

மகாவைத்தியநாத சிவன் அச்செல்வரிடம் கூறிய படி வெள்ளிக்கிழமையன்று பிடில் கிருஷ்ணையர், மிரு தங்கம் துக்காராம்ராவ் ஆகிய அவ்விரு பக்கவாத்தி யங்களுடன் தொண்டமண்டல சபையில் கச்சேரியை நிகழ்த்தி எல்லோரையும் மனம் குளிரச் செய்தார். அச் செல்வர் மகாவைத்தியநாத சிவனிடம் பேரன்பு கொண்டு ''என்னை மிகவும் மேன்மைப் படுத்திவிட்டீர் கள்! இங்கு ஏற்பாடு செய்யப்பெற்ற இசை நிகழ்ச்சி யில் என்ஞல் பாட இயலாதென்று தாங்கள் கூறியதும் நான் மிகவும் வருந்தித் தளர்ந்து ஓய்ந்து விட்டேன்; இன்று தாங்கள் கச்சேரி செய்து என் மதிப்பிற்கு ஊனம் நேராமல் காப்பாற்றி விட்டீர்கள்,'' என்று கூறித் தாம் அவருக்குச் செய்யும் சன்மானத் தொகைக்கும் மேலே தம்கையினின்றும் கொடுத்துக் கௌரவித்தார்.

மகாவைத்தியநாத சிவன் சென்னை பார்த்தசாரதி கோயிலில் நடத்திய மூன்று நாள் கச்சேரியில் கிடைத்த தொகையில் தாம் நூற்றைம்பது ரூபாய்

எடுத்துக்கொண்டு பிடில் கிருஷ்ணையருக்கு நூறு ரூபாயும், மிருதங்கம் துக்காராம்ராவுக்கு எழுபத்தைந்து ரூபாயும் கொடுத்தார். பின்பு சென்னையிலிருந்து நேராகத் தம் சொந்த ஊராகிய வையைச்சேரிக் கிராமம் வந்து சேர்ந்தார். அங்குத் தாம் சொந்தமாக நிறுவிய நடராஜப் பெருமானை வழிப்பட்டார். அபிடேக ஆராதனைகள் செய்வித்தார். சென்னையில் தமக்குக் கிடைத்த பொன் ஆபரணாதிகளையும் பட்டுவத்திரங்களையும் நடராஜப்பெருமானுக்கு அணிவித்து மனங்குளிரக்கண்டு மேற்படி உடைமைகளை நடராஜப்பெருமானுக்கே சொந்தமாக்கினர்.

● மகாவைத்தியநாதசிவன் திருநெல்வேலி தென்னம்பிள்ளைத் தெருவில் நடத்திய ஒரு இசைநிகழ்ச்சியின்போது அவைநடுவே வைக்கப்பெற்ற தாம்பாளத்தில் ஆயிரத்து முன்னூறு ரூபாயும் சென்னை பார்த்தசாரதி கோயிலில் நடந்த இசைக்கச்சேரியில் அவைநடுவே கோயிலாரால் வைக்கப்பெற்ற தாம்பாளத்தில் எழுநூற்று ஐம்பது ரூபாயும் இருந்தன. [எனவே அக்காலத்து நாணய மதிப்பையும் இக்காலத்து நாணய மதிப்பையும் சீர்தூக்கிப் பார்ப்பவர்களுக்கு அக்காலத்து நாணய மதிப்பின் உயர்வு தெரியவரும். அவருடைய கச்சேரியைக் கேட்பவர்கள் அவருக்கு மனமுவந்து அளிப்பதுபோல வேறு எவருக்கும் அளிக்க மாட்டார்கள் என்பதற்கு இது ஒரு சான்றாகும். -V. S. G]

● மகாவைத்தியநாதசிவன் மைசூர் சமஸ்தானத்திற்குச் செல்லும்போதும் அங்கிருந்து திரும்பும்போதும்

பல அன்பர்களுடைய அழைப்பினுல் சென்னையில் பல மாதங்கள் அல்லது பலநாட்கள் தங்குவார். இசை வினிகையும் சிவகதைப் பிரசங்கமும் செய்வார். மக்க ளனைவரும் அவர் சென்னைக்கு வருங்காலத்தை ஆவ லுடன் எதிர்பார்த்திருப்பார்கள். பல பெரியமனிதர்கள் அவரிடம் ஈடுபாடு உடையவர்களாக இருந்தனர். அவ்வாறு அங்கு நடைபெற்ற இசைநிகழ்ச்சிகள் அள வில. சென்னையில் இசையிலுள்ள நுட்பமான செய் திறங்கள் புலவர்களின் முன்னிலையில் ஏராளமாக நடந்துள்ளன.

● அவர் இசையிலும் சிவகதைசெய்வதிலும் நற் றிறம் பெற்றிருந்தார். சிவகதை செய்யும்போது எந்தச் சரித்திரத்தைக் கதைசெய்ய எடுத்துக்கொண் டாரோ! அந்தச் சரித்திரத்தின் தொடக்கத்திற்குத் தக்கவாறு முதலில் தேவாரம் திருவாசகம் ஆகிய பாடல்களைப் பாடிப் பொருள்கூற ஆரம்பித்துவிடுவார். நாயன்மார் சரித்திரங்களாயின் திருத்தொண்டத் தொகையில்,"தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று தொடங்கி எந்த நாயனுர் சரித் திரத்தைச் சொல்ல வேண்டுமோ அந்த நாயனுரின் திருநாமம் உள்ள திருப்பாடல் வரையிற் பாடிவிட்டுக் கதையைத்தொடங்குவார். அவருடைய கதாப்பிரசங் கத்தில் அடிமுதல் இறுதிவரை சிவபக்தி உணர்ச்சி யைத் தூண்டி வரும் அமைப்பே காணப்பெறும்.


● அவர் சிவகதைகளைச் செய்யும்போது கச்சேரி கள் செய்வது போல உட்கார்ந்து கொண்டே கதை

யைச்செய்வார். இக்காலம் போல நின்று கொள்வதில்லை. அதற்கு மேடையோ! பீடங்களோ! எதுவும் கிடையாது. கதை செய்பவர்களுக்கு உதவியாகப் பின்னால் நின்று பாடுபவர்களும், அதற்குரிய ஆடம்பரமான சப்பளாக்கட்டை, ஜாலரா ஆகிய இவை போன்றவைகளெல்லாம் அவர் பால் இல்லை. அவர் கதையில் தமையனார் இராமசாமி சிவனவர்கள் தம்புராவை மீட்டிக்கொண்டிருப்பார். பெரும்பாலும் மிருதங்கம் மட்டுமே இருக்கும். சில கதைகளில் பிடிலும் இருக்கும். அவர் கதை செய்யும்போது இசை மேன்மையுடையதாக இருக்கிறதா! அல்லது பிரவசனம் (பிரசங்கம்) மேன்மையுடைதாக இருக்கிறதா! என்று கண்டு கொள்ள இயலாது. ஒன்றை விட ஒன்று மேலாகச் சிறந்து விளங்கி நிற்கும். காதுகளில் தேன் பாய்ந்தாற்போல இசையும் கதையின் வசனச் சொற்களும் இன்பந்தந்து மக்களைப் பரவசப்படுத்தும். அவருடைய சிவகதைகள் இரவு ஏழுமணிக்கே ஆரம்பமாகும். இரவு ஒன்பது மணிக்கெல்லாம் கதையை முடித்து மங்களம் பாடி விடுவார்.

● அவர் சிவகதை செய்ய ஆரம்பித்துவிட்டால் அவருடைய வாக்கிலிருந்து அமிர்த தாரைபோன்ற கேள்விக்கினிய சொற்கள் கடல் மடை திறந்துவிட்ட மாதிரி தட்டுத்தடங்கலின்றி வந்து இனிமையூட்டும். கதைக்கு ஏற்றுற்போல புதுப்புதுத் திருட்டாந்தங்களைச் சந்தர்ப்பத்திற் கேற்பக் கவர்ச்சியாய் கூறுவார். இது எவரது மனத்துக்கும் எட்டாதது. கதைக்குரிய சுலோகங்களையும், விருத்தப்பாக்களையும் அவர் பதசா

ரம் பிரித்துப்பாடி அதனை அழகுற எடுத்துச்சொல்லும் நுட்பம், பெரியபெரிய பண்டிதர்களையெல்லாம் திகைக்க வைத்து விடும். பெரும்பாலும் நன்ருகக் கற்றுணர்ந்த தென்மொழிப் புலவர்கள் வடமொழிப் புலவர்கள் கூட்டங்களே அவருடைய கதையில் சூழ்ந்திருப்பர். மக்கள் அனைவரும் அவருடைய கதையைக் கேட்டு நெக்குருகித் தாரைதாரையாகக் கண்ணீர் உகுப்பர்.

● அவர் எங்கேனும் இசைக்கச்சேரிகள் செய்யச் சென்ருல் அங்கு இசைவினிகையும், சிவகதையும் மாறி மாறிநடக்கும். கல்யாண வீடுகளில் இன்ன கதை நடக்கலாம், இன்னகதை நடத்தல் ஆகாது என்று இக்காலம் கூறுகின்ருர்களே அந்த மாதிரியான சம்பிரதாயம் அவர் காலத்திலே இல்லை. எந்தக் கதையை எடுத்துக் கொண்டாலும் அது ஒரு சுபமாகவே எல்லோருடைய உள்ளத்திலும் தோன்றும். அவர் வாக்கிஞல் எந்தக் கதையை எந்தச் சந்தர்ப்பத்தில் எங்கு நடத்திஞலும்சரி, அது மங்களகரமாகவே இருக்கும். கதை நடத்திய இடம் க்ஷேமத்தையே பெறும் என்பதில் அனைவரும் உறுதியாக நம்பி இருப்பர். அவருடைய கச்சேரி அல்லது கதை எதுவாயினும் நடந்து முடிந்துவிட்ட பின்பும் மக்களின் கூட்டம் கலைந்து விடாமல் வெகுநேரம் வரை கச்சேரி நடந்த இடத்திலேயே குழுமி உட்கார்ந்து கொண்டே இருப்பர். மகாவைத்தியநாத சிவன் எழுந்துசென்ற பிறகும், வெகுநேரம் சென்றுதான் கூட்டம் மெதுவாகக் கலையு



மகா வைத்தியநாத சிவனுல்

வழிபாடு செய்யப்பட்ட நடராசர் திருவுருவம்

மென்றால் அந்த இசை திறத்தையும், கதைசெய்யும் சிறப்பையும் எவ்வாறுதான் எடுத்துப் போற்றுவது! ஆஹா அற்புதம்!

● அவர் வையச்சேரி கிராமத்திலே உள்ள தமது வீட்டுத் திண்ணையிலே மாலை நான்கு மணியளவில் உட்கார்ந்து தம்புராச் சுருதியோடு அறுபத்து மூவர் களின் சரித்திரங்களில் ஏதேனும் ஒன்றை எடுத்துப் பொருள் கூறிக் கதை செய்வார். அங்கு இசை நிரம்ப வும் கதைக்குரிய வசனம் குறைவாகவும் இருக்கும். நூற்றுக்கணக்கான மக்கள் தெருவாசலிலே உட் கார்ந்து கதையைக் கேட்டு இன்புறுவார்கள். மாலை ஐந்து அல்லது ஐந்தரை மணியளவில் கதையை முடிப் பார். அவ்வாறான முறைகள் மகாவைத்தியநாத சிவனுக்கு இசை சம்பந்தமான சாதக பலத்தையும், இயல் சம்பந்தமான ஞாபக வளர்ச்சியையும் வளரச் செய்து வந்தது.

● அவர் தமது நாற்பத்து மூன்றாவது வயதிலே திருவையாற்றை வாழுமிடமாகக் கொண்டார். திருவை யாற்றிலே பாவாசாமி அக்கிரகாரத்தின் மேற்குக்கோடி யிலே வடக்குச் சாரியிலே தெற்குப் பார்த்த இரண்டு வீடுகளை வாங்கினார்; அவற்றுள் ஒரு வீட்டிலே தம் தமையனார் இராமசாமி சிவனுடன் அவரும் இருந்து வந்தார். மற்றொரு வீட்டிலே சிறந்த நடராஜ மூர்த்திப் படத்தையும், தேவகோட்டை நகரத்தாரால் சன் மானிக்கப்பெற்ற அறுபத்து மூவர் படத்தையும் வைத்துப் பூசை செய்து வந்தார்; அங்கு ஒவ்வொரு

நாள் மாலையும் பசனையும் சிவகதையும் செய்து பக்திப் பரவசராகி வந்தார்.

● திருவையாற்றிலே அப்பொழுது இசையில் மகா மேதையாக விளங்கி வந்த பட்டினம் சுப்பிரமணிய ஐயரும் வாழ்ந்து வந்தார். பிரணதார்த்திகரர் சுவாமி கோயிலின் மேலக்கோபுரத்தின் அருகிலுள்ள ஒரு வீட்டிலே வசித்து வந்தார். திருவையாற்றிலுள்ள எல்லா மக்களுக்கும் பட்டினம் சுப்பிரமணியஐயர் பால் அளவிறந்த அன்பும், அபிமானமும், நன்மதிப்பும் உண்டு. மகாவைத்தியநாத சிவன் திருவையாற்றில் வாழ்ந்து வந்த அந்நாள் முதல் அவருடைய இசையையும், சிவகதையையும், பசனையையும் சுவைத்து வந்த ஏராளமான மக்கள் வெயில், மழை, காற்று, பனி ஆகிய அவைகளைப் பொருட் படுத்தாமல் அவருடைய தெருவில் இடங்கொள்ளாமல் கூடிக்குழுமி விடுவார்கள். அத்துணை மக்களும் அவருடைய இன்னிசையையும், சிவகதையையும் காது குளிரக் கேட்டுப் பூரித்துப் போவார்கள். அவரால் அவ்வூர் மக்கள் எக்காலத்தும் இசையின்ப உணர்வு கொண்டே வாழ்ந்து வந்தனர்.

● மகாவைத்தியநாத சிவனும் பட்டினம் சுப்பிரமணிய ஐயரும் நேரில் அடிக்கடி சந்தித்துக்கொள்வதில்லை. ஆயினும் ஒருவர் மீதொருவர் அன்பும் அபிமானமும் உள்ளவர்களாவே திகழ்ந்தனர். ஏதோ சில நாள் பிரணதார்த்திகரர் சுவாமி தரிசனம் செய்யும் போது அபூர்வமாக இருவரும் சந்தித்துக் கொள்வார்கள். இருவரும் முகமலர்ச்சி கொள்வார்கள்.

க்ஷேமமா! என்று ஒருவர்க் கொருவர் விசாரிப் பார்கள். அதற்குமேல் பேச்சிராது. ஆனால் அவர்களு டைய மாணவர்கள் மட்டும் தம் தம் குருவினுடைய இசை ஞானமே சிறந்தது என்று ஆணவத்துடன் பேசி வருவார்கள். அம்மாணவர் கூற்று பெரியவர்களுக்குத் தெரியாது.

● மகாவைத்தியநாத சிவன் திருவையாறு வந்த பிறகு தம் தகப்பனாராகிய பஞ்சநத ஐயரென்ற துரை சாமி ஐயர் செய்தது போலச் சப்தத்தான விழாவில் ஸ்ரீ பிரணதார்த்திஹர சுவாமியுடன் எல்லாத் தலங்களுக் கும் நடந்து செல்வதுண்டு. சப்தத்தானம் என்பது ஏழு ஊர்களைக் குறிக்கும். [திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிக்குடி, திருக்கண்டி யூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் (தில்லை ஸ்தானம்) என்பன] திருவையாற்றிலிருந்து சுவாமி புறப்பட்டு முறையே ஒவ்வொர் ஊரிலும் சென்று அங்குள்ள சுவாமியும் சேர்ந்து கடைசியாகத் திரு நெய்த்தானம் என்ற தில்லைஸ்தானத்திலே மூர்த்தங் களெல்லாம் எழுந்தருளி இருக்கும். அப்போது மகா வைத்தியநாத சிவன் காவேரி மணலிலே ஏராளமான மக்கள் தம்மைப் புடை சூழ்ந்திருக்க மனம் உருகி அபாரமான இசை மழை பொழிவார்கள். என்னே ஆனந்தம்! இனி எக்காலமும் அவ்விதமான ஒரு வாய்ப்புக் கிட்டாது.

● மகாவைத்தியநாத சிவன் இன்னிசையில் பட்டி னம் சுப்பிரமணிய ஐயருக்கு அளவிடற்கரிய ஈடுபாடும்

மதிப்பும் உண்டு. அவரிடம் தனியான அன்பு உடைய வராக விளங்கினுர். அதனுல் சப்தஸ்தானவிழா நாளிலே மகாவைத்தியநாதசிவனேடு தாமும் சேர்ந்து, சுவாமி பின்னுலே உள்ள பஜனைக் கோஷ்டிகளோடு பாடிச் செல்வதுண்டு. இத்தருணங்களிலே அவ்விருவரும் அதிகக் களிப்புடன் நட்புறவோடு விளங்குவார்கள். அவ்விருவரின் இசையைக்கேட்டு இன்புறல் வேண்டி ஏரளமான மக்கள் சுவாமி கூடவே வருவார்கள். இது ஒரு இன்பக் காட்சியாகத் தோன்றும்.

● மகாவைத்தியநாத சிவன் ஒவ்வொரு நாளும் சிவபூசை சூதசம்ஹிதைப் பாராயணம் ஆகியவைகளைத் தவருமற் செய்து வருவார். ஏதேனும் ஒரு நாள் அவற்றைச் செய்தற்கு இயலாமல் போய் விட்டால் அன்று முழுதும் உபவாசமிருந்து விடுவார். அதாவது பட்டினியாக இருந்து விடுவார். ஓர் உத்தரணிச்சலமும் உட்கொள்ளமாட்டார். சிவபூசையின் போது எத்துணை வகைப் புட்பங்களிருந்த போதினும் வில்வதளம் இல்லாமல் பூசை செய்யமாட்டார். அவருக்கு வில்வதளம் (வில்வதளம் என்பது ஒரு காம்பில் மூன்று இலைகள் கொண்டது) ஒன்றினுலேயே சிவார்ச்சனை செய்வதில் மிக விருப்பமுண்டு. அடுத்த படியாகப் புட்பங்களிலே தும்பைப் புட்பத்தினுல் அர்ச்சனை செய்வதில் மகிழ்ச்சியுறுவர்.

● மகாவைத்தியநாத சிவனிடம் இசை கற்பதற்கு விருப்பங் கொண்டு பல இசை மாணவர்கள் அவரிடம் மாணுக்கராக வந்திருந்தனர். அவர்களில் எவரும்

மகாவைத்தியநாத சிவனுக்கு வேட்டி துவைத்தல் போன்ற பணிகளைச் செய்தலாகாது. சிவபூசைக்குரிய வில்வதளம் எடுத்தல், தும்பைப்பூ எடுத்தல், சுவாமி அபிடேகத்திற்குரிய பாத்திரங்களைச் சுத்தப்படுத்தி வைத்தல் ஆகிய இவற்றை மட்டும் செய்யலாம். வேட்டியைத் தாமே கூடிய மட்டும் துவைத்துக்கொள்ளுவார். சில வேளைகளில் அவருடைய மனைவி காமாட்சியம்மாள் ஆசாரமாகத்துவைத்துக் கொடியில் உலர்த்துவார்.

● அவரிடம் இசைபயிலும் மாணவர்கள் தாமே பார்த்துப் பார்த்து வீட்டை ஒட்டடை போக்குவார்கள். படங்கள், இசைக்கருவிகள் இவைகளை அன்றுடம் துடைத்து அத்தூசுகளைப் போக்கிச்சுத்தம் செய்வார்கள். சிலசமயம் விளைவுக்காலத்தில் வயல்களுக்குக் கண்காணம் பார்க்கச் சென்று வருவார்கள். வீட்டிலே அவ்வப்போது பல இடங்களிலும் பரந்து கிடக்கும் சாமான்களை அந்தந்த இடங்களிலே ஒழுங்கு பெறச் செய்வார்கள். கடைகளுக்குச் சென்று அவசியமான பொருளை வாங்கி வந்து உதவி வருவார்கள். அவ்வாறன ஒவ்வொரு வேலையையும் ஒவ்வொரு இசை மாணவரும் இராமசாமி சிவனிடம் கேட்டுச் செய்வார். அவர் கட்டளையின்றி மாணவர்கள் தன்னிச்சையாக அதனைச் செய்தல் கூடாது. மகாவைத்தியநாத சிவன் மாணவர்களை வலுக்கட்டாயமாக எந்த வேலையையும் செய்யும்படி ஏவமாட்டார்.

● மகாவைத்தியநாத சிவனைக் குருவாக ஏற்றுப் பாடம் பயில வரும் எல்லா மாணவருக்கும் இராமசாமி

சிவனே பாடம் சொல்லுவார். எல்லா மாணவரையும் ஒன்று போல உட்காரச் செய்து ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் என்று எடுத்துக்கொண்டு பாடம் சொல்லுவதில்லை. கோயிலுக்குத் தரிசனம் செய்யச் செல்லும் போது வழியிலே ஒரு மாணவனுக்கும், சிவாமி தரிசனம் செய்து விட்டு வீடு திரும்பி வரும் வழியில் வேருெரு மாணவனுக்கும், சில சமயம் குளித்து விட்டு வேட்டியைத் துவைக்கும் போது மற்ருெரு மாணவனுக்கும், (வேட்டியைத் துவைக்கும் போது பாடத்திற்குத் தக்கப்படி தாளமிடுவது போல வேட்டியைத் துவைப்பார்.) வாய்க்கால், குளக்கரை, ஆறு, வயல் முதலிய இடங்களுக்குச் செல்லும் போது சில மாணவருக்கும் இவ்வாருகக் கிடைக்கும் நேரங்களிலெல்லாம் மாணவரின் தகுதிக்கேற்பப் பாடங்களைப் பாடிக் காண்பித்தும், இசை நுட்பங்களை எடுத்துக்கூறியும் போதிப்பார். இசைப் பாடத்தின் நுட்ப அமைதி அம்மாணவனுக்குக் கைகூடும் வரையில் போதிப்பதில் அவர் போன்ற திறமுள்ளோர் அக்காலம் எவருமிலர். மாணவருக்குச் சந்தேகமின்றி மனத்தில் பதிவு ஆகும் வரைப் பாடத்தைப் பன் முறையும் தெளிவாக எடுத்து விளக்குவார். அவ்வாறு பன்முறையும் போதிப்பதில் அவரிடம் சோம்பல் என்பது வாராது. மாணவருக்குப் பாடம் சொல்லுவதால் தமக்கு மிகுந்த சிறமமாக இருக்கிறதே என்று முகங்கோணுதல் அவரிடம் கிடையாது. தம் மனேசாட்சிக்கு விரோத மன்னியில் மாணவருடைய நலன் கருதி எவ்வித துன்பத்தையும் பொறுத்துக்கொண்டு பாடம் சொல்லுவார். அது அவர்களிடம்

காணப்பட்ட தனியான குணநலனாகும். இவ்வித பெருங்குணங்களை யாரிடமும் காண இயலாது.

● நான் (வாசுதேவநல்லூர் பல்லவி சுப்பையா பாகவதர்) அவரிடம் மாணவனாக அமர்ந்து இசை கற்று வரும்போது இராமசாமி சிவன் ஒரு நாள் நெல் சாகுபடியைக் கண்காணம் பார்ப்பதற்காக என்னை வயலுக்கு அனுப்பினார். நான் கண்காணம் பார்த்து வரும்போது மத்தியானம் இரண்டரைமணி ஆகியும் உணவு கொண்டு வருவதாகச் சொன்ன இராமசாமி சிவன் ஆகாரம் எடுத்து வரவில்லை. எனக்கோ பசி தாங்கமுடியவில்லை; சிறிது நெல்லைப்போட்டுக் களத்து மேட்டுக் கடையிலுள்ள வாழைப்பழத்தார் ஒன்று வாங்கினேன். நானும் சாப்பிட்டு விட்டு அங்கு வேலை செய்பவர்களுக்கும் கொடுத்தேன். மாலை சுமார் மூன்று மணிக்கு மேல் என் ஞாபகம் வந்த இராமசாமி சிவன் உணவை எடுத்துக் கொண்டு வேகமாக வந்தார்; என்னிடம் "பசித்திருப்பாய், சீக்கிரம் உணவை உட்கொண்டு பசியைத் தீர்த்துக்கொள்" என்றார். நான் அவரிடம் "எனக்குப்பசியில்லை, களத்து மேட்டுக் கடையிலிருந்து பழங்கள் வாங்கி நானும் இங்கு வேலை செய்பவர்களும் சாப்பிட்டு விட்டோம்," என்று கூறினேன். "எதைக்கொண்டு பழம்வாங்கினாய்," என்றார். "ஏன்! நமது நெல்லைப் போட்டு வாங்கினேன்," என்றேன். "உன்வீட்டு நெல்லாக இருந்தால்இப்படிப் போட்டு வாங்குவாயா!" என்றார். நான் சிறிதும்யோசனையின்றி "உங்கள் வீட்டுப்பிள்ளைகளாக இருந்தால்

இப்படிப் பட்டினிப் போடுவீர்களா!'' என்றேன். அவருக்குக் கோபம் வந்து வீட்டிற்குப் போய் விட்டார். எனக்குப் பயம் உண்டாயிற்று. படிக்க வந்த இடத்தில் இவ்வாறு நேர்ந்து விட்டதே! இனி என்ன நடக்குமோ என்ற துயரத்தில் நானும் வீடு வந்து சேர்ந்தேன். இரண்டு நாள் சென்று என் குருவாகிய மகாவைத்திய நாத சிவன் இது பற்றி விசாரித்தார்; நானும் உள்ளது உள்ளபடியே கூறினேன். பிறகு என் மீது குற்றமில்லை என்பதை வீட்டிலுள்ளவர்களிடம் கூறிவிட்டார். மகா வைத்தியநாத சிவன் என்னிடம் அன்பு கொண்டு விட்டதால் யாராலும் எதுவும் செய்ய இயலவில்லை. பாடங்கள் தொடர்ந்து சரியாகவே நடந்து வந்தன. (இந்த நிகழ்ச்சியின் விவரங்கள் **இசை வானத்தில் பல்லவி சுப்பையாபாகவதர்** என்ற நூலில் வெளி வரும்.)

● நான் (பல்லவி சுப்பையாபாகவதர்) அவர்களிடம் இசை மாணவனாகச் சேர்ந்து பயின்று வந்த காலத்து அங்கு நடக்கும் பசனைகளில் சேர்ந்து பாடி வந்தேன். என்னுடைய ஏழ்மை நிலைக்கிரங்கி அக்கிரா மத்தார் பலர் சேர்ந்து என்னிடம் ஏழு ரூபாய் கொடுத்து வேஷ்டியும், விரித்துக்கொள்ள சமுக்காளமும், தலைக்கு ஒரு தலையணையும் வாங்கிக்கொள்ளும்படி கொடுத்தார்கள். அந்த ரூபாயை என் குருநாதரிடம் கொடுக்கவும் மனமில்லை; வைத்துக்கொள்ளவும் இடமில்லை. அவர்கள் வீட்டில் விசேஷ காலங்களுக்கு ஏற்றுவதற்காக உள்ள கண்ணாடிச் சரவிளக்கின் உள்ளே மறைத்து வைத்து விட்டேன்; சில நாட்களில் அந்த ரூபாயைப்

பற்றிய சிந்தனையற்று மறந்து விட்டேன். தை மாதப் பிறப்பை முன்னிட்டு வீடு முழுவதும் வெள்ளையடிக்க ஆரம்பித்தார்கள். அப்போது அவ்விளக்கை சாக்கிரதையாக இராமசாமி சிவன் கழற்றிக் கீழே இறக்கினார். அதனுள் ஏழு ரூபாய் இருந்ததைக் கண்டு வியந்தார். எல்லோரிடமும் விசாரித்தார். ஏனைய மாணவர்களைப் போல எனக்கும் தெரியாதென்று கூறி விட்டேன். பிறகு பல நாட்கள் சென்று அச்செய்தியை மகாவைத்தியநாத சிவனிடம் சமயம் பார்த்துக்கூறினேன். அவர் என்னிடம் கருணை கூர்ந்து மறுநாளே எனக்கு ஒரு ஜோடி ஐயம்பேட்டைச் சாயவேட்டியும், விரித்துக் கொள்ள ஜமுக்காளமும், போர்வையும், தலையணையும் வாங்கித்தர இராமசாமி சிவனிடம் கூறினார். அதன் படி யாவும் பெற்றுக்கொண்ட நான் தொடர்ந்து அவரிடம் இசை கற்று வந்தேன். (இந்த நிகழ்ச்சி **இசை வானத்தில் பல்லவி சுப்பையாபாகவதர்** என்ற நூலில் வெளி வரும்)

● நான் (பல்லவி சுப்பையாபாகவதர்) இசை மாணவனாக இருக்கும்போது மகாவைத்தியநாத சிவனோடு வெளியூர் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவ்வாறு வெளியூர் செல்லும் போது அவருடைய பூசைப்பெட்டியை நானே எடுத்துச்செல்வது வழக்கம். ஒரு சமயம் அவர் நாகைப்பட்டினத்திற்கு ஒரு கச்சேரி செய்வதற்காகப் புறப்பட்டார். அப்போது திருவாரூரில் புகைவண்டி மாற வேண்டி இருந்தது. அவர் நாகைப் பட்டினம் செல்லும் வண்டியில் ஏறிக்கொண்டார். நான் அவருடன் சேர்ந்து ஏறாமல் தவறுதலாக

மாயூரம் செல்லும் வண்டியில் ஏறி விட்டேன்; அவரும் கவனிக்கவில்லை. தன்னுடன் உட்காரக் கூசி அடுத்த பெட்டியில் இருப்பதாக எண்ணிவிட்டார். அவர் நாகைப்பட்டினத்தில் இறங்கி என்னை தேடியிருக்கிறார்; நான் காணப்படவில்லை. அவர் கவலையுற்றார். என்றாலும் அவர் கல்யாண விடு சென்று என்னை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்திருக்கிறார். பொதுவாகச் சிவபூசை செய்யாமல் அவர் ஏதும் உட்கொள்ளமாட்டார்; ஆகை யால் அன்று மாலை நான்கு மணிவரை பட்டினியாக வே இருந்திருக்கிறார். நான் நன்னிலம் வரை வந்து, இது மாயூரம் செல்லும் வண்டியென அறிந்து அங்கே யே இறங்கினேன்; மறு வண்டி வந்ததும் அதிலேறித் திருவாரூர் சென்றேன்; அங்கிருந்து வேறு வண்டியேறி நாகைப்பட்டினம் வந்து சேர்ந்தேன். நான் நாகைப் பட்டினம் வந்து சேரும்போது மாலை நாலரை மணியா யிற்று. அங்குச் சென்றதும் கல்யாண வீட்டை விசா ரித்து என் குருநாதரின் முன்பு பூசைப் பெட்டியை வைத்துவிட்டு சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்தேன். நடந்த செய்தியைக் கூறினேன். அவர் கோபியாமல் மிகவும் பரிவுகாட்டி என் நிலைமைகளை விசாரித்து விட்டு உணவு உட்கொள் என்று அன்பு காட்டினார். அதன் பிறகு அவர் குளித்தல், பூசை செய் தல், ஆகாரம் உட்கொள்ளுதல் முதலிய செயல்களைச் செய்தார்கள். அன்று செய்ய வேண்டிய இசை நிகழ்ச்சி நடக்கவில்லை. கல்யாணத்தின் மறுநாள் நடந்தது. (இந்நிகழ்ச்சி **இசை வானத்தில் பல்லவி சுப்பையா பாகவதர்** என்ற நூலில் வெளிவரும்.)

● மகாவைத்தியநாதசிவனும் இராமசாமிசிவனும் இசைகற்கும் மாணவர்பால் மிகுந்த அன்பும் கருணை யும் கொண்டு விளங்குவார்கள். தஞ்சை மாவட்டத் திலே பழமானேரி என்றொரு கிராமமுண்டு. அவ் வூரைப் பழமாறநேரி என்றும் பழமாநகரி என்றும் பலப்படக் கூறுவர். அவ்வூரில் சாமிநாத ஐயர் என்ற ஒருவர் தம் இளம் பிராயத்திலே இசையில் அதிக விருப்பமுடையவராக இருத்தார். அவருடைய தகப்ப னார் சாமிநாத ஐயரை மகாவைத்தியநாத சிவனிடம் அனுப்பி இசைகற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தார். மகாவைத்தியநாத சிவனும் அவருடைய தமையனார் இராமசாமி சிவனும் சாமிநாத ஐயரைத் தம் மாணாக்க னாக ஏற்றுக் கொண்டார்கள். சாமிநாத ஐயர் சிறு வயதுமுதலே கடவுள் பக்தியில் சிறந்தவரானார்; தாம் செய்ய வேண்டிய நித்திய கர்மானுஷ்டானமாகிய சந்தி செபம் முதலியவற்றில் சிரத்தை உள்ளவரானார்; பெரியோர், குரு ஆகியவர்களிடம் மிக்க மரியாதையும் அன்பும் உடையவரானார்; தம்முடைய பிரமசரிய ஒழுக் கம் தவறுதவராயிருந்தார்; அவர் வாய்மையுடையவ ராகவும், ஆசார சீலராகவும் விளங்கினார்.

● ஒருசமயம் இராமசாமி சிவன் தம்முடைய வயலைப் போய்ப் பார்த்து வரக் கிளம்பினார். அவரு டைய வீட்டிலிருந்து வயற்காடு சற்று தூரத்தில் இருந் தது. அப்பொழுது தம் முதல் மாணவராகிய எனக் கும் (வாசுதேவநல்லூர் பல்லவி சுப்பையா பாகவதர்) அடுத்த மாணவராகிய பழமானேரி சாமிநாத ஐயருக் கும் இசையில் முக்கியமான பாடம் சொல்ல விரும்பி

ஞர். அதனல் அன்று மாலை சுமார் நான்கு மணியள வில் நானும் சாமிநாத ஐயரும் இராமசாமி சிவஞேடு வயற்காட்டிற்குச் சென்ருேம். என்னைவிட சாமிநாத ஐயர் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு மூத்தவ ராவார். ஆயினும் நான் மகாவைத்தியநாத சிவனி டம் இசைமாணவனுக வந்து சேர்ந்த பிறகே பழமா னேரி சாமிநாத ஐயர் மாணவராக வந்து சேர்ந்தார். இராமசாமி சிவன் எங்களிருவரையும் வயற்காட்டிற்கு அழைத்துச் செல்லும்போது முக்கியமான இசைப் பாடத்தைப் போதித்து வந்தார். அவ்வாறு போதனை செய்து வரும்போது இருமுறை பாடங்கேட்ட மாத்தி ரத்தால் எனக்கு அவ்விசை நுட்பம் செவ்வனே மன தில் பதிவுஆகி அதை யாதொரு ஐயமுமின்றித் திரும்ப ஒப்புவித்து விட்டேன்.

பிறகு அதே பாடத்தைப் பழமானேறி சாமிநாத ஐயருக்கும் போதித்து வந்தார். பலமுறை போதித் தும் அது அவருக்குக் கைகூடவில்லை. உடனே இராம சாமிசிவன் மௌனமாகச் சிறிது தூரம் நடந்து சென் ருர். ஏனெனின் தாம் கூறிய பாடத்தைச் சாமிநாத ஐயர் மனதில் நினைவு கூர்ந்து தமக்குத் தாமே முயற்சி கொள்ளவேயாகும். சாமிநாதஐயரும் தம்மனத்திற்குள் அவ்விசை யமைதியின் நுட்பத்தினை எத்துணையோ முறை சிந்தித்துப் பார்த்தும் அதுதமக்குக் கைகூடாமை யால் இராமசாமி சிவனை நோக்கி, "நான் எவ்வளவு முயன்றும் அவ்வீசையமைதி என் புத்திக்கு எட்ட வில்லையே! எனக்கு மறுபடியும் அதைத் தெளிவாக்கு தல் வேண்டும்," என்று கேட்டுக்கொண்டார்.

உடனே இராமசாமி சிவனும் அவ்வுண்மையை ஏற்றுக் கொண்டு மனமகிழ்ச்சி கொண்டு அப்பாடம் சாமி நாத ஐயரின் மனதில் பதிவாதலே முன்னிட்டுப் பன் முறையும் அப்பாடத்திணே எடுத்துக்கூறி விளக்கி வந் தார். இராமசாமி சிவன் பன்முறையும் அப்பாடத் திணே உணர்த்தி வந்தும் அவ்விசைநுட்பம் சாமிநாத ஐயருக்குச் செவ்வனே மனத்திற்குப் படவில்லே. அவ் விசைநுட்பம் சாமிநாத ஐயருக்கு எளிமை பெற்று வாராததால் இராமசாமி சிவனுக்குச் சிறிது கோபம் உண்டாயிற்று.

பொதுவாக இராமசாமி சிவனுக்கு மாணவர்கள் வீட்டுவேலே, தோட்டவேலே முதலியவைகளில் அலட் சியமாகவோ தாமதமாகவோ இருந்தால் கோபிப்பார். அல்லாமல், இசை கற்கும்போது மாணவர்களே அவர் கோபிப்பதில்லே. இன்று இல்லாவிட்டால் நாளே அப் பாடம் கைகூடிவிடும் என்று கோபமில்லாதிருப்பார். அப்பேர்பட்டவருக்கு இன்று ஏனே அவரையும் மீறிக் கோபம் வந்துவிட்டது. வயற்காட்டுக்குப் போய் வயலேப் பார்த்துவிட்டு வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருக்கும் சமயமாகும் அது. சாமிநாத ஐய ருக்கு இந்நிகழ்ச்சி நடக்கும் சமயத்தில் இருபத்து மூன்றுவயது நடந்து கொண்டிருந்தபடியால் வயது வந்த அவரைச் சிறு குழந்தைகளேக் கண்டிப்பது போலக் கண்டிக்க இராமசாமி சிவனுல் இயலவில்லே. என்ருலும், கோபத்தை வெளிப்படுத்தி ஆற்றிக் கொள்ளுதலும் வேண்டும், சாமிநாத ஐயருக்கும் அது மனத்தில் தாக்கித் தம் குறையை தீர்த்துக்கொள்ளப்

பயன் படுதலும் வேண்டும். இக்கோபத்தை எவ்வாறு வெளிப்படுவது என்று யோசிக்க யோசிக்க அவருக்கு மேலும் கோபமுண்டாயிற்று. நாங்கள் (இராமசாமி சிவன், பழமானேரி சாமிநாதஐயர், பல்லவி சுப்பையா பாகவதர்) மூவரும் கிராமத்துத் தெருவில் நுழைய அரை பர்லாங்கு தூரமே இருக்கும். அதுவரை இராம சாமி சிவன் கூறிய அப்பாடத்தை பழமானேரி சாமி நாத ஐயர் கவனித்து மனப்பாடமாகக் கொள்ள வில்லை. என்ருலும் கோபத்துக்கிடையே இராமசாமி சிவன் அவருக்கு எவ்வாறேனும் அப்பாடம் வரல் வேண்டுமே என்ற கருணை உள்ளத்தோடு போதித்துக் கொண்டே வந்தார். அவ்வாறு பாடங்கூறிவந்தவர் திடீரென்று "சாமிநாதா" என்று அழைத்தார். உடனே சாமிநாத ஐயர் "ஏன்" என்று கேட்டார். உடனே சாமிநாத ஐயரை நோக்கி, "உன்னுடைய [1]தூலம் பெருகுகிறதேயொழிய [2]சூட்சுமம் பெருக வில்லையே என்று கூறித் தம்முடைய கோபத்தை ஒரு வாறு ஆற்றிக்கொண்டார். சாமிநாத ஐயரும் தம் குரு நாதர் பன்முறை போதித்தும் தமக்கு அதன் நுட்பம் புலனுகவில்லையே என்று வருந்தினுர். குருநாதர் தம் மை வெளிப்படையாகக் கண்டித்தற்கு இயலாமல் மறைமுகமாகக் கண்டிக்கிருர் என அறிந்து தம்முடைய பாடத்தில் கவனம் செலுத்தலானுர்.

● மகாவைத்தியநாதசிவன் இசைவினிகை செய்யுங் காலத்து மக்களெல்லோரும் அவர்களை இது பாட வேண்டும் அது பாட வேண்டும் என்று கேட்க மாட்

1. தூலம் — சரீரம். 2. சூட்சுமம் — புத்தி.

டார்கள். அவர் இசைத்து வரும் அந்தத் தேவகானு மிருதத்தைப் பருகிப் பருகி மகிழ்ச்சி வெள்ளத்திலே மூழ்கிக் கிடப்பார்கள். அவருடைய மிகு சுவையான இன்னிசையைக் கேட்டுக் கொண்டிருக்கும் வரை இது வேண்டும் அது வேண்டும் என்ற உணர்ச்சியே அவர் களை விட்டு அகன்றுவிடும். இக்காலத்து இசையானது மக்களின் உள்ளத்தில் பதிவை யுண்டாக்காததால் மக்கள் தமக்குத் தெரிந்த, தமக்கு வேண்டிய தொன்றைப் பாடிவிட்டால் அதைக்கேட்டு மகிழ்ந்து விடுகிருர்கள்.


● மகாவைத்தியநாத சிவன் தாம் சிவபூசை செய் யுங்காலத்துத் தம் மந்திரோபதேச குருவாகிய கோடக நல்லூர்ச் சுந்தர சுவாமிகளின் உபதேசக் கிரமப்படி தம் தலையிலும், காதுகளிலும், கைகளிலும், கழுத் திலும் உருத்திராக்கங்களை ஆபரணமாக அணிந்து கொண்டு உருத்திரம், சகமம், புருடசூக்தம் ஆகிய வேத மந்திரங்களைச் சொல்லி அபிடேகித்தலும், சுத்த சலம், மாப்பொடி, மஞ்சள்பொடி, நல்லெண்ணெய், தயிர், நெய், பால், தேன், இளநீர், பன்னீர், குங்குமப்பூ நீர், பச்சைகற்பூரநீர், பஞ்சாமிருதம், சந்தனம், விபூதி, சுத்தஅன்னம் ஆகிய பதினறுவகை அபி டேகங்களையும் முறைப்படிசெய்து, வில்வதளம் தும்பை மலர் ஆகிய அவைகளால் அர்ச்சனைகள் புரிந்து சிவத் தியானம் செய்து அப்படியே மனம் ஒன்றிவிடுவார்.

● மகாவைத்தியநாத சிவனின் சிவபூசையில் பல சாளக்கிராமங்கள் இரா. அவர் ஏகலிங்கார்ச்சனையே

செய்வார். எனவே ஒரு சிவலிங்கத்தில் கவசம் செய்து அது நிற்பதற்கு ஏற்றாற்போலப் பீடமமைத்து இருக்கும். அவருடைய சிவபூசையில் தாரா பாத்திரம் இருக்கும். பதினாறு வகை அபிடேகத்தை அவர் செய்த போதிலும் உருத்திரம் சமகம் புருடசூக்தம் ஆகிய மந்திரங்கள் முடியும் மட்டும் சிவலிங்கத்தின் மேலே இடைவிடாமல் தாராபாத்திரத்திலிருந்து சலம் விழுந்து கொண்டே இருக்கும். அவர் பூசை செய்யும் சிவலிங்கமானது சுமார் ஒரு கை முஷ்டி அளவுள்ளதாக இருக்கும்.

● அவர் மாலையில் சந்தியாவந்தன செபதபங்களை முடித்துக்கொண்டு சிவலாயம் சென்று சிவதரிசனம் தவறாது செய்வார். அப்பொழுது கடவுள் திருமுன்பு ஒரு கீர்த்தனம் அல்லது தேவார திருவாசகம் ஒன்றை மனம் கனிந்து பாடுவார். அவருடைய இசையைக் கேட்பதற்காகவே சிவாலாயத்தில் அவர் தரிசனம் செய்யும் போது ஏராளமான அன்பர்கள் கூடி ஆவலோடு நிற்பார்கள். அவர் எந்த ஊருக்குச் சென்றாலும் அங்குள்ள திருக்கோயில் சென்று சிவதரிசனம் செய்து துதிப்பாடல் பாடுவது தவறாத செயலாகும்.

● மகாவைத்தியநாத சிவன் காலை நாலரைமணி அல்லது ஐந்து மணியளவில் படுக்கைவிட்டு எழுந்து உட்கார்ந்து சிறிது சிவத்தியானம் செய்வார். பின்பு ஒரு தேவார திருவாசகத்தை இராகத்துடன் இசைத்துத் துதிசெய்வார். பிறகு எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, குளித்துவிட்டு மடியுடுத்திக் கொண்டு, காலைச் சந்தியாவந்தன செபங்களை முடித்



மகா வைத்தியநாத சிவன் செய்துவந்த
சிவபூசையை
அவருடைய பேரர் **திரு. சுந்தரராசன்**
செய்துவருகிறுர்

துக் கொள்வார். அதன் பிறகு மந்திரசெபங்களை உபதேசம் பெற்றுக்கொண்ட முறைப்படி செய்வார். அவைகளெல்லாம் காலை ஒன்பது மணியளவில் முடிவுறும். அதன் பின்பு சிற்சில இசை சம்பந்தமானதும், தமிழ் சம்பந்தமானதும், வடமொழி சம்பந்தமானதும், சிவபரமானதும் ஆகிய பல செய்யுட்களையும் சுலோகங்களையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுவார்.

பதினொரு மணியளவில் மாத்தியானிகம் (உச்சிவேளையில் செய்யும் அனுட்டானம்) செய்துசெபங்களை முடித்துக் கொண்டு, சூதசம்ஹிதைப் பாராயணஞ் செய்து முடிப்பார். பின்பு சிவபூசையை முறைப்படி வேதோக்தமாக மனதூன்றிச் செய்வார். அப்பூசையைச் செய்யுங் காலத்துப் பூசைஅறையிலுள்ள நடராஜாவின் திருவுருவப் படத்திற்கும், அறுபத்து மூன்று நாயனுர் திருவுருவப் படத்திற்கும் சந்தன குங்குமம் சாற்றிப் புட்ப மாலையணிவித்துப் பூசித்துச் சில தோத்திரப்பாக்களைப் பாடுவார். உச்சிவேளையில் அதாவது ஒன்றரை மணியளவில் மத்தியான உணவை உட்கொள்ளுவார். அதன் பிறகு சிவசம்பந்தமான சிலநூல்களைப் படித்துப் பார்ப்பார். அதிலுள்ள மிக முக்கியமான சில செய்திகளை மனத்திலிருத்திக் கொள்வார்.

பின்பு மூன்று மணி சுமாருக்குத் தம் மேல் வேட்டியைவெற்றுத் தரையிலே விரித்துத் தலைக் கட்டையைத்தலைக்கு உயரமாகவைத்துச் சிறிது கீழேபடுத்துச் சிரமபரிகாரம் செய்துகொள்ளுவார். உறக்கம் கொள்ள மாட்டார். பகலில் உறங்குவது அவர்பால் இல்லை.

கண்ணை மூடிக்கொண்டு சிலசெய்திகளை ஆலோசித்து அதிலுள்ள அரிய செய்திகளை எண்ணி அதன் உயர் சிறப்பைச் சிந்தித்து மௌனமாக இருப்பார். தமக்குத் தோன்றிய அந்த அரிய பெரிய செய்திகளின் நுட்பத்தினை உடனே வெளியிடாமல் பன்முறையும் அதைப் பற்றியே சிந்திப்பார். உடனே நான்கு மணியளவில் எழுந்து தம் வீட்டுத் திண்ணையிலே உட்கார்ந்து தம்புராச்சுருதியோடு ஏதாவது ஒரு சிவகதையைச் சொல்லி அதன் இன்சுவையை யாவரும் கேட்டு உணரும்படி செய்வார். பின்பு முறைப்படி ஐந்தரைமணி அளவில் மாலைக்கடன்களை முடித்துக்கொண்டு சந்தி செபங்களை நிதானமாக மனமூன்றிச் செய்வார். பிறகு முறைப்படி கோயிலை வலம் செய்து சிவபெருமானை வழிப்பட்டுச் சந்நிதியிலே உள்ள முருக ஒரு பக்திப்பாடலை இசைத்துப் பணிந்து வீடு திரும்புவார். இரவு எட்டு மணியானதும் பலகாரம் அல்லது உணவை முடித்துக்கொண்டு, இரவு ஒன்பது அல்லது ஒன்பதரை மணிக்குப் படுத்து உறங்கிவிடுவார். இரவில் விழிப்பது அவரிடம் அறவே கிடையாது. அவ்வாருன ஒழுங்கு முறைகளை அவர் ஒவ்வொரு நாளும் தவருது கடைப் பிடித்து ஒழுகி வருவார்.

● மகாவைத்தியநாத சிவன் காலையிலிருந்து இரவு வரை ஒரு நிமிட நேரமும் வீணுகாமல் சுருசுருப்பாக ஒழுகி வரும் ஒழுக்கத்தைக் கூட இருந்து பார்த்தால், ஒழுங்கீனர்கள் கூட நெறியோடு ஒழுக ஆரம்பித்து விடுவார்கள். சிறிது நேரங்கூட இல்லாத அவர் தினமும் புட்பமாலை தொடுப்பது வழக்கம். சுவாமி தரிசனம்

செய்ய, பெரியோரைக்காண, அரசரைப்பார்க்கச் செல்லுங்கால் வெறுங்கையுடன் போகலாகாது என்பது விதி. அதனால் மகாவைத்தியநாத சிவன் தினமும் புட்ப மாலை ஒன்று தொடுத்து, அதைச் சிவன் கோயிலுக்கு எடுத்துச் சென்று சுவாமிக்குச் சார்த்தி வழி படுவது வழக்கம். அவர் மாலை தொடுத்தற்குரியவையாகக் கொண்டவை:— 1. வில்வம், 2. சரக் கொன்றை, 3. சாதிமுல்லை, 4. ரோசாப்பூ, 5. தாமரைப்பூ, 6. அரளிப்பூ வகையில் செங்கழநீர்ப்பூ- வெள்ளையரளிப்பூ - செகப்புஅரளிப்பூ - மஞ்சளரளிப்பூ, 7. நந்தியாவர்த்தம், 8. செம்பரத்தைப்பூ ஆகிய எட்டு வகையாம். வீட்டிலுள்ள நடராஜர் படத்திற்கும் அறுபத்து மூன்று நாயனர் படத்திற்கும் அவரே மாலை தொடுத்துத் தினம் அணிவார்.

● மகாவைத்தியநாதசிவன் உட்காரும் போதும், படுக்கும் போதும், எழுந்திருக்கும் போதும், எங்கேனும் புறப்பட ஆயத்தம் செய்யும் போதும், சிவபூசையின் இடைநேரத்திலும், குளிக்க ஆரம்பிக்கும் போதும், குளித்தலை முடித்துத் தலை துவட்டும் போதும், வேட்டியைத்துவைக்கும் போதும், வேட்டியை உலர்த்தும் போதும், தம் வீட்டினுள்ளேயே உலாவும் போதும், சிறிது தூரம் வெளியே நடந்து செல்லும் போதும், உணவு உட்கொள்ள ஆரம்பிக்கும் போதும், இடைவெளியுள்ள பல சமயங்களிலும் அவர் "சங்கரா - சம்போ", என்ற சொற்களை அடிக்கடி உபயோகித்துக் கொண்டே இருப்பது வழக்கம். அவர் வாயால் அச்சொல்லைக் கூறும்போது செவி குளிர்ந்து பேரின்பத்தைத்தரும்.

● மகாவைத்தியநாத சிவன் இசைவினிகை செய்யும்போது கீர்த்தனைகள், பல்லவி நிரவல் சுரங்கள், தேவார திருவாசகம் ஆகிய இசைப்பாடல்களைப் பாடும்போது தாளமிடுதலைத் தமது கைவிரல்களின் துணைக்கொண்டேயே போடுவார். இக்காலம்போல் இரு கைகளையும் சேர்த்துத் தட்டுதலும், தொடையில் ஓங்கி ஓங்கித் தட்டுதலும், வலியெடுப்பது போலப் போடுதலும், தாளமிடும் போது வியர்த்துக் கஷ்டப்படுவது போலப்போடுதலும், தாளத்தை அடித்துப் போடுவதால், அச்சத்தம் பாட்டின் சுவையையும் இசையின் ஒலியையும் கெடுப்பது போலத் தாளமிடுதலும் அவரிடத்தில் நிகழாது.

● அவர் இசைவினிகை நடத்துதற்குத் தாம் உட்கார்ந்ததும் தம் சாரீரம் சுருதியிற் சேருதற்குச் சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுவதும், அடிக்கடித் தம்புராவைச் சுருதி பார்த்து நேரத்தைக் கடத்துவதும், சாரீரம் சுருதியிற் சேருதற்காக அடிக்கடித் தொண்டையைக் கனைத்துக் கொள்ளுதலும், கச்சேரியின் இடையே வெந்நீர், பால், காபி, சோடா, கலர் போன்ற பானவகைகளை அருந்துதலும், ஒருபாட்டைப் பாடியதும் அடுத்து எதைப்பாடுவது என்று யோசித்துத் தயங்கலும், தாம் பாடும்போது மக்கள் தலையை ஆட்டுகிறுர்களா என்று அவர்களை அடிக்கடிப் பார்த்தலும் மகாவைத்தியநாதசிவன்பால் அறவேகிடையாது. உட்கார்ந்து பாட ஆரம்பித்ததிலிருந்து கச்சேரி முடிவுறும்வரை அவருடைய பாட்டுப் பம்பரம்போற் சுழன்று கொண்டேயிருக்கும். எடுத்த எடுப்பிலேயே

பாட்டு நல்ல ஜீவனோடு களை கட்டி அவையை மகிழ்ச்சி மயமாக ஆக்கிவிடும். அவர் கச்சேரியில் தம்புரா, பிடில், மிருதங்கம் இவைகள் அடிக்கடி சுருதி கலைவ தில்லை. அது வாத்தியங்களைக் கையாளுபவரின் கை இலாகவமாகும். சாமானியமாக வாசித்தாலும் அவ் வாசிப்புப் பிரமாதமாக இருக்கும்.

● மகாவைத்தியநாத சிவன் எண்ணெய் தேய்த்துக் குளித்த நாளன்று கச்சேரி செய்யமாட்டார். ஆகாரம் உட்கொண்ட பிறகும் கச்சேரி செய்வதில்லை; அவர் தம்முடைய உடம்பு கை கால்களைப் பிடித்து விடுதல் போன்ற பழக்கத்தை மாணவர்களிடம் விடுவது இல்லை தலைக்கு வேறொருவர் எண்ணெய் தேய்த்துவிடுதல் போன்றவைகளெல்லாம் அவருக்கு அறவே பிடிக்காது. அடிக்கடி தமக்கு குற்றேவல் செய்யும்படி மாணவர்களிடம் தாமும்சொல்லமாட்டார் பிறர் ஏவுவது அவருக்குத் தெரிந்தாலும் பிடிக்காது. மாணவர்கள் இசைப்பயிற்சியில் கருத்தூன்றி நிற்கிறார்கள் என்றால் மிகுந்த மகிழ்ச்சியடைவார். தம்மிடம் இசைகற்க வந்துள்ள மாணவருக்குத் தாம் பாடம் சொல்லாவிடினும் அவர்களுடைய கலையறிவு எவ்வாறு தரம் பெற்றிருக்கின்றது என்பதை மட்டும் அறிந்து வருவார்.

● இசைவினிகை நடக்கும்போது அவையோர்கள் தம்மை மதித்தல் வேண்டுமென்று கருதிப் பக்கவாத்தியங்களாகிய பிடில் மிருதங்கம் வாசிப்போரை அலட்சியப் படுத்தமாட்டார். அவர்களுடைய வாசிப்பு

மிகச் சாதாரணமாக இருந்தபோதிலும் அவர்களுடைய வாசிப்புப்போல யாராலும் வாசிக்க இயலாது என்ற எண்ணம் மக்களுக்கு உண்டாவதுபோல காட்டி விடுவார். வாத்தியங்கள் சுருதியுடன் சேர்ந்திருந்தாலும் அவைகள் சேராதது போன்ற பாவனையைச் செய்து; முகத்தை அடிக்கடி சுளித்து அவையிலிருப்போருக்குத் தமது ஞானமே மிகச்சிறந்தது என்று உணரப் பண்ணுவது போன்ற போலி முறை அவரிடம் அறவே இல்லை. பக்கவாத்தியகாரர்களைத் தம்மோடு அணைத்துச் சேர்த்துத் தமது ஞானத்துடன் ஒன்றும்படி பண்ணிவிடுவார். அத்துணைச் சிறப்புமிக்க குண நலன்கள் யாரிடமும் காண்டலரிது.

● என்னிடம் (பல்லவி சுப்பையா பாகவதர்) ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த மடவார்குளம் முத்தையா என்ற மாணவமணி இசைகற்று நற்றிறம் பெற்றிருந்தார். ஒருநாள் மகாவைத்தியநாத சிவன் திருநெல்வேலி சந்திப் பிள்ளையார் கோயில் எதிரே அமைக்கப்பெற்ற தெருக்கொட்டகையிலே இசை நிகழ்ச்சி செய்து கொண்டிருந்தார். பதினாயிரக்கணக்கான மக்கள் நிரம்பியிருந்தார்கள். அவர் கச்சேரியை முடித்தற்குச் சற்றுமுன்பு அவருக்கு மூத்தவரும், பெருமதிப்புக்குரியவரும், நண்பருமான பிச்சுமணி பாகவதரென்பவர் மடவார்குளம் முத்தையாவை மகாவைத்தியநாத சிவனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்; அதே வேளையில் முத்தையாவும் சிறிது நேரம் பாடித் தங்களது ஆசியைப் பெறுதல் வேண்டுமென்று விரும்பினர்; அதற்கேற்ப மகாவைத்தியநாத சிவனும் தமது பக்க

வாத்தியங்களோடு முத்தையாவைப் பாடும்படி செய் தார். முத்தையா சுரம்பாடும் நற்றிறம் கண்டு அவர் வியப்புற்று, முகத்தில் மகிழ்ச்சி ததும்ப "முத் தையா சுரம் நன்ருகப் பாடுகிருனே! இந்த மாவட் டத்திலும் இதுபோல் சுரம் பாடுகிறவர்கள் இருக்கிருர் களா! இவனது குருயார்!" என்று பிச்சுமணி பாகவத ரிடம் கேட்டார். உடனே பிச்சுமணி பாகவதரவர்கள் தங்களுடைய முதல் மாணவராகிய பல்லவி சுப்பையா பாகவதர்தாம் இவனுடைய குரு. வேறு யாரால் இவ் வாறு நற்றிறத்தினைச் செய்து வைக்க இயலும் என்ருர். விவரம் அறிந்ததும், "அப்படியா! எனது பேரப் பிள்ளையா! பேஷ்! நன்ருகப் பாடுகிருன்," என்று புகழ்ந்து மகிழ்ந்து ஆசியருளினுர். (இந்நிகழ்ச்சி **இசை வானத்தில் பல்லவி சுப்பையா பாகவதர்** என்ற நூலில் வெளிவரும்.)

● மகாவைத்தியநாத சிவன் ஒரு சமயம் சென்னை யில் பல மாதங்கள் தாமதிக்க நேர்ந்தது. அக்காலத்து அவருடன் பலகன தனவான்களும், பல இசையன்பர் களும் அளவளாவி மகிழ்ந்திருந்தனர். யாவரும் அவரு டைய இசையில் தெவிட்டாத விருப்பம் உள்ளவர் களாக இருந்தனர்; அவர்களுடைய ஆற்றுப் பெருக்குப் போன்ற அறிவு மிகுந்த பேச்சு மொழியைக் கேட் பதில் அவாவுள்ளவர்களாக இருந்தனர்; இசைசம்பந்த மாக தங்களுக்குப் புலனுகாத பல நுட்பங்களை அவர் களுடைய வாயிலாகக் கேட்டு மகிழ்வதில் ஈடு பட்ட வர்களாக இருந்தனர். அவர்களுள் சில இசைப் புலவர் களுக்கு நூற்றெட்டுத் தாளத்துள் அதிகமான அட்சரங்

களைக் கொண்ட சிம்மநந்தனத் தாளத்தில் ஒரு பல்லவியை மகாவைத்தியநாத சிவன் வாயிலாகக் கேட்டல் வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. ஒருநாள் அவர் தங்கியிருந்த வீட்டில் நிரம்ப இசைப் புலவர்கள் கூடி இருந்தனர். அன்று இசை சம்பந்த மான பல செய்திகளை ஒவ்வொருவரும் எடுத்துக் கூறி வந்தனர். அப்பேச்சுக்கிடையே பல்லவி சேஷய்யர் என்ற மகா வித்துவான் மகாவைத்தியநாத சிவனிடத் திலே சிம்மநந்தனத் தாளத்திலே ஒரு பல்லவியைப் பாடி, அதில் நிரவல் சுரம் முதலியவற்றை வித்தார மாகப் பாடிக் கேட்கவேண்டுமென்ற அவா உடைய வர்களாக நாங்களிருக்கிறேமென்று கூறினர். உடனே மகாவைத்தியநாத சிவன் தம்புராவை மட்டும் சுருதிக்கு உபயோகித்துக் கொண்டு, கல்யாணி இரா கத்தை நன்ருக ஆலாபனை செய்து தானம் பாடினர். பின்பு ஒரு பல்லவியை அமைத்துக் கொண்டு சிம்மநந் தனத் தாளத்தின் அங்கங்கள் சிறிதும் மாற்றம் அடை யாமல் கையினுல் தாளத்தைப் போட்டுக் கொண்டு அப்பல்லவியை வெகுநேரம் வரை நிரவல் செய்து இசைத்துப் பாடினர். அப்பல்லவியைத் தாம் தங்கி இருந்த இடத்திலே இசைவித்துவான்களின் திடீர் விருப்பதிற்கு இணங்கப் பாடினபடியால் பக்கவாத்தி யங்களாகிய பிடிலும் மிருதங்கமும் இல்லாமலே பாடி ஞர். அங்குக் குழுமியிருந்த ஏனைய இசைப்புலவர்க ளெல்லாம் அவர் பாடி வரும் போது அத்தாளத்தை அவ்வப்போது தங்கள் கையிலிட்டுப்பார்த்து வந்தார் கள். சிறப்பான இசை ஞானமுடைய புலவர்களெல்

லாரும் அவர் பாடியதைக் கேட்டதும் அடங்காத வியப் புக்குள்ளானுர்கள். ஏனெனில் சிம்மநந்தனத்தாளம் நூற்று இருபத்தெட்டு அட்சரங்கள் கொண்டது. பொது வாகத் திரயங்கமாகிய அனுதிருதம், திருதம், லகு என்ற மூன்றங்கங்களையும் செயற்படுத்தும் முறையை யாவரும் அறிவர். ஆனுல் ஷடாங்கத்தில் (ஆறு அங்கத்தில்) வரும் குரு, புலுதம், காகபாதம் ஆகிய இவற்றைப் போடுவதில் ஒவ்வொரு இசைப் புல வருக்கும் கருத்து வேறுபாடுண்டு. அவர்கள் அவ்வங்கங்களை வெவ்வேறு அமைதி கொண்டே விளக்கி வருவர். ஆனுல் மகாவைத்தியநாத சிவன் சிம்மநந்தனத் தாளத்தில் பல்லவி பாடிய போது தான் குரு, புலுதம், காகபாதம் என்ற தாள அங்கங் களை எவ்வாறு அமைப்புடன் இடல் வேண்டுமென் பதை உணர்த்தினுர். அங்குக் குழுமியிருந்த இசைப் புலவர் மணிகளும் ஏனைய சுவைஞர்களும் அவருடைய அபாரமான இசைத்திறமை கண்டு பெரிதும் வியப்புக் கொண்டனர். அவருக்குக் கிடைத்த பட்டமாகிய **'மஹா'** என்ற சிறப்புச் சொல்லானது அவருடைய பெயருக்கு முன்னுல் மிகப் பொருத்தமாகவே இடப் பட்டிருக்கிறது என்று மகிழ்ந்தார்கள். அவரை வெல்லு தல் யாவராலும் இயலாது என்றும், அவரிடம் கடவு ளின் அருள் சக்தி பூரணமாக நிரம்பியுள்ளது என்றும் கூறி மகிழ்ந்து போற்றினர்.

● சிம்மநந்தனத் தாளத்தில் அமைந்த பல்லவி வருமாறு:—

"கௌரீ நாயக கனக ஸபா நாயக
ஹாலா ஹலதர கங்காதர ஹர
ஸ்மரஹர புரஹர சிவகாமீச்வர
சிதம்பரேச்வர நடராஜ மாமவ."

இராகம்: கல்யாணி. தாளம்:- சிம்மநந்தனம்
128-அட்சரங்கள்.

தாளாங்கங்கள்:- 8818 180088 1818 811+

8 8
கா ; ; ; ரீ ; ; ; — கா ; கா மா பா ; ; ; —
கௌ . . . ரீ . . . நா . . ய கா . . .

1 8
தா ; தா நீ — பா ; ; ; தா ; பா ; பா மா கா ரீ —
க . ன . க . . . ச . பா . நா . . ய

1 8 0 0
கா தா பா மா — கா ; ; ; ரீ ; ; ; — சா நீ — சா ரீ —
க . . . ஹா . . . லா . . . ஹ . ல .

8 8
கா மா பா ; தா ; பா ; — மா பா ; பா மா பா தா நீ —
த . . . ர . . . க ங் . கா . த ர ஹ

1 8
ச்ா ; ; ; — நீ ; நீ ; தா ; தா ; ச்ா ; ச்ா ; —
ர . . . ஸ்ம . ர . ஹ . ர . பு . ர .

1 8

நீ தா பா மா — பா ; பா மா தா ; ; ; நீ ; பா பா —
ஹ . ர . சி . வ . கா . . . மீ . ச்வ ர

8 1 1

பா மா கா ரீ கா , மபா ; — மா , ப தா ; — பா , த நீ ; —
சி . த ம் ப . . . . ரே . . . . ச்வ . . . .

+

தா , நி ரீ ; தா ; பா மா கா தா பா மா கா கா மா ரீ —
ர . . . . ந . ட . ரா . ஜ . மா . ம வ

என்ற பல்லவியை நன்ருக வித்தரித்துப்பாடினர். யாவரும் வியந்து களிகொள்ளும்படி நிரவல் செய்து சுரமும் பாடிச்சிறப்பித்தார். கேட்போர் அனைவருக்கும் பக்கவாத்தியமாகிய பிடிலும் மிருதங்கமும் இல்லையே என்றகுறை அவர்களுடைய மனத்திலிருந்து அகன்றது. பக்கவாத்தியமில்லாமல் சபை ரஞ்சகமாக எவ்விதக் குறைபாடுமில்லாமல் இசைத்த அவருடைய சக்தியைப் புகழ்ந்து கொண்டாடினர்கள். அவர்களின்றித் தனித்த முறையில் பாடி அவையோர்களைச் சுவை கொள்ளும்படி செய்வது வேறு எவராலும் இயலாது. அக்காலத்து வித்துவான்கள் யாவரும் அவர்பால் இதனை நன்கு உணர்ந்தவர்களே யாவர். இப்பல்லவியை இன்றும் ஒருவர் பாடுதல் வேண்டுமாயின் வெகு நாட்கள்வரை பயின்ற பின்பே பாடச்சிறிது இயலும்; ஆக, அதுமிகவும் கடினமான இசைநுட்பம் வாய்ந்தது.

● சிம்மநந்தனம் என்ற தாளமானது நூற்றெட்டுத் தாளத்தில் ஒன்றாகும். அத்தாளம் நூற்று இருபத்தெட்டு (128) அட்சர காலங்கள் கொண்டது. தாளத்திற்குரிய அங்கங்கள் ஆறு. அவற்றை ஷடாங்கம் எனக் கூறுவர். இந்த ஷடாங்கம் இரு பிரிவுடையது. முதற் பிரிவில் மூன்று அங்கங்களும் இரண்டாம் பிரிவில் மூன்றங்கங்களும் வருவனவாகும். முதற் பிரிவின் மூன்றங்களுக்குத் திரயாங்கம் என்று பெயர். முதற் பிரிவாகிய மூன்றங்கங்களும் சப்த (ஏழு) தாளங்களுக்கும், முப்பத்தைந்து தாளங்களுக்கும் வரப்பெறும். அவை அனுதிருதம், திருதம், லகு என்னும் பெயருடையவை. அதன் அங்க அடையாளம் பிறை [U] வட்டம் [0] கணை [1] ஆகியவையாகும். இரண்டாம் பகுதியில் வரப்பெறும் மூன்று அங்கங்களும் எழுபத்திரண்டு தாளம், நூற்றெட்டுத்தாளம் முதலியவைகளுக்கு வரப் பெறும். எனவே சப்த தாளங்கள், முப்பத்தைந்து தாளங்கள் ஆகியவை தவிர ஏனைய தாளங்களுக்கு ஷடாங்கத்திலுள்ள முற்பகுதியாகிய த்ரயாங்கமும், பிற்பகுதியிலுள்ள மூன்று அங்கங்களும் சேர்ந்து ஆறு அங்கங்களால் விரவிவரும்.

சிம்மநந்தனம் என்ற தாளத்திற்குத் திரயாங்கத்திலுள்ள அனுத்ருதம் என்ற அடையாளம் தவிர ஏனைய ஐந்து (தாள) அங்கங்களும் வரப்பெறுகின்றன. எனவே திருதம் (0) லகு (1) குரு (8) புலுதம் (ʹ) காகபாதம் (+) என்ற ஐந்து அங்க அட்சரங்கள் இத்தாளத்தில் இடம் பெற்றுள்ளன. முற் கூறிய திரயங்கத்திலுள்ள அனுத்ருதம், திருதம், லகு என்ற மூன்று

அங்கங்களும் 'சசப்தக்கிரியை' எனப்படும். அதாவது தட்டுதலாகிய (அடி) சப்தத்தை உண்டாக்கிய பின் அதன் கிரியைகள் நடக்கும். ஷடாங்கத்தின் பிற்பகுதியாகிய குரு, புலுதம், காகபாதம் என்ற மூன்று அங்கங்களும் 'நிசப்தக்கிரியை' எனப்படும். அதாவது தட்டுதலாகிய அடித்தல் இன்றி அங்க சமிஞ்ஞையால் செய்யப்பெறும் கிரியை வகைகளால் இது வரப்பெறும். நிசப்தக்கிரியைகளாகிய இம்மூன்றினுடைய அடையாளக் குறிப்புக்களும் அதனைப்போட வேண்டிய வகைகளையும் மகாவைத்தியநாத சிவன் எம்முறையில் கொண்டு கையாண்டு வந்தார் என்பது இசையுலகிற்கு மிக்க பயன் தருவதாகும்.

● ஷடாங்கத்தில் குரு என்ற அங்கத்தை நிசப்தக்கிரியையினால் கையாளுதல் வேண்டும். அது எட்டு அட்சரகால அளவுள்ளது. இதனை ஒருகளைச் சவுக்கமாகப் போடும் போது பதினாறு மாத்திரையாகவும், இரண்டு களைச் சவுக்கமாகப் போடும்போது முப்பத்திரண்டு மாத்திரையாகவும், நான்குகளைச் சவுக்கமாகப் போடும் போது அறுபத்து நான்கு மாத்திரையாகவும் காலங்களை அறிந்து தொழிற்படுத்தல் வேண்டும். இந்த அங்கத்திற்குக் குரு என்ற பெயர்க்காரணம்:— குரு என்பவர் பூசனைக் குரியவர். ஆதலால் பூஜிக்கத் தக்கதான சிவலிங்கக் குறியுள்ள பூஜ்யத்தால் - சுன்னத்தால் (வட்டம்) இதை அறியச் செய்தனர். மாணவராக விளங்குபவரும் ஞான பரிபாகத்தால் பின்பு பூஜ்யராதற்கு - குருத்தானம் அடைவதற்கு அருகராதலால் அவரு

டைய சின்னமும் பூஜ்யத்தால்-சுன்னத்தால் (வட்டம்) அறிவிக்கப்பெற்றது. எனவே மாணவ சின்னமாகிய பூஜ்யம் கீழும், குருசின்னமாகிய பூஜ்யம் மேலும் நின்று குரு என்ற அங்க அடையாளத்தை விளக்கிற்று. குருவின் குறியீடு எண்களிலுள்ள எட்டு என்ற எண் போல விளங்கும். '8' இது குருவின் குறியீடாகும்.

● குரு என்ற அங்கத்தைத் தொழிற்படுத்தும் வகையாவன:— குரு என்பது எட்டட்சரக்கால அளவு கொண்டது. இத்தாளம் அங்க சமிஞ்ஞை கொண்டு அறிதல் வேண்டும். இத்தாளாங்கத்தைப் பலவித மாகப் போடுவர். ஆயினும் இங்குக் கூறும் முறை ஆராயத்தக்கது. இதனை மகாவைத்தியநாத சிவன் கையாண்டமுறை வெகு சிறப்பாகும். வலக்கை ஐந்து விரல்களிலே பெருவிரல் நுனியையும் சுட்டுவிரல் நுனியையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். ஏனைய நடுவிரல் மோதிரவிரல் சுண்டுவிரல் ஆகிய மூன்றையும் சேர்த்து நிமிர்த்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறு விரல்களை வைத்துக் கொண்டால் அது சின்முத்திரை வடிவிலே அமையும். அவ்வாறு சின்முத்திரையாக வலக்கையை வைத்துக் கொண்டு நமது இடப்பக்கத்து எதிர் மூலையில் 'தகதக' என்று நான்கட்சர கால அளவு வரை சின்முத்திரையைக் காட்டுதல்வேண்டும். பிறகு நமது வலப்பக்கத்து எதிர்மூலையில் 'தகதக' என்று நான்கட்சர கால அளவுவரை சின்முத்திரையைக் காட்டுதல் வேண்டும். அவ்வாறு நம் எதிரில் இடப்பக்கமும் வலப்பக்கமும் மாணவர்கள் அமர்ந்து பாடம் கேட்பது போலவும், அவர்களுக்குச் சின்முத்தி

ரையினுல் செய்திகளை விளக்குவது போலவும் இது தோன்றும். எனவே (4+4 = 8) எட்டட் சர காலமும் நிசப்தமாக (சப்தமில்லாத செய்கையாக) விளங்கிற்று. சின்முத்திரைக் கிரியையால் இவ்வங்கம் உணரப்படுத லால் 'குரு' என்ற பெயர் வரலாயிற்று.

● ஷடாங்கத்திலுள்ள 'புலுதம்' என்ற அங்கத்தை நிசப்தக்கிரியையினுல் கையாளுதல் வேண்டும். அது பன்னிரண்டு அட்சர கால அளவு உடையது. இவ்வங் கத்தை ஒருகளைச் சவுக்கமாகத் தாளமிடும் போது இருபத்து நான்கு மாத்திரைக்காலமாகவும், இரண்டு களைச் சவுக்கமாகத் தாளமிட்டு வரும்போது நாற்பத் தெட்டு மாத்திரைக் காலமாகவும், நான்குகளைச் சவுக்கமாகத் தாளமிடும் போது தொண்ணூற்ருறு மாத்திரைக் காலமாகவும் அறிந்து தொழிற்படுதல் வேண்டும். இந்த அங்கம் விற்குறியை அடையாள மாக உடையது. இவ்வங்கம் மிக வலிமையுடைய தாகையால் இதை விற்குறி அடையாளத்தால் விளக்கியும், புலுதம் என்ற பெயரையும் இட்டனர். புலுதம் என்ற அடையாளத்தைக் குரு அடை யாளம் போல் இட்டு அதன் தலையிலே ஒரு கோடிடல் வேண்டும். '8' இதுவே புலுதமாகிய அங்கக் குறியீடாகும். இந்தத் தாள அங்கத்தை இசை புலவர்கள் பல வகையிலும் போட்டு வருகின்றனர். இக்குறியீட்டை மூன்று வகையாகக் குறிக்கின்றனர். அதாவது மூன்று என்று ஒரு லக்கமிட்டு அதன் இடது ஓரத்தில் ஒரு கோட்டை இணைத்து அதன் இரு நுனி களையும் வளைத்து வில்போலத் தோன்றச் செய்வதே

பழங்காலத்து அடையாளமாகும். (β— இது போல இருக்கும்) இக்காலம் எட்டு மாதிரி எழுதி அதன் தலையிலே ஒரு சிறு கோடிடப்படுகிறது (8). மகாவைத்திய நாதசிவன் இக் குறியீட்டை  இவ்வாறு இடுதல் வேண்டுமென்பார்.

● புலுதம் என்ற அங்கத்தை தொழிற்படுத்தும் வகையாவன:— புலுதம் என்பது பன்னிரண்டட்சர கால அளவு கொண்டது. இத்தாளத்தை அங்கசமிஞ்ஞை கொண்டே அறிதல் வேண்டும். இப்புலுத அங்கத்தை மகா வைத்தியநாதசிவன் கையாண்ட முறை கவனித்தற் குரியது. வலக்கையின் பெருவிரலை மேலே நிமிர்த்தி, ஏனைய நான்கு விரல்களையும் நன்ருக வளைத்து உள்ளங்கைக்குள் இறுகமடக்கிக் கொள்ளல் வேண்டும். பென்சில் அல்லது ஒரு குச்சியை இறுகப்பிடித்துள்ள தோற்றத்தை வலக்கை தெரிவிக்கும். அவ்வாறு சற்று இடப்பக்கத்தில் 'தகதக' என்று நான்கட்சர கால அளவோடு குத்துவது போலப் பாவித்தல் வேண்டும். அதன் பின்பு நமக்கு நேராக 'தகதக' என்ற நான்கட்சர கால அளவோடு குத்துவது போன்ற பாவனை செய்தல் வேண்டும். அதனையடுத்து நம் வலப்பக்கத்திலே 'தகதக' என்ற நான்கட்சர கால அளவு வருவது போல ஒரு குத்தல் குத்தவேண்டும். இம் மூன்று இடத்திலும் குத்தும் அமைதியைப்பார்த்தால் எழுத்துக்களில் உள்ள ஆயுத எழுத்துப் போல "ஃ" மூன்று இடங்களில் குத்திய பாவனை வரும். இம்மூன்று இடத்தில் குத்திய குத்தின் அளவானது (4+4+4 = 12)

பன்னிரண்டு அட்சர காலத்தை விளக்கும். விற்குறியைத் தோற்றுவிப்பது போல நான்கு விரல்களும் உள் வளைந்து பிடித்திருத்தலும், கட்டைவிரல் மேலே உயர்ந்து இருத்தலும் அவ்வடையாளத்தை விளக்குகின்றது. கைவிரல்கள் நான்கும் வளைந்து உள்ளங்கையோடு இறுகப் பிடித்துள்ளபடியால் இது வலுவினை உணர்த்துவதாகவும் அமைகின்றது. இவ் விதிமுறைப் படியே புலுதம் என்ற அங்கத்தைப் போடுதல் முறையாகும்.

● ஷடாங்கத்திலுள்ள காகபாதம் என்ற அங்கமும் நிசப்தக் கிரியைக்கொண்டே கையாளுதல்வேண்டும். இது பதினாறு அட்சர கால அளவுடையது. இவ்வங்கத்தை ஒரு களைச் சவுக்கமாகத் தாளமிடும் போது முப்பத்திரண்டு மாத்திரைக் காலமாகவும், இரண்டு களைச் சவுக்கமாகத் தாளமிடும் போது அறுபத்து நான்கு மாத்திரைக் காலமாகவும், நான்குகளைச் சவுக்கமாகத் தாளமிடும்போது நூற்று இருபத்தெட்டு மாத்திரைக் காலமாகவும் அறிந்து தொழிற்படும். இது ஷடாங்கத்தில் ஆறுவது அங்கமாகும். இவ்வங்கமானது அங்க சமிஞ்ஞையினாலேயே நடைபெறும். இந்த அங்கம் புள்ளடி போன்ற குறியையுடையது. புள்ளடி-பட்சியின் பாத அமைப்பு. இந்தப் புள்ளடியுடைய அங்கத்தைக் காகபாதமென்ற பெயரால் வழங்குவர். ஷோடசாங்கத்தில் காகபாதமென்ற அங்கமே அதிக அட்சரமுடையது. புள்ளடியாகிற காகபாதமானது கூட்டலடையாளம் போன்றதாகும். அதாவது "+" இதுவே காகபாதமாகிற

புள்ளடியின் அங்கக் குறியீடாகும். இப் புள்ளடியானது நான்கு பெருந்திசைகளை விளக்குவதால் இக் குறி யீட்டை அமைத்தனர். இந்த அங்கம் பரந்து பெருகிய எண் உடையது என்பதைக் குறிப்பிடுவது போல அமைந்துள்ளது.

● காகபாதம் என்ற அங்கத்தைத் தொழிற் படுத்தும் போது, வலக்கைக் கட்டைவிரலை உயர்த்தி ஏனைய நான்கு விரல்களையும் ஒன்ருய்ச் சேர்த்து நீட்டி இடப்புறம் விசிறுவது போலத் 'தகதக' என்ற நான் கட்சரக் காலம் கொண்டு போதலும், மறுபடி இடமி ருந்து வலப்புறம் புறங்கையினுல் 'தகதக' என்ற நான் கட்சர காலம் விசிறியும், பின்பு அக்கையைக் குப்புறக் கவிழ்த்துக் கீழ் நோக்கித் 'தகதக' என்ற நான்கட்சர காலம் விசிறியும், அதன் பின்பு புறங்கையால் மேல் நோக்கித் "தகதக" என்ற நான்கட்சர காலம் விசிறியும் போடுதல் வேண்டும். இப்பொழுது இடமும் வலமும் விசிறியது இடமிருந்து வலப்புறம் ஒரு கோடி ட்டது போன்றும் (—), கீழிலிருந்து மேலே விசிறியது கீழிருந்து மேலே ஒரு கோடிட்டது போன்றும் (|), அங்கசமிஞ்ஞை காட்டப் பெற்றது. இவ்விரண்டையும் சேர்க்கும் போது + இம்மாதிரியான புள்ளடி அல்லது கூட்டல் அடையாளக் குறி கிடைத்தது. இனி இடம், வலம், கீழ், மேல் என்ற நான்கு பக்கத்து அளவுகளைக் கணக்கிடும் போது (4+4+4+4 = 16) பதினறு அட் சரக் காலங்கள் அறியப் பெற்றது. மேலே கூறிய விதி முறைகளே காகபாதம் என்ற தாள அங்கத்தை இடும் வகையாகும்.

● மேலே கூறியபடி இசை இலக்கணத்தின் முறை வழுவாமல் திருதம், லகு, குரு, புலுதம், காக பாதம் என்ற தாள அங்கங்களை இடுவதில் சிறிதும் மாறுபாடின்றியும், சிம்மநந்தனத் தாளத்திற் குரிய அங்கங்களாகிய "8 8 1 8, 1 8 0 0 8 8, 1 8 1 8, 8 1 1 +" நூற்றிருபத்தெட்டு அட்சர காலங்களையும் செவ்வனே கையிலிட்டுக் கொண்டு, கூடியிருந்த எல்லா இசைப் புலவர்களும் வியக்குமாறு பல்லவியை நிரவல் செய்து பாடிக் களிப்பித்தார்கள். பல்லவி சேஷய்யர் உள்பட அனைத்து இசைப் புலவர்களும் 'ஆஹா! அற்புதம்' என்று புகழ்ந்து கொண்டாடினார்கள். இசை சம்பந்தமாகவும், தாள சம்பந்தமாகவும், பல்லவி சம்பந்தமாகவும் அறிதற்கியலாத அரிய வாய்ப்பினை அங்குக் கூடியிருந்த இசைப் புலவர்கள் எல்லோரும் பெற்றனர். இசைத் துறையில் இத்துணை உயர் தரமான செயல்களை மகா வைத்திய நாத சிவனவர்கள் தவிர வேறு எவரால் செய்ய இயலும்.

● மகாவைத்திய நாதசிவன் சென்னையிலே இசைக் கலைஞர்கள் பலர் குழுமியிருந்தபோது அவர்கள் மகிழும்படி சிம்மநந்தனத் தாளத்திலே பல்லவி பாடிய செய்தியானது வெகு விரைவிலே தமிழ் நாடு முழுவதும் பரவிற்று. இச் செய்தியைத் தஞ்சாவூர் சிவாஜி அரசரின் மாப்பிள்ளையும் மகா வைத்திய நாத சிவனின் இசை மாணவருமாகிய சகாராம் சாகேப் அவர்களும், அச்சமத்தானத்து இசை வித்துவான்களும் அறிந்திருந்தனர். வீணை ஆதிமூர்த்தி ஐயர் என்பவர் அக்காலத்தில் தஞ்சை அரண்மனையிலே தலைமை இசைப்

புலவராக இருந்தார். ஒரு நாள் மகா வைத்திய நாத சிவன் சகாராம் சாகேப் அவர்களின் அவையில் இசை வினிகை செய்து கொண்டிருந்தார். அந்த அவையிலே பெரும் பெரும் இசைப் புலவர்களின் கூட்டம் நிரம்பி யிருந்தது. அவர் நன்ருகப் பாடிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது சகாராம் சாகேப் அவர்களும் வீணை ஆதிமூர்த்தி ஐயரும் அவர் போன்ற இசைப் புலவர் மணிகளும் சிம்மநந்தனத் தாளத்தின் அமைப்பை அறிதல் வேண்டுமென்று விரும்பினர். அவ் விருப்பத்தை இராமசாமி சிவன் அறிந்தார். அவையில் பாடிக் கொண்டிருந்த தம் தம்பியாரிடம் சிம்மநந்தனத் தாளத்திலே ஒரு தில்லானுவை அமைத்துப் பாடும்படியும், அத்தில்லானுவிற்குரிய சொற்கட்டுக்களையும் சாகித்தியத்தையும் அமைத்துக் கொள்ளும் படியும் கூறினர். அத்துடன் இத்தில்லானுவானது பல்லவி அனுபல்லவி சரணம் என்றமுறையில் அமைதல் வேண்டாமென்றும் வேறு முறையைக் கைக் கொள்ளும் படியும் கூறினர்.

உடனே மகாவைத்திய நாத சிவன் கல்யாணி இராகத்திலே சிம்மநந்தனத் தாளத்திலே ஒரு தில்லானுவை உருவாக்கிப் பாடினுர்கள். அத் தில்லானுவைத் தொடங்கும் போது முதலில் சொற்கட்டுக்களையும், அடுத்து "கௌரீ நாயக" என்ற சாகித்திய அமைப்பையும், அதையடுத்து சொற்கட்டுக்களையும் பாடி முடித்தார். சாகித்தியமும் சொற்கட்டும் வருமாறு:—

கௌரீநாயக கனசுபதாயக
கமலா காந்தனுத நாயகா

காலகால சூலகர கங்காதர
புரஹர கஜசர் மாம்பர
காலகண்டேச சுந்தர மந்திர
காயக கேசர பூசுர
நரவர ஸ்துத கிரிகார்முக கால
கனகசபா நடராஜ மாமவ ||

சொற்கட்டு

தீம்தர திரனு தனதிரனு தனதிரனு
தன தன திரனு
உதனிதனம் தனனம் தின்னு
திர்திர் தானி தனம் தனம்தா
தித்தாம் திரனு தனதிரனு
தானு தொம் திரு
தனதிரனு தித்ளாம் த்ளாம் த்ளாம்

மத்தியமகாலம்

ததனிஉதனி தித்திலான திருதிரு
தில்லில்லானு ஜொம்தரிகிடதகஜே
தில்லில்லானு ஜொம்தரிகிடதகஜே
தில்லில்லானு ஜொம்தரிகிடதக ||

● இத் தில்லானுவின் சுரக்குறிப்புக்கள் அவர் பாடிய முறைப்படி இங்குக் குறிக்கப் பெறுதல் காண்க.

இராகம்: கல்யாணி. தாளம்: சிம்மநந்தனம். 128 அட்சரம்

8 8 1

பா மா கா ரீ சா சா சா ; — தா நீ ரீ ரீ கா ; ; ; — கா மா பா பா —

தீ ம் த ர தி ர ு . த ன தி ர ு . . . த ன தி ர

8 1

பா ; பா பா கா தா பா மா க த ப ம க ரி ச ரி — கா ரீ சா சா —

ு . த ன த ன தி ர ு . . . . உ த ணி த

8 0 0 8

ரி ச நி த தா ; நீ சா ரீ ; — கா ; — கா ; — கா மா பா பா தா பா ; ப த —

ண ம் . . . . . த ன ன ம் தி ன் ு . திர் திர் த ணி த ன ம் த .

8 1 8

ப ம கா ரீ ; சா ;;; — ப ம கா கா ; — பா பா பா ; ம ப த நி த ப பா நீ தா சா ; —

ண ம் . . . தா . . . தி . த் தா ம் தி ர ு . த . ன . தி . ர ு . . .

1 8̇

நீ ரீ ச்ா நீ — த நி தா பா பா ம ப த நி ச் நி த ப ம த ப ம க ரி சா —

தா . . ன தொ ம் . தி ரு த . ன . தி . ர . ணு . . . தி . ர

8 1 1

தா ; ரீ ; ச் நி தா நீ ரீ — நி ச் ரி ச் ச் ச் ச்ா — ச் ச்ா நி ம த நி ரி —

தி த் த்ளா ம் த்ளா . ம் த்ளா ம் த த னி உ த னி தித் தி லா ன தி ரு தி ரு

+

க் ரி ச் ச் தா த த த த த த ரீ ; நி ரி ச் நி

தில் லில் லா ணு ஜொம் த ரி கி ட த க ஜே . தில் லில் லா ணு

தா த த த த த த பா ; க த ப ம கா க க ரி ரி ச ச —

ஜொம் த ரி கி ட த க ஜே . தில் லில் லா ணு ஜொம் த ரி கி ட த க

II

8 8 1

கா ரீ சா ; ச நி தா சா சா — நீ சா ரீ ரீ கா ; கா கா — கா தா ப ம கா —

கௌ . ரீ . நா . . ய க க ன சு ப தா . ய க க ம லா . .

8 1 8

ரீ ; சா ; கா ரீ ப ம க ரி கா ரீ சா ; — கா ; ; ரீ — பா ; ; மா தா ; ; பா —

கா ந் த . னு த நா . . . . ய கா . கா . . ல கா . . ல சூ . . ல

0 0 8 8

கா மா — பா ; — கா தா பா மா கா ரீ நீ ரீ — தா தா பா மா கா ரீ சா சா —

க ர க ங் கா . த ர பு ர ஹ ர க ஜ ச ர் மா ம் ப ர

1 8 1

தா ; ; பா — பா ; நீ தா பா தா பா பா பா , க மா பா — ரீ ; ; சா —

கா . . ல க ண் டே . ச சு ந் த ர ம ந் . தி ர கா . . ய

8̇ 8 1

தா ; பா மா நீ ; தா நீ ச்ா ; ச்ா ச்ா — சா சா சா சா ச்ா ச்ா ச்ா ச்ா — நீ ரீ நீ தா —

க . . . கே . ச ர பூ . சு ர   ந ர வ ரஸ்து த கி ரி   கார் மு க

1 +

பா ; ரீ ; — க்ா ரீ ச்ா ச்ா தா ; பா பா க் ரிச் நி த ப ப ம க த ப ம க ரி சா —

கா . ல .   க ன க   ச பா . ந   ட ரா . . . . . ஜ . மா . . . ம . வ

III

8 8 1

தா ; ச்ா ச்ா ச்ா ச்ா ச்ா ; — நீ ரீ ச்ா நீ தா ப த நீ ; — நீ ரீ ச்ா நீ —

தீ ம் த ர தி ர ணு .   த ன தி ர ணு . . . .   த ன தி ர

8̇ 1

தா ; பா பா க ம ப த நி த ப த ரீ ; ச்ா ; — நீ ச்ா ரீ ச்ா —

ணு . த ன த . ன . தி . ர . ணு . . .   உ த னி த

8 0 0 8

நீ ச்ா தா நீ பா தா நீ ; — தா ; — பா ; — கா மா பா பா தா பா ; தா —

னம் . . தனனம் தின் ணு . திர் திர் தனி தனம்த

8 1 8

பா ; மா பா தா நீ ச்ா ; — ரீ ; ச்ா ; — தா நீ ரீ ; க்ா ம்ா க்ா ரீ ச்ா ; ; ; —

னம் . . . , தா . தித்தாம் திரணு . தனதிரணு . . .

1 8

தா ; க்ா ; — ரீ ; ச் ச் ச் ச் நீ ரீ க் ரி க்ா ப் ம் ரி க் ரீ ; —

தா . ணு . தொம் திருதிரு தனதி . ரணு . தி . ர .

8 1 1

தா ; க்ா ; ப் ம் ரீ க் ரி ச்ா — நி நி ரி நி நி ரி க்ா — ரி ச்ா ச் ச் ச் ச் —

தித்ளாம்த்ளா . ம்த்ளா . ம் ததனிஉதனிதித் திலானதிருதிரு

+

க் ரி ச் ச் தா த த த த த ரீ ; நி ரி ச் நி

தில் லில் லா ஞ ஜொம் த ரி கி ட த க ஜே . தில் லில் லா ஞ

தா த த த த த த பா ; க த ப ம கா க க ரி ரி ச ச

ஜொம் த ரி கி ட த க ஜே . தில் லில் லா ஞ ஜொம் த ரி கி ட த க

8 8

“ கா ரீ சா ; ச நி தா சா சா — நீ சா ரீ ரீ கா ; கா கா

கௌ . ரீ . நா . . ய க க ன சு ப தா . ய க

1 8

கா தா ப ம கா — ரீ ; சா ; கா ரீ ப ம க ரி கா ரீ சா ; ”

க ம லா . . கா ந் த . நு த நா . . . . ய கா .

● ஏனைய தில்லானாவிற்கும் இங்குக் குறிக்கப்பெற்ற சிம்மநந்தனத் தாளத்தில் அமைந்த தில்லானாவிற்கும் சிறிது வேற்றுமையுண்டு. ஏனையவை பல்லவி அனுபல்லவி சரணம் என்ற முறையில் அமைந்திருக்கும். அவற்றில் பல்லவி அனுபல்லவி ஆகியவை சொற்கட்டுக்களமைந்தும், சரணம் சாகித்தியம்கொண்டும், பின்புசொற்கட்டுக்களமைந்தும் வரும். சில தில்லானாவில் சரணத்தில் சாகித்தியம் மட்டும் வருவதுமுண்டு. இங்கு அமைந்த தில்லானாவானது பல்லவி அனுபல்லவி சரணம் போன்று அமையாமல் மூன்று கண்டிகையாக அமைதி பெற்று வருகின்றது. அம் மூன்று கண்டிகையும் இடை இடையே நிறுத்தலைப் பெற்றுவராமல் ஒரே தொடர்ச்சியாகவே வருகின்றன. முதலில் மத்திய ஸ்தாயியில் (சமநிலை) சொற்கட்டு ஆரம்பமாகின்றது. அதைத்தொடர்ந்து சாகித்தியம் வரப்பெறுகின்றது. அதன் பின்பு முதலில் கூறிய சொற்கட்டைத் தாரஸ்தாயியில் (வலிவுநிலை) பாடி முடிவு பெறுகின்றது. தில்லானாவில் இது ஒருவித முறையாகும்.

● மகா வைத்தியநாத சிவன் பாடிய இத் தில்லானாவையும் யாருக்கும் எளிமை பெற்று வர இயலாததான சிம்மநந்தனத் தாளத்தையும் கேட்ட சகாராம் சாகேப் அவர்களும் அங்குக் குழுமியிருந்த இசை வித்துவான்களும் பேருவகை அடைந்தார்கள். நினைத்தவுடனேயே தில்லானாவுக்குரிய சொற்கட்டுக்களையும் தில்லானாவிற்காக மேற்கொண்டு நான்கு அடி சாகித்தியத்தையும் செய்து பாடிய அவரது கற்பனை ஆற்றலைக் கண்டு வியந்தார்கள். சகாராம் சாகேப் மகா வைத்திய

நாத சிவனின் அன்பு மாணவராகையால் அவருக்கு உண்டான பெருமை அளவிடற்கரியது. எங்கும் அவர் பாடிய தில்லானுபற்றியும் சிம்மநந்தனத் தாளம் பற்றியுமே பேச்சாக இருந்தது. அன்று சகாராம் சாகேப் அவர்கள் ஏராளமான சன்மானத்தை மகா வைத்திய நாத சிவனுக்கு அளித்தார்கள். வயதில் மூத்தவரும் வீணையில் சிறந்த வருமாகிய வீணை ஆதி மூர்த்தி ஐயரவர்களைக் கொண்டு மகாவைத்தியநாத சிவனுக்குப் பொன்னுடையைப் போர்த்தச் செய்து சகாராம் சாகேப் மகிழ்ந்தார். எக்கலையாயினும் அதனைச் சிறக்கச் செய்யும் செயற்றிறம் ஒருவரிடம் விளங்குமேல் அவரை உலகம் புகழாமலிருக்க இயலுமா! அது போல இசைக் கலையில் யாவரினும் மேலாம் திறம் பெற்றிருந்த மகா வைத்திய நாத சிவன் உலகோரால் பெரும் புகழைப் பெற்று விளங்கினுர்.

● இராமசாமித் தேவர் சேதுபதியாக இருந்து இராமநாதபுரத்தை ஆண்டுவந்தார். அவருக்கு மக்கட்பேறு உண்டாகவில்லை. அவரை அடுத்து அவருடைய மனைவியாராகிய பர்வதவர்த்தனி நாச்சியார் அவர்கள் ரீஜண்டாக இருந்து அரசு நடத்தினுர். அவருக்குத் துணையாக அவருடைய தமையனுர் கோட்டைச்சாமித் தேவர் அவர்கள் கூட இருந்து அரசாங்க அலுவல்களைக் கவனித்து வந்தார். ப வதவர்த்தனி நாச்சியார் அவர்கள் ரீஜண்டாகயிருந்த காலம் 1846 முதல் 1862 வரை என்பர்.

பர்வத நாச்சியாரின் கூடப்பிறந்த தங்கை முத்து வீராயி; அவருடைய கணவர் சிவஞானத் தேவர்

என்ற பெயருடையவர். அத்தம்பதிகளுக்கு இரண்டு ஆண் குழைந்தைகள் பிறந்தன. மூத்த குழந்தை பொன்னுசாமித் தேவர் என்ற பெயரோடு 1837 முதல் 1870 வரை வாழ்ந்தார். இளைய குழந்தை துரை ராஜா என்ற பெயருடன் 1841 முதல் 1973 வரை வாழ்ந்தார். அவ்விரு குழந்தைகளையும் பர்வதவர்த்தனி நாச்சியார் தம்மோடு தம் குழந்தைகள் போலவே வளர்த்து வந்தார். அவ்விருவருக்கும் கல்வி கேள்விகளில் நல்ல அறிவை வளர்த்து விட்டார். அவ்விருவரும் தமிழ்க் கல்வியில் மிகச் சிறந்தவர்களானுர்கள்.

சிவஞானத்தேவரின் இளையகுமாரரான துரைராஜா என்பவரே முத்துராமலிங்கத்தேவர் என்ற பெயருடன் அவருடைய ஏழாவது வயதில் இராமநாதபுரம் அரசராக 1847-ல் பட்டம் சூட்டப் பெற்றுர். சிவஞானத்தேவர் இராமநாதபுரம் பேஷ்காராக இருந்தார். அப்பொழுது பொன்னுசாமித் தேவருக்குப் பத்தொன்பது வயது; முத்துராமலிங்கத் தேவருக்குப் பதினைந்து வயது. தமிழ் இலக்கிய இலக்கண அறிவில் அவ்விருவரும் மிகச் சிறந்தவர்களானுர்கள். புலவர்களின் தராதரத்தை எளிதில் அறிவதில் பொன்னுசாமித் தேவர் வெகு திறமைசாலியாக விளங்கினுர். முத்துராமலிங்கத்தேவர் படிப்பின் சிகரத்திற்கு வந்துகொண்டிருந்தார். தமிழ்மொழி அறிவோடு இசைக்கலை அறிவையும் இருவரும் குழந்தைப் பருவத்திலிருந்தே வெகுவாகச் சுவைத்து வந்தனர்.

● மகா வைத்தியநாத சிவனுக்குப் பன்னிரண்டு வயதும் இராமசாமி சிவனுக்குப் பதிமூன்கு வயதும் முடி

வுறும் தருணத்தில் அவ்விருவரும் மதுரை சென்று இசை நிகழ்ச்சிகள் செய்து வந்தனர். அச்சமயம் பதினைந்து வயது நடந்துகொண்டிருந்த முத்துராமலிங்கத் தேவர் அவ்விருவரையும் தம் அவைக்கு வரவழைத்தார்; அவ்விருவரின் இசையிலும் தமிழறிவிலும் மகிழ்ந்தார். பதினைந்து வயதிற்குள்ளாகக் கவிகளியற்றும் ஆற்றல் இராமசாமி சிவனுக்கு இருத்தலைக் கண்டு பொன்னுசாமித்தேவரும் அவருடைய தம்பி அரசர் முத்துராமலிங்கத் தேவரும் வியந்தார்கள்; அவ்விருவரையும் விட்டுப் பிரிய மனமில்லை, பல நாட்கள் அவ்விருவரையும் தம்மோடு தங்கச் செய்தார்கள்.

மகா வைத்தியநாத சிவனின் இசையிலும் அவர் தோற்றத்திலும் அவருடைய ஒழுக்கத்திலும் ஈடுபட்ட முத்துராமலிங்கத்தேவர் தம்முடைய ஞாபகம் அக்கலைஞருக்கு எப்போதும் இருக்கவேண்டும் என்று எண்ணினார். அவர் அப்பொழுதுதான் கந்தபுராண நூலைச்செம்மையுறப் பாடங்கேட்டு முடித்திருந்தார். முத்துராமலிங்கத் தேவருக்கு அந்த ஞாபகம் வரவும் கந்தபுராணச் சுருக்கப்புத்தகத்தை அன்புமேலீட்டால் மகாவைத்தியநாத சிவன்பால் தந்து இந்த நூலைப் பாராயணஞ் செய்து வந்தால் தங்களுடைய இசையறிவோடு தமிழறிவும் சிறந்தோங்கும் என்றார், இவ்விபரம் முன்பும் ஓரிடத்தில் பொதுவாகக் கூறப்பெற்றிருக்கிறது.

இராமநாதபுரம் முத்துராமலிங்கத் தேவர் பதினைந்து வயதுடைய இளைஞரே யாவர். மகா வைத்தியநாத சிவனும் பனிரண்டு வயதுடைய இளைஞரே

யாவர். அரசர் தமிழறிவில் சிறந்திருந்தார்; மகா வைத்தியநாத சிவனும் தம்மைப்போலத் தமிழறிவு பெற்று விளங்கல் வேண்டும் என்று விரும்பினர். சம வயதினரான தம் சகாவை மேலாம் நிலைமைக்கு வரத் தூண்டுவதுபோலக் கந்தபுராணச் சுருக்கப் புத்த கத்தை அவர் கையால் கொடுத்தது எத்துணையோ பெருமைக்குரியதாயிற்று.

அரசரது திருக்கரத்தால் கந்தபுராணச் சுருக்கப் புத்தகத்தைப் பெற்ற அன்று முதல் அதனையும் வேறு பல தமிழ் நூல்களையும் தம் தமையனர் இராமசாமி சிவனிடம் தொடர்ந்து பாடம் கேட்டு வரலானர். மகா வைத்தியநாத சிவன் தம்முடைய பதினறும் வயதுக் குள் தமிழறிவில் திறம் பெற்றுத் தம் தமையனரினும் சிறந்த தமிழ்ப் புலவராக விளங்கினர். [மகா வைத் தியநாத சிவனுக்குக் கந்தபுராணச் சுருக்கப் புத்தகம் அரசரால் வழங்கப் பெற்ற காலம் 1856-ஆம் ஆண்டு என்று ஒருவாறு புலனுகிறது. -V. S. G]

● இராமநாதபுரம் சேதுபதி அரசராகிய முத்து ராமலிங்கத் தேவர் 1862-ல் அரசபாரத்தை ஏற்று ஆட்சி நடத்திவந்தார். அப்போது இராமசாமி சிவ னையும் மகா வைத்தியநாத சிவனையும் மறக்காமல் தம் அவைக்கு வரச்செய்தார்; அவ்விருவரும் அங்குப் பல மாதங்கள் தங்கினர்கள். இராமசாமி சிவன் மகா வைத்தியநாத சிவன் ஆகிய இருவரின் அசாத்திய மான தமிழ்ப் புலமையைக் கண்டு அரசரும் பொன்னு சாமித் தேவரும் பெரும் மகிழ்ச்சியுற்றனர். அன்பு

மேலீட்டால் அவ்விருவரையும் அரசரவர்கள் இரட்டைப் புலவர் என்றும் அழைப்பதுண்டு. அச்சமயத்தில்தான் இராமசாமி சிவனுக்கு **''மோனைச் சிங்கம், சாகித்தியப் புலி''** என்ற சிறப்புப் பட்டம் கொடுத்துச் சிறப்பித்தார்.

மகா வைத்தியநாத சிவன் தமிழறிவில் சிறந்து விளங்கியமை கண்டு அரசர் முத்துராமலிங்கத் தேவர் பெருமைக்குள்ளானுர். சில ஆண்டுகளில் பொன்னுசாமித் தேவர் தம் தகப்பனுராகிய சிவஞானத் தேவர் வகித்து வந்த பேஷ்கார் பதவியைத் தாமும் வகித்து வந்தார். அவ்வாறு பேஷ்கார் பதவியைப் பொன்னுசாமித் தேவர் வகித்து வந்தமையால் மகா வைத்தியநாத சிவனும் இராமசாமி சிவனும் மேலும் சிறப்பை அடைந்தனர். முத்துராமலிங்கத் தேவரும் அவருக்குப் பின் பாஸ்கரசேதுபதியும் அரசாட்சி செய்தகாலம் முழுவதும் அவ்விருவரும் அச்சமத்தானம் சென்று இசை நிகழ்ச்சியும் சிவகதையும் புரிந்து அரசரையும் மற்றும் யாவரையும் மகிழ்வித்து வந்தனர். அவ்விருவரையும் சமத்தானத்துக்கு வித்துவத் பரீட்சகராகவும், மாதச்சம்பளம் பெறுபவராகவும் அரசர் அவர்கள் ஏற்பாடு செய்தது அக்காலமேயாகும்.

பொன்னுசாமித் தேவரின் குமாரர் பாண்டித்துரைத் தேவராவார். அவர் பாலவநத்தம் சமீன்தாராக இருந்தார்; உலகியலறிவு மிக்கவர். அவர் பல ஆண்டுகள் இராமநாதபுரத்திலேயே இருந்தபடியால் சிவன் சகோதரருடன் அளவளாவி மகிழ்வதுடன் தக்க

படி ஆதரித்தும் வந்தார். அவருடைய இசையிலும் தமிழ்ப் புலமையிலும் மிகவும் ஈடுபட்டிருந்தார். இராமநாதபுரம் சமத்தானத்திலே எந்த விழா நடந்தாலும் அதிலே மகா வைத்தியநாத சிவனுடைய இசை நிகழ்ச்சி கட்டாயம் இருக்கும். அரசருடைய அன்பும் நட்பும் சிவன் சகோதரர்களுக்கு நிரம்ப இருந்தபடியால் பட்டினம் சுப்பிரமணிய ஐயரையும் குன்னக்குடி கிருஷ்ணையரையும் சமத்தானத்து வித்துவானுக்கிய பெருமையைச் சிவன் சகோதரர் இருவரும் அடைந்தனர் என்பர்.

சிவன் சகோதரர்கள் அடிக்கடி இராமநாதபுரம் சமத்தானம் சென்று வரும் காரணத்தால் அவ்விருவரிடமும் பாண்டித்துரைத் தேவர் அதிக நட்பையும், அபிமானத்தையும் வைக்கலானுர். எனவே பர்வதவர்த்தனி நாச்சியார், முத்துராமலிங்கத் தேவர், பாஸ்கர சேதுபதி, பாண்டித்துரைத் தேவர் ஆகிய அவர்களுடைய காலம் முழுவதும் சிவன் சகோதரர்களுக்கு இராமநாதபுரம் சமத்தானத்துத் தொடர்பும், பாலவநத்தம் சமத்தானத்துத் தொடர்பும், அச்சமத்தானங்களின் ஆதரவும் சங்கிலித்தொடர்போல விடாமல் இருந்து வந்தன.

● இராமநாதபுரம் அரசர் பாஸ்கர சேதுபதி அவர்களுக்குச் சுமார் 1889-ல் பட்டாபிடேகம் நடத்தினுகள். அந்தவிழாவிலே குன்னக்குடி கிருஷ்ணையர், மகா வைத்தியநாத சிவன், பட்டினம் சுப்பிரமணிய ஐயர் ஆகிய மூவரின் இன்னிசை வினிகைகள் நடந்தன. பட்டாபிடேகத்திற்கு முதல் நாளன்று குன்னக்குடிக்

கிருஷ்ணையர் அதி அற்புதமாகக் கானம் செய்து அனைவரையும் களிகொள்ளும்படி செய்தார். அன்னாரின் இசையமுதை அங்குள்ள புலவரும் வந்திருந்த அன்பர்களும் முக்கியமாகப் பாஸ்கர சேதுபதி அரசரவர்களும் கேட்டுப் பேரின்பம் அடைந்தனர்.

பட்டாபிடேகம் நடந்த நாளன்று மகா வைத்தியநாத சிவனின் இசைவினிகை நடந்தது. அன்று பட்டாபிடேக தினமாகையால் பெரிய பதவியிலுள்ள அதிகாரிகளும் இன்னும் பல பெருமக்களும் நிரம்பி இருந்தனர். மகா வைத்தியநாத சிவனின் கானத்தைப் பற்றி எடுத்துக்கூற வேண்டியதில்லை. அவரது இசை போலக் கந்தர்வலோகத்தில் கூட இசைப்பவரில்லை என்று துணிந்துகூறலாம். பட்டாபிடேகத்தன்று அவர் தம் இயற்கையான குரல் வளத்தின் சிறப்பால் அங்குள்ள யாவரையும் மயிர்க் கூச்செறியும்படி பாடினார். கேட்ட மக்களனைவரும் அவ்விசையில் மெய்மறந்தனர். பாஸ்கர சேதுபதி அரசரவர்களின் குதூகலம் சொல்லத் தரமன்று.

பட்டாபிடேகம் நடந்த மறுநாளன்று பட்டினம் சுப்பிரமணி ஐயர் இசைவினிகை நடந்தது. அவரது கம்பீரமான சாரீரத்தில் கட்டுப்படாதவர் யார்? அவர் அன்று யாவரும் கேட்டிராத புதுப்புது இராகங்களைப் பாடினார். இசைப் புலவர்கள் யாவரும் அவருடைய அடிவயிற்றினின்று ஹூம்காரத்துடன் உருமிக் கொண்டு வரும் அந்த இசை நாதத்தையும் அப்புது இராகத்தையும் மகிழ்ச்சிபொங்கச் சுவைத்தனர். அன்று

அவர் தாமே செய்த புதுப்புதுக் கீர்த்தனைகளைப் பாடி அவையோர்களைக் களிப்பித்தார். அவர் புதிது புதிதாகப் பாடும் இராகத்தையும் கீர்த்தனத்தையும் கவனித்துக்கேட்ட பாஸ்கரசேதுபதி அவர்கள் பேருவகை கொண்டார்.

பாஸ்கர சேதுபதி அரசரின் பட்டாபிடேகத்திற்கு முதல்நாள், அன்றைய நாள், மறுநாள் ஆகிய மூன்று நாட்களிலும் மூன்று இசையரசர்களாகிய **குன்னக்குடி கிருஷ்ணையர், மகாவைத்தியநாத சிவன், பட்டினம் சுப்பிரமணிய ஐயர்** ஆகிய அவர்களின் மேன்மை பொருந்திய இசைச் சிறப்பினைப் பற்றி வாயினால் கூறி விடுதல் எளிதன்று. அவ்விசையின் மேன்மையைக் கூட விருந்து கேட்டவர்களுக்கே உள்ளுணர்ச்சியின் வாயிலாக அனுபவிக்க இயலும். அது போன்றதொரு சிறப்பை இனிக் காண்டல் அரிது. அம் மூவரின் இசையும் ஆயிரக்கணக்கான மக்களைப் பரவசப்படுத்திற்று என்றால் அதனை எடுத்துக்கூற இயலாது.

பட்டாபிடேகத்தின் மறுநாள் இசைவினிகை முடிந்ததும் பாஸ்கர சேதுபதி அரசரும் அரசருடைய உறவினர்களும் வெளியிடங்களிலிருந்து வந்திருந்த தக்க பதவி வகிப்போரும் மற்றும் ஏனையோரும் சூழ்ந்திருந்த அவையிலே குன்னக்குடி கிருஷ்ணையர், மகாவைத்தியநாத சிவன், பட்டினம் சுப்பிரமணிய ஐயர் ஆகிய மூன்று இசை மணிகளும் அரசர்பால் வந்து அமர்ந்தார்கள். அரசர் அம்மூவருடைய இசைத்திறன் பற்றி வானளாவப் புகழ்ந்துரைத்தார்.

புகழிற் சிறந்த மூன்று இசைமணிகளையும் பாஸ்கர சேதுபதி அரசர் புகழ்ந்துரைத்த தருணத்திலே மகா வைத்திய நாத சிவன் அரசரிடம் யாவரும் கேட்டு மகிழும்படி, குன்னக்குடிக் கிருஷ்ணயரைச் சுட்டிக் காட்டி "அவர்களைப் போல் கற்பனை நிறைந்ததும் விசித்திர செய்கையுடையதுமான பல்லவியை எவரா லும் பாட இயலாது; அவர்கள் எடுத்துத் தரும் பல்லவி எவரது புத்திக்கும் எட்டாததாகவும் நூதன தாளம் அமைந்ததாகவும் இருக்கும். அவ்வாறுன புதுப் பல்லவிகளை ஏனைய இசைப் புலவர்கள் பாடுவதற்கு அஞ்சி இருப்பார்கள். அப்பல்லவிகள் அப்புலவர்களை எல்லாம் மயக்கிவிடும் தன்மையனவாக விளங்கி அவருடைய இசைச் செயல் திறமும் முழுமையும் பெற்றுப் பரிமளிக்கும். அவர் போன்ற அத்திறம் எவருக்கும் வாய்த்தல் அரிது" என்று புகழ்ந்து கூறினர்.

தொடர்ந்து அரசரிடம் பட்டினம் சுப்பிரமணிய ஐயரைச் சுட்டிக் காட்டி, "அவர்கள் இசைப் பாடல்கள் இயற்றுவதில் மகாபுத்திமான். தியாகராஜ சுவாமிகள் போல நூற்றுக்கணக்கான இசைப் பாடல்கள் இயற்றியுள்ளார். அக்கீர்த்தனங்கள் ஒவ்வொன்றும் மணிமணியாக இருக்கின்றன. தராசில் எடை போட்டு நிறுத்தது போல ஒவ்வொரு கீர்த்தனத்திற்கும் அதற்கு தக்கதாக சங்கதி அமைப்புக்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. அவருடைய அளவிடற்கரிய கற்பனைத் திறத்தை யாரிடத்தும் காண இயலாது. அவர் புதுப் புது இராகத்தையும் கற்பனை செய்திருக்கிருர். அந்த இராகங்களெல்லாம் அவருடைய சாரீரத்திலே திரட்டி

உருட்டின தங்கக் கட்டிகள் போல அழகு நிறைந்து சுவையை உண்டாக்குகின்றன. அந்தப் புது இராகங்களிலும் அவர் கீர்த்தனையை அமைத்துள்ள விதம் அற்புதமாக இருக்கும். அவர் வாயிலாக அக் கீர்த்தனைகளைக் கேட்போர் அவ்விசையில் கட்டுண்டு கிடப்பர் என்பதில் ஐயமில்லை. அபூர்வ இராகங்களையும் அதில் அமைந்த கீர்த்தனைகளையும் உருவாக்கும் சக்தி கடவுளின் துணையோடு கூடிய அவரின் இசைத் திறத்தைக் குறிப்பதாகும். அவர்களைப் போல் வெகு கம்பீரமாக ஆனந்தம் உண்டாகுமாறு இசைக்கும் ஆற்றலுள்ள வித்துவான்களே இல்லையெனலாம்; அவருடைய சாரீரத்திலிருந்து வரும் ஹும்காரத் தொனியிலே தானம் பாடும் பம்பகம் போல எவராலும் இசைக்க இயலாது என்பதை நான் உறுதியாகக் கூற வேண்டியிருக்கிறது. ஆழ்ந்த அறிவு பெற்ற இசைப் புலவர் அவர் ஒருவரேயாகும்'' என்று சிறப்பித்துக் கூறினர்.

மகா வைத்தியநாத சிவன் அரசர் முன்னிலையில் குன்னக்குடி கிருஷ்ணயரையும்பட்டினம் சுப்பிரமணிய ஐயரையும் இவ்வாறு புகழ்ந்து கூறியதும், அங்குள்ள இசைப் புலவர்களில் மிகவும் வயது முதிர்ந்தவரான (73-வயதடைந்த) குன்னக்குடி கிருஷ்ணயரவர்கள் அரசரிடம் மகா வைத்தியநாத சிவனைச் சுட்டிக்காட்டி ''அவர்களுடைய குரல்வளம் போல் எவருக்தும் அமைந்ததில்லை. அவரது பாட்டு கந்தர்வ கானமேயாகும். அவர் குரலெடுத்துப் பாடினல் அவ் விசை நயமானது எப்பேர்ப்பட்ட திறம் வாய்ந்த இசைப் புலவரையும் மேவிச் சிறந்து விளங்குகின்றது. அவர்

பாடிவிட்டால் எல்லாப் புலவர்களின் பாட்டும் பல் இழந்த சர்ப்பம் போல வலுவிழந்து விடுகின்றன. அவர் இராகம் தானம் பல்லவி நிரவல் சுரம் பாட ஆரம்பித்தால் அதைக் கேட்கும் இசை வித்துவான்களெல்லோரும் தமக்கு அவற்றில் நல்ல திறம் உண்டென்று அறிந்திருந்தாலும் தமக்கு ஒன்றுந் தெரியாது என்ற எண்ணத்தை அடைந்து விடுகின்றனர். ஒவ்வொரு இசைப் புலவரும் தங்களுடைய திறம் முழுவதையும் காட்டி வெகு நேரம் இசைத்த அவ்விசையை அவர் 'சங்கரா' என்று தம்புரா சுருதியோடு ஒன்றி ஒலிக்கச் செய்த அக்கணத்திலேயே அவை இருந்த இடம் தெரியாமல்—பாடிய சுவடு தெரியாமல் மறைந்து விடுகின்றன. இக்கலியுகத்தில் அவரொரு அவதார புருடராவார். அவருடைய இசைத் திறம் போல் இனி இவ்வுலகில் ஒருவர் அடைதல் இயலாததாகும்'' என்று பெருமை படக் கூறினர்.

பட்டினம் சுப்பிரமணிய ஐயர், குன்னக்குடி கிருஷ்ணையர் கூறிய அப்புகழுரைகளை, ''ஆம்! ஆம்!! உண்மை! உண்மை!'' என்று அமோதித்தார். அம்மூவரும் ஒவ்வொருவருடைய இசைத்திறந்தையும் அதன் உண்மைகளையும் ஒருவருக்கொருவர் புகழ்ந்து கூறியசொற்களை அரசரும் அங்குக் குழுமியிருந்த அனைவரும்கேட்டுமகிழ்ச்சி அடைந்தனர். அரசர் அம்மூவருக்கும் செய்த மரியாதைப் பொருள்களைக் கண்ட மக்கள் தங்களுடைய ஆரவாரத்தினால் பெருமகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

● பாஸ்கர சேதுபதி அரசரவர்களுடைய பட்டாபிடேக விழாவிலே பாடிய குன்னக்குடி கிருஷ்ணையர் பின்பு அதிக ஆண்டுகள் வாழவில்லை; சில மாதங்களிலே இவ்வுலக வாழ்க்கையை நீத்தார். அவருடைய இசைப் புலமையில் நல்லமதிப்புக் கொண்ட மகா வைத்தியநாத சிவன் மிகவும் மனம் வருந்தினர். குன்னக்குடி கிருஷ்ணையரின் உயிர் அவருடைய உடலில் இருந்து பிரியும் வரை அவர் மிகவும் திடமான சரீரத்துடனேயே இருந்தார். ஒரு நாள் கூட நோயாகப் படுத்தவரல்லர். அவருடைய ஞாபகமாக அவர் செய்துள்ள தானவர்ணங்கள், சௌக வர்ணங்கள், கீர்த்தனங்கள், தில்லானுக்கள் ஆகிய அவ்வகைகளெல்லாம் இசையுலகில் எல்லா இசைவாணர்களிடமும் நின்று நிலவுகின்றன. அவ்வுருப் படிகளை ஆதாரமாகக் கொண்டு அவருடைய இசை ஞானத்தின் சிறப்பை இக் காலத்தோர் அறிதல் வேண்டும். அவர் போன்ற திறம் வாய்ந்த ஓர் இசைப் புலவரைப் பார்ப்பது மிகவும் அரிது.

● 'மோனைச்சிங்கம் சாகித்திய புலி' என்ற பட்டத்தை ஏற்றுக் கொண்டதும் இராமசாமி சிவன், மகா வைத்தியநாதசிவன் ஆகிய இருவரும் தங்கள் மட்டிலே ஒரு கௌரவத்தை அடைந்தோம் என்ற பெருமை கொள்ளவில்லை; அதற்குப் பதிலாக அரசரிடம் "இந்த அவையிலே தமிழ்க் கலையைப் போற்றி அரசரவர்கள் எங்களுக்குப் (இராமசாமி சிவன் பேசும் போது தம் தம்பியாரையும் மகா வைத்தியநாத சிவன் பேசும் போது தம் தமையனுரையும் சேர்த்துப் பேசுவதே

வழக்கம்.) பட்டம் அளித்தது போல ஓர் இசைப் புலவருக்கும் கொடுத்துக் கௌரவிக்கவேண்டும். அதற்குத் தக்க பாத்திரம் குன்னக்குடிக் கிருஷ்ணையரவர்களே யாவார்'' என்று கூறினர்.

அரசரவர்கள் அவ்விருவரும் பிறருடைய கலையில் அழுக்காறின்றி இருத்தலைக் கண்டு மகிழ்ந்தார்கள். அந் நாளிலே குன்னக்குடிக் கிருஷ்ண ஐயருக்குச் **'சங்கீத வித்தியா சாகரம்'** என்ற பட்டமளித்து அவரைச் சமத்தானத்து இசை வித்துவானகவும் ஆக்கினர்கள். அப்பொழுது குன்னக்குடிக் கிருஷ்ணையருக்கு வயது நாற்பத்து ஆறு (46) நடந்து கொண்டிருந்தது. பின்பு சில ஆண்டுகள் சென்றதும் பட்டினம் சுப்பிரமணிய ஐயரையும் இராமநாதபுரம் சமத்தானத்து வித்துவானகச் சிவன் சகோதரர்கள் செய்து வைத்து மகிழ்ந்தனர். அவ்வாறு ஒரு வித்துவான் பிற வித்துவான்களுக்கும் உயர்தரப் பெருமையைத் தேடி உதவுகின்ற உள்ளம் சிவன் சகோதரர்களிடம் இருந்தது. இந்த உயர்ந்த மனப் பாங்கினைக் கண்டு மக்கள் யாவரும் அவரைக் கொண்டாடி வந்தனர்.

● அரசர் அவர்கள் குன்னக்குடிக் கிருஷ்ணையருக்கு 'சங்கீத வித்தியாதிபதி' என்ற பட்டம் கொடுத்ததாகவும் கூறுவர். இன்னும் பல பட்டங்கள் தக்கவரால் கொடுத்து அவர் கௌரவிக்கப்பெற்றுள்ளார். அவருக்கு **'வித்தியா கம்பீரர்', 'தானவர்ண சிரேஷ்டர்', 'தில்லானு பாரங்கதர்,' 'பூலோகசாப சுட்டி', 'கனநய**

தேசிய சம்ராட்,' 'ஜிகிபிகி சம்யுக்தர்', 'இரட்டைப் பல்லவி கிருஷ்ணையர்' ஆகிய விருதுகள் எல்லாம் உண்டு. அவரை முறுக்கு மீசை **ஜிகிபிகி கன நய தேசிக இரட்டைப் பல்லவி கிருஷ்ணையர்** என்ற நீண்ட பட்டத்தால் சிறப்பித்தலுமுண்டு. ஆகக் குன்னக்குடி கிருஷ்ணையர், மகா வைத்தியநாத சிவன், பட்டினம் சுப்பிரமணியஐயர் ஆகிய இம்மூவரும் அக்காலத்திலே இசை அரசர்களாக விளங்கி வந்தனர்.

● பாஸ்கரசேதுபதி அரசருக்குத் திருமணம் நடைபெற்றது. அக்காலத்தில் மகா வைத்தியநாத சிவனுடைய இசைவினிகை வெகு சிறப்பாக நடந்தது. மற்ருெருநாள் கண்ணப்ப நாயனுர் கதையை யாவருடைய உள்ளமும் கரையும்படிப் பிரசங்கித்தார். அதுபோல ஒருநாள் குன்னக்குடி கிருஷ்ணையர் இன்னிசையும் மற்ருெருநாள் பட்டினம் சுப்பிரமணிய ஐயர் இன்னிசையும் நடந்தன. அப்பொழுதுதான் குன்னக்குடி கிருஷ்ணையர் "ஜய ஜய ரவிகுல ராஜ விஜய ரகுநாத ஸ்ரீ பாஸ்கரஸாமி" என்ற பல்லவியைப் பயிரவி இராகத்திலே மிச்ரஜாதி ஜம்பை தாளத்திலே பாடினுர். ஜம்பை தாளத்தின் வீச்சிலிருந்து முக்காலிடம் தள்ளி அதாவது அநாகத இடத்தில் இப்பல்லவியை எடுத்துப் பாடியது தனிச் சாமார்த்தியமாகும். அம்மூவருடைய இசையையும் கேட்டுச்சுவைத்த பாஸ்கர சேதுபதி மன்னவரவர்கள் குன்னக்குடி கிருஷ்ணயரையும் பட்டினம் சுப்பிரமணிய ஐயரையும் நோக்கி, "தாங்களிருவரும் மகா வைத்தியநாத சிவனேடு சேர்ந்து பாடலாமோ?" என்று கேட்டார்கள். இது விபரம் மற்ருெரு இடத்தில் கூறப்பட்டுள்ளது.

குன்னக்குடி கிருஷ்ணையர் பாடிய பல்லவியின் சுரக் குறிப்பு வருமாறு:—

இராகம்:- பயிரவி. தாளம்:- மிச்ரஜாதி ஜம்பை.
அட்சரம்:- 10 மேளம்:- 20 + சது சுருதிதைவதக்குறி.

; , — ரி // க்ரிச்ரா — ச்நிக்ரி — ச்நிதப —
. . ஜ யஜய ரவிகுல ரா . . .

பதம — பத்நிச்ரி — ச்நிதப — மபத்நி /
ஜ . . விஜயரகு நா . . . . . த .

ச்ரா ; / ச் நிக்ரி — ச் நிச் ※ ரி // க்ரிச்ரா......
ஸ்ரீ . பாஸ்கர ஸா . மி ஜ யஜய

இப்பல்லவியை வெகு வித்தாரமாகப் பாடி அவையோரைக் களிப்பித்தார். மகா வைத்தியநாத சிவனும் பட்டினம்சுப்பிரமணிய ஐயரும் மிகவும் வியந்து போற்றினர்கள். அவ்விருவரினும் குன்னக்குடி கிருஷ்ணையரே வயதில் மிகவும் மூத்தவராவர். இந்நிகழ்ச்சி நடக்கும்போது அவருக்குச்சுமார் அறுபத்தைந்து (65) வயதிற்கும் மேலிருக்கும். குன்னக்குடி கிருஷ்ணையர் "சங்கராபரணனை அழைத்தோடி வாடி கல்யாணி தர்பார்க்கு" என்பது போன்ற விசித்திரமான பல்லவிகள் பலவும் பாடியிருக்கிறுர். இப்பல்லவியானது ஒரு தாள ஆவர்த்தனத்துள்ளே "சங்கராபரணம், தோடி, கல்யாணி, தர்பார்" ஆகிய நான்கு இராகங்களும் தொடர்ந்து இராகமாலிகை போன்று வரப்பெறும். அவருக்கு அவ்வாருன கலைத்திறமும் நல்ல சாரீர நய

மும் இருந்தபடியால் அக்காலத்திலே அவரை எல்லா இசைப்புலவர்களும் விரும்பினர்.

● ஒருசமயம் திருவாவடுதுறை ஆதீனத்தில் மிக்க பொறுப்பு வாய்ந்தவரும் தமிழ் இலக்கிய இலக்கண அறிவில் சிறந்தவருமாகிய தம்பிரான் (பெயர் தெரியவில்லை) ஒருவர் திருவாவடுதுறை மடத்தின் முக்கியமான அலுவலை முன்னிட்டுச் சிதம்பரம் வந்திருந்தார். அத்தம்பிரானுடன் அவருக்கு நண்பராகிய சிலரும் கூட வந்திருந்தார்கள். அவர்களெல்லோரும் தமிழ் அறிஞர்களே யாவர். அதே சமயத்தில் மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதி, மகாவைத்தியநாத சிவன், இராமசாமி சிவன் ஆகியோரும் வந்திருந்தனர். அவர்களுடன் இன்னும் பல வடமொழிப் புலவர்களும் தென்மொழிப் புலவர்களும் வந்திருந்தனர். சிதம்பரத்திலேயே வாழ்பவர்களாகிய பொன்னுசாமி தீட்சிதர் போன்ற இன்னும் பல தமிழ் வல்லுநர்களும் இருந்தனர். அவர்கள் யாவரும் அத்தம்பிரான் சுவாமிகளுடன் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அத்தம்பிரான் அப்புலவர்கள் யாவரும் இருத்தற்குரிய சூழ்நிலையைச் செய்து உதவினர்; அவர்களுடைய உணவு முதலியவைகளுக்கும் தக்க ஏற்பாடுகளைச் செய்தார், அவர்கள் யாவரும் ஒன்று கூடித் தமிழ் மொழியிலுள்ள வளங்களைப் பற்றி எடுத்தோதி வியந்து பேசிவந்தனர். அம்மொழியிலுள்ள நயமான பகுதிகளைப் பற்றிப் பேசி மகிழ்ந்து வந்தார்கள்.

அவ்வாறு மிகச் சுவையாகப் பேசி வந்தமையால் அவர்கள் பசியையும் மறந்து நேரம்போனதும் தெரியாமல் இருந்தனர். உச்சிவேளை சென்று ஒரு மணியாயிற்று. வெளியிடங்களிலிருந்து வந்திருந்த சிலருக்கு மட்டும் பசி தோன்றிற்று. அக்காலம் அவரவர்களுக்குத் தக்கவாறு அமர்ந்து பொதுவாக உண்ணுதற்கு ஏற்பாடு செய்யப் பட்டது; தனித்தனியாகப் போய் உண்ணுவது என்பது முடியாது. எல்லோருக்கும் சமையல் சாப்பாட்டுக் காரியத்தைக் குறைவு நேராமல் கவனிப்பதற்கு முக்கியமாக இருந்தவர் ஒரு பிராமணர்; அவர் தில்லைவாழ் அந்தணரில் ஒருவராகிய பொன்னுசாமி தீட்சிதரிடம் வந்து சமையல் தயாராகி விட்டது, இலையும் போட்டாயிற்று, வெளியூரிலிருந்து வந்துள்ள சிலர் பசியுடன் இருக்கிறார்கள். மணி ஒன்றுக்கும் மேலாகிறது. வெளியூரிலிருந்து வந்துள்ள ஏனையவர்களும் எழுந்து உணவு அருந்த உட்கார்ந்தால் சூடு ஆறுவதற்கு முன்பு உருசியாகச் சாப்பிடலாமென்று மெள்ளச் சொன்னார்.

பொன்னுசாமி தீட்சிதர் நல்ல படிப்பாளி. செய்திகளை உசிதமறிந்து நயமாகக் கூறுவார்; அத்துடன் இளம் வயதினரும் ஆவார். அவர் கோபாலகிருஷ்ண பாரதியாரின் தலைமைச் சிடர். தமிழறிவு மட்டுமின்றி நன்ருகப் பாடும் இசைப் புலமையும் உண்டு. அவர் சமயமறிந்து அங்குள்ள யாவரையும் நோக்கி, "மணி ஒன்றுக்கு மேலாகிறது. இலைபோட்டுப் பரிமாறியாயிற்று. பதார்த்தங்கள் ஆறிக் கொண்டிருக்கின்றன. உள்ளூர்க்காரர்களாகிய நாங்களெல்லோ

ரும் அவரவர் வீடு சென்று உணவருந்தி வந்துவிடு கிறோம். வெளியூர்க்காரர்களாகிய நீங்களெல்லோரும் எழுந்து உணவருந்தி சிறிது சிறம பரிகாரம் செய்து கொள்ளுங்கள். மாலையில் இந்த சத் சங்கத்திலே கலந்து கொள்ளவும் கலை சம்பந்தமான நற்செய்தி களைப்பேசி மகிழவும் சௌகரியமாக இருக்கும்'' என்று கூறினர்.

அவர் அவ்வாறு கூறியதும் மகா வைத்தியநாத சிவன் சற்றும் தாமதமின்றி ''இங்குள்ள அனைவரும் வெளியூர்க்காரர் தாமே'' என்று சிலேடை நயம் தோன்றக் கூறினர். தில்லை **வெளி**யாகிய ஆகாச க்ஷேத் திரத்தில் இருப்பவர்கள் எல்லோரும் **வெளியூர்க்காரர் தாமே** என்ற பொருளிற்கூறிய அச்சிலேடைப்பேச்சிலே தம்பிரான்சுவாமிகளும் முன்சீப் வேதநாயகம்பிள்ளையும் மற்றுமுள்ளவர்களும் மகிழ்வுற்றனர், வெளி-ஆகாசம், தில்லை வெளி-ஆகாச க்ஷேத்திரமாகிய சிதம்பரம்.

● கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள் கலையில் பெரிய பாரங்கதராவார், அவர் போலச் சிவத் தொண்டுகளை எவரும் செய்யவில்லை. அவருடைய அரும் பெரும் திறத்தினல் அனைவரையும் சிவபக்திச் செல்வராக்கினர். அவர் அவ்வப்போது பல அன்பர் களிடமிருந்து பணம் வசூலித்து அறுபத்துநான்கு சிவத் தலங்களுக்குக் கும்பாபிடேகத்தைச் செய்வித்த புண் ணிய சீலராகத் திகழ்ந்தவர். ஒரு சமயம் திருவையாறு திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிக்குடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திரு நெய்த்தானம்

(தில்லைஸ்தானம்) ஆகிய சப்தத்தானச் (ஏழு) சிவத் தலங்களோடு திருமழபாடி என்ற சிவத்தலத்தையும் சேர்த்து எட்டுத் தலங்களிலும் ஒரே நாளில் கும்பாபி டேகம் செய்வித்தல் வேண்டுமென்று எண்ணினர். அதற்காக அவர் பல இடங்களுக்கும் சென்று பெரும் செல்வத்தையுடைய அன்பர்களிடமிருந்து பொருள் சேகரித்தார். சிவ புண்ணியத்தில் நோக்கம் உடைய பல அன்பர்களும் நிறையப் பணம் கொடுத்து உதவி ஞர்கள். ஏராளமாகப் பொருள் சேர்ந்தது.

சுந்தர சுவாமிகள் தாம் எண்ணியபடியே எட்டுச் சிவத்தலங்களுக்கும் ஒரே நாளில் கும்பாபிடேகம் நடத்த ஏற்பாடு செய்தார். அதன்படியே நடந்தது. அவ்வாறு ஒரே நாளில் எட்டுத் தலங்களிலும் கும்பா பிடேகத்தை நடத்துவதும், நடத்தச் செய்வதும் இய லாததாகும். அதற்குமுன் அவ்வாறு யாராலும் செய்யப் பட்டதில்லை. அவருடைய சித்தியின் அருள் சக்தியினு லேயே நடந்தது என்பது தான் உண்மை. அவ்வாருன பெருமை சுந்தரசுவாமிகள் ஒருவருக்கே உரிமையா கும். அந்த எட்டுச் சிவத்தலங்களுக்கும் கோடகநல் லூர் சுந்தரசுவாமிகளுடன் மகாவைத்தியநாத சிவனும் இராமசாமி சிவனும் காலை முதல் ஒவ்வொரு தலமாக நடந்து சென்று சிவதரிசனம் செய்து கொண்டு அன்றி ரவு ஒன்பது மணியளவில் திருமழபாடியில் சிவதரிசனம் செய்து மகிழ்ந்தார்கள். ஒவ்வொரு சிவாலயத்திலும் மகா வைத்தியநாத சிவன் ஒவ்வொரு கீர்த்தனமும் அத்தலங்களுக்கு ஏற்ற தேவாரப் பாடலையும் பாடித் துதித்து வந்தார். இக் கும்பாபிடேகமானது 1872ல்

நடந்ததாகக் கூறுவர். மகா வைத்தியநாத சிவனும் அவருடைய தமையனார் இராமசாமி சிவனும் சிவ பெருமானுடைய அருளைப் பெறப் பாத்திரராக விளங்கியதற்குச் சுந்தர சுவாமிகளே முக்கியக் காரணமாகும். மகா வைத்தியநாத சிவனின் முன் ஜன்மப் புண்ணியத்தாலேயே ஞான குருவாய்ச்சுந்தர சுவாமிகள் அமைந்தார். இதனால் அவர் எல்லாக் கலைகளிலும் சிறப்புற்றதுமின்றி, எவ்விடத்திலும் எக்காரியத்திலும் ஜயம் ஒன்றையே அடைந்து சிறப்புற்றாரெனலாம்.

"இசை உலகில் மகாவைத்தியநாத சிவன்"

முதற்பாகம் முற்றிற்று.